

ஸ்ரீ:

ஸ்ரீஸீதாலக்ஷ்மணபரதசத்ருக்நஹநுமத்ஸமேத ஸ்ரீராமசந்த்ரபரமாத்மநே நம:

ஸ்ரீகாஞ்சீ ஜகதாசார்யஸிம்ஹாஸநாதிபதி ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் தொகுத்த

கம்பரின்பக்கவித்திரட்டு

கம்பராமாயணத்திலுள்ள மிகவினிய பாடல்களின் தொகுதி

தமது அறுபத்தைந்தாமாண்டு நிறைவுக்கு நீடுழி ஞாபகச்சின்னமாய்
லோகோபகாரார்த்தமாக அறுபத்தைந்து நூல்களை வெளியிடுவ
தென்று செய்துகொண்ட ஸமீபகால ஸங்கல்பத்தின்படி
வெளியிடப்பட்டுவரும் நூல்களுள் இது

மூன்றாவது

இது கிடைக்குமிடம் :

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

விலை 2 ரூ.

1955

ஸ்ரீ:

அடியேனுடைய அறுபத்தைந்து நூல்கள்

மன்மத பங்குனி விசாகத்தில் அறுபத்தைந்தாவது பிராயத்தின் பூர்த்தியின் ஞாபகச் சின்னமாக அறுபத்தைந்து நூல்களை வெளியிடுவதென்று ஸமீபகாலத்தில் ஒரு ஸங்கல்பம் செய்துகொண்டேன். உண்மையில் இது மஹத்தான ஸாஹஸம். ஆயினும், ஸத்ய ஸங்கல்பனான எம்பெருமானுடைய ஸங்கல்பத்தை யநுஸரித்தே அடியேன் ஸங்கல்பித்திருப்பதனால் இது அநாயாஸமாக நிறைவேறுமென்று துணிந்திருக்கிறேன். அடியேன் எது மநோரதித்தாலும் அதைப் பேரருளாளனும பெருந்தேவித்தாயாரும் முன்னின்று நிறைவேற்றி வருவதனால் இதில் கவலையற்றிருக்கிறேன். இந்த 65 நூல்கள் ஒரே பாஷையிலல்ல; வடமொழி, தென்மொழி, தெலுங்கு, ஹிந்தியாகிய நான்கு பாஷைகளிலுமாகும். பூருவர்கள் பணித்த நூல்களைப் பரிஷ்கரித்துப் பதிப்பிப்பதும் இதில் ஏகதேசம் சேரும். அப்படி ஐந்து நூல்கள் தேறக்கூடும். மற்ற அறுபது நூல்கள் புதிதாக இயற்றப்படுமவையாம். இவை எத்தனை வருஷங்களில் முடிவுபெறுமென்பதை எம்பெருமான் திருவுள்ளமே யறியும்.

—அறுபத்தைந்து நூல்களில் தற்காலம் உத்தேசத்திலுள்ளவை—

1. பகவத்ராமாநுஜக்ரந்தமாலா (நாகரி)
2. நாலாயிர திவ்யப்ரபந்த மூலம்
3. கம்பரின்பக்கவித்திரட்டு
4. அங்கண்மாஞாலத்தமுது
5. அருளிச்செயலாராய்ச்சி
6. பகவத்கீதையுரை
7. ஸ்ரீபாஷ்யஸர்வஸ்வம்
8. ஸ்ரீராமாயண ஸர்வஸ்வம்
9. ஸ்ரீவிஷ்ணுபுராண ஸர்வஸ்வம்
10. வேதாந்ததர்சநஸாரம்
11. வேதவிமர்சம்
12. வைதிகவிலோசனம்
13. தேசிக ஸூக்திரஸாஸ்வாதம்
14. அர்ச்சாவதார மஹிமை
15. அருளாளனருள் விளக்கு
16. ஸதர்த்த ஸித்தாஞ்ஜநம்
17. ஸந்மார்க்க ஸம்ரக்ஷணம்
18. ஸத்புருஷஸஞ்ஜீவிநி
19. நித்யாநுஷ்டாநபத்ததி
20. தென்மொழி வடமொழியகராதி
21. நம்பிள்ளை தந்த நல்லமுது
22. மஹாசார்ய ஸூக்தி மாதுர்யம்
23. உபநிஷத் ஸர்வஸ்வம்
24. தானேயெழுதிய தன் சரிதை

ஆகிய இந்த நூல்களை விரைவில் வெளியிட வேணுமென்று குதூஹலமுள்ளது. இவற்றுள் சில நூல்கள் இதர பாஷைகளிலும் மொழிபெயர்த்து வெளியிடப்படும். பகவத்பாகவத க்ருபாகடாக்ஷ விசேஷத்தினால் இந்த மநோரதம் இடையூறின்றி நிறைவேறுமென்று நம்பியிருக்கிறேன்.

இங்ஙனம், ஸ்ரீவைஷ்ணவதாஸன்

காஞ்சீ ப்ர. அண்ணங்கராசாரியன்.

ஸ்ரீ:

முன்னுரை

அருட்கடலான திருமால் * உயிரளிப்பான் எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்த பிறவிகளிலே ஸ்ரீ ராமாவதாரமும் க்ருஷ்ணவதாரமும் மிகச் சிறந்தவை. ஸ்ரீ ராமாவதார சரிதையைப் பற்றி ஸ்ரீமத் வால்மீகி ராமாயணமும், ஸ்ரீ க்ருஷ்ணவதாரசரிதையைப்பற்றி ஸ்ரீ பாகவதம் முதலியனவும் வடமொழியில் தோன்றியுள்ளன. நாஸ்திகம் தலையெடுத்தாடு மிக்காலத்திலும் ஆங்காங்கு பகவத்கதைகளைக் கேட்க விருப்ப முடையார் மலிந்துள்ளார்களென்பது யாவர்க்கும் கட்கூடு. பக்தர்களுக்கு ஸ்ரீ ராம கதையைக் கேட்பதிலுள்ள குதூஹலம் வேறு எதிலுமில்லை யென்பதும் எங்குங் கண்ட தொன்றும். வட இந்தியாவில் ஸ்ரீபாகவதத்திற்கும், தென்னிந்தியாவில் ஸ்ரீ ராமாயணத்திற்கும் மிக்க ஏற்றம் காணப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ ராமகதையைச் சொல்லத் தோன்றிய இதிஹாஸ புராணங்கள் பல இருந்தாலும் அவற்றுள் வான்மீகி ராமாயண மொன்றுக்கே மிக்க சிறப்பு யாவருமிசைந்தது. இந்த ஸ்ரீ ராமாயணத்தை சுலோகங்களின்மேல் பொருள்கேட்டு மகிழ்வார் சிலர். வல்லார்களைக்கொண்டு உபந்யாஸங்கள் செய்யச் சொல்லிக் கேட்டுக் களிப்பார் பலர். இக்காலத்தில் இத்தகைய உபந்யாஸ பத்ததியே எங்கும் அதிகரித்து வருகின்றது. இளமையிலேயே வடமொழி தென்மொழிகளை நன்கு பயின்றவர்கள் வெறும் ராமாயணத்தோடு நில்லாமல் ஸம்ஸ்க்ருத காவ்ய நாடகாதிகளிலிருந்து பல சுலோகங்களையும், கம்ப ராமாயணத்திலிருந்து பல பாடல்களையும் இடையிடையே எடுத்துரைத்து ச்ரோதாக்களை மிகவும் ரஸிப்பிக்கிறார்கள். உபந்யாஸங்களுக்குக் கம்ப ராமாயணம் இன்றியமையாததாயிருக்கின்றது. கம்ப ராமாயணப் பாடல்களை விசேஷமாக எடுத்துரைத்தாலன்றி இன்ப முண்டாவதில்லை. உபந்யாஸங்களுக்காக அப்பாடல்களைப் புதிதாகப் பாடம் செய்ய விரும்புவார் இக்காலத்தில் பலருளர். அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கஷ்டப்பட்டு அவர்கள் கம்பராமாயணப் புத்தகத்தைச் சம்பாதித்துக் கொண்டாலும், இன்பமான பாடல்கள் எங்கிருக்கின்றனவென்று அறியப்பெறாமல் வருந்தி நிற்கிறார்கள். அன்னவர்களுக்குப் பேருதவிபுரியவேணுமென்னுமாசை தோன்றி "கம்பரின்பக்கவித்திரட்டு" என்னுமிந்நூலைச் சித்தப்படுத்தினேன். காண்ட வரிசையாகவும் படலவரிசையாகவும் முக்கியமான பாடல்களைத் திரட்டி, பதவுரையோடும் கருத்துரையோடும் வெளியிடுகின்றேன். முக்கியமான பாடல்கள் யாவும் இதில் தொகுக்கப்பட்டு விட்டனவென்று சொல்ல இயலாது. ஆயிரஞ் செய்யுட்களையாவது திரட்டினால்தான் அங்ஙனஞ் சொல்ல இயலும். உபந்யாஸகர்கள் கண்டபாடஞ் செய்து கொள்வதற்காகவே தொகுக்கப்பட்ட இந்நூலில் அவ்வளவு பாடல்களைச் சேர்த்தால் பயன்படாதென்று கருதியே உசிதமான முறையில் பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மறுபதிப்புச் செய்ய நேரும்போது மேலும் சில பாடல்களைச் சேர்க்க விருப்பமுண்டு.

இங்ஙனம்:

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்.

ஸ்ரீ

ஸ்ரீராமபிரான் திருவடிகளே சரணம்

கம்பரின்பக்கவித்திரட்டு

[ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியர்]

— கம்பராமாயணம் - பாலகாண்டம் - காப்பு —

(நம்மாழ்வாரைப் பற்றிய தோத்திரம்)

1. தருகைநீண்ட தயரதன்தான் தரும், இருகைவேழத் திராகவன்தன் கதை
திரிகைவேலைத் தரைமிசைச் செப்பிடக், குருகைநாதன் குரைகழல் காப்பதே.

தருகை நீண்ட	வள்ளல்தனம் மிகுந் திருக்கப்பெற்ற
தயரதன் தான் தரும்	தசரத மன்னவனால் பெறப்பட்ட
இரு கை வேழத்து இராகவன் தன்	இரண்டு துதிக்கைகளை யுடைய யானையோ வென்னும்படியான இராமபிரானுடைய
கதை	சரிதையை,
திரிகை வேலை	வட்டவடிவமான கடலால் சூழப்பட்ட
தரை மிசை	இம்மண்ணுலகிலே
செப்பிட	வெளியிடுவதற்கு
காப்பது	ரக்ஷையாகவிருப்பது
குருகை நாதன்	திருக்குருகூரி லவதரித்த நம்மாழவாருடைய
குரை கழல்	(வீரக்கழலணிந்ததனால்) ஒலிக்கின்ற திருவடிகளேயாம்.

* தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே * என்றும் *கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ * என்று முள்ள திருவாய்மொழிப் பாசுரங்கள் பலவற்றால் ஸ்ரீராம பக்தியில் தலைசிறந்தவரென்று பிரசித்திபெற்ற நம்மாழ்வாருடைய திருவடிகளைச் சிந்தனை செய்தாலன்றித் தமது நூல் இடையூறின்றித் தலைக்கட்டாதென்று துணிந்த கம்பர் முதலிலே நம்மாழ்வாரைத் துதி செய்த விது மிகப் பொருத்தமானது. தசரத சக்கரவர்த்தியின் ஔதார்யம் பல வழிகளில் பிரசித்தி பெற்றிருந்தாலும் இராம பிரானைப் பெற்றுக் கொடுத்ததே தலையான ஔதார்யமென்று கருதினர் கம்பர். ... ... *

(அனுமானைப்பற்றிய தோத்திரம்.)

2. அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றாறாக ஆரியற்காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்குகண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா னவனெம்மை யளித்துக்காப்பான்.

அஞ்சிலே ஒன்று பெற்றான்	(நிலம் நீர் தீ கால் விசும்பு எனப்படுகிற) பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய வாயுவின குமாரனாகி,
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக.	(முன் சொன்ன) பஞ்சபூதங்களுள் ஒன்றான ஆகாயமே வழியாக,
அஞ்சிலே ஒன்றை தாவி	(முன் சொன்ன) பஞ்சபூதங்களுள் ஒன்றான ஜலதத்துவமாகிய கடலைக் கடந்து
ஆரியற்கு ஆக ஏகி	இராமபிரானது நியமனத்தினால் (இலங்கைக்குச்) சென்று
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு	(முன் சொன்ன) பஞ்சபூதங்களுள் ஒன்றான பூமியால் பெறப்பட்ட தெய்வமகளான சீதையைக் கண்டு (பிறகு)
அயலார் ஊரில்	பகைவர்களினாராகிய இலங்காபுரியிலே
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்	(முன் சொன்ன) பஞ்சபூதங்களுள் ஒன்றான நெருப்பை வைத்து அவ்வூரை முழுதும் வேவித்தவனான அவ்வனுமான்
எம்மை அளித்து காப்பான்	நம்மை அருள் செய்து காத்தருளவன்.

* * * பரமபதத்திற்குஞ் செல்லாமல் இம்மண்ணுலகிலேயே சிரஞ்சீவியாயிருந்து ஸ்ரீராமாயண ப்ரவசனம் நடைபெறு மிடங்கள் தோறும் சிரமேற்கரங்

குவித்துக் கண்ணுங் கண்ணீருமாயிருந்து ஸ்ரீராமாயண ச்ரவணம் பண்ணுவதையே விரதமாகக் கொண்ட திருவடியைத் துதிப்பது. தாமியற்றும் நூல் இடையூறின்றி முற்றுப் பெறுதற்கு உறுப்பாமென்று அறுதியிட்டு இயற்றிய பாடல் இது. ஹநுமானுக்குத் தனியனாக வழங்கும் வடமொழி சுலோகங்களுள் ஒன்றான "உல்லங்க்ய ஸிந்தோஸ் ஸலிலம் ஸலீலம் யச் சோகவஹ்நிம் ஜநகாத்மஜாயா:, ஆதாய தேநைவ ததாஹ லங்காம் நமாமி தம் ப்ராஞ்ஜலி ராஞ்ஜநேயம்" என்கிற சுலோகத்தையே நெஞ்சிற் கொண்டு இயற்றிய பாடலிதுவென்று கொள்க. இராமபிரானது கட்டளையினால் ஆகாச மார்க்கமாகக் கடலைக்கடந்து இலங்கை சென்று சேர்ந்து அங்கு ஸீதா பிராட்டியைக் கண்டு செய்தியை யறிவித்து முதுமதிளிலங்கையை வேவித்துவந்த அனுமன் நம்மைக் காத்தருள வேணு மென்றதாயிற்று. "அயலாரூரில்" என்றது மத்திமதீபமாய் முன்னும் பின்னுமியையும்; அணங்கைக் கண்டதும் அயலாரூரில்; நெருப்புவைத்ததும் அயலாரூரில். "ஆருயிர்க்காகவேகி" என்றும், "ஆருயிர் காக்கவேகி" என்றும் பாடம்.

பஞ்ச பூதங்களைப் பெயர் குறித்துக் கூறாமல் 'அஞ்சு' என்று பொதுப் படக் கூறியிருப்பது ஸம்ப்ரதாயார்த்த விசேஷ மொன்றையுங் காட்டுதற்கென்க. ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "அத்யத்வே ஹநுமத்ஸமேந குருணா" என்று பணித்தபடி திருவடி ஆசார்யஸ்தானத்திலே நிற்பவராதலால் ஸம்ப்ரதாய ஸித்தமான ஆசார்ய லக்ஷண சிஷ்ய லக்ஷணங்களும் இதில் தெரிவிக்கப்பட்டனவாகின்றன. எங்ஙனே யென்னில்; அஞ்சிலே யொன்று பெற்றா னென்றது - * தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச் ச பஞ்சம:, அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ:* என்கிறபடியே பரமைகாந்தித்வஹேதுவாகச் சொல்லப்படுகிற பஞ்சஸம்ஸ்காரங் களுள் ஒன்றான திருமந்திரத்தினால் பெறப்பட்டவன் ஆசாரியன். ஆசார்ய ஹ்ருதயத்தில் "தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்கு மது....ச்ரேஷ்டஜன்மம்" என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம்.

அஞ்சிலே ஒன்று ஆறாக—கர்மம் ஜ்ஞாநம் பக்தி ப்ரபத்தி ஆசார்யாபிமானம் ஆகிற ஐந்து உபாயங்களுள் ஒன்றான ஆசார்யாபிமானத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு என்றபடி. அஞ்சிலே ஒன்றைத் தாவி—*ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்* இத்யாதிச்லோகத்திற் சொல்லப்படுகிற [அல்லது, * மிக்கவிறை நிலையும் மெய்யாமுயிர்நிலையும்......* என்கிற திருவாய்மொழித் தனியனிற் சொல்லப்படுகிற] அர்த்த பஞ்சகத்தில் விரோதி ஸ்வரூபமும் ஒன்றாகையாலே அந்த விரோதியைக் கடந்து என்றபடி. ஆருயிர் காக்க ஏகி—சேதனஸம்ரக்ஷணார்த்தமாக இந்நிலத்தே வந்தவதரித்து என்றபடி. அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கு கண்டு—பரவ்யூஹ விபவாந்தர்யாமி அர்ச்சாவதாரங்களுள் ஒன்றான அர்ச்சாவதாரத்தையே தனக்குப் புகலாகப் பெற்றிருக்கிற சிஷ்யனைக் கடாக்ஷித்து என்றபடி. அயலாரூரிலஞ்சிலே ஒன்றை வைத்தான்—(இப்பொருளில் அயலார் என்பது விவக்ஷிதமன்று). ஐந்து ஊர்களிலே ஓர் ஊரைப் புகலாக வைத்தவன்; இம் மண்ணுலகம், நரகம், ஸ்வர்க்கம், கைவல்யம், பரமபதம் ஆகிய ஐந்து இடங்களுக்குள்ளே ஓரிடமாகிய வைகுண்டத்தைமட்டும் புகலிடமாக்கி வைத்தவன் ஆசார்யன். இத்தகைய மற்றும்பல விசேஷப் பொருளை நோக்கியே இச்செய்யுள் விசித்திரமாக அமைக்கப்பட்டதென்க. ... ... *

(கம்பராமாயணம் பேரின்பவெள்ளம் தருமென்பதுபற்றி.)

3. இம்பர்நாட்டிற் செல்வமெலாம்எய்திஅரசாண் டிருந்தாலும்
உம்பர்நாட்டிற் கற்பகக்கா வோங்குநிழலி லிருந்தாலும்
செம்பொன்மேரு வனையபுயத் திறல்சேர்இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கிதயங் களியாதே.

இம்பர் நாட்டில் செல்வம் எலாம் எய்தி	இஹலோகத்து ஐச்வரியங்களையெல்லாமடைந்து	செம் பொன் மேரு அனைய புயம் திறல் சேர்	செவ்விய பொன்மயமான மேருகிரியோடொத்த புஜபலத்தை யுடையனான
அரசு ஆண்டு இருந்தாலும்	ஸாம்ராஜ்யம் செலுத்தினாலும்;	இராமன்	சக்ரவர்த்தி திருமகனுடைய
		திருக்கதையில்	திவ்ய கதையை வருணிக்கின்ற நூல்களுள்
உம்பர் நாட்டில்	விண்ணுலகில்	கம்பநாடன் கவிதையில் போல்	கம்பருடைய கவிதையான இப்பாடல்களிற்போல
ஓங்கு கற்பகம் கா நிழலில் இருந்தாலும்	உயர்ந்து வளர்ந்த கல்பவிருக்ஷச்சாயையிலே வஸிக்கப் பெற்றாலும்,	கற்றோர்க்கு இதயம் களியாது	கல்வி பயின்றவர்களது மனமானது களிப்படையாது.

* * *—இஹலோகச் செல்வங்களை யெல்லா மனுபவித்து அடையுமானந்தமும், விண்ணுலகச் செல்வங்களை யெல்லா மனுபவித்து அடையுமானந்தமும், கம்பராமாயணப் பாடல்களை யனுபவித்து அடையுமானந்தத்திற்கு ஈடாகாதென்றவாறு. ... ... *

வான்மீகி ராமாயணத்தையே முதனூலாகக் கொண்டது கம்பராமாயணமெனல்)

4. நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவன் கூற
ஆரணக் கவிதைசெய்தான் அறிந்தவான்மீகி யென்பான்
சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன்
காரணக்கொடையான் கம்பன் தமிழினாற் கவிசெய்தானே.

நாரணன் விளையாட்டு எல்லாம் நாரத முனிவன் கூற	நாராயணனுடைய அபராவதாரமான இராமபிரானது லீலையான சரித்திரங்களை யெல்லாம் நாரதமஹர்ஷி உபதேசிக்க,		(அந்த வால்மீகி ராமாயணத்தை யடியொற்றி)
அறிந்த வான்மீகி என்பான்	கேட்டறிந்த வான்மீகி முனிவன்	சீர் அணி சோழ நாடு திரு அழுந்தூருள் வாழ்வோன்	சீரிய சோழநாட்டிலுள்ள திருவழுந்தூரில் வாழ்பவனும்
ஆரணம் கவிதை செய்தான்	வேதத்தின் பராதுர்ப்பாவமெனனும்படியான ச்லோகமாலிகைகளை இயற்றினான்;	கார் அண் அ கொடையான் கமபன்	மேகத்தையொத்த வள்ளல் தனமுடையனுமான கம்பன்
		தமிழினல் கவி செய்தான	தமிழ்ச் செய்யுளாகச் செய்து வைத்தான்.

* * *—*ஸஹி தேவை ருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:* என்று வான்மீகி முனிவர் தாமே கூறிவைத்தபடி ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீராமனாகத் திருவவதரித்தருளினனென்னும் தத்துவத்தைக் காட்டுதற்கு 'நாரணன்' என்றார். அவாப்த ஸமஸ்த காமனான பகவான் அவதரித்துப் பெறவேண்டிய பேறு ஒன்றுமில்லை யாயினும் லீலாமாநுஷ விக்ரஹனயவதரித்து லீலைகளையே செய்தானென்றும், கரதூஷணதிவதம் ராவணவதம் முதலியவற்றையும் அவலீலையாகவே செய்தானென்றுங் காட்டுதற்கு "விளையாட்டெல்லாம்" என்றார். * தபஸ் ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம், நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநி புங்கவம் * என்று தொடங்கியுள்ள ஸ்ரீராமாயண உபக்ரமத்தை நோக்கி "நாரத முனிவன் கூற" என்றார். "வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்கிற ஸ்ரீராமாயணத்தனியனில் நோக்காக "ஆரணக்கவிதை செய்தான்" என்றார். வேதத்தில் ஒரு பகுதியாகிய ஆரண்யகத்தையுணர்த்தும் ஆரணமென்ற சொல் பொதுவாக வேதத்தையும் குறிக்கும். .... *

(கம்பராமாயணம் மானிட வுலகுக்கு அமிருதம் போன்றதென்பது.)

5. அம்பிலே சிலையைநாட்டி அமரர்க்கன் றமுதமீந்த
தம்பிரானென்னத் தானும் தமிழிலே தாலைநாட்டிக்
கம்பநாடுடைய வள்ளல் கவிச்சக்ரவர்த்தி பார்மேல்
நம்பு பாமாலையாலே நரருக்கின் றமுதமீந்தான்.

அன்று	தேவர்கள் வந்து வேண்டின அக்காலத்தில்	இன்று	இந்நாளில்
அம்பிலே சிலையை நாட்டி	அம்புதியிலே (மந்தர மெனும்) மலையை மத்தாக நாட்டி [திருப்பாற் கடலைக் கடைந்து]	தமிழில் தாலை நாட்டி	தமிழ்க்கடலில் தனது நாவாகிய மந்தரமலையை நாட்டி (க்கடைந்து)
அமரர்க்கு அமுதம் ஈந்த தம்பிரான் என்ன	தேவர்களுக்கு அமிருதத்தை யெடுத்துத் தந்தருளின திருமாலைப் போலவே	நம்பு பாமாலையாலே	விரும்பத்தக்க பாசுரத் தொகுதியினால்
கவிசக்ரவர்த்தி கம்ப நாடு உடைய வள்ளல் தானும்	கவிச்ரேஷ்டனும் வள்ளலுமாகிய கம்பன்	பார் மேல் நரருக்கு அமுதம் ஈந்தான்	இம்மண்ணுலகின்கண் மனிதர்களுக்கு (ஸ்ரீராம கதையாகிற) அம்ருதத்தை அருந்தக்கொடுத்தான்.

* * *—"தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் சாயையிலே அமைந்தது இது. அந்த நம்மாழ்வார் விஷயமாகப் பிள்ளைப் பெருமாளையங்கார் பணித்ததான "மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமுதம், கறைப் பாம்பணைப் பள்ளியா னன்பரீட்டம் களித்தருந்த நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே" என்ற பாசுரத்தையும் இங்கு நினைப்பது. திருமாலருளால் தேவர்களுக்கு அமுதங் கிடைத்தது பரோக்ஷம்; மனிதர்களான நமக்கு அமுதம் கிடைத்திருப்பது ப்ரத்யக்ஷமென்க. அம்புதியை அம்பு என்றது இலக்கணை. கல்லுக்கு வாசகமான சிலா என்னும் வடசொல் இங்குச் சிலையென்றுள்ளது; இதுவும் இலக்கணையால் மலையையுணர்த்திற்று. தால் - தாலு. .... *

(ஸ்ரீராம நாமப்ரபாவம் கூறுதல்)

6. நன்மையுஞ் செல்வமும் நாளும்மல்குமே, தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித்தீருமே, இம்மையே ராமவென் றிரண்டெழுத்தினால்.

ராம என்ற இரண்டு எழுத்தினால்	இரண்டே யெழுத்தான ராம நாமத்தைச் சொல்லுவதனால்	தின்மையும் பாவமும் சிதைந்து தேயும்	ஸஞ்சிதம் ப்ராரப்தம் என்கிற ஸகல பாபங்களும் அழிந்தொழியும்;
இம்மையே	இப்பிறப்பு தன்னிலே		
நாளும்	எப்போதும்		
நன்மையும் செல்வமும் மல்கும்	எல்லா நன்மைகளும் எல்லாச் செல்வங்களும் நிறைந்திடும்;	சென்மமும் மரணமும் இன்றி தீரும்	பிறப்பது மிறப்பதுமாகிற ஸம்ஸாரமும் தொலையும்.

* * *—முதலடியில் 'நல்குமே' என்கிற பாடமுமுள்ளது; அப்போது 'இராமன்' என எழுவாய் வருவித்துக் கொள்ளவேணும். .... *

(ஸ்ரீ ராமாயண ச்ரவணத்தின் பயனுரைத்தல்)

7. வடகலை தென்கலை வடுகுகன்னடம், இடமுளபாடை யாதொன்றினுயினும்
திடமுள ரகுகுலத் திராமன்தன்கதை, அடைவுடன் கேட்பவ ரமரராவரே.

திடம் உள ரகு குலத்து இராமன் தன் கதை	விக்ரமசாலியான ஸ்ரீராகவனுடைய திவ்ய சரிதையை	இடம் உள பாடை யாது ஒன்றின் ஆயினும்	இவ்வுலகில் நடையாடுகின்ற பாஷை எதனலாயினும்
வடகலை தென்கலை வடுகு கன்னடம்	வடமொழி தென்மொழி தெலுங்கு கன்னடம் முதலாக	அடைவுடன் கேட்பவர்	பக்தி ச்ரத்தையோடு ச்ரவணம் செய்பவர்கள்
		அமரர் ஆவர்	நித்ய முக்தர்களோடொப்பர்.

* * *—ஆர்ய பாஷையாகிய ஸம்ஸ்க்ருத பாஷைக்குத்தான் சிறப்புள்ளதென்றும், அப்பாஷையிலமைந்த வான்மீகி ராமாயணத்தை யோதுவதும் கேட்பதுமே பொருந்துமென்றும், தமிழ்ப் பாஷையினலியற்றப்படுகிற இந்த ராமாயணம் எதற்கென்றும் சிலர் கருதக்கூடுமென்றெண்ணி இச் செய்யுள் அமைக்கப்பட்டதென்க. எவ்வகையினும் ராமகதைக்கு ஏற்றமே யொழிய, பாஷையில் ஏற்றத் தாழ்வு கிடையாதென்றதாயிற்று. "பேச்சுப் பார்க்கில் கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்" என்ற ஆசார்யஹ்ருதய ஸூக்தியும் அவ்விடத்து வியாக்கியானமும் இங்கே காணத்தக்கன. 'திடமுள' என்ற அடைமொழி ரகுகுலத்திற்குமாகும், ராமனுக்குமாகும், கதைக்குமாகும். ... ... *

8. வென்றிசே ரிலங்கையானை வென்ற மால்வீரமோத
நின்ற ராமாயணத்தில் நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர்தாமும் உரைத்திடக் கேட்டோர்தாமும்
நன்றிது வென்றோர்தாமும் நரகம தெய்திடாரே.

வென்றி சேர் இலங்கை யானைவென்ற	(முன்னே) வெற்றிகளையடைந்திருந்த இராவணனை வென்றொழித்த	படித்தோர் தாமும்	தாமாகப்படித்தவர்களும்
மால்	திருமாலான இராமபிரானுடைய	உரைத்திட கேட்டோர் தாமும்	ஒருவர் எடுத்துரைக்கக் கேட்டவர்களும்
வீரம் ஓதநின்ற	வீரச்செயல்களை ஓதுவதற்கு அமைந்த	இது நன்று என்றோர் தாமும்	(பாராயணமோ ச்வரணமோ செய்யாமற் போனலும்) 'ராமாயணகதை சிறந்தது' என்று கொண்டாடுமவர்களும
ராமாயணத்தில்	ஸ்ரீராமாயண மஹாகாவியத்தில்		
நிகழ்ந்திடு கதைகள் தம்மில் ஒன்றினை	உலாவுகின்ற கதைகளுக்குள்ளே ஏதேனுமொரு கதையை	நரகம் அது எய்திடார்	நரகம் செல்லப்பெறுர்கள்.

* * *—ஸ்ரீராமாயண ப்ரவசனம் செய்பவர்களுக்கும் ஸ்ரீராமகதையைக் கேட்பவர்களுக்கும் கிடைக்கக் கூடிய பலன், அவ்விரண்டிலும் அந்வயமின்றிக்கே உதாஸீநர்களாயிருந்து அபிநந்தனம் மட்டும் செய்பவர்களுக்கும் கிடைக்குமென்றவிது அதிவாதமன்று; உண்மையுரையே. ... ... *

9. அன்னதான மகிலநற்றுனங்கள், கன்னிதானம் கபிலைநற்றுனமே
சொன்னதானப் பயனெனச் சொல்லுவர், மன்னிராமகதை மறவார்க்கரோ.

(கருத்து)—நீடுகின்ற நிறைபுகழுடைய ஸ்ரீராம கதையை மறந்திடாமல் நிச்சலும் ஓதிவருமவர்களுக்கு அன்னதானம் பூமிதானம் கன்னிகாதானம், கோதானம் என்றிப்படி (நூல்களிற்) கூறப்பட்டுள்ள பலவகைத் தானங்களினுடையவும் பலன்

சித்திக்குமென்று மஹான்கள் கூறுவர்களென்றவாறு. சொன்னதானம்—ஸ்வர்ணதான மென்றுமாம். ... ... *

(அவையடக்கம்.)

10. முத்தமிழ்த் துறையின் முறைபோகிய, உத்தமக்கவிஞர்க் கொன்றுணர்த்துவன்
பித்தர்சொன்னவும் பேதையர்சொன்னவும், பத்தர்சொன்னவும் பன்னப்பெறுபவோ. **8**

(கருத்து)—இயல்தமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூவகைத் தமிழ்த் துறைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்ற உயர்ந்த வித்துவான்களுக்கு ஈதொன்று சொல்லுகின்றேன். உலகில் பித்துக்கொள்ளிகள் சொல்லுமவையும் சிறுபிள்ளைகள் சொல்லுமவையும் பக்திமான்கள் சொல்லுமவையும் ஆராயத் தகுந்தவையல்லவன்றோ. என்னைப் பித்தர் வகுப்பிற் சேர்த்துக் கொண்டாலும் சரி, பேதையர் திரளில் கூட்டிக் கொண்டாலும் சரி, பக்திமான்களிலே இவனுமொருவன் என்று கொண்டாலும் சரி, பிழையாராயாதிருக்கத்தகும் - என்றவாறு.*

(நூல்வரலாறு கூறுதல்.)

11. தேவபாடையி லிக்கதை செய்தவர், மூவரானவர்தம்முளு முந்திய
நாவினுருரையின்படி நான்தமிழ்ப், பாவினுலிதுணர்த்திய பண்பரோ. **10**

(கருத்து)—நான் தமிழ்ப் பாவினுல் இவ்விராமாயணம் பாடியதானது வான்மீகி ராமாயணத்தைப் பெரும்பாலுந் தழுவியே; ஸம்ஸ்க்ருத பாஷையில் ராமாயணமியற்றிய மஹரிஷிகள் மூவர்; வால்மீகியும் வஸிஷ்டரும் போதாயநரும். அவர்களுள் எல்லாவகையினும் மேம்பட்டவர் வான்மீகியாவர். அவரியற்றிய ஆதிகாவ்யமான ஸ்ரீ ராமாயணத்தைத் தழுவி இந்நூலை யானியற்றுகின்றே னென்றவாறு. செய்யுளில் 'பெரும்பாலும்' என்ற சொல் இல்லையாயினும் கவியின் கருத்தை நோக்கி அது கூட்டிக் கொள்ளத்தக்கதே; வான்மீகி ராமாயணத்தில் இல்லாதனவும் அதனோடு முரண்பட்டனவுமான சில பல கதைகளும் இதில் காணப்படுகின்றனவன்றோ. ... ... *

(நூற்பயனுரைத்தல்.)

12. நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடியவரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே. **12**

(கருத்து)—அளவு கடந்த ராக்ஷஸ சேனைகள் சாம்பராயழிந்து போக வெற்றி மாலையை யணிந்த கோதண்டராமனுடைய விக்ரமங்களைப் பாராட்டிப் பேசுமவர்கட்கு விரும்பும் பொருள்களெல்லாம் கைகூடும்; மனத் தெளிவும் கீர்த்தியுமுண்டாகும்; மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்குப் புருஷகாரக்ருத்யம் செய்பவளான ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் அவர்களைக் கடாக்ஷிப்பள் என்றவாறு. ... ... *

நான்முகம் முற்றிற்று.

விண்ணப்பம்:—கம்பர் தமது இராமாயணத்தில் வான்மீகி ராமாயணத்திற் போலவே பாலகாண்டம் அயோத்தியா காண்டம் என முறையே காண்ட பேதங்களை வகுத்துள்ளார். ஒவ்வொரு காண்டத்திலும் கதைகளுக்கேற்பப் படலங்கள் பிரித்துள்ளார். பாலகாண்டத்தில், ஆற்றுப்படலம் முதலாகப் பரசுராமப்படலமீறாக இருபத்திரண்டு படலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலதான ஆற்றுப் படலத்தினுல் ஸரயூ நதியின் வளங்களையும், இரண்டாவதான நாட்டுப் படலத்தினுல் அந்நதிபாயப்பெற்ற கோசல நாட்டின் வளப்பத்தையும், மூன்றாவ

தான நகரப்படலத்தினல் அந்தக் கோசல நாட்டின் தலைநகரும் இராமபிரானது திருவவதார ஸ்தலமுமான அயோத்யா நகரத்தின் சிறப்புக்களையும், நான்காவதான அரசியற்படலத்தினல் அவ்வயோத்தி நகரத்தரசனுகிய தசரதமன்னவனது அரசாட்சிப் பெருமையையுஞ் சொல்லி முடித்திட்டு, ஐந்தாவதான திருவவதாரப்படலத்தினல் திருமால் இராமன்முதலான நான்கு திருமேனியுடனே அத்தசரதசக்ரவர்த்திக்குப் புதல்வனுகத் தோன்றினமையைக் கூறுகின்ருர். அத்திருவவதாரப் படலத்திலிருந்தே கதையின்பம் அநுபவிக்கலாகும். முந்தின நான்கு படலங்களில் கவிசமயத்திற்கு ஏற்ற வருணனைகள் மலிந்திருக்கின்றன. அவற்றிலிருந்து சில பாடல்களை யெடுத்துத் தருவோம். ... ... *

(ஆற்றுப்படலம்—சரயுவெள்ளத்தின் வருணனை)

13. ஈக்கள் வண்டொடுமொய்ப்ப வரம்பிகந்து, ஊக்கமேமிக உள்தெளிவின்றியே
தேக்கெறிந்து வருதலின் தீம்புனல், வாக்குந் தேனுகர் மாக்களை மானுமே. **10**

(திருமங்கையாழ்வா ரருளிச் செய்த பெரிய திருமொழியில் 1—1—10 "மஞ்சுலாஞ் சோலை வண்டறைமாநீர்" என்றவிடத்துப் பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெற்ற ஏற்றமுடையது இச்செய்யுள்).

தீம் புனல்	இனிமையான நீரையுடைய வெள்ளமானது	உள் தெளிவு இன்றியே	உள்ளே தெளிவில்லாமையும் பெற்று
ஈக்கள் வண்டொடு மொய்ப்ப	ஈக்களும் வண்டுகளும் கூடி மொய்க்கப் பெற்று	தேக்கு எறிந்து வருதலின்	தேக்கு மரங்களை யடித்துக் கொண்டு வருதலினல்
வரம்பு இகந்து	எல்லை கடந்து செல்லப் பெற்று	வாக்கும் தேன் நுகர் மாக்களை மானும்	வார்க்கப்படுகிற கள்ளைக் குடித்த மனித மிருகங்களை யொத்திருக்கும்.
ஊக்கமே மிக	உற்சாகம் மிகப்பெற்று		

* * *—கூரத்தாழ்வானருளிச் செய்த ஸுந்தரபாஹுஸ்தவத்தில் நூபுர கங்கையின் [சிலம்பாற்றின்] வெள்ளத்தை வருணிப்பது மூன்ரும் சுலோகம் *க்வசித் த்வதரிதகாமிநீ * என்பது; இதன் முடிவில் "மது நிபீய மத்தா யதா" என்று கள்ளைக்குடித்தவொரு வ்யக்தியை உவமை கூறியிருக்கின்றது. அந்தவ்யக்தியின் நடையும் சிலம்பாற்றின் நடையும் ஒத்திருக்கும்படியை சுலோகம் முழுவதும் வருணித்துக் காட்டியுள்ளது. அந்த ச்லோகத்தை யடியொற்றியே இச்செய்யுள் பாடப்பட்டுள்ளது. கட்குடியர் படியும் சரயுவெள்ளத்தின்படியு மொத்திருப்பதாகச் சிலேடை நயம் காட்டுகின்றது. கட்குடியரிடத்துள்ள கள் நாற்றத்திற்காகவும் அவர்களது உடலினும் வழிந்த கள்ளுக்காகவும் ஈக்களும் வண்டுகளும் மொய்த்தல் இயல்வு. [வரம்பு இகந்து] குடியர் தங்கள் குலமரியாதைகளைக் கடந்து யதேச்சையாக ஒழுகுதலும் இயல்பு. [ஊக்கமே மிக] குடியினல் உற்சாகமும் மிகும். [உள்தெளிவின்றியே] குடியினல் மனத் தெளிவு தொலைந்து கலக்கமே மிக்கிருக்கும். [தேக்கெறிந்து] ஏப்பமிடுதல் குடியின் காரியம். தீம்புனல் = தீம் என்று இனிமை. ... 10

14. முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கிப்
புல்லிய நெய்தல்தன்னைப் பொருவரு மருதமாக்கி
எல்லையில் பொருள்களெல்லாம் இடைதடுமாறு நீரால்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்றதன்றே. **11**

முல்லையை குறிஞ்சி ஆக்கி	காட்டு நிலமாகிய முல்லை நிலத்தை மலையிடமாகிய குறிஞ்சி நிலமாக்கியும்	மருதத்தை முல்லை ஆக்கி	நாட்டிடமாகிய மருத நிலத்தைக் காட்டுநிலமான முல்லை நிலமாக்கியும்

புல்லிய நெய்தல் தன்னை	அற்ப பலனைத் தருகிற கடலிடமாகிய நெய்தல் நிலத்தை	இடை தடுமாறும் நீரால்	இடம் பெயர நிற்குந் தன்மையினால்
பெரு அரு மருதம் ஆக்கி	ஒப்பற்ற நாட்டு நிலமான மருத நிலமாக்கியும் (இவ்வண்ணமாக)	செல்உறு கதியில் செல்லும் வினை என	உயிர்கள் செல்லும் கதிகளிலெல்லாம் விடாது தொடர்ந்து செல்லுகின்ற புண்யபாப ரூபகருமங்களையொத்து
எல்லையில் பொருள்கள் எல்லாம்	அந்தந்த எல்லைகளிலுள்ள பொருள்கள் யாவும்	சென்றது	சரயுவின வெள்ளம் பெருகிற்று.

* * *—"புரா யத்ர ஸ்ரோத: புலினமதுநா தத்ர ஸரிதாம்" என்று உத்தரராமசரித நாடகத்தில் பவபூதி மஹாகவி சொல்லுகிறபடி நிலங்களுக்கு வேறுபாடு நேருவது பெருவெள்ளத்தினாலாகும். முல்லை நிலத்தைக் குறிஞ்சிநில மாக்குவதும் மருத நிலத்தை முல்லைநிலமாக்குவதும் நெய்தல்நிலத்தை மருதநிலமாக்குவதுமான விபரீத சேஷ்டைகள் பெருவெள்ளங்களுக்கு இயல்பு. இவ்விதமான சேஷ்டைக்கு மிகப் பொருத்தமான உவமை கூறப்படுகின்றதிங்கு; புண்ய பாபரூப கருமங்களானவை தேவயோனியிற் பிறந்தவர்களை மனிதயோனியிற் பிறப்பித்தும், மனித யோனிகளைத் தேவயோனிகளாக்கியும், தாவரங்களை விலங்குகளாக்கியும் இங்ஙனே மாறாட்டத்தை யுண்டாக்குவனவன்றோ. அத்தகைய இருவினைகளே ஏற்ற உவமையாயின. மூன்றாமடியின் முடிவில் நீரால் என்றது—நீர்மையினால் என்றபடி; நீர்மையாவது தன்மை.

தமிழர்கள் பூதலத்தை நால்வகையாகப் பிரித்துப் பேசுவர்—முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று. காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாம்; மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாம்; நாடும் நாடு சார்ந்த இடமும் மருதமாம். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாம். பெருவெள்ளம் எல்லா நிலங்களிலும் பரந்து செல்லும்போது ஓரிடத்துப் பொருள்கள் மற்றோரிடத்தே கொண்டு தள்ளப்படுதல் பற்றி ஒரு நிலத்தை மற்றொரு நிலமாக்கினதாக இங்குக் கூறிற்றென்க. ... **11**

15. கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீதென்னத்
தொல்லையி னொன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே. **12**

கல் இடை பிறந்து போந்து	இமயமலையில் தோன்றி அங்கு நின்றும் பெருகி வந்து	தொல்லையின் ஒன்றே ஆகி	ஆதிகாலத்தில் சரயு வெள்ளமென்கிற ஒரு பெயரோடிருந்து
கடல் இடை கலந்த நீத்தம்	ஸாகரத்திலே ஸங்கமம் பெற்ற ஸரயூநதீ ப்ரவாஹமானது,	துறைதொறும்	தடாகம் முதலிய பல்வேறு இடங்கள் தோறும்,
எல்லை இல் மறைகளாலும்	அனந்தங்களான வேதங்களாலும்	பரந்த சூழ்ச்சி பல் பெரும் சமயம்சொல்லும் பொருள் போலும்	விசாலமான விமர்சசக்தியையுடைய பலமதஸ்தர்கள் சொல்லும் பொருள் பலபடிப்பட்டிருப்பது போல
இயம்ப அரு பொருள் ஈது என்ன	அளவிட்டுச் சொல்ல முடியாத பரம்பொருளையொத்தது இது என்னலாம்படி.	பரந்தது	பலதலைத்தது.

* * *—ஸரயூநதீப்ரவாஹமானது ஆதியில் ஒன்றேயாயிருந்ததற்கு ஓர் உவமையும், அது பலவிடங்களில் தங்கிப் பல பெயர்களால் வழங்கலானதற்கு மற்றோருவமையுமாக இரண்டு உவமைகள் இச்செய்யுளிற் கூறப்பட்டன. சரயு

இமயமலையில் உற்பத்தியாகி அங்குநின்று வெளிப்படுங் காலத்தில் ஒன்றேயாயிருந்ததற்கு ஏற்ற உவமை பரப்ரஹ்மமாகும்; அஃது ஆதியில் [மதபேதங்கள் உண்டாவதற்கு முன்னே] ஒரே பெயரால் வழங்கப்பட்டிருந்ததன்றே. "தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே புக்கன்றிப் புறம் நிற்கமாட்டாத" (பெருமாள் திருமொழி 5-8) என்கிறபடியே அந்த வெள்ளம் ஸமுத்ரஸங்கமமடைவதற்குள் ஏரி, குளம், பல பல சிற்றாறு முதலிய இடங்களிலெல்லாம் பரந்து வெவ்வேறு பல பெயர்களை யடைந்ததற்கு ஏற்ற உவமை—பல்பெருஞ்சமயஞ் சொல்லும் பொருள். * ஏகமேவ அத்விதீயம் என்னப்படுகிற ஒரு பரப்ரஹ்மந்தானே பல சமயத்தவர்களது சூழ்ச்சிக்கு உட்பட்டுப் பலபடியாகின்றதன்றே. இவ்விடத்து "மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பல பலவாக்கி அவையவைதோறு அணங்கும் பல பல வாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்" என்ற நம்மாழ்வாரது திருவிருத்தப் பாசுரம் நினைப்பது.

மூன்றாமடியில் "பிரிந்த சூழ்ச்சி" யென்றும் பாடங் காண்கிறது. ... 19

16. தாதுகு சோலைதோறும் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூகவனந் தொறும் வயல்கள் தோறும்
ஓதியவுடம்பு தோறும் உயிரென வுலாய தன்றே.

(கருத்து.) மது வொழுகுகின்ற எல்லாப் பொழில்களிலும் சண்பக வனங்களிலும் பூம்பொய்கைகளிலும் புதிய மணத்தைக் கொண்ட தடாகங்களிலும் குருக்கத்திச் செடிகளை வேலியாகக் கொண்ட பாக்குத் தோப்புகளிலும் சரயு வெள்ளம் உலாவிற்று; எங்ஙன மென்னில், ஜீவாத்மா நாற்கதிகளிலு முள்ள உடம்புகளிற் புகுந்து செல்லுதல் போல. 20

(இனி, கோசல நாட்டின் சிறப்பைப் பேசுகின்றே னென்றல்.)

17. வாங்கரும் பாதநான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனு நறவை மாந்தி
மூங்கையான் பேசலுற்ரு னென்னயான் மொழியலுற்றேன். **1**

வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த	மாற்ற வொண்ணாத நான்கு பாதங்களையுடைய சுலோகங்களை இயற்றிய	ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை	அந்த ஆதிகாவியத்திலே அந்த கவித்தலைவன் கொண்டாடிக் கூறிய கோசல நாட்டை
வான்மீகி என்பான்	வான்மீகி என்கிற ஆதிகவியானவர்	யான்	அறிவிலியாகிய நான்
தேவரும் செவிகள் ஆர பருக	தேவலோகத்தவர்களும்காதாரப்பருகும்படி	அன்பு எனும் நறவை மாந்தி	அன்பாகிற மதுவைப் பருகி
தீம் கவி செய்தான்	இனிய கவிகளைக் கொண்ட ஸ்ரீராமாயணத்தைச் செய்தருளினன்;	மூங்கையான் பேசலுற்ருன் என்ன	ஊமை பேசத் தொடங்கினது போல
		மொழியல் உற்றேன	வருணிக்கத் தொடங்கி நின்றேன்.

* * *—ஸ்ரீராமபிரானுடைய திருவவதாரம் அயோத்திமா நகரில்; அந்நகர் கோஸல நாட்டிலுள்ளது. நாட்டை வருணித்து நகரத்தை வருணிக்க ப்ராப்தமா

யிற்று. கோஸல நாட்டை வருணிக்கக் கவிசக்ரவர்த்தியான வான்மீகி முனிவரே தகுதியுடையா ரென்றும், அந்த வருணனையில் தாம் இறங்குவது அபஹாஸ்ய மென்றும் அவையடக்க முறையிற் கூறுவது இச்செய்யுள்.

"வளங்குருகூர்ச்சடகோபன் பாட்டாய தமிழ்மாலை யாயிரத்துளிப்பத்துங் கேட்டு ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்று நம்மாழ்வா ரருளிச் செய்தபடி திருவாய்மொழி தேவர்களுக்கும் போக்யமாவது போல ஸ்ரீ ராமாயணமும் தேவபோக்யமாமென்னத் தட்டில்லையாதலால் "தீங்கவி செவி களாரத் தேவரும் பருகச் செய்தான்" என்றார். வால்மீகி ராமாயணத்திலுள்ள சுலோகங்களில் ஏதேனுமொரு பாதத்தை யெடுத்துவிட்டு அந்தஸ்தானத்தில் வேறு சில சொற்றொடர்களைத் தொடுத்து ஒருவர் புகவிட்டால் அசடு தட்டிக்கிடக்கு மென்னுங் கருத்துப்பட "வாங்கரும் பாதநான்கும் வகுத்த" என்றார்; இதனால் ஸ்ரீ ராமாயண ஸூக்திகளின் ஒப்புயர்வின்மை தெரிவிக்கப் பட்டதாயிற்று. ... 1

18. நீரிடை யுறங்குஞ் சங்கம் நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்கு மேகம். 5

(கருத்து) சங்குகள் நீரிடத்துக் கிடக்கும்; எருமைகள் மரங்களின் நிழலிலே யுறங்கிக் கிடக்கும்; வண்டுகள் பூமாலைகளிலுறங்கும்; ஸ்ரீமஹாலக்ஷ்மி தாமரை மலரில் இனிதமர்ந்திருப்பாள்; ஆமைகள் புதர்களிலமர்ந்திருக்கும்; முத்துச் சிப்பி கள் நீர்த்துறைகளிற் கிடக்கும்; அன்னப்பறவைகள் நெற்போரில் தங்கியிருக்கும்; மேகங்கள் சோலைகளில் தவழ்ந்திருக்குமென இயல்வு நவிற்சி (ஸ்வபாவோக்தி); செய்யுளின் முடிவில், மேகம் என்றும் தோகை யென்றும் பாட பேதங்கள். தோகை-மயில். 5

19. வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர் செறுநரின்மையால்
உண்மையில்லை பொய்யுரையிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால். 53

(கருத்து.) கோசல நாட்டில் தரித்திரமென்பது சிறிது மில்லாமையால் தானத்தின் சிறப்பு தெரிகிறதில்லை; எதிரம்பு கோத்துப் போர்புரிவா ரில்லாமை யால் விக்கிரமச் சிறப்பு தெரிவதில்லை; பொய் சொல்லுவ தென்பது கிடையா தாதலால் ஸத்யத்தின் மஹிமை தெரிவதில்லை; பஹுச்ருதர்கள் மலிந்திருப்பதால் அஜ்ஞான ப்ரஸக்தியேயில்லை. அங்குள்ளவர்கள் பெரும்பாலும் செல்வம் மிக்கவர் களாகவும் ஸர்வபூத ஸுஹ்ருத்துக் களாகவும் ஸத்யவாதிகளாகவும் பஹுச்ருதர் களாகவும் விளங்கின ரென்றவாறு. 53

(3. நகரப்படலம்—அயோத்திமா நகரின் சிறப்புரைத்தல்.)

20. செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவருந் தவஞ்செய் தேறுவானுதரிக்கின்ற
அவ்வுலகத்தோ ரிழிவதற்கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம். 1

அயோத்தி மா நகரம்	மிகச் சிறந்த அயோத்யா நகரமானது
செவ்விய மதுரம் சேர்ந்த நல் பொருளின்	அழகியனவும் சுவைமிக்கனவும் சிறந்த பொருளாற் சிறப்புடையனவும்
கூரிய	நுட்பமாயுள்ளனவும்
தீம் சொல் வெவ்விய	இனிப்பைத் தருவனவுமான சொற்களைக் கொண்ட
கவிஞர் அனைவரும்	புலவர்களெல்லோரும்
வடநூல் முனிவரும்	வடநூலில் நிபுணர்களான மஹர்ஷிகளும்
புகழ்ந்தது	புகழுகின்றது; (அதுவன்றியும்)
வரம்பு இல் எவ் உலகத்தோர் யாவரும்	அளவில்லாத எல்லா வுலகங்களிலுமுள்ள எல்லாராலும்
தவம் செய்து	தவம் புரிந்து
ஏறுவான் ஆதரிக்கின்ற	பெறவிரும்பப் படுகின்ற
அவ் வுலகத்தோர்	அந்த ஸ்ரீவைகுண்டத்திலுள்ளாரும்
இழிவதற்கு அருத்தி புரிகின்றது	இறங்கி வந்து இங்கே வசிக்க விரும்பப் பெறுவதுமாம்.

"வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே" என்றபடி பரம புருஷன்தானே தசரதாத்மஜனாக வந்து பிறந்தவிடம் இவ்வயோத்திமா நகராதலால் இது கவிகளாலும் மஹர்ஷிகளாலும் மிகமிகக் கொண்டாடப் படுவதுந்தவிர "மண்ணிலிதுபோலு நகரில்லையென வானவர்கள் தாம் மலர்கள் தூய், நண்ணியுறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம்" என்றபடி பரமபதத்திலுள்ளாரும் இங்கே வந்து சேர விரும்பவும் பெற்றதென்று நகரின் ஒப்புயர்வற்ற பெருமை கூறப்பட்டது. "தேவாநாம் பூ: அயோத்யா" என்று வேதத்திலேயே ஓதப்பட்டது அயோத்யா புரி; அதுவே இங்கு வந்து தோன்றினமையால் அங்குள்ளாரும் இங்கு வந்து வஸிக்க விரும்புவதில் வியப்பில்லை யென்க. 1

21. நிலமகள் முகமோ திலதமோ கண்ணோ நிறைநெடுமங்கல நாணோ
இலகு பூண்முலைமேலாரமோ வுயிரின் இருக்கையோ திருமகட்கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன்மணிகள் வைத்த பொற்பெட்டியோ வானோர்
உலகின் மேலுலகோ வூழியினிறுதியுறையுளோ யாதெனவுரைப்பாம். 2

(அயோத்திமாநகரமானது)

நிலம் மகள் முகமோ	பூமி தேவியின் திருமுக மண்டலமோ?
திலதமோ	முகத்திலணியும் திலகந் தானோ?
கண்ணோ	அப்பூமிதேவியின் திருக்கண்ணேயோ?
நிறை நெடு மங்கலம் நாணோ	நிறைந்த நீண்ட மங்கள ஸூத்ரமோ?
முலை மேல் பூண் இலகு ஆரமோ	தனத்தின்மீது தரிக்கப்பட்டு விளங்குகிற ரத்ன ஹாரமோ?
உயிரின் இருக்கையோ	ப்ராண ஸ்தானமோ!
திருமகட்கு இனிய மலர் கொலோ	ஸ்ரீமஹாலக்ஷ்மிக்குப் பரம போக்ய ஸ்தலமான தாமரை மலரோ?
மாயோன் மார்பில் நல்மணிகள் வைத்த பொன் பெட்டியோ	எம்பெருமானுடைய திருமார்பிலணியும் கௌஸ்துப மணி முதலான மணிகள் சேமித்து வைப்பதற்குரிய நல்ல பெட்டி தானோ?
வானோர் உலகின் மேல் உலகோ	பரமபதத்திற்கும் மேற்பட்டதான வொரு லோகமோ?
ஊழியின் இறுதி உறையுளோ	பிரளய காலத்தில் எல்லாப் பொருள்களும் தங்குமிடமான திருமாலின் திருவயிறோ?
யாது என உரைப்பாம்	இவற்றுள் எது வென்று நிச்சயித்துச் சொல்லுவோம்.

22. உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்கொரு தனிக்கொழுநனு மலர்மேல்
கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முவமை கண்டிலரங்கது காண்பான்
அமைப்பருங்காதலது பிடிந்துந்த அந்தரஞ் சந்திராதித்தர்
இமைப்பிலர் திரிவர் இதுவலாலிதனுக்கு இயம்பலாமேது மற்றியாதோ. 3

உமைக்கு ஒரு பாகத்து ஒருவனும்	பார்வதியை ஒரு புறத்தே கொண்ட பரமசிவனும
இருவர்க்கு ஒரு தனி கொழுநனும்	பூமகளும் நிலமகளுமான தேவியரிருவர்க்கு ஒப்பற்ற நாதனுன நாராயண மூர்த்தியும்
மலர் மேல் கமை பெரு செல்வம் கடவுளும்	தாமரை மலரில் தோன்றிப் பொறுமையைப் பெருஞ் செல்வமாகக் கொண்ட பிரமனும்
உவமை கண்டிலர்	அயோத்தியா நகர்க்கு ஒப்பானதொரு நகரைக் காணுதவராயினர் ;
அது காண்பான்	அதனைக் காண்பதற்காக
அமைப்பு அரு காதல் அது பிடித்து உந்த	அடக்க முடியாத ஆசை பிடித்துத் தள்ள
சந்திர ஆதித்தர் இமைப்பு இலர் அந்தரம் திரிவர்	சந்திர சூரியர்கள் இமை கொட்டாதவர்களாய் இன்னமும் ஆகாசத்தில் திரிகிறுர்கள் ;
இதனுக்கு	அவர்கள் இப்படி திரிவதற்கு
இது அலால்	இக்காரணம் தவிர
இயம்பல் ஆம் ஏது மற்று யாதோ	சொல்லக்கூடிய வேறு காரண முளதோ ?

***—அரனும் அரியும் அயனுமான மும்மூர்த்திகளும் அயோத்திக்கு ஒப்பான நகரம் வேறொன்று காணக் கிடைக்குமோவென்று தங்களுடைய ஞானக் கண்ணினுல் தேடிப்பார்த்துக் கண்டிலர் ; எங்கும் திரிந்து கட்கண்ணினுலேயே தேடிப்பார்த்தால் கிடைக்குமோ வென்று கருதி, புவனமெங்கும் திரிந்து செல்லக்கூடிய ஆற்றல் பெற்ற சந்திர ஸூரியர்கட்குக் கட்டளையிட, அவர்கள் இன்னமும் நாடொறும் ஆகாயத்தேதிரிந்து தேடிப்பார்க்கின்றனர்-என்னுமிந்த உத்ப்ரேக்ஷையினுல் அயோத்தியின் ஒப்பிலாமை காட்டப்பட்டதாம். .... *

23. அயின்முகக் குலிசத்தமரர்கோனகரும் அளகையுமென்றிவையயனுர்
பயிலுறவுற்றபடி பெரும்பான்மை யிப்பெருந் திருநகர்படைப்பான்
மயன்முதல் தெய்வத் தச்சரும் தந்தம் மனத்தொழில் நாணினர் மறந்தார்
புயல்தொடு குடுமிநெடுநிலைமாடத் திந்நகர் புகலுமா றெவனே. 4

அயில் முகம் குலிசத்து அமரர் கோன் நகரும்	கூர்மையான முகத்யையுடைய வஜ்ராயுதத்தை யேந்திய தேவேந்திரனது நகரமான அமராவதியும்
அளகையும்	குபேரபட்டணமாகிய அளகாபுரியும்
என்ற இவை	ஆகிய இவ்விருநகரங்களையும்
அயனுர்	பிரமதேவன்
பயில் உறவு உற்ற படி	(படைத்துப்) பயிற்சி செய்து கொண்டதற் கிணங்க
பெரு பான்மை இ பெரு திரு நகர் படைப்பான்	மிக்க சிறப்பு வாய்ந்த மிக வழகிய இவ்வயோத்திமா நகரை நிருமித்தனன் ;
மயன் முதல் தெய்வம் தச்சரும்	மயன் முதலான தேவ சிற்பிகளும்
நாணினர்	இந்நகரத்தின் சிறப்பைக் கண்டு வெள்கினவர்களாய்
தம் தம் மனம் தொழில் மறந்தார்	தங்கள் தங்களுடைய ஸங்கற்ப சிற்பத்தை மறந்தொழிந்தார்கள் ; (எனவே)
புயல் தொடு குடுமி நெடு நிலை மாடத்து இ நகர்	மேகமண்டலத்தளவு மளாவிய சிகரங்களையுடைய நீண்ட மேல் நிலையைக் கொண்ட உபரிகை வீடுகளையுடைய இவ்வயோத்தி நகரை
புகலும் ஆறு எவனே	வருணித்துச் சொல்லும் வகை யாதோ ?

* * *—ஸ்ரீ குணரத்நகோசத்தில் (60) "ஸீதாவதாரமுகமேத தமுஷ்ய யோக்யா" என்றருளிச் செய்திருப்பதை யடியொற்றி இப்பாட்டில் முன்னிரண்டடிகள் இயற்றப்பட்டன. ஔதார்யம் முதலான எல்லாத் திருக்குணங்களும் ஸ்ரீரங்க நாச்சியாரான நிலையிலேதான் நிரம்பியுள்ளனவென்றும், ஸீதாபிராட்டியாக அவதரித்தது முதலான மற்றையவதாரங்கள் இவ்வமைப்பு பழகுவதற்காகச் செய்யப்பட்டவை என்றும் அந்தச்லோகத்தில் பட்டர் அருளிச்செய்ததுபோல, அழகிலும் ஐச்வர்ய ஸம்ருத்தியிலும் மிக்கவையாகப் புகழ்பெற்ற அமராவதியும் அளகாபுரியும் அயோத்திமாநகரைப் படைத்தற்குப் பழகும்பொருட்டுப் படைக்கப் பட்டவை யென்று இங்குக் கூறப்பட்டது. ....

24. புண்ணியம்புரிந்தோர் புகுவதுதுறக்க மென்னுமீதருமறைப் பொருளே
மண்ணிடையாவ ரிராகவனன்றி மாதவமறத்தொடும் வளர்த்தார்
எண்ணருங்குணத்தி னவனினிதிருந்திவ் வேழுலகாளிட மென்றால்
ஒண்ணுமோவதனின் வேறொருபோக முறைவிடமுண்டென வுரைத்தல். (5)

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம் என்னும் ஈது	(இஹலோகத்தில்) புண்ணியம் செய்தவர்கள் (மறுமையில் இன்பம் நுகர்வதற்குச்) சேருமிடம் ஸ்வர்க்கலோகமாம்—என்கிற விவ்விஷயம்
அரு மறை பொருளே	அரிய வேதங்களில் தேர்ந்த பொருளேயாகும்;
மண் இடை	இந்நிலவுலகத்திலே
அறத்தொடும் மா தவம் வளர்த்தார்	(மேலே சொன்ன சிறப்புடைய தருமத்தையும் மஹத்தான தபஸ்ஸையும் நன்றாகச் செய்தவர்
இராகவன் அன்றி யாவர்	இராமனைத் தவிர்த்து வேறு எவரிருக்கின்றனர்? (எவருமிலர்).
எண் அரு குணத்தின் அவன்	(அங்ஙனம் அறத்தை நிலைநாட்டிய) எண்ணிறந்த திருக்குணங்களையுடைய அவ்விராமன்
இனிது இருந்து	திருவுள்ளத்திற்கு உகப்பாக நீண்ட காலமெழுந்தருளியிருந்து
இ ஏழ் உலகு ஆள் இடம் என்றால்	இவ்வேழுலகங்களையும் ஆளுதற்குரிய இடம் இவ்வயோத்திமாநகரமென்றால்
அதனின்	அந்நகரத்திற்காட்டிலும் மேம்பட்டதாகிய
போகம் உறைவு வேறு ஒரு இடம் உண்டு என உரைத்தல் ஒண்ணுமோ	பலவகைச் சுகாநுபவங்களுக்கு இருப்பிடமான வேறொருலகமுள்ளதென்று சொல்லத் தகுமோ?

* * * வேதங்களில் "ஸ்வர்க்ககாமோ யஜேத" என்று பலவிடங்களிலும் ஓதப்படுகிறது; ஸ்வர்க்க லோகத்தை யடைவதற்கு ஸாதனமாகப் பலவகையான ஸுக்ருதங்கள் ஓதப்பட்டுள்ளன; அப்படிப்பட்ட நல்வினைகளைச் செய்தவர்கள் இறந்தபின் போய்ச்சேர்ந்து ஸுகாநுபவம் செய்யுமிடம் தேவலோகமென்பது நூற்கொள்கை; எனினும், அவ்வேத முதல்வனே தர்மஸ்தாபநார்த்தமாக ரகுகுலத்தில் சக்ரவர்த்தி திருமகனாய்த் தோன்றி ஸகலலோகங்களையும் ஆள்வதற்கு அரசாட்சி புரிந்தவிடம் இவ்வயோத்திமாநகரமென்றால் இதற்கும் மேலான வேறொரு போக பூமி உண்டென்னத் தகாது என்று இந்நகரின் சிறப்பு சொல்லிற்றாயிற்று. *

25. தங்குபேரருளுந் தருமமுந்துணையாய்த் தம்பகைப்புலன்களைந்தவிக்கும்
பொங்குமாதவமும் ஞானமும்புரிந்தோர் யாவர்க்கும் புகலிடமான
செங்கண்மால்பிறந்தாண் டளப்பருங்காலந் திருவின்வீற்றிருந்தமை தெளிந்தால்
அங்கண்மாஞாலத் திந்நகரொக்கும் பொன்னகர் அமரர்நாட்டியாதோ. (6)

தங்கு பேர் அருளும்	தம்மிடத்துத் தங்கிய பரம கருணையும்
தருமமும் துணை ஆய்	தருமமும் துணையாகப் பெற்று
தம் பகை புலன்கள் ஐந்து அவிக்கும்	தமக்கு விரோதிகளான பஞ்சேந்திரியங்களையும் அடக்குபவர்களாகி
பொங்கு மா தவமும் ஞானமும் புரிந்தோர் யாவர்க்கும்	வளர்ந்த தவத்தையும் ஞானத்தையும் பெற்றுள்ள யாவர்க்கும்
புகல் இடம் ஆன	சரண்யனான

செங்கண் மால்	புண்டரீகாக்ஷ பகவான்
பிறந்து	திருவவதரித்து
ஆண்டு	அவ்வயோத்திமாநகரில்
அளப்ப அரு காலம்	அளவிடமுடியாத நீண்ட காலத்தளவும்
திருவின்	பிராட்டியோடு கூட
வீற்றிருந்தனன் என்றால்	எழுந்தருளியிருந்தானென்றால்
அம் கண் மா ஞாலத்து அ நகர் ஒக்கும்	அழகிய இடங்களைக்கொண்ட பெரிய பூமியிலுள்ள அவ்வயோத்தி மாநகரைப் போன்ற
பொன் நகர்	அழகிய நகரம்
அமரர் நாடு யாதோ	தேவலோகத்தில் தானுண்டோ?

* * * "தச வர்ஷ ஸஹஸ்ராணி தச வர்ஷ சதானி ச, ராமோ ராஜ்ய முபாஸித்வா" என்று ஸ்ரீராமாயணத்திற் கூறியபடி பதினோராயிரமாண்டு பெருமாள் ஸீதாபிராட்டியுடனே யெழுந்தருளியிருந்து செங்கோல் செலுத்திய மஹாநகரம் இந்நிலத்தில் அயோத்யாபுரி யொன்றேயானபின்பு இதற்கொப்பானதொரு நகரம் விண்ணுலகிலுமில்லை யென்னத் தட்டுண்டோ? என்றவாறு. .... *

26. அரசெலாமவண அணியெலாமவண அரும்பெறல் மணியெலாமவண
புரைசைமாகளிறும் புரவியுந்தேரும் பூதலத்தி யாவையுமவண
விரசுவார் முனிவர் விண்ணவரியக்கர் விஞ்சையர் முதலினோ ரென்றால்
உரைசெய்வேன்யானே யானபோததனுக்கு உவமைதானரிதரோவுளதோ. 7

அரசு எலாம் அவண	எல்லா அரசர்களும் அவ்விடத்தே யுள்ளார்கள்;
அணி எலாம் அவண	ஆபரணங்களென்று சொல்லப்படுமவை யெல்லாம் அவ்விடத்தேயுள்ளன;
அரு பெறல் மணி எலாம் அவண	பெறுதற்கரியனவான ரத்தினங்களெல்லாம் அவ்விடத்தேயுள்ளன;
புரைசை மா களிறும்	கழுத்திடு கயிற்றையுடைய மதயானைகளும்
புரவியும் தேரும்	குதிரைகளும் தேர்களும்
பூதலத்து யாவையும் அவண	இப்பூமண்டலத்தி லிருக்கக்கூடிய மற்றெல்லாப் பொருள்களும் அவ்விடத்தே யுள்ளன;

முனிவர் விண்ணவர் இயக்கர் விஞ்சையர் முதலினோர்	ரிஷிகள் தேவர்கள் யக்ஷர்கள் வித்யாதரர்கள் முதலானவர்களும்
விரசுவார்	இங்கே மனம் பொருந்தி வர்த்திப்பர்கள்;
என்றால்	என்று இத்தனை பெருமைகள் சொல்ல நிற்கும் போது,
உரை செய்வேன யானே ஆன போது	(இந்நகரத்தை) வருணித்துக் கூறுபவன் சிற்றறிவினனான யானே யாயிருக்கையில்
அதனுக்கு உவமை தான் உளதோ	அந்த அயோத்திமாநகருக்கு உபமானமாயிருப்பதொரு நகரந்தானுண்டோ?
அரிது	(உவமை) அருமையானதே.

* * *—எல்லா வளங்களும் நிரம்பிய இந்நகரத்தைப் போன்ற வேறொரு சிறந்த நகரம் எங்குமில்லை யென்னுமிடத்தை உபபாதித்துக் கூறினாராயிற்று. *

4. அரசியற்படலம்—தசரதனது அரசாட்சி முறைமை கூறுவது.

27. அம்மாணகருக்கரசன் அரசர்க்கரசன்
செம்மாண் தனிக்கோல் உலகேழினுஞ் செல்ல நின்ருன்
இம்மாண்கதைக்கு ஓரிறையாய விராமனென்னும்
மொய்ம்மாண் கழலோன் தரு நல்லறமூர்த்தி யன்னுன். 1

மாண் அ நகருக்கு	மாட்சிமை தங்கிய அவ்வயோத்திமாநகர்க்கு
அரசன்	அரசனுவான் (எப்படிப்பட்டவனென்னில்)
அரசர்க்கு அரசன்	(உலகிலுள்ள) ஸகல ராஜாக்களுக்கும் தலைவனுன ஸார்வபௌமன் ;
மாண் தனி செம் கோல்	மாட்சிமையுள்ள ஒப்பற்ற தனது செவ்விய அரசாட்சி
உலகு ஏழினும் செல்ல நின்ருன்	ஏழுலகங்களிலும் தடையின்றி நடக்கும்படி நின்றவன் ;

இ மாண் கதைக்கு ஓர் இறை ஆய	(ராமாயண மென்கிற) இப்பெரிய கதைக்குத் தலைவனுகிய
இராமன் என்னும்	ஸ்ரீராமபிரானென்கிற
மொய் மாண் கழலோன் தரு	மிகச் சிறந்த வீரக்கழலணிந்த திருக்குமாரனைப் பெற்றெடுத்தளித்த
நல் அறம் மூர்த்தி அன்னுன்	சிறந்த தரும மூர்த்தியானவன்.

* * *—சரயூநதி பாயப்பெற்ற கோசல நாட்டின்கணுள்ள அயோத்திமாநகரின் சிறப்பை வருணித்தபின் அந்நகர்க்கு அரசனுகிய தசரத சக்கரவர்த்தியினது அரசாட்சி முறைமை கூறத்தொடங்கலாயிற்று. அவ்வயோத்திமா நகரையாண்டவன் யாவனென்னில், ராஜாதி ராஜனும், நீதி தவருத தனது செங்கோலை இந்நிலவுலகத்தில் மட்டுமன்றிக்கே ஏழுலகங்களிலும் தடையில்லாமல் நடத்துபவனும், ராமாயண கதைக்குப் பிரதான நாயகனுன ஸ்ரீராம பிரானுக்குத் தந்தையுமான தசரத சக்கரவர்த்தி என்றதாயிற்று. ... ... *

28. ஆதிமறையும் அருளும் அறனும் அமைவும்
ஏதின்மிடல்வீரமும் ஈகையுமெண்ணில் யாவும்
நீதிநிலையும் இவைநேமியினேர்க்கு நின்ற
பாதிமுழுதும் இவற்கே பணிகேட்ப மன்னே. 2

ஆதி மறையும்	முதன்மையான வேதமோதுதலும்
அருளும் அறனும் அமைவும்	இரக்கமும் தருமமும் சாந்த குணமும்
ஏது இல் மிடல் வீரமும்	குற்றமற்ற சௌர்ய வீர்யங்களும்
ஈகையும்	ஔதார்யமும்
நீதி நிலையும் யாவும் இவை	நீதி நெறியில் தவருது நிற்றலுமாகிய (மன்னவர்க்குரிய) இக்குணங்களெல்லாம்

எண்ணில்	ஆராய்ந்து சொல்லுமிடத்து
நேமியினேர்க்கு	மற்றையரசர்களுக்கு
பாதி நின்ற	பரிபூர்த்தியாயிராமல் குறைந்தே நின்றன ;
இவற்கே	இந்த தசரத சக்ரவர்த்திக்கே
முழுதும்	முழுமையும் [ஸகல ஸத்குணங்களும்]
பணி கேட்ப	அடிமைத் தொழில் புரிந்துகொண்டிருந்தன.

* * *—அறிவு இரக்கம் தரும சிந்தை பொறுமை சௌர்யவீர்ய பராக்ரமங்கள் வள்ளல்தனம் நீதிநெறிநிற்றல் முதலிய அரசர்க்கு வேண்டிய இக்குணங்களெல்லாம் மற்றைச் சக்கரவர்த்திகளிடத்துமுண்டென்ருலும், அவையெல்லாங் கூடினுலுங்கூட தசரத மன்னவனிடத்துள்ள குணங்களுள் பாதிக்குமீடாகா

என்றதாயிற்று. நேமியினோர் = நேமியென்று சக்கரத்திற்குப்பெயர்; அரசர் செலுத்துங் கட்டளையைச் சக்கரமென்று சொல்லுவராதலால் நேமியினோரென்று சக்ரவர்த்திகளுக்குப் பெயராயிற்று. இரண்டாமடியில், எண் இல் யாவும் — எண்ணிறந்த யாவும் என்னவுமாம். பணிகேட்ப—வசப்பட்டிருந்தனவென்கை. .... *

29 தாயொக்குமன்பின் தவமொக்கு நலம்பயப்பின்
சேயொக்கு முன்னின்றொரு செல்கதி யுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்குமெவர்க்கு மன்னுன். 4

அன்னான்	அத்தசரதமன்னவன்	சேய் ஒக்கும்	புத்திரனை யொத்திருப்பன்;
எவர்க்கும்	எல்லோருக்கும்	நோய் ஒக்கும் என்னில் மருந்து ஒக்கும்	துஷ்டர்களுக்குத் தண்டனை கொடுத்து நோயை யொப்பானாயினும் ஹிதபரனாகையாலே மருந்தையு மொப்பான்;
அன்பின் தாய் ஒக்கும்	அன்புடைமையில் பெற்ற தாயைப் போன்றிருப்பவன்;	நுணங்கு கேள்வி ஆய புகும் கால்	ஸூக்ஷ்மமான நூற்பொருள்களை ஆராயப்புகுமிடத்து
நலம் பயப்பின்	உரிய நன்மைகளை யெல்லாம் செய்து தருவதில்	அறிவு ஒக்கும்	ஞானமே வடிவெடுத்தவனென்னத்தகுவான்.
தவம் ஒக்கும்	தவத்தையொத்திருப்பன்;		
முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்	தலைவனாய் நின்று நல்ல கதியிற் கொண்டு சேர்ப்பதில்		

* * *—அத்தசரதமன்னவனது நற்குணத்திரள்களிவை. அன்பு செய்வதில் தாய்க்கு மேற்பட்டாரில்லாமையாலே எல்லாரிடத்தும் அன்பு பூண்டொழுகுதலில் தாயைப் போன்றிருப்பன்; வேண்டிய நன்மைகளை யெல்லாம் தரவல்லது தவமாதலால் அவரவர்கட்கு நன்மை பயக்குந் திறனில் தபஸ்ஸைப் போன்றிருப்பன்; தவமென்றது ஸம்ஸ்க்ருத பர்யாயம். புத்திரன் தோன்றுவது தந்தை தாயர்க்கு உயர்கதி யளித்தற்பொருட்டென்று வேதங் கூறும்; [புத் என்னும் நரகத்தை யடையாதபடி காப்பவன் புத்திரன்] ஆகவே உயர்கதி பெறுவித்தலில் புத்திரனை யொத்திருப்பன். அரசர்களுக்கு தண்ட தரத்வமும் தண்ணளியுமாகிய இரண்டும் இன்றியமையாதனவாதலால் 'நோயொக்கும், மருந்தொக்கும்' என்றார்; தீய வழியிற் சென்றோரைத் தண்டித்து வருந்தச் செய்வதனால் நோயை யொப்பான்; ஆயினும் தண்ணளியுஞ் செய்வதனால் மருந்தையு மொப்பான். இதற்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர்; எவனாயினு மொருவன் பிறர்க்குத் துன்பத்தைச் செய்து வியாதியை யொப்பானாயின், அவனுக்கு உடனே அழிவைச் செய்தலால் மருந்தை யொப்பான். (அல்லது) யாருக்காவது வியாதி நேருமாயின் உடனே அதனை யொழிக்க முயலுதலால் சக்ரவர்த்தி தானே மருந்து போன்றவனாவான் என்று. ... ... *

30. ஈந்தே கடந்தா னிரப்போர்கடல் எண்ணில் நன்னூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவென்னு மளக்கர் வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவின்தொடர் போக பௌவம். 5

(அத்தசரதமன்னவன்)

இரப்போர் கடல்	யாசகர்களாகிற கடலை	ஈந்தே கடந்தான்	தானஞ்செய்தலாகிற தோணியைக்கொண்டே தாண்டினான்;

எண் இல் நல் நூல் என்னும் அளக்கர்	எண்ணிறந்த நல்ல சாஸ்த்ர மென்னுங் கடலை	வாளால் காய்ந்தே கடந்தான்	ஆயுதத்திலைழித்தலாகிய புணையைக் கொண்டே கடந்தான் ;
அறிவு ஆய்ந்தே கடந்தான்	அறிவினால் ஆராய்ச்சி செய்வதாகிற தோணியைக் கொண்டே கடந்தான் ;	திருவின் தொடர் போகம் பௌவர்	செல்வத்தினோடு தொடர்ந்துள்ள இவ்வுலகவின்பமாகிய கடலை
பகை வேலை	பகைவராகிய கடலை	கருத்து முற்ற தோய்ந்தே கடந்தான்	மனம் திருததியடையும்படி புசித்தலாகிற புணையைக் கொண்டே கடந்தான்.

* * *—தசரத மன்னவன் ஐயமும் பிச்சையும் ஆந்தணையும் கைகாட்டி யாசகர்களைத் திருத்தி செய்வித்தான் ; நுண்பொருள் நிரம்பிய சாஸ்திரங்களை யெல்லாம் ஆர அமர ஆராய்ச்சி செய்தான் ; எதிரிகளையெல்லாம் வாளாலறுத் தொழித்தான் ; உலகவின்பங்களை யெல்லாம் அநுபவித்துத் தீர்த்தான் என்ற வாறு. கடல், அளக்கர், வேலை, பௌவம் என நான்கு சொற்களால் நான்கடிகளிலும் ஸமுத்திரத்தைக் குறித்த சாதுரியம் காண்க. மன்னவனிடம் தானம் பெற்ற யாசகர்கள் எண்ணிறந்தவர்களென்பதைக் காட்ட அவர்கள் கடலாகக் கூறப்பட்டனர் ; மன்னவன் ஆராய்ச்சி செய்த சாஸ்திரங்களும் அளவிறந்தவை யென்று காட்ட அவையும் கடலாகக் கூறப்பட்டன ; மன்னவனுக்குத் தோற்றொழிந்த பகைவர்களும் கணக்கற்றவர்களென்று காட்ட அவர்களும் கடலாகக் கூறப்பட்டனர் ; * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவிகண்டவின்பங்கள் மன்னவனால் துய்க்கப்பட்டவை எண்ணிறந்தவை யென்று காட்ட அவையும் கடலாகக் கூறப்பட்டன. இவற்றால் மன்னவனுடைய அவாப்த ஸமஸ்தகாமத்வம் கூறிற்றாயிற்று. ... ... *

31. எய்யென வெழுபகை யெங்குமின்மையான்
மொய்பெருந் தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறியனோம்புமோர்
செய்யெனக் காத்து இனிதரசுசெய்கின்றான். 12

எய் என எழு பகை	'என் மீது அம்பை எறிவாயாக' என்று வீரவாதம் செய்து கொண்டு எதிரிட்டு வருகின்ற பகைவர்கள்	முழவு தோளினன்	மத்தளம் போலத் திரண்டிருந்த தோள்களையுடைய தசரதன்
எங்கும் இன்மையான்	எவ்விடத்து மில்லாமையினால	வையகம் முழுவதும்	பூலோகம் முழுவதையும்
மொய் பெரு தினவு உறு	போரைப் பெறாமல் தினவு மிகுந்த	வறியன் ஓம்பும் ஓர் செய் என காத்து	ஏழையான வொருவன் காப்பாற்றுகின்ற சிறு கழனியைப்போலப் பாதுகாத்து
		இனிது அரசு செய்கின்றான்	இனிமையாக அரசுபுரியாநின்றான.

* * *—முன்னிரண்டடிகளால் தசரத மன்னவன் * ஒரு நாயகமாயேகவுலகுட னுண்டவனென்பது காட்டப்பட்டது. பகைவர்களென்கிற பெயரே யில்லாதபடி வென்று விளங்கியதனால் எப்போதும் தோளில் தினவு மிகப் பெற்றே யிருப்பனென்றது. இத்தகைய தனி வீரனை தயரதன் பூலோகம் முழுவதையும் ஆண்டதற்கு "வறிய னோம்புமோர் செய்யென" என்று உவமை கூறினதன் கருத்து—தரித்திரனை வொருவன் தனக்குள்ள சிறு வயலை எங்ஙனம் மிக்கவூக்கத் தோடு யாதொரு தீங்கும் நேராதபடி காப்பாற்றுவனோ அங்ஙனம் காப்பாற்றினனென்றவாறு. உலகம் முழுவதையும் காக்குமிடத்து அநாயாஸமாகக் காத்தனனென்பதும் இதில் தொனிக்கும். ... ... *

அரசியற் படலம் முற்றிற்று.

5. திருவவதாரப்படலம்

இப்படலத்திற் கூறிய கதையின் சுருக்கம் வருமாறு :—

தயரதமன்னவன் ஒருநாள் தன் குல குருவான வஸிஷ்ட முனிவரைத் தொழுது ‘அறுபதினாயிரமாண்டு யாதொரு குறைவுமின்றி யான் அரசாண்டும் என் காலத்திற்குப்பிறகு இந்த ராஜ்யத்தை யாளுதற்குச் சந்ததியில்லை யென்ற ஒரு குறைமாத்திரம் என் மனத்தை மிக வருத்துகின்றது; முனிவர்களும் அந்தணாளர்களும் இதுகாறும் போலவே இனிமேலும் குறையற வாழவேண்டுமாயின் எனக்கொரு புதல்வனிருக்க வேண்டியது அவசியமல்லவா? என்று விண்ணப்பஞ் செய்தனன். அதுகேட்ட வசிட்ட முனிவன் அவ்வரசனது குறையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாமென்று ஆலோசிக்கையில்; தேவர்கட்குத் திருமால் அபயமளித்த விருத்தாந்தம் நினைவிற்கு வரவே அதனைச் சொல்லத் தொடங்கினன். மன்னவனே; கீழே நடந்திருப்பதொரு செய்தியைச் சொல்லுகிறேன் கேளாய்; இந்திரன் முதலிய தேவர்கள் அரக்கர்களால் மிகவும் வருந்திச் சிவபெருமானை யடைந்து தங்கள் கஷ்டங்களை முறையிட அக்கடவுள் அரக்கரை யழிக்க எம்மாலாகாதென்று சொல்லி அத்தேவர்களுடனே பிரமனுள்ள விடத்தே சென்று தேவர்கட்கு அரக்கர்களால் நேர்ந்துள்ள துன்பத்தைக் கூறினன்; அரக்கர் தலைவனான இராவணனை யொழிப்பது நம்மால் முடியாத காரியம்; திருமால் தான் தனது கருணையினால் அவனைத் தொலைக்கவேண்டும் என்பதுதான் அங்கு முடிவு செய்யப்பட்டது. உடனே அவர்கள் திருமாலை மனத்தினால் சிந்திக்க, அப்பெருமான் திருமகளோடு கருடன் மீதேறி வந்து அத்தேவர்கட்கு முன்னே காட்சி தந்தருளினன். இப்படி, நினைத்த மாத்திரத்திலேயே வந்து சேவை தந்தருளியதனால் அப்பெருமானால் தமது குறை விரைவில் முடியுமென்று பெருமகிழ்ச்சிகொண்ட தேவர்கள் ஆடியும் பாடியும் நிற்க, திருமால் கருடனின்று இறங்கி அங்குள்ளதொரு மண்டபத்தே இடப்பட்ட செம்பொற் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்க, எல்லாத் தேவர்களும் அத்திருமாலை வணங்கி அரக்கரால் தமக்கு நேர்ந்துள்ள கொடுமையைக் கூறத் தொடங்கி ‘விண்ணவரும் மண்ணவருமியற்றும் நற்கருமங்களுக்கெல்லாம் அரக்கர் மிகுந்த இடையூறு இழைக்கின்றாராதலால் தேவரீர் அவர்களைத் தொலைத்திடாவிடின் எங்களாற் பிழைத்திருக்க முடியாது’ என்று முறையிட்டனர். அவர்களுள் பரமசிவன், “செங்கண்மாலே! நாங்கள் அறியாது அரக்கர்கட்கு வரங்கொடுத்ததனால் உலகங்கட்கெல்லாம் அளவற்ற தீம்பு உண்டாயிற்று; இவ்வுலகங்கட்கெல்லாம் தேவரீரே தலைவராதலால் அதனைத் தீர்த்து உலகத்தைக் காக்க வேண்டுவது உமது கடமையேயாகும்; இனிச்சிறிதுபோது தாமதித்திருந்தாலும் அவர்களால் உலகமெல்லாம் அழிந்திடும்” என்று விசேஷித்துக் கூறினன். அவை கேட்ட திருமால் அவர்களை நோக்கி ‘இனி நீங்கள் சிறிதும் வருந்த வேண்டா; உங்கள் துன்பங்களைத் தீர்த்து இன்ப மளிப்பேன் யான்; அச்சம் நீங்கி வாழ்மின்; எனது சங்கு சக்கரங்களும் திருவனந்தாழ்வானும் எனக்குத் தம்பிகளாய் அமைய, நான் அயோத்தியில் தசரத சக்கரவர்த்திக்குப் புதல்வனாய்ப் பிறந்து அரக்கரது வரத்தையும் வாழ்வையும் ஒழிப்பேன்; நீங்கள் பூமியில் வானரங்களாகப் பிறந்திடுமின்’ என்று சோதிவாய் திறந்து பணித்தனன். அதுகேட்டுத் தேவர்கள் மிக மகிழ்ச்சிகொள்ள, திருமால் கருடன் மீதேறி யெழுந்தருளியாயிற்று. பிறகு நான்முகக்கடவுள் தேவர்களை நோக்கி “கரடிகளிற் சிறந்துள்ள ஜாம்பவான் முன்னமே எனது அம்சமாகத் தோன்றியுள்ளான்; திருமால் நியமித்தபடியே நீங்களெல்லீரும் போய் வானர வீரர்களாகப் பிறந்திடுமின்” என்று கூறினன். பிறகு இந்திரன் சூரியன் அக்னி என்பவர்கள் வாலியையும் சுக்ரீவனையும் அங்கதனையும் தனது அம்சமாகக் கூறினர். வாயுவும் ருத்ரனும் அனுமானைத்

தமது அமிசமாகக் கூறினர். மற்றைத் தேவர்கள் நாங்களும் குரங்குகளாகப் பிறக்க மனவுறுதி கொண்டோமென்று சொல்லிப் போயினர், இது நிற்க.

ஸ்ரீமந்நாராயணமூர்த்தி அரக்கர்களை யழித்தற்பொருட்டுத் தசரத மன்னவனுக்குப் புதல்வனகப் பிறக்கப்போவதை மனத்திலெண்ணிய வசிஷ்ட முனிவன், யாகஞ் செய்தால் அந்த வியாஜத்தினுல் திருமால் திருவவதரிப்பனென்ற வுறுதியினுல், 'மன்னவா! நீ ஏழேழு பூதலங்காக்கவல்ல புதல்வரைப் பெறுவிக்கும் வேள்வி யொன்றைச் செய்து முடித்தல் நலம்' என்று அரசனை நோக்கிக் கூறினன். மன்னவன் அதுகேட்டு மகிழ்ந்து யாகத்திற்குத் தான் செய்யவேண்டுவதை வினவி நிற்க, அதற்கு முனிவன் கூறுகின்ருன்—'காசியபனுக்குப் புதல்வன், விபண்டகனென்னும் முனிவனுளன், அவனது புத்திரன் ருசிய சிருங்கன் (கலைக் கோட்டு முனிவன்) என்று பேர்பெற்றவன். அவன் மனிதர்களையே பாராமல் தபோவனத்திலேயே தன் தந்தைக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தனுல் நாடு நகரகங்களில் வாழ்கின்ற மானிடரை விலங்குகளாக நினைப்பவன், ஸகல சாஸ்திரங்களிலும் வல்லவன், மஹா தபஸ்வி, பிரம ருத்திரரும் புகழும் பொறுமை வாய்ந்தவன்; அந்த முனிவன் வந்து யாகத்தை முற்றுவித்தால் நீ கருதியபடி புத்திரர் பிறப்பர்' என்றனர். அதற்காக நான் செய்ய வேண்டுவதைக் கூறவேணுமென்று தசரதனுல் வேண்டப்பட்ட முனிவன் விரிவாகச் சொல்லத் தொடங்கினன்:

—ஸ்வாயம்புவ மநுவின் மகன் உத்தானபாதன்; அவன் மகன் ரோமபாதனென்பான். அவன் அங்க தேசத்திற்கு அரசனுக இருந்தான். அந்நாட்டில் வெகுகாலம் மழையின்மையால் கொடிய பஞ்சத்துயர் மிக்க வளவில் அம்மன்னவன் முனிவர்களை வரவழைத்துத் தான தருமங்கள் செய்த பின்னரும் மழை பொழியாதாக, பிறகு பெரியோர் பலரை விசாரித்ததில், ரிசிய சிருங்க முனிவன் இந்நாட்டில்வந்தால் மழைபெய்யும் என்று அவர்களால் தெரிந்துகொண்டு அம்முனிவனைத் தனது நாட்டிற்கு அழைத்து வருவது எங்ஙனம்? என்று உரோமபாதன் சிந்திக்க, விலைமகளிர் சிலர் தாம்சென்று அழைத்து வருவதாகக் கூற, அப்படியே, அவர்கட்கு அனுமதி தந்தனுக, சென்ற அவ்வேசையர் ருசிய சிருங்கனது ஆச்ரமத்திற்கு ஒரு யோசனை தூரத்தில் முனிவர் வேடத்துடன் ஒரு பர்ணசாலையை யமைத்துக் கொண்டு அதில் தங்கியிருந்து அக்கலைக்கோட்டு முனிவரது தந்தையான விபண்டக முனிவன் வெளியிற் சென்றிருந்த சமயம் நோக்கி அக்கலைக்கோட்டு முனிவரை யணுகினர். அவர் தந்த உபசாரங்களைப் பெற்றுத் தம்மிடமே திரும்பினர். மீண்டும் சிலதினம் கழிந்தபிறகு கலைக்கோட்டு முனிவனுக்குத் தங்களிடம் விச்வாஸம் மிகும்பொருட்டுப் பலவகைக்கனிகளைக் கொணர்ந்து கொடுத்தனர் அவ்விலைமாதர்கள். இங்ஙனம் பலநாட்கள் கடந்தபின் ஒருநாள் அம்முனிவரை நோக்கி தேவரீரும் எங்கள் ஆச்ரமத்திற்கு எழுந்தருள வேண்டுமென்று சொல்லி வணங்கி வேண்ட, அதற்கு உடன்பட்டு அவர்களோடு சென்ருர் கலைக்கோட்டு முனிவர். அவ்விலைமகளிர் தமது ஆச்சிரமம் மிக அருகிலுள்ளதாகச் சொல்லிக்கொண்டு அம்முனிவருடன் அங்கதேசத்து வழியிற் சென்ருர்களாக, அங்கு இம்முனிவரது பாதம் பட்ட மாத்திரத்திலே சளசளவென்று மழைபொழிந்து நீர்நிலைகள் யாவும் நிறைந்து ஆறுகளும் பெருகியோடின. திடீரென்று இங்ஙனமான விசேஷத்தைக்கண்ட ரோமபாதன், கலைக்கோட்டு முனிவன் வந்தான் போலுமென்று ஆலோசித்து மகிழ்ந்து சேனைகளுடன் அம்முனிவரை எதிர்கொள்ளச் சென்று வணங்கி, விலைமகளிரை நோக்கி 'நீங்கள் என்னுடைய துன்பத்தை உங்கள் உபாயத்தால் தீர்த்து விட்டீர்களென்று சொல்லிப் புகழ்ந்தனன். இப்படி நம்மை வஞ்சனையாகவா இவர்கள் இங்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்! என்று சினம்பொங்கி நின்ற முனிவன், மன்னவன் உண்மை

யுரைத்துத் தெரிவிக்கத் தெளிந்து, தேரின் மீதேறிக்கொண்டு ரோமபாத மன்னவனது நகரத்திற்குச் சென்றனன். அங்குச்சென்று சிங்காதனத் தமர்ந்து மன்னவனுடைய சாந்தையென்னும் புதல்வியை மணம் புணர்ந்துகொண்டு அவ்விடத்தே இனிதுறைகின்றான்; அவனை இங்கு அழைத்துவருதல் வேண்டும் என்று கூறி முடித்தனன் வசிட்டமுனிவன். பிறகு, நானே சென்று அம்முனிவனை மீண்டு அழைத்து வருவேனென்று சொல்லிப் பரிவாரங்களுடன் அங்கநாட்டை நோக்கிப் புறப்பட்ட தசரதன் ரோமபாத மன்னவனால் நன்கு உபசரிக்கப்பெற்றுத் தான் வந்த காரியத்தைச் சொல்ல, அம்மன்னவன் 'நீர் அயோத்திசென்று சேரும்; நான் முனிவனை அழைத்துக்கொண்டுவருகிறேன்' என்று சொல்லி மரியாதைகளுடன் தயரதனை அயோத்திக்கு அனுப்பிவிட்டு, பிறகு, முனிவன் திருவடிகளிலே விழுந்து வணங்கித் தசரத சக்கரவர்த்தியின் மனோரதத்தை நிறைவேற்றி யருளவேணுமென்று வேண்டி, அதற்கிசைந்த அவருடன் தானும் அயோத்திசேர, அங்கு அனைவரும் பரமானந்த மெய்தினர். பிறகு கலைக்கோட்டு முனிவன் தன்னை வரவழைத்த காரணத்தைத் தெரிந்துகொண்டு வேள்வி செய்விக்கச் சன்னத்தனாயினன்.

வேள்விக்கு வேண்டிய யாவும் சித்தமாக, தசரதன் யாக தீக்ஷை பெற்றனன். ஒருவருஷகாலம் அசுவமேதயாகம் நடந்தது. ருச்யசிருங்க முனிவன் அந்த யாக குண்டத்தில் புத்திர காமேஷ்டி யாகஞ் செய்தனன். அப்போது செம்பட்ட மயிரையும் செந்நிறக் கண்களையுமுடைய பூதமொன்று பொன்தட்டின் மீது அமிர்த பிண்டத்தைத் தாங்கிக்கொண்டு ஹோமாக்கியில் நின்றும் விரைந்தெழுந்து வந்து அந்த அமுதத் தட்டைத் தரையிலே வைத்துவிட்டு வந்த வழியே மீள, ருச்யசிருங்கன் முறைப்படி அந்தச் சுதையைப் பட்ட மஹிஷியர்க்குத் தரும்படி தசரதனிடம் கூறினன். அக்கட்டளையின்படியே மன்னவன் கௌசலைக்கும், கைகேயிக்கும், சுமித்திரைக்கும் முறையே சுதையை யளித்து, பின்னும் எஞ்சியதைச் சுமித்திரைக்கு அளித்தனன். முனிவன் யாக ஹோமம் முடித்ததும் யஜமானனாயிருந்த தசரதன் யாகசாலையை விட்டுப் புறப்பட்டுப் பூர்ணாஹுதிக்கு அங்கமாகப் பூரி கொடுத்தற்பொருட்டு ஓலக்கமண்டபத்தை யடைந்தனன். அந்தணர்க்குத் தக்ஷிணை கொடுத்து அவபிரதஸ்நாநஞ் செய்து ராஜ ஸபையை யடைந்து வஸிஷ்டரையும் ரிச்யச்ருங்க முனிவரையும் வணங்க, அவரவர்கள் மன்னவனை ஆசீர்வதித்துத் தம்தம் இருப்பிடமேகினர். பிறகு சக்கரவர்த்தியின் தேவியர் மூவரும் கருத்தரித்து நாளடைவில் ப்ரஸவித்தனர். கௌஸல்யாதேவி புனர் பூசத்தில் கர்க்கட லக்னத்தில் ஸகல லோகநாதனை திருமாலைப் புதல்வனுகப் பெற்றனள். கைகேயி பூசத்தில் மீன லக்கினத்தில் ஒரு புதல்வனைப் பெற்றனள். சுமித்திரை ஆயில்ய நக்ஷத்திரத்தில் கர்க்கட லக்னத்தில் ஒரு புதல்வனையும், மகா நக்ஷத்திரத்தில் சிங்கராசியில் மீண்டும் ஒரு புதல்வனையும் பெற்றனள். உடனே அவர்களது தோழிமார்கள் அரசனிடம் விரைந்து சென்று புத்திரர் பிறந்த ஸந்தோஷ ஸமாசாரத்தைச் சொல்லி ஆனந்தக் கூத்தாடி நிற்க, அரசனும் உவந்து சோதிடம் வல்லாரை வருவிக்க, வந்த அவர்கள்பிறந்த நாள் தத்கால கிரகம் முதலியவற்றை யாராய்ந்து 'உலகுகட்கு நேர்ந்துள்ள வருத்தம் யாவும் இப்புதல்வர்களால் நீங்கும் என்று பாராட்டிக் கூறி எல்லாப் புதல்வர்கட்கும் ஜாதக மெழுதித் தந்தனர். தந்தை முறைப்படி ஸரயூ நதியில் தீர்த்தமாடித் தானதருமங்களைச் சிறப்பாகச் செய்தனன். சிறைப்பட்ட அரசரை விடுவிக்குமாறும் அந்தணர்கள் விரதங்களைக் குறைவில்லாமல் நடத்தவும் ஆங்காங்குக் கோவில்களைச் செப்பனிடவும் திருவாராதனை முறைகளைச் சிறப்பிக்கவும் விசேஷமான திருவிழாக்களை நடத்தவும் அந்தணர்கட்கு க்ராம பூமிகள் தானஞ் செய்யவுங் கட்டளையிட்டு, அவரவர்கள் செலுத்த வேண்டிய கப்பங்களை ஏழுவருஷம் தவிர்கவென்றும், பொக்கிஷசாலையைத் திறந்து

விட்டு ஏழைகட்கு ஈந்திடுக வென்றும் பறையறை விக்கத் தெரிவித்தனன். அப்படியே வள்ளுவர் பறையறைந்து செய்தி தெரிவிக்க நகரத்து மாந்தரெல்லாம் மகிழ்ந்தனர்.

பிறகு வசிட்ட முனிவன், புதல்வர் நால்வர்க்கும் முறையே இராமனென்றும் பரதனென்றும் லக்ஷ்மணனென்றும் சத்ருக்னனென்றும் திருநாமம் சாத்தினன். அப்போது அரசன் அளவிறந்த செல்வங்களால் அந்தணர்களை யுகப்பித்தனன். இராமனிடத்திலேயே தயரதன் பேரன்பு பூண்டிருந்தனன். சுக்கில பக்ஷத்துச் சந்திரன் போல் குறையற வளர்ந்து செல்லும் இக்குமாரர்கட்குக் கால காலத்தில் சவுளமும் உபநயனமும் விதிமுறை நடத்தியபின் அவர்கட்கு வசிட்ட முனிவன் பலகலைகளையும் பயில்வித்தனன். ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களும், பரத சத்ருக்னர்களும் ஒருவரையொருவர் பிரியாது பேரன்புடையரா யிருந்தனர். இராமபிரான் தனது நற்குண நற்செய்கைகளினால் எல்லாருடைய மனத்தைபுங் கவர்ந்து கொண்டு இனிது வாழ்ந்தனன். தசரத சக்கரவர்த்தியோ ஒப்பற்ற ஆனந்தக்கடலில் மூழ்கி வாழ்கின்றான்.

(5. திருவவதாரப்படலத்திலுள்ள விசேடச் செய்யுள்கள்)

32. ஆபவ நெருப்பகல் அயனையே நிகர் தூயமா முனிவரன் தொழுது தொல்குலந்
தாயருந் தந்தையுந் தவமுமன்பினுன் மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ 1

***—(தசரதமன்னவன் வசிட்ட முனிவனைத் துதிக்கின்றனன்.) அத்தன்மையனான தசரதன் ஒருநாள் நான்முகக் கடவுளை யொத்த வசிட்ட முனிவனை வணங்கி, தொன்று தொட்டு வருகிற உயர்குலத்திற் பிறந்த தாய்மார்களும் தந்தையரும் தவமும், பக்தியோடு விரும்பியடையப் படுகிற சிறந்த குல தெய்வமும், மற்றும் ஐஹிகா முஷ்மிக ஸாதனங்களும் எல்லாம் எனக்கு நீயே யாவாய் என்றனன். *

33. எங்குலத் தலைவர்கள் இரவிதன்னினும் தங்குலம் விளங்குறத் தரணி தாங்கினர்
மங்குநரில்லென வரம்பில் வையகம் இங்குனதருளினு லினிதினேம்பினேன். 2

***—வசிட்ட முனிவனே! எமது குலத் துதித்த முன்னோர்கள் ஸூர்யனைக் காட்டிலும் மிகுதியாகத் தங்கள் குலம் கீர்த்தியால் விளங்கும்படி ஒளி மழுங்கினவர்கள் எவருமில்லை யென்று சொல்லுமாறு இவ்வுலகத்தைப் பாதுகாத்தார்கள்; எல்லையற்ற இந்நிலவுலகத்தை இப்போது அடியேனும் உமது திருவருளினால் குறையறப் பாதுகாத்து வருகின்றேன். .... *

34. அறுபதினுயிர மாண்டு மாண்டுற, உறுபகையொடுக்கி யிவ்வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை எற்பின் வையகம், மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ. 3

***—மிக்க பகைவர்களை யடக்கி அறுபதினாயிரம் வருஷகாலம் இவ்வுலகத்தைப் பாதுகாத்தேன்; எனக்குப் பிறகு இவ்வுலகமானது தகுந்த ரக்ஷகரைப் பெறாமல் கலங்கிவிடுமே யென்பதாகிய ஒரு மனக்கவலை மட்டும் எனக்குண்டு; இதைத் தவிர்த்து வேறொரு குறையுமில்லை. ... . *

35. அருந்தவ முனிவரும் அந்தணாளரும், வருந்துதலின்றியே வாழ்வின் வைகினர்
இருந்துய ருழக்குவர் எற்பினென்பதோர், அருந்துயர் வருத்துமென் னகத்தையென்றனன். 4

***—மஹாதபஸ்விகளான முனிவர்களும் பிராமணர்களும் இதுகாறும் வருத்தமின்றி நல்ல வாழ்வில் அமர்ந்திருந்தார்கள்; அன்னவர்கள் என் காலத்திற்குப் பிறகு ரக்ஷகரில்லாமல் மிக்க துன்பத்தை யநுபவிப்பர்களே யென்பதான வொரு பெரிய துன்பமே என் மனத்தை வருத்துகின்றதென்றான். ... *

(வசிட்ட முனிவன் தயரதமன்னவனுக்குப் பழையகதை யொன்று சொல்லி வருகையில் பிரமனும் சிவனும் திருமாலை மனத்தினால் தியானித்தபோது திருமால் கருடன்மேல் தோன்றிக் காட்சிதந்தமை கூறுதல்.)

36. கருமுகில் தாமரைக் காடுபூத்து நீடிருசுடர் இருபுறத்தேந்தியேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற்குன்றின்மீ, வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன். 12

கரு முகில்	காளமேகமானது	அவிழ் ஏடு திருவொடும் பொலிய	அலர்ந்த தாமரை மலரில் வாழ்கிற லக்ஷ்மியுடனே விளங்க
தாமரை காடு பூத்து	(தன்னிடத்தே) ஒரு செந்தாமரைக் காடு பூக்கப்பெற்று	ஓர் செம்பொன் குன்றின்மீ வருவபோல்	ஒரு செம்பொன் மலைமீது ஏறி வருவதுபோல
நீடு இரு சுடர் இரு புறத்து ஏந்தி	மிக்க காந்தியையுடைய சூரிய சந்திரராகிய இரண்டு சோதிகளையும் தன் இரண்டு பக்கங்களிலே தரித்துக்கொண்டு	கலுழன் மேல் வந்து தோன்றினன்	கருடாழ்வான் மீதேறிவந்து காட்சி தந்தான்.

* * *—நீலமேக மொன்று தன்னிடத்தே செந்தாமரை மலர்த்தொகுதி மலரப் பெற்று நெடுந்தூரம் விளங்குகின்ற சூரிய சந்திரராகிய இரண்டு சோதிகளையும் சங்கு சக்கரங்களாக இருபக்கங்களிலும் தரித்துக்கொண்டு, அலர்ந்த தாமரை மலரில் வாழ்கின்ற ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடனே விளங்க ஒரு செம்பொன்மலைமீது ஏறிவருவது போலப் பெரிய திருவடியின் மீதேறி வந்து தேவர்கட்குக் காட்சி கொடுத்தனன். "காய்சினப் பறவை யூர்ந்து பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போல்" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையும் "ஆங்கைத் திகிரிசுடரென்றும் வெண்சங்கம் வானிற்பகருமதியென்றும் பார்த்து" என்ற பேயாழ்வார் பாசுரத்தையும் ஈண்டு நினைப்பது. ... ... *

(ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் தேவர்கள் வணங்கினமை கூறுதல்.)

37. எழுந்தனர் கறைமிடற்றிறையுந் தாமரைச் செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தனரடிமிசை விண்ணுளோரொடும், தொழுந்தொறும் தொழுந்தொறும் களிதுலங்குவார். 13

(அப்பொழுது)		எழுந்தனர் எதிர்சென்று	எழுந்து எதிர்கொண்டு
கறை மிடறு இறையும்	நீலகண்டனான சிவபெருமானும்	தொழும்தொறும் தொழும்தொறும்	தொழுகிற போதெல்லாம்
தாமரை செழு தவிசு உகந்த அத் தேவும்	தாமரைமலராகிய சிறந்த ஆசனத்தை யுகந்திருக்கின்ற பிரமதேவனும்	களி துலங்குவார்	ஸந்தோஷம் பூரித்தவர்களாய்
விண் உளோரொடும்	(மற்ற இந்திரன் முதலிய) தேவர்களுடனே	அடி மிசை விழுந்தனர்	அந்தத் திருமாலை நமஸ்கரித்தார்கள்.

* * *—அப்பொழுது விஷகண்டனான சிவனும், கமலாஸநனான பிரமனும் மற்றை யிந்திரன் முதலான தேவர்களுடனே யெழுந்து எதிர்கொண்டு துதித்து மகிழ்ச்சியின் கனத்தாலே திருமாலின் திருவடிகளிலே வணங்கினார்கள். ... *

(தேவர்களின் மகிழ்ச்சி கூறல்)

38. ஆடினர் பாடின ரங்குமிங்குமாய், ஓடினருவகைமா நறவுண்டோர்கிலர்
வீடினரரக்கரென் றுவக்கும் விம்மலால், சூடினர் முறைமுறை துளவத்தாண்மலர். 14

(அங்ஙனம் தேவர்கள்)

துளவம் தாள் மலர்	திருத்துழாயணிந்த (திருமாலின்) பாதாரவிந்தங்களை
முறை முறை சூடினர்	முறையே சிரமீதணிந்து கொண்டவர்களாகி,
அரக்கர் வீடினர் என்று	ராக்ஷசர்கள் அந்த க்ஷணத்திலேயே தொலைந்தனரென நினைத்து உண்டான
உவக்கும் விம்மலால்	ஸந்தோஷப்பூரிப்பினால்
உவகை மா நறவு, உண்டு	களிப்பாகிய மதுவை யுட்கொண்டு
ஓர்கிலார்	இன்னது செய்வதென்று அறியாதவர்களாய்
ஆடினர் பாடினர்	ஆட்டமும் பாட்டுமாகி
அங்கும் இங்கும் ஆய் ஓடினர்	சுற்றிச்சுற்றியுலாவினர்.

***—திருத்துழா யணிந்த (திருமாலின்) பாதாரவிந்தங்களை முறைப்படியே தங்கள் தலைமீதணிந்துகொண்டு ராக்ஷசர்கள் அப்பொழுதே யழிந்துபோய்விட்டார்களென நினைத்து ஸந்தோஷப் பூரிப்பினால் களிப்பாகிய மிக்க மதுவையுட்கொண்டு இன்னது செய்வதென்று தெரியாதவர்களாய் ஆனந்தக் கூத்தடிப்பதும் பாட்டுகள் பாடுவதும் அங்குமிங்கு மோடுவது மாயினர் அப்போது தேவர்கள். ... *

(சிவபிரான் திருமாலை நோக்கிக் கூறுவன.)

39. எங்கள் நீள்வரங்களால் அரக்கரென்றுளார், பொங்குமூவுலகையும் புடைத்தழித்தனர்
செங்கணுயகவினித் தீர்த்தியல்லையேல், நுங்குவருலகையோர் நொடியி னென்றனன். **18**

செம்கண் நாயக	புண்டரீகாக்ஷனை பெருமானே !
அரக்கர் என்று உளார்	ராக்ஷசரென்று பேர்பெற்றிருக்கின்ற கொடியவர்கள்
எங்கள் நீள் வரங்களால்	நாங்கள் கொடுத்த பெருப்பெருத்த வரங்களினால்
பொங்கு மூ உலகையும்	செழிப்பான மூவுலகங்களையும்
புடைத்து அழித்தனர்	அடித்து நாசஞ் செய்திருக்கிறார்கள் ;
இனி தீர்த்தி அல்லை ஏல்	இனியாகிலும் நீ அவர்களையொழிக்கா விட்டால் அவர்கள்
ஓர் நொடியின்	வெகு சீக்கிரமாக
உலகை நுங்குவர் எனறனன	மூவுலகங்களையும் முடித்து விடுவர்கள் எனருன சிவன்.

***—எங்களாலேயே நாங்கள் கெட்டோம் ; அறியாது நாங்களே ராக்ஷசர்களுக்கு வரங்கொடுத்ததனல் உலகங்களுக்கெல்லாம் தீம்பு உண்டாயிற்று ; லோகநாதன் நீயே யாதலால் அவர்களைத் தொலைத்துக் காத்தருளவேண்டுவது உன் கடமையே யாகும் ; இனி உபேக்ஷித்திருந்தால் அவர்களால் உலகம் முழுவதும் நசித்துவிடும் என்று சிவபெருமான் விண்ணப்பம் செய்தனன். ... ... *

(பிறகு தேவர்களுக்கு அபயமளித்த திருமால் ஒரு கட்டளையிடுதல்.)

40. வானுளோரனைவரும் வானரங்களாக், கானினும் வரையினுங் கடிநடத்தினும்
சேனையோ டவதரித்திடுமின் சென்றென, ஆனனமலர்ந்தனன் அருளினாழியான். **21**

வான் உளோர் அனைவரும்	தேவர்களாகிய நீங்களெல்லிரும்
வானரங்கள் ஆ	குரங்குகளாக
கானினும்	காடுகளிலும்
வரையினும்	மலைகளிலும்
கடி தடத்தினும்	நறுமணம் மிக்க (சோலை முதலிய) இடங்களிலும்
சேனையோடு	கூட்டங்களுடனே
சென்று அவதரித்திடுமின் என	போய்ப் பிறவுங்கள் என்று
அருளின் ஆழியான்	கருணைக் கடலான எம்பெருமான்
ஆனனம் மலர்ந்தனன்	திருவாய்மலர்ந்தருளினன்.

(திருமால் தமது திருவவதாரத்தைத் தெரிவித்தல்.)

41. மசரதமனையவர் வரமும் வாழ்வுமோர், நிசரதகணைகளால் நீறுசெய்யயாம்
கசரததுரகமாட் கடல்கொள்காவலன், தசரதன் மதலையாய் வருதுந்தாரணி. 22

42. வளையொடு திகிரியும் வடவைதீதர, விளைதருகடுவுடை விரிகொள்பாயலும்
இளையர்களெனவடி பரவவேகிநாம், வளைமதிலயோத்தியில் வருது மென்றனன். 23

மசரதம் அனையவர்	(மாயத்தன்மையில்) பேய்த்தேரையொத்தவர்களான அரக்கர்களினுடைய
வரமும் வாழ்வும்	வரத்தையும் வாழ்வையும்
ஓர் நிசம் ரதம் கணைகளால் நீறு செய்ய	ஒப்பற்ற சொந்தமான சாரமுள்ள பாணங்களினால் பொடிபடுத்தும்படி
யாம்	நாம்
கசம் ரதம் துரகம் ஆள் கடல் கொள் காவலன் தசரதன் மதலை ஆய்	யானை, தேர், குதிரை காலாட்களாகிய சேனை வெள்ளத்தைக் கொண்டுள்ள தசரத சக்ரவர்த்திக்கு மகனாய்
தாரணி வருதும்	இந்நிலவுலகில் வந்து பிறப்போம்;
வளையொடு திகிரியும்	சங்கும் சக்கரமும்
வடவை தீதர விளை தரு கடு உடை விரிகொள் பாயலும்	பாட்பாக்னியும் கரிந்துபோம்படி பொங்குகின்ற விஷத்தையுடைத்தாகி விரிக்கப்படுகின்ற பாயாகிய ஆதிசேஷனும்
இளையர்கள் என	எனது தம்பிமார்களாகி வந்து
அடி பரவ	எம பாதங்களை வணங்க
நாம் ஏகி	நாம் சென்று
வளை மதில் அயோத்தியில் வருதும்	வளைந்த மதிலையுடைய அயோத்திமாநகரிலே யவதரிப்போம்.
என்றனன்	என்று கூறினன்.

* * *—நமது திருவாழி திருச்சங்குகளும் திருவனந்தாழ்வானும் நமக்குத் தம்பிகளாயமைய நாம் அயோத்தியில் தசரதாத்மஜனாய்ப் பிறந்து அரக்கர்களது வரபல புஜபலங்களை நமது அம்புகளாலழிப்போமென்றுதிருவாய் மலர்ந்தருளினன்.

(தேவர்களையுகப்பித்துத் திருமால் புறப்படுதல்.)

43. போயதெம் பொருமலென்று இந்திர னுவகை பூத்தான் *
தூயமாமலருளோனுஞ் சுடர்மதி சூடினோனும் *
சேயுயர் விசும்புளோரும் தீர்ந்ததெஞ் சிறுமையென்றார் *
மாயிரு ஞாலமுண்டோன் கலுழன்மேற் சரணம் வைத்தான். 25

எம் பொருமல் போயது என்று	எங்கள் துக்கம் நீங்கிவிட்டதென்று சொல்லிக்கொண்டு
இந்திரன் உவகை பூத்தான்	தேவேந்திரன் மிகமகிழ்ந்தான்;
தூய மா மலர் உளோனும்	பரிசுத்தமான சிறந்த தாமரைப் பூவைப் பிறப்பிடமாகவுடைய பிரமனும்
சுடர் மதி சூடினோனும்	சந்திர சேகரனான சிவபெருமானும்
சேய் உயர் விசும்பு உள்ளோரும்	மிகவுயர்ந்த வானுலகத்துள்ள தேவர்களும்
எம் சிறுமை தீர்ந்தது என்றார்	எங்களுடைய கீழ்மை இன்றோடு தொலைந்து விட்டதென்றார்கள்;
மா இரு ஞாலம் உண்டோன்	மிகப்பெரிய வுலகங்களை வயிற்றில் வைத்துக் காத்தவனான நாராயணன்
கலுழன் மேல் சரணம் வைத்தான்	கருத்மான் மீது திருவடியை வைத்துப் புறப்படலாயினன்.

(வசிட்டன் தசரதனை யாகஞ் செய்ய நியமித்தல்.)

44. ஈதுமுன் னிகழ்ந்தவண்ண மெனமுனி யிதயத்தெண்ணி *
மாதிரம் பொருத திண்டோள் மன்ன ! நீ வருந்தலேழேழ்
பூதலமுழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதறமுயலினைய ! சிந்தைநோய் தீருமென்ருன். 30

ஈது முன் நிகழ்ந்த வண்ணம் என	இது முன்னமே நடந்த செய்தி யென்று
முனி இதயத்து எண்ணி	வசிட்ட முனிவர் தம்முள் நினைத்து (தயரத மன்னவனை நோக்கி)
மாதிரம் பொருததிண் தோள் மன்ன	மலைகளை பொத்த வலிய தோள்களையுடைய அரசனே !
ஐய !	பெரியோனே !
நீ வருந்தல்	நீ வருந்த வேண்டா ;
ஏழ் ஏழ் பூதலம் முழுதும் காக்கும் புதல்வரை	பதினுன்கு லோகங்களையு மெல்லாம் ரக்ஷிக்கவல்ல புத்திரர்களை
அளிக்கும வேள்வி	கொடுக்க வல்லதான யாகத்தை
தீது அற முயலின்	குறையறச்செய்து முடித்தால்
சிந்தை நோய் தீரும் என்ருன்	உனது மனேவியாதி தொலையு மென்ருர்.

* * * ஸ்ரீமஹாவிஷ்ணு ராக்ஷஸ. ஸம்ஹாரத்திற்காகத் தசரதாத்மஜனுக அவதரிக்கப்போகுஞ் செய்தி முன்னமே ப்ரஸ்தாவத்தில் நிகழ்ந்ததாதலால் அதனை முனிவர் நெஞ்சால் நினைத்தமை முதலடியிற் கூறப்பட்டது. புத்திரகாமேஷ்டி செய்ய மன்னவனுக்குக் கட்டளையிட்டபடி. மூன்ருமடியில், தாங்கும் காக்கும் என்பன பாடபேதங்கள். ... ... *

(உரோமபாதமன்னவன் கலைக்கோட்டு முனிவரிடம் கூறினது.)

45. புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகைதன் புகழிற்பூத்த *
அறனென்றுந் திருமனத்நான் அமரர்களுக் கிடரிழைக்கு மவுணராயோர் *
திறலுண்ட வடிவேலோன் தசரதனென் றுயர்கீர்த்திச் செங்கோல்வேந்தன் *
விறல்கொண்ட மணிமாட வயோத்திநக ரடைந்திவண் நீ மீள்கவென்ருன். 65

ஒரு புறவின் பொருட்டாக	ஒரு புருவுக்காக
துலை புக்க	தராசுத்தட்டிலேறிய
பெருந்தகை தன்	பெருமை தங்கிய சிபி சக்கரவர்த்தியினுடைய
புகழில் பூத்த	புகழ்மலிந்த குலத்திலே பிறந்தவனும்
அறன் ஒன்று திரு மனத்தான்	தரும சிந்தையுள்ளவனும்
அமரர்களுக்கு இடர் இழைக்கும் அவுணர் ஆயோர் திறல் உண்ட வடி வேலோன்	தேவர்களுக்குத் தீங்கு செய்கின்ற அசுரர்களின் மிடுக்கையழித்த கூர்வேற்படையை யுடையவனுமான
தசரதன் என்ற உயர் கீர்த்தி செங்கோல் வேந்தன்	தசரதனென்கிற மஹாயசஸ்வியான சக்ரவர்த்தியினது
விறல் கொண்ட மணி மாடம் அயோத்தி நகர்	பெருமைதங்கிய மணிமாடங்களையுடைய அயோத்தி நகரை
அடைந்து	சேர்ந்து (பிறகு)
இவண் நீ மீள்க என்ருன்	இங்கே நீ திரும்பி வருக என்று (கலைக்கோட்டு முனிவனை நோக்கி உரோமபாதமன்னன்) சொன்னுன்.

* * *கீழே "மாயிரு ஞாலமுண்டோன் கலுழன் மேற்சரணம் வைத்தான்". என்று திருமால் புறப்பட்டுச் சென்றமை சொல்லி, அதன்பிறகு வஸிஷ்டபகவான் தசரதனை நோக்கி யாகஞ்செய்யின் குறை தீருமென்று சொல்லி, கலைக்கோட்டு முனிவனென்னும் ரிச்யசிருங்க முனிவனை ரோமபாத மன்னவனது அங்கநாட்டில் நின்றும் இங்கு வரவழைக்க வேணுமென்றும் சொல்ல, தசரதன் ஸபரிவாரனாய் அங்கதேசத்திற்குச் சென்று ரோமபாத மன்னவனிடத்திலே தான் வந்த காரியத்தைத் தெரிவிக்க, அம்மன்னவன் 'நீர் அயோத்தி சென்று சேரும்; நான் முனிவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லித் தசரதனை யனுப்பி விட்டுக் கலைக்கோட்டு முனிவன் திருவடிகளிலே வணங்கி 'நீர் தசரத சக்கரவர்த்தியின் மனோரதத்தை நிறைவேற்றி வரவேணும்' என்று (உரோமபாதன்) வேண்டிக் கொண்டதைக் கூறுவதாம் இச் செய்யுள். தசரதனுடைய புகழையும், அவனது குலகூடஸ்தனான சிபிசக்கரவர்த்தியின் அஸாதாரணமான வொரு பெருமையையும் தெரிவித்து அயோத்திக்கு எழுந்தருளியேயாக வேண்டுமென்கிறது.

புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை என்றது சிபிசக்கரவர்த்தியை. இங்கு உணரவேண்டிய வரலாறு வருமாறு—சிபிசக்கரவர்த்தி ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்கையில் அவனது மஹிமையைப் பரீக்ஷிக்கத் தேவேந்திரன் பெரும் பருந்தாகவும், யமன் சிறு புறாவாகவும் வடிவெடுத்துப் புறாவைப் பருந்து துரத்திவர, அந்தப்புறா சிபிமன்னவனது பாதங்களிலே வந்துவிழ, அதற்கு மன்னவன் அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்துவிடு' என்று சிபியைக் கேட்க, 'அடைக்கலம் புகுந்த பொருளை ஆதரியாது கைவிடுதல் அநீதியாகும்; இதையன்றி எதைக்கேட்டாலும் கொடுப்பேன்' என்று சிபி சொல்ல, அதுகேட்ட பருந்து, 'ஆயின், இத்தப்புறாவின் எடையளவு தசை (சதை) உன்னுடம்பில் அரிந்து கொடு' என்ன, சிபி அதற்கு ஆக்ஷேபமே யில்லையென்று சொல்லி உடனே தன்னுடம்பிலுள்ள உறுப்புக்களை யெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தும் எடை சரிப்படாமையினாலே முடிவில் தானே தராசுத்தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அவ்விருதேவர்களும் நிச வடிவத்துடன் வெளிப்பட்டு அம்மன்னவனைக் கொண்டாடிச் சென்றன ரென்பதாம். ... *

(தயரதன் புத்திரனில்லாக் குறையைப் போக்குமாறு கலைக்கோட்டு முனிவனை வேண்டுதல்.)

46. உலப்பில் பல்லாண்டெலாம் உறுகணின்றியே நலப்பொறை யாற்றினென் தனயர்வந்திலர் *
அலப்புநீ ருடுத்தபா ரளிக்கும் மைந்தரை * நலப்புகழ் பெறவினி நல்கவேண்டுமால். **82**

உலப்பு இல் பல் ஆண்டு எலாம்	முடிவில்லாத பல வருடங்கள்
உறுகண் இன்றி	யாதொரு துன்பமுமுண்டாகாதபடி
நலம் பொறை ஆற்றினென்	பூமி பாரத்தைத் தாங்கினேன்;
தனயர் வந்திலர்	(பிற்காலத்தில் அரசாள்வதற்குரிய) புத்திரர் பிறந்திலர்; (ஆதலால்)

இனி	இப்போது
அலப்பு நீர் உடுத்த பார் அளிக்கும் மைந்தரை	கடல் சூழ்ந்த மண்ணுலகைக் காக்கவல்ல புத்திரரை
நலம் புகழ் பெற	நான் நல்ல கீர்த்தியை யடையும்படி
நல்க வேண்டும்	அருள்புரிய வேண்டும்.

* * * அடியோடு புத்திரனில்லாதவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தாற் போதாதோ? 'மைந்தரை நல்கவேண்டும்' என்று பன்மையாற் கூறவேண்டுமோ?

எனின் ; 'தனிமரம் தோப்பாகாது' 'தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்பது பற்றிப் பன்மையாற் கூறிற்றென்க. ... ... *

(கலைக்கோட்டு முனிவன் யாகஞ்செய்ய வெழுக வென்றுரைத்தது.)

47. என்றலுமரசநீ யிரங்கல் இவ்வுல கொன்றுமோ வுலகமீரேழு மோம்பிடும்
வன்திறல் மைந்தரை யளிக்த மாமகம் * இன்றுநீ யியற்றுதற் கெழுகவீண்டென்றான். 83

என்றலும்	புத்திரனில்லாக் குறையைத் தசரதமன்னவன் சொல்லிக் கொண்டதும் (கலைக் கோட்டு முனிவன் தசரதனை நோக்கி)
நீ இரங்கல்	நீ மனவருத்தப்படாதே ;
இவ் உலகு ஒன்றுமோ	இவ்வுலக மொன்றை மட்டு மல்லாமல்
உலகம் ஈர் ஏழும் ஓம்பிடும்	பதினான்கு லோகங்களையும் காப்பதற்குரிய
வல் திறல்	மிகுந்த வலிமையைக் கொண்ட
மைந்தரை	புத்திரர்களை
அளிக்கும் மா மகம்	கொடுக்கவல்ல பெரிய யாகத்தை
இன்று ஈண்டு இயற்றுதற்கு	இப்போது இவ்விடத்தில் செய்வதற்கு
நீ எழுக என றான்	நீ முயலுக வென்றான்,

* * * முதலில் அச்வமேதயாகமும் பிறகு புத்ர காமேஷ்டியும் செய்யப் போகிறபடியால் இங்கு 'மாமகம்' என்றது அச்வமேதயாகத்தைச் சொன்ன தென்று கொள்ளலாம். மா—குதிரை. ... ... *

(ஸ்ரீராமபிரான் திருவவதரித்ததைக் கூறுவன மூன்று கவிகள்.)

48. ஆயிடைப் பருவம்வந் தடைந்த வெல்லையில் * மாயிருபுவிமகள் மகிழ்வினோங்கிட
வேய்புனர்பூசமும் விண்ணுளோர்புகழ் * தூயகர்க்கடகமு மெழுந்து துள்ளவே. 102

49. சித்தரு மியக்கரும் தெரிவைமார்களும் * வித்தக முனிவரும் விண்ணுளோர்களும்,
நித்தரு முறைமுறை நெருங்கியார்ப்புறத் * தத்துறலொழிந்து நீள்தருமமோங்கவே. 103

50. ஒருபக லுலகெலா முதரத்துட்பொதிந்து * அருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத் * திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

ஆ இடை	அவ்விடத்து
பருவம் வந்து அடைந்த எல்லையில்	(திவ்ய மஹிஷிகளுக்குப் பிரஸவகாலம் வாய்த்த போது
மா இரு புவி மகள் மகிழ்வின் ஓங்கிட	மிகப் பெரிய பூமிதேவி மகிழ்ச்சியினால் பூரிக்கவும்,
வேய் புனர்பூசமும் விண்ணுளோர் புகழ் தூய கர்க்கடகமும் எழுந்து துள்ள	அழகிய புனர்வஸு நக்ஷத்திரமும் தேவர்கள் புகழ்கின்ற சுத்தமான கர்க்கடகலக்னமும் நன்கு விளங்கவும் ;—
சித்தரும் இயக்கரும் தெரிவைமார்களும்	ஸித்தர்களும் யக்ஷர்களும் (அவர்களது) பத்தினிகளும்
வித்தகம் முனிவரும் விண்ணுளோர்களும் நித்தரும்	ஞானிகளான மஹர்ஷிகளும் தேவர்களும் நித்திய சூரிகளும்
முறை முறை நெருங்கி ஆர்ப்பு உற	வரிசை வரிசையாய் நெருங்கி மகிழ்வினால் ஆரவாரிக்கவும்
நீள் தருமம் தத்துறல் ஒழிந்து ஓங்க	சிறந்த தருமதேவதை மனத்தடுமாற்றம் நீங்கி ஸந்தோஷிக்கவும் ;
திறம் கொள் கோசலை	ஸௌபாக்யவதியான கௌஸல்யை

ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து அரு மறைக்கு உணர்வு அரும் அவனை	ஒரு கால் பிரளயத்தில் எல்லா வுலகங்களையும் தனது திருவயிற்றினுள்ளே மறைத்து வைத்தவனாய் அரிய வேதங்களாலும் அறிய முடியாதவனாயும்	அஞ்சனம் கரு முகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை	அஞ்சனத்தினுடையவும் காளமேகத்தினுடையவும் புதிய அழகைத் தன்னிடத்தே காட்டுகின்ற சோதிவடிவனாயுமுள்ள திருமாலை
		திரு உற பயந்தனள்	செல்வங்கள் மிகுமாறு பெற்றாள்.

* * *தசரதனது மூத்தமனைவி பிரஸவகாலம் வந்தவுடனே புநர்வஸுவில் கர்க்கட லக்னத்தில் ஒரு புத்திரனைப் பெற்றாள். இவனே இராமனென்பான். இவனே பிரளய காலத்தில் உலகங்களை யெல்லாம் திருவயிற்றிலே வைத்துப் பாதுகாத்தவன். நான்மறைகள் தேடியென்றுங் காணமாட்டாச் செல்வனிவனே. அஞ்சன வண்ணனும் காளமேகத் திருவுருவனுமான இவன் அவதரித்தபோது பூமிப்பிராட்டி நம்முடைய பாரம் தொலையுமென்று மகிழ்வுற்றாள்; ஸித்த யக்ஷ மஹர்ஷி தேவர்களும் தங்கள் துயரம் நீங்குமென்று ஸந்தோஷித்தனர்; தரும தேவதையும் இனி அதர்மம் தலைகாட்டாதென்று பொலிவுற்றது. *

(மேலுலகத்தவர் கொண்ட மகிழ்ச்சி கூறுதல்.)

51. ஆடின ரரம்பையர் அமுதவேழிசை * பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென்று உவக்கும் விம்மலால் * ஓடின ருலவின ரும்பர் முற்றுமே. **108**

அரக்கர் வீடினர் என்று உவக்கும் விம்மலால்	ராக்ஷஸர்களொழிந்தார்களென்று கொண்டு மகிழ்ந்த பூரிப்பினால்	அமுதம் ஏழ் இசை பாடினர்	பரமபோக்யமான ஸப்த ஸ்வரங்களையும் பாடினார்கள்;
அரம்பையர் ஆடினர்	தேவமாதர்கள் (வானத்திற்) கூத்தாடினார்;	பல் இயம் துவைத்த உம்பர்கள்	பலவகை வாத்தியங்களையும் முழங்கச் செய்த தேவர்கள்
கின்னரர்	கின்னரர்கள்	முற்றும் ஓடினர் உலவினர்	இங்குமங்கும் ஓடியாடினர்.

(மகப்பேற்றை அரசனுக்கு அறிவித்தலும் சோதிடர்கள் நன்மை கூறுதலும்.)

52. ஓடின ரரசர்மாட் டுவகைகூறிநின்று * ஆடினர் சிலதிய ரந்தணாளர்கள்,
கூடினர் நாளொடு கோளுநின்றமை * நாடினருலகினி நவையின் றென்றனர். **109**

சிலதியர்	(கௌசலை முதலானாருடைய) தோழிமார்	அந்தணாளர்கள் கூடினர்	சோதிட நிபுணர்களான பிராமணர்கள் வந்து சேர்ந்து
அரசன் மாட்டு ஓடினர்	தசரதனிடத்து ஓடிச்சென்று	நாளொடு கோளும் நின்றமை நாடினர்	தற்கால நக்ஷத்ர கிரஹங்கள் நின்ற நிலைமைகளையாராய்ந்து பார்த்து
உவகை கூறி	ஸந்தோஷ ஸமாசாரத்தைச் சொல்லி	இனி உலகு நவை இன்று எனறனர்	'இனி உலகம் கஷ்டநிலை நீங்கிற்றாம்' என்று சொன்னார்கள்.
நின்று ஆடினர்	ஆனந்தக்கூத்தாடி நின்றார்கள்;		

* * * தேவிமார்களின் பாங்கியர் அரசனிடத்துச்சென்று புத்திரர் பிறந்த ஸந்தோஷ ஸமாசாரத்தைக் கூற, அப்போது அரசன் சோதிடர்களை வருவிக்க,

அவர்கள் வந்து ஜாதக நன்மைகளை யாராய்ந்து , இக்குமாரர்களால் உலகம் கஷ்ட தசை நீங்கி க்ஷேம மடையும் ' என்று கூறினராம். ... . *

(தசரதன் மகிழ்ச்சி மிகுதியினுல் தியாகங்கள் செய்தமைகூறல்.)

53. இறைதவிர்ந்திடுக பாரியாண்டொரேழ்நிதி * நிறைதரு சாலைதாழ் நீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கெனு, அறைபறை யென்றன னரசர் கோமகன். 113

54. படையொழிந்திடுக தம்பதிகளேயினி * விடைபெறுகுக முடிவேந்தர் வேதியர்
நடையுறு நியமமும் நவையின்ருகுக * கடவுளர்விழாவொடு களிக்க வெங்கணும். 114

55. ஆலையம் புதுக்குக அந்தணாளர்தம் * சாலையும் சதுக்கமும் சமைக்க சந்தியும்,
காலையுமாலையுங் கடவுளர்க்கணி * மாலையுந் தீபமும் வழங்கு கென்றனன். 115

அரசர் கோமகன்	தசரதமன்னவன்,
பார் யாண்டு ஓர் ஏழ் இறை தவிர்ந்திடுக	" ராஜ்யம் முழுதும் ஒரேழு வருஷகாலம் கப்பங்கட்டுவது தவிர்க ;
நிதி நிறைதரு சாலை தாழ் நீக்கி யாவையும் வறியவர் முறை கெட முகந்து கொள்க	பணம் நிறைந்துள்ள பொக்கசங்களின் தாழ்ப்பாளைத் திறந்து எல்லாப் பொருள்களையும் ஏழைகள் யதேஷ்டமாக எடுத்துக் கொள்ள அனுமதிக்க ;
படை ஒழிந்திடுக	(எங்கும்) போர்த்தொழில் நிறுத்தப்பட வேண்டும் ;
முடி வேந்தர் இனி தம் பதிகளே விடைபெறுகுக	(சிறைபட்டிருக்கும்) அரசர்கள் இனிமேல் தம்தமது தேசங்கட்கே விடைபெற்றுச் செல்லுக ;
வேதியர் நடை உறு நியமமும்	வைதிகர்கள் நடத்தும் விரதங்களும்
நவை இன்று ஆகுக	குறைவின்றி நிகழ்க ;

எங்கணும்	எவ்விடத்தும்
கடவுளர் விழாவொடு களிக்க	கோவில் தெய்வங்கள் விசேஷோத்ஸவங்களால் மகிழ்வடைக ;
ஆலையம் புதுக்குக	தேவாலயங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் நடைபெறுக ;
அந்தணாளர் தம் சாலையும் சதுக்கமும் சந்தியும் சமைக்க	பிராமணர்களது அக்ரஹாரங்களையும் நால்தெருக்கூடுமிடங்களையும் முத்தெருக்கூடுமிடங்களையும் ஏற்படுத்துக ;
காலையும் மாலையும்	காலைமாலை வேளைதோறும்
கடவுளர்க்கு	ஆலய தெய்வங்களுக்கு
அணி மாலையும் தீபமும் வழங்குக	அழகிய மாலைகளையும் திருவிளக்குகளையும் சமர்ப்பிக்க
என்றனன்	என்று கட்டளையிட்டனன் ;
எனு	இங்ஙனம் தெரிவித்து
பறை அறை என்றனன்	பறைசாற்றவும் நியமித்தனன்.

* * ' தசரதன் மகிழ்ச்சியின் மிகுதியினுல், ஏழுவருஷம் யாரும் வரி செலுத்த வேண்டா வென்றும், பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு ஏழையர்கள் யதேஷ்டமாக எடுத்துக் கொள்ளுமாறு செய்கவென்றும், சிறைப்பட்ட அரசர்களை விடுவிக்க வென்றும், அந்தணர்கள் விரதங்களைக் குறையற நடத்த ஆதரவளிக்க வேணுமென்றும், ஆலயங்களைச் செப்பனிட்டு ஆங்காங்குள்ள தெய்வங்கட்கு நாடோறும் இருகாலமும் தீபங்களும் மாலைகளும் ஸமர்ப்பிக்க வேணுமென்றும், விசேஷோத்ஸவங்கள் நடப்பிக்க வேணுமென்றும், பிராமணர்களுக்கு வேண்டிய ஸகல ஸௌகரியங்களையும் செய்து கொடுக்கவேணுமென்றும் கட்டளையிட்டன னென்க. *

(நகரத்து ஜனங்களின் களிப்புச்செயல் கூறுதல்.)

56. ஆர்த்தனர் முறைமுறை அன்பினுலுடல் ' போர்த்தன புளகம் வேர் பொடித்த நீணிதி
தூர்த்தன ரெதிரெதிர் சொல்லினுர்க்கெலாம் * தீர்த்தனென் றறிந்ததோ அவர்தஞ்சிந்தையே. 11

(சக்ரவர்த்திக்குப் புதல்வர் பிறந்த செய்தியுணர்ந்த நகரத்துச் சனங்களெல்லாரும்)

அன்பினால் — அன்பின் மிகுதியினால்

முறைமுறை ஆர்த்தனர் — வரிசைவரிசையாக ஆரவாரித்தார்கள் ;

உடல் புளகம் போர்த்தன — அவர்களது உடல்கள் மயிர்க்கூச்செறியப் பெற்றன ;

வேர் பொடித்த — வியர்வை நீர்த் துளிகள் அரும்பின ;

எதிர் எதிர் சொல்லினார்க்கு எலாம் — எதிரெதிரே வந்து இச்சுப செய்தியைச் சொன்னவர்களுக்கெல்லாம்

நீள் நிதி தூர்த்தனர் — மிகுந்த திரவியத்தைச் சொரிந்தார்கள் ;

(இங்ஙனஞ் செய்ததற்குக் காரணம்)

அவர் தம் சிந்தை — அவர்களது மனமானது

தீர்த்தன் என்று அறிந்ததோ — பரிசுத்தனான திருமால் தானே வந்தவதரித்தனனென்று அறிந்துகொண்டமை போலும்.

* * ' அயோத்தியில் வாழும் ஸகல ஜனங்களுக்கும் ஸாமான்யமாக வுண்டாகும் ஸந்தோஷமன்றிப் பெருமகிழ்ச்சி யுண்டானதற்குக் காரணம் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாவிஷ்ணுவே திருவவதரித்தானென்பதை அவர்களின் மனம் அறிந்தது போலுமெனக் கவியின் உல்லேகம். ... ... *

5. திருவவதாரப் படலம் முற்றிற்று.

---

6. கையடைப்படலம்.

தசரத மன்னவன் தனது குமாரர்களான ஸ்ரீராம லக்ஷ்மணர்களை விச்வாமித்திர முனிவன் வசத்தில் அடைக்கலமாக ஒப்பித்த செய்தியைக் கூறும் பாகமிது.

இப்படலத்திற் கூறிய கதையின் சுருக்கம் வருமாறு ;—

தசரத சக்ரவர்த்தி சபா மண்டபஞ் சேர்ந்து சிங்காதனத்தில் வீற்றிருக்க, அங்கு விச்வாமித்ர முனிவன் வர, தசரதனெழுந்து அம்முனிவனை வணங்கி உபசரித்து இன்சொற் கூறித் துதிக்க, முனிவனும் சக்கரவர்த்தியைப் புகழ்ந்து பாராட்ட, மன்னவன் முனிவனை நோக்கி யான் செய்யவேண்டிய பணிவிடை யாதென்று வினவ, முனிவன் தானொரு வேள்வி செய்ய முயன்றிருப்பதைத் தெரிவித்து அவ்வேள்வி காத்தற்கு இராமனை யனுப்புகவென்று வேண்ட, அதுகேட்டு மன்னவன் மிகவருந்தி, தானேவந்து வேள்வி காப்பதாகக்கூற, அதனால் முனிவனுக்குப் பெருங்கோப முண்டாகிப் பெரிய குழப்பமாக, வஸிஷ்ட பகவான் இராமனை யனுப்புகவென்று நியமிக்க, உடனே தசரதன் உடன்பட்டு இராமனை வரவழைத்து இலக்குமணனுடன் முனிவனிடம் ஒப்பிக்க. முனிவன் மகிழ்ச்சியோடு புறப்பட்டனன். இராமன் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு தம்பியுடன் முனிவன் பின்னே செல்ல, மூவரும் சரயுநதியைச் சார்ந்து ஒரு சோலையை யடைந்து உதயகாலத்தில் நதியைக் கடந்துசென்று ஒரு சோலையைக் கண்டு இராமன் ' இது யாது ?' என்று வினவுகின்றனனென்பதாம். ... ... *

(கையடைப் படலத்திலுள்ள விசேடச் செய்யுள்கள்.)

57. வந்துமுனி யெய்துதலு மார்பினணியாரம் * அந்தரதலத் திரவியஞ்ச ஒளிவிஞ்ச *
கந்தமலரிற்கடவுள் தன்வரவுகாணும் * இந்திரனெனக் கடிதெழுந் தடிபணிந்தான். 4

முனி வந்து எய்துதலும்	விச்வாமித்ர முனிவன் (தன்னிடம்) வந்து சேர்ந்தவுடனே (தசரதசக்ரவர்த்தி)	மார்பின் அணி ஆரம் அந்தர தலத்து இரவி அஞ்ச	தன் மார்பிலணிந்துள்ள ரத்னஹாரமானது வானிலுள்ள ஸூரியனும் தோற்கும்படி
கந்தம் மலரில் கடவுள் தன் வரவு காணும் இந்திரன் என	நறுமணத் தாமரைமலரில் தோன்றிய பிரமனது வருகையை நோக்கிய தேவேந்திரனபோல,	ஒளி விஞ்ச	ஒளி மிகுமாறு
		கடிது எழுந்து	துரிதமாக ஆசனத்தைவிட்டெழுந்து
		அடி பணிந்தான்	(முனிவனது) திருவடிகளை வணங்கினான்.

***—"ப்ரஹ்மாணமிவ வாஸவ:" என்று வான்மீகத்திற் கூறப்பட்டுள்ள உவமையே இங்குக் கொள்ளப்பட்டது. பிரமனுடைய ஸ்தானத்தில் விச்வாமித்திர முனிவரும், தேவேந்திரனுடைய ஸ்தானத்தில் தசரத சக்கரவர்த்தியும் வைத்துப் பேசப்பட்டனரென்க. "அஞ்சல் தோல்விப் பெயர்" என்பது பிங்கலந்தையாதலால் அஞ்ச என்றதற்குத் தோற்கும்படி யென்ற பொருள் பொருந்தும். ... *

(விச்வாமித்ர முனிவன் தசரதனைப் புகழ்தல்.)

58. என்னனைய முனிவரு மிமையவரு மிடையூறொன் றுடையராகில்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும் பதுமபீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு மணிமாடவயோத்தியென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ? இகல்கடந்த புலவுவேலோய். 7

இகல் கடந்த புலவு வேலோய்	(பகைவரைப்) போரில் வென்றதனால் (அவர்களது) தசை பொருந்திய வேற்படையையுடையவனே!	பாற்கடலும்	திருப்பாற்கடலும்
என் அனைய முனிவரும்	என்னைப்போன்ற மஹர்ஷிகளும	பதுமபீடத் தன் நகரும்	பத்மாஸனனான பிரமனது ஸத்திய லோகமும்
இமையவரும	தேவர்களும்	கற்பகம் நாடு அணி நகரும்	கற்பக விருக்ஷத்தையுடைய சுவர்க்க லோகத்திலுள்ள அழகிய அமராவதியும
இடையூறு ஒன்று உடையர் ஆகில்	ஏதேனும் துன்பப்பட்டார்களாகில் (அவர்களுக்கு)	அணி மாடம் அயோத்தி என்னும் பொன் நகரும் அல்லாது	அழகிய மாடங்களையுடைய அயோத்யாபுரியும் தவிர
பல் நகமும் நகு வெள்ளி பனி மலையும்	பல மலைகளையும் பரிஹஸிப்பது போனறிருக்கின்ற கைலாஸ மலையும்	புகல் உண்டோ	தஞ்சமாகுமிடம் வேறுண்டோ?

*** இதனால், க்ஷீராப்தி நாதனோடும் கைலாஸபதியோடும் ஸத்ய லோகேச்வரனோடும் அமராவதிநாதனோடும் சமமாக அயோத்யாதிபதி பேசப்பட்டானென்பது விளங்கும். முனிவர்களோ தேவர்களோ இடருற்று முறைப்பட வேண்டில் பாற்கடல் முதலிய ஸ்தான விசேஷங்களுக்குச் செல்லலாமாயினும், நிலவுலகத்தவர் எளிதில் அடையக் கூடியதலம் அயோத்தியாதலால் என்னிடரை முறையிட்டுக் கொள்ள நின்னிடம் வந்தேனென்பது தொனிக்கும். ... . *

59. இன்தளிர்க் கற்பகநறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை யிழந்து போந்து
நின்தளிக்குந் தனிக்குடையின் நிழலொதுங்கிக் குறையிரந்து நிற்பநோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றே புரந்தரனின் றுள்கின்ற தரசவென்றான். 8

அரசு	தசரதமன்னவனே !
இன் தளிர் கற்பகம்	இனிமையான துளிர்களை யுடைய கல்பகவிருக்ஷத்தினது
நறுந் தேன் இடை துளிக்கும் நிழல்	பரிமளம்மிக்க தேனனது இடையிடையே சிந்தும்படியான
இருக்கை இழந்து போந்து	செங்கோல் செலுத்தி வாழ்வதை இழந்து வந்து
நின் தளிக்கும் தனி குடையின் நிழல் ஒதுங்கி	உனது செழித்துள்ள வெண்கொற்றக்குடையின் நிழலிலே வந்து சேர்ந்து
குறை இரந்து நிற்ப	தன் வேண்டுகோளைச் சொல்லி யாசித்து நிற்க,
நீ நோக்கி	(அந்த தீனமான நிலையை) நீ கடாக்ஷித்து (இரங்கி)
குலம் குன்று அளிக்கும் மணி தோள் சம்பரனை	குல பர்வதங்களை யொக்கின்ற அழகிய புஜங்களையுடைய சம்பராஸுரனை
குலத்தோடும் தொலைத்து கொண்டு	வம்சத்தோடும் வேரறுத்து உன் வசமாக்கிக் கொண்டு
அன்று அளித்த அரசு அன்றோ	அப்பொழுது நீ கொடுத்தருளிய அரசாட்சியன்றோ
புரந்தரன் இன்று ஆள் கின்றது	தேவேந்திரன் இப்பொழுதும் ஆண்டு வருவது
என்றான்	என்று முனிவன் கூறினான்.

* * * முற்காலத்தில் சம்பராஸுரன் பல அஸுர ராக்ஷஸர்களை உடன் கொண்டு சென்று தேவர்களோடு பெரும் போர்செய்து அவர்களை நலிந்து தேவேந்திரனையு முட்பட வென்று அவனுடைய பொன்னுலகத்தை அபஹரித்துக்கொண்டு துரத்திவிட, அரசிழந்த தேவேந்திரன் பூலோகத்தில் வந்து தசரதமன்னவனை வணங்கித் தனக்கு உதவி செய்யுமாறு வேண்ட, அவனது பரிதாப நிலையைக் கண்டு இரங்கின தசரதன் கைகேயியையுங் கூடவழைத்துக் கொண்டு சென்று சம்பரனுடன் எதிர்த்துக் கடும்போர் புரிய, அதற்கு ஆற்றமாட்டாத அவ்வசுரன் மாயையால் மறைந்து ஓட்டங்காட்ட, அவன் சென்றசென்ற திசைகளிலெல்லாம் தசரதன் விடாது சென்று பொருது அவனைச் சுற்றத்துடன் கொன்று இந்திரனை ஸ்வராஜ்யத்தில் அமரச் செய்தனனென்னுங் கதையை உட்கொண்டு விச்வாமித்ர முனிவன் தசரதனைப் புகழ்ந்தனனென்க. யாசகம் செய்ய வருமவர்கள் முன்னம் துதி செய்வது இயல்பாதலால் ஸ்ரீராமனை யாசிக்க வந்த முனிவன் மன்னவனைத் துதி செய்வானாயினன். ... ... *

(முனிவன் யாகரக்ஷணத்திற்காக இராமனை வேண்டுதல்.)

60. தருவனத்துள் யானியற்றுந் தகைவேள்விக் கிடையூறாத் தவஞ்செய்வோர்கள்
வெருவரச் சென்றடை காமவெகுளியென நிருதரிடை விலக்காவண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதியென வுயிரிரக்குங் கொடுங்கூற்றி னுளையச் சொன்னான்.

தருவனத்துள் யான் இயற்றும்	ஒரு சோலையிலே நான்நடத்தவிருக்கிற
தகை வேள்விக்கு	சிறந்த யாகத்திற்கு
இடையூறு ஆ	தடையாக வந்து,
தவம் செய்வோர்கள் வெருவர சென்று அடை காமம் வெகுளி என	முனிவர்கள் அஞ்சும்படி அவர்களிடம் போய்ச் சேருகிற காமக்குரோதங்கள் போல
நிருதர்	ராக்ஷசர்கள்
இடை விலக்கா வண்ணம்	நடுவிலே புகுந்து கெடுதல் செய்யாதபடி
செரு முகத்து காத்தி என	யுத்தத்தில் நின்று காவல் செய்யுமாறு கட்டளையிட்டு
நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனை தந்திடுதி என	உனது குமாரர்கள் நால்வருள்ளும் கருநிறமுடைய ஒப்பற்ற ஸ்ரீராமனை என்னுடன் அனுப்புகவென்று

உயிர் இரக்கும் கொடுங் கூற்றின்	பிராணனை யாசிக்கின்ற கொடிய யமன்போல	உளைய சொன்னான்	சக்ரவர்த்தியின் மனம் வருந்துமாறு முனிவன் சொன்னான்.

*** இங்குத் தருவனத்துள் என்றது ஸித்தாச்ரமத்தை. இம்முனிவன் நித்திய வாஸஞ் செய்வது இமயமலை யென்றும், ஸ்தல விசேஷம் நோக்கி அவன் அங்கு நின்று ஸித்தாச்ரமத்திற்கு வந்து வேள்வி செய்து முடித்து ஸீதா விவாஹத்திற்குப் பிறகு மீண்டும் இமயமலைக்கே செல்கின்ருனென்று முணர்க. தவ வேள்விக்கு இடையூருய் வந்து விலக்குகிற ராக்ஷசர்களுக்கு, மிகக் கொடிய காமக் குரோதங்கள் உவமை கூறப்பட்டன. பாஹ்ய சத்துருக்களான ஸுபாஹு மாரீசர்களிருவர்க்கும், அந்தரங்க சத்துருக்களான காமக்ரோதங்களை உவமை கூறினனென்க. எளிதின் வெல்ல முடியாமையில் ஒப்பு. யாகதீக்ஷை செய்துகொண்டிருப்பவன் கோபத்திற்கு இடங் கொடுக்க லாகாதென்பது விதியாகையால், யான் கோபங்கொண்டு அவர்களைச் சபித்து அழிக்கத்துணிந்திலேனென்று காட்ட இங்கு இவ்வுவமை கூறிற்று. இவ்விஷயம் வான்மீகத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளது. ஸ்ரீராமனைத் தன்னுடன் அனுப்புமாறு முனிவன் வேண்டியது, தசரத மன்னவனுக்கு யமன் நேரில் வந்து 'உன்னுயிரைக் கொடு' என்று கேட்டாற் போலிருந்ததாம். ... *

(முனிவன் சொன்னது கேட்டு மன்னவன் மிக வருந்தியது கூறல்.)

61. எண்ணிலாவருந்தவத்தோ னியம்பியசொல் மருமத்தி னெறிவேல்பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தா லெனச்செவியிற் புகுதலோடும்
உண்ணிலாவியதுயரம் பிடித்துந்த வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா லெனவுழந்தான் கடுந்துயரம் காலவேலான். 11

எண் இலா அரு தவத்தோன்	மஹாதபஸ்வியான விச்வாமித்திர முனிவன்	காலன் வேலான்	(எதிரிகட்கு) யமனையொத்த வேற்படையையுடையனை அத்தசரதன்
இயம்பிய சொல்	சொன்ன சொல்லானது	உள் நிலாவிய துயரம பிடித்து உந்த	மனத்திலுண்டான துக்கம் பிடித்து வெளியே தள்ளுதலால்
மருமத்தின் எறி வேல் பாய்ந்த புண்ணில் ஆம பெரும் புழையில் கனல் நுழைந்தால் என	மார்பிலே (எதிரிகள்) எறிந்த வேற்படை பாய்ந்ததனுலாகிய புண்ணிலுண்டான பெரிய துவாரத்திலே கொள்ளிக்கட்டை நுழைந்தாற்போல	ஆர் உயிர் நின்று ஊசல் ஆட	அருமையான வுயிரானது ஊஞ்சலாடுவது போலப் போவதும வருவதுமாயிராநிற்க,
		கண் இலான் பெற்று இழந்தால் என	பிறவிக்குருடன் (தைவாநுக்ரஹத்தினல் கண்ணைப்) பெற்று மீண்டும் அதை இழந்தாற்போல
செவியில் புகுதலோடும்	(மன்னவனது) காதுகளில் நுழைந்தவுடனே	கடு துயரம் உழந்தான்	மிகுந்த துக்கத்தையடைந்தனன்.

*** அறுபதினயிர மாண்டு பிள்ளையில்லா திருந்த சக்ரவர்த்தி அரிதிற்பெற்ற குமாரனை இப்பொழுது முனிவன்பின்னே யனுப்புவதை அம்மகனையிழக்கின்ற படியாகவே கருதுகின்றனனுதலின், அதற்குப் பொருத்தமான உவமை கூறப்பட்டது. பிறவிக்குருடன் தெய்விகமாக ஒருகால் கண்பெற்று உலகப் பொருள்களை யெல்லாம் கண்ணுற்று மகிழ்ந்து கொண்டிருக்கையில் மீளவும் அக்கண்களை இழக்க நேர்ந்தால் அடையும் வருத்தம் வாசாமகோசர மன்றே; அவ்வாறே பிள்ளையில்லா திருந்த சோகத்தினும் பிள்ளை பெற்று இழக்க நேர்கிற சோகம்

பெரிதென்பதும் சொல்லாமலே விளங்கும். இப்படிப்பட்ட பெருந் துயரத்தினுல் தசரதன் மூர்ச்சை யடைந்தனனேயன்றி அந்திமகாலம் நேராமையினுல் மரண மடைந்திலன். இங்ஙனம் மூர்ச்சையும் தெளிவுமாகிற நிலையில் உயிரானது போகத் தொடங்குவதும் மீள வருவதுமாய் அலைந்த தந்தோ !. ... ... "

(நானே வந்து வேள்வியைக் காப்பேனென்று மன்னவன் சொன்னது.)

62. தொடையூற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரா னொருவண்ணம் துயரநீங்கிப்
படையூற்றமிலன் சிறியனிவன் பெரியோய் பணியிதுவேல் பனிநீர்க்கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும் நான்முகனும புகுந்துசெய்யும்
இடையூற்றுக் கிடையூரு யான்காப்பென் பெருவேள்விக் கெழுகவென்ருன்.

தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறு தாரான்	தேன்கூடு தேனையூற்றுவது போல (எப்போதும) தேனைச் சிந்துகின்ற மண மிக்க மாலையையுடையனுன மன்னவன்
ஒரு வண்ணம் துயரம் நீங்கி	ஒருவாறு துக்கம் தணிந்து (முனிவனை நோக்கி)
பெரியோய்	மஹாத்மாவே !
இவன் சிறியன்	என மகனுனவிவன் மிகச் சிறுபிராயமுள்ளவன் ;
படை ஊற்றம் இலன்	அஸ்த்ர சஸ்த்ரங்களிற் பழக்க மில்லாதவன் ; (ஆதலால் இவன் வேண்டாம் ;)
இது பணி ஏல்	யாகத்தை ராக்ஷஸோபத்திர வமில்லாமல் நிறைவேற்று விப்பதே கர்த்தவ்யமாகில,
பனி நீர் கங்கை புடை ஊற்றும்	குளிர்ந்த நீரையுடைய கங் கையை ஒரு பக்கத்திலே யொழுகவிட்ட

சடையானும்	சடைமுடியையுடைய சிவனும்
நான்முகனும	பிரமனும்
புரந்தரனும்	இந்திரனும்
புகுந்து செய்யும இடையூற்றுக்கு இடையூறு ஆ	தனித்தனியாகவோ ஒன்று சேர்ந்தோ வந்து செய்யும தடைகளுக்கும தடையுண் டாக
யான் காப்பென்	அடியேன் வந்து வேள்வி யைக் காக்கவல்லேன் ; (ஆதலால் என்னைக் கொண்டு)
பெரு வேள்விக்கு எழுக எனருன	(தேவரீர் செய்ய நினைத்த) மஹாயஜ்ஞத்தைச் செய் யப் புறப்படுகவென்று கூறி னுன்.

... தொடையூற்றின் தேன் துளிக்கும் நறுந்தாரான் என்றது தசரதனை ; ராஜாதி ராஜ சின்ன முடையவனென்றபடி. முனிவனுக்குத் தக்க ஸமாதானஞ் சொல்லி இராமனை நிறுத்திக் கொள்ளலா மென்ற கருத்தினுல் ஒருவாறு மனந்தேறின னென்க. இராமனுடைய சிறுமையும், அஸ்த்ர சஸ்த்ரப் பயிற்சி விசேஷமாக இல்லாமையுங் கூறி 'நானே சதுரங்க பலத்தோடு வந்து உனது வேள்வியை இடையூறின்றிக் காப்பேன்' என்ருன். மஹாவீர சூரர்களான பிரமன் சிவனிந் திரன் முதலானுர்வந்து வேள்விக்கு இடையூறு செய்ய ப்ரஸக்தி யில்லாதிருக்கவும் அது சொன்னது, மற்றையோர் செய்யும் இடையூற்றைத் தவிர்ப்பது திண்ண மென்கைக்காக. ... ...

(மன்னவன் சொன்ன வார்த்தையினுல் முனிவன் கோபமூண்ட துரைத்தல்.)

63. என்றனனென்றலுமுனிவோ டெழுந்தனன் மண்படைத்தமுனி யிறுதிக்காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல் வெயில்கரந்த தங்குமிங்கும்
நின்றனவும் திரிந்தனமீ நிவந்தகொழுங் கடைப்புருவ நெற்றிமுற்றச்
சென்றன வந்ததுநகையுஞ் சிவந்தனகண் ணிருண்டனபோய்த் திசைகளெல்லாம்.

என்றலும்	அங்ஙனஞ் சொன்னவுடனே	அங்கும் இங்கும நின்றனவும் திரிந்தன	அவ்வுலகத்திலும் இவ்வுலகத்திலுமுள்ள ஸ்தாவரங்களும் சுழன்றன ;
மண் படைத்த முனி	(முன்பொருகால்) உலகங்களை வேறாக ஸ்ருஷ்டிக்கத் தொடங்கிய விச்வாமித்ர முனிவர்	கொழுங் கடை புருவம் மீ நிவந்த நெற்றி முற்ற சென்றன	(அம்முனிவனது) செழுமையான புருவ நுனிகள் மேலேறி நெற்றி முழுவதும் பரந்தன ;
முனிவோடு எழுந்தனன்	சீற்றத்தோடு எழுந்தான் ; (அப்பொழுது அதனைக் கண்டு)	நகையும் வந்தது	(அம்முனிவனுக்குச் சீற்றத்தினால்) சிரிப்பு முண்டாயிற்று ;
இமையோர்	தேவர்கள்	கண் சிவந்தன	கண்கள் சிவந்துபோயின ;
இறுதி காலம் ஆம் என அன்று என	பிரளயகாலம் இதுவாகுமென்றும் அன்றென்றும்	திசைகள் எல்லாம் போய் இருண்டன	எல்லாவிடங்களும் இருள் மூடிப்போயின.
அயிர்த்தனர்	சந்தேகித்தார்கள் ;		
மேல் வெயில் கரந்தது	மேலே காய்கின்ற ஸூரியனும் மறைந்தான் ;		

* * * முனிவன் தான் சொன்னவார்த்தைக்கு மன்னவன் குறுக்குச் சொன்னானென்று பெருங்கோபங்கொண்டு ஆசனத்தை விட்டெழுந்தவளவிலே, அப்படி எழுந்த பரபரப்பைக்கண்டு இம்முனிவனால் உலகத்துக்கே முடிவுகாலம் வந்துவிடுமோ வென்று தேவர்கள் சங்கித்தார்கள்; வானிலுள்ள ஸூரியனும் அஞ்சி அகன்றொழிந்தனன்; உலகங்கள் நிலைபெயர்ந்து சுழன்றன; அப்போது முனிவன் புருவத்தை நெறித்துப் பெருஞ் சிரிப்புக்கொள்ள, கண் சிவந்த வளவிலே திசைகளெல்லாம் இருள் மூடிப்போயின—என்று முனிவருடைய கோபாதிசயம் வருணிக்கப்பட்டதாயிற்று.

முனிவனுக்கு இவ்வளவு கோபாவேச முண்டாகும்படி தசரத மன்னவன் என்ன பேசிவிட்டானென்று பார்க்கவேணும்; தவறுதலாக யாதொன்றும் சொல்லவில்லையே; உம்முடைய வேள்வியைக்காக்க இச்சிறுவனாலாகாது, நானே சதுரங்கபலத்தோடுங் கூடவந்து இடையூறுகளை யகற்றிக் காக்கிறேன் என்று சொன்னதில் என்ன தவறு? இதை ஆனந்தமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமே யொழியச் சீறுவதற்கு இடமில்லையே; 'இக்காரியம் என்னாலாகாது' என்று சொல்லியிருந்தால் சீற்றங்கொள்ளலாம்; சிறுவன்வேண்டா; பெரியவனான நானே வந்துகாக்கிறேன்' என்ற இந்த வார்த்தையில் கோபங்கொள்ளக் காரணமென்? என்று ஆராயவேண்டும். இங்கு உண்மை யாதெனில்; இந்த மஹாமுனிவன் இதுவரையில் எத்தனையோ வேள்விகளும் தவங்களும் தீவிரமான அனுட்டானங்களும் செய்திருக்கிறான்; அவற்றுக்கு ஒருவரிடமும் செல்லவில்லை; ஒரு துணையும் வேண்டவில்லை. இப்போது செய்யநினைத்த வேள்வியோ மிகச் சிறிது; ஷட்ராத்ரமெனப்படுகிறது. இதற்குத் துணைவேண்டிவந்தானென்பது அஸம்பாவிதம். இராமபிரானுடைய பெருமையை விளக்குதற்காகவும் அவனே ஸர்வரக்ஷகன் என்னும் தத்துவத்தை உலகறியப் பரப்புகைக்காகவும், இராமபிரான் திருவாக்கில் "இமௌ ஸ்ம முனிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்" என்பதுபோன்ற அருமருந்தன்ன மொழிகளை வெளிவரச் செய்வதற்காகவுமே வந்தனன்; அதற்கு அவகாசம் கிடைக்காதபடி மன்னவன் பேசவே கோபம் மூண்டதென்க. ... ... *

(வஸிஷ்டபகவான் ஸ்ரீராமனை முனிவனோடனுப்ப நியமித்தல்.)

64. கறுத்தமாமுனி கருத்தை யுன்னி நீ, பொறுத்தியென்றவற் புகன்று நின்மகற்கு
உறுத்தலாகலா வுறுதியெய்துநாள், மறுத்தியோ வென வசிட்டன் கூறினான்.

(இப்படி சீற்றங் கொண்ட பொழுது)

வசிட்டன்	வசிஷ்டபகவான்
கறுத்த மா முனி கருத்தை உன்னி	கோபங்கொண்ட அம்முனிவனது எண்ணத்தை யறிந்து
நீ பொறுத்தி என்று அவன் புகன்று	'நீ பொறுத்தருளவேணும்' என்று அம்முனிவனை நோக்கிச் சொல்லி

(உடனே மன்னவனைப் பார்த்து)

நின் மகற்கு	'உனது குமாரனுக்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்	பிறரால் அடைவிக்க முடியாத பெருநன்மைகள் தாமாக வந்து சேர்கிற காலத்தில்
மறுத்தி ஓ என	அதைத் தடுக்கக் கடவையோ? என்று
கூறினன்	சொன்னான்.

* * * வஸிஷ்டபகவான் விச்வாமித்ர முனிவனுக்கு விரோதியாயினும் தத்துவமுணர்ந்தவனாகையாலே இராமனை இவனோடு கூடவனுப்புவது நலமே யென்று கொண்டு முனிவனைச் சாந்தப்படுத்தி, தசரதனுக்கு 'இம்முனிவரால் உனது குமாரனுக்கு நன்மைகளே மிகும்' என்று தெரிவித்து அவனது மனக்கலக்கத்தை மாற்றினான். ... ... *

65. பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய், மொய்கொள் வேலைவாய் முடுகுமாறுபோல்
ஐய நின்மகற் களவில்விஞ்சைவந்து, எய்துகாலமின் றெதிர்ந்த தென்னவே. 15

66. குருவின்வாசகங் கொண்டு கொற்றவன், திருவின்கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன னென்னலோடும் வந்து, அருகு சார்ந்தன னறிவினும்பரான். 16

ஐய	அரசனே!
பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம்	பெய்கின்ற மழையினால் பெருகுகின்ற வெள்ளங்கள்
போய்	பெருகிச் சென்று
மொய் கொள் வேலை வாய்	பெரிய கடலிலே
முடுகும் ஆறு போல்	விரைந்து சேருமா போலே
நின் மகற்கு	உனது திருக்குமாரனுக்கு
அளவு இல் விஞ்சை	அளவில்லாத வித்தைகள்
வந்து எய்து காலம்	வந்து சேரும்படியான நல்ல காலம்
இன்று எதிர்ந்தது	இன்றைக்கு நேர்ந்தது'
என்ன	என்றும் (வஸிஷ்டர்) சொல்ல;

குருவின் வாசகம் கொண்டு	(இங்ஙனே கூறிய) குலகுருவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டு
கொற்றவன்	தசரத சக்ரவர்த்தி (ஏவலாளரை நோக்கி)
சென்று திருவின் கேள்வனை கொணர்மின் என	நீங்கள்போய் இராமபிரானை யழைத்து வாருங்களென்று கட்டளையிட,

(அவர்கள் உடனே இராமனிடஞ் சென்று)

வருக என்றனன் என்னலோடும்	சக்ரவர்த்தியின் கட்டளையைத் தெரிவித்து அழைத்தவுடனே
அறிவின் உம்பரான்	அறிவில் மேம்பட்டவனான ஸ்ரீராமபிரான்
வந்து அருகு சார்ந்தனன்	தந்தையருகில் வந்து சேர்ந்தான்.

* * * விச்வாமித்ரமுனிவன்வசத்திலுள்ள அஸ்திர சஸ்திரவித்தைகளெல்லாம் இவனால் இராமனிடம் வந்து சேரப்போகின்றன என்பதை உதாரணத்தோடு உரைத்தனன் வஸிஷ்ட பகவான். மழையினாற் பெருகும் வெள்ளங்களெல்லாம் சென்று ஒருங்கே கடலினிடம் சேர்வதை உதாரணமாகக் கூறினன். கடலின் ஸ்தானத்திலே இராமன் வைக்கப்பட்டது மிகப் பொருத்தம். எவ்வளவு வெள்ளம் பாய்ந்தாலும் அவ்வளவையும் தனது அகத்தினில் அடக்கிக்கொள்ள வல்லமை கடலுக்கு இருப்பதுபோல, எவ்வளவு வித்தைகளையும் இராமன் தனது அகத்தில் தரிக்கவல்லவன் என்று காட்டினபடி. இப்படிப்பட்ட நன்மைகள் முனிவனால் இராமனுக்கு விளையப்போகின்றனவென்று வஸிஷ்டபகவான் சொன்

னதைக் கேட்டவுடனே மன்னவன் இராமனை யழைத்துவரும்படி ஏவலாளர்களுக்குக் கட்டளையிட, அவர்கள் உடனே சென்று இராமனை யழைத்து வந்தனர் என்றதாயிற்று. ... ... *

67. வந்த நம்பியைத் தம்பிதன்னொடும், முந்தைநான்மறை முனிக்குக் காட்டி நற்
றந்தைநீ தனித்தாயுநீ யிவர்க்கு, எந்தை தந்தன னியைந்த செய்கென்றான். 17

	(உடனே மன்னவன்)	இவர்க்கு	இவ்விளங் குமாரர்கட்கு
தம்பி தன்னொடும் வந்த நம்பியை	தம்பியாகிய லக்ஷ்மணனோடு தன்னருகில் வந்து சேர்ந்த ஸ்ரீராமனை	நல் தந்தை நீ	நல்ல தந்தையும் நீயே ;
		தனி தாயும் நீ	ஒப்பற்ற தாயும் நீயே ;
முந்தை நால் மறை முனிக்கு காட்டி	அநாதியான நான்கு வேதங்களிலும் வல்லவனான விச்வாமித்ர முனிக்குக் காட்டி	தந்தனன்	(இவர்களை உன்னிடம்) ஒப்பித்தேன் ;
எந்தை	'எமது தலைவனே !	இயைந்த செய்க என்றான்	இவர்கட்கு ஆகவேண்டிய ஹிதங்களைச் செய்தருள்க வென்றான்.

* * * இக்குழந்தைகட்கு ஸகலவிதபந்துவும் நீயேயென்று சொல்லியும், இவர்களுக்காகவேண்டிய அநுகூலங்களை யெல்லாம் நீயே செய்தருள்கவென்று சொல்லியும் தசரத மன்னவன் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை விச்வாமித்திர முனிவனிடம் ஒப்படைத்தானாயிற்று. ... ...

6. கையடைப்படலம் முற்றிற்று.

---

7. தாடகை வதைப்படலம்.

விச்வாமித்ர மஹரிஷியின் கட்டளையினால் இராமபிரான் தாடகையை வதஞ்செய்த வரலாற்றைக் கூறும் பாகம். இப்படலத்தின் கதைச் சுருக்கம் வருமாறு ;—

விச்வாமித்ர முனிவரும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களுமாகிய மூவரும் சரயுவைக் கடந்து சென்று கொண்டிருக்கையில் ஒரு சோலையைக் கண்டு இராமன் 'இது யாது?' என்று வினவ, அதற்கு முனிவர் 'இராமா! இவ்விடங்களெல்லாம் சிவபெருமானது கோபத்தீக்கு இலக்கான மன்மதனுடைய அங்கம் நீறாகி வீழ்ந்த இடத்தைச் சார்ந்த விடமாதலால் இது அங்கதேசமெனப் பெயர் பெறும்; நீ வினவிய இடமும் மன்மதனை அச்சிவபெருமான் சாம்பராக்கிய காரணத்தினால் காமாச்ரமமென்று பெயர்பெற்ற இடமாகும்; சிவபிரான் தவஞ்செய்த இடமுமிதுவே' என்று சொன்னார். மூவரும் ஒரு நாள் அங்குத் தங்கியிருந்து ஒரு பாலைவனத்தைச் சேர்ந்தனர்; அந்நிலத்தின் வெம்மையால் குமாரர்கள் வருந்துவரே யென முனிவன் சிந்தித்து வெம்மை தோன்றாமைக்காக அவர்கட்கு 'பலை அதிபலை' என்னுமிரண்டு வித்தைகளை முனிவன் உபதேசிக்க, அப்பாலைவனம் குமாரர்கட்குக் குளிர்ந்து தோன்றிற்று. அந்தவனம் அத்தனை வெம்மை கொண்டிருப்பதற்குக் காரணம் யாதென்று வினவின இராமனுக்கு முனிவர் தாடகையென்னு மரக்கியின் வரலாற்றை விரிவாககூறி அவ்விடம் வெப்பம் மிக்கது அவளாலேயே யென்று சொல்லி முடித்தார். அவ்வளவிலே அத்தாடகை வெகு ஆரவாரத்துடன் அங்கு எதிர்த்து வந்து கோபாவேசங்கொண்டு வீரவாதங்கள் செய்ய, இராமன் முனிவனது கட்டளையினால் அவளைக்கொன்று வீழ்த்தினன். அப்பொழுது தேவர்கள் வந்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துப் பூமழை பொழிந்து போயினர், என்பதாம். .... *

(தாடகைவதைப்படலத்திலுள்ள விசேடச் செய்யுள்கள்)

(முனிவன் ஓரிடத்தைக்காட்டி இது சிவபிரான் தவஞ்செய்த இடமெனல்.)

68. பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய், முற்றவாலுணர்வு மேன்முடுகினு றறிவுசென்
றுற்ற வானவனிருந்து யோகு செய்தனனெனில், சொற்றவாமளவதோ மற்றிதன் தூய்மையே. 3

பற்று அவா வேரொடும் பசை அற	பாசமும் ஆசையும் முழுவே ருடன் தொடர்ச்சி நீங்கவும்	வானவன்	பரமசிவன்
பிறவி போய் முற்ற	பிறப்புக்களொழிந்து போகவும்	இருந்து யோகு செய்தனன் எனில்	இவ்விடத்திருந்து யோகப் பயிற்சி செய்தானென்றால்
வால் உணர்வு மேல் முடுகினார்	தத்துவஞானத்தைப் பெற வேணுமென்று விரும்பினருடைய	இதன் தூய்மை	இத்தலத்தின் பரிசுத்தி
அறிவு சென்று உற்ற	உணர்வு சென்று சேரப் பெற்ற	சொற்ற ஆம் அளவதோ	சொல்லக்கூடிய தன்மையை யுடையதோ?

* * *—சிவபிரான் ஞானக் கடவுளென்பது நூற்கொள்கையாதலால் தமது பிறப்புப் பிணி நீங்குமாறு தத்துவ ஞானத்தைப் பெறவேணுமென்னும் விருப்ப முடையார் சிவபெருமானைப் பற்றுவரென்பதுபற்றி "வாலுணர்வு மேன்முடுகினாரறிவு சென்றுற்றவானவன்" என்று சிவபிரானை விசேடித்தனர். சொற்ற-சொல்லவென்றபடி.

(மூவரும் செல்லும் வழியிற் பாலைநிலத்தின் வருணனை.)

69. பரிதிவானவனிலம் பசையறப் பருகுவான் விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருது வேறின்மையால் எரிசுடர்க் கடவுளும் கருதின் வேமுள்ளமும் காணில்வேம் நயனமும். 5

பரிதிவானவன்	ஸூர்யபகவான்	வேறு ஓர் இருது இன்மையால்	வேறொரு ருது அந்நிலத்தில் ஒருகாலு மில்லாததனால்
நிலம் பசை அற	நிலத்திலுள்ள ஸாரமெல்லா மொழியும்படி	எரி சுடர் கடவுளும்	பற்றி யெரிகின்ற அக்னி தேவனும்
பருகுவான்	(அந்நிலத்திலுள்ள) நீரை யுறிஞ்சும் பொருட்டு	கருதின்	அந்நிலத்தின் தன்மையை நினைப்பானாயின்
விருது மேல் கொண்டு	வெற்றிக்கொடியை உயர்த்தி	உள்ளமும் வேம்	அவனது நெஞ்சமும் வெந்து போம;
உலாம்	சஞ்சரிக்கின்ற	நயனமும் வேம்	கண்களும் வெந்து போகும்.
வேனிலே அல்லது	வெயிற்கால மொன்று தவிர		

* * *—நம்மாழ்வார் திருவிருத்தத்தில் * நானிலம் வாய்க்கொண்டு நன்னீர றமென்று கோதுகொண்ட வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்பாலை * என்றருளிச் செய்த பாசுரத்தையுட்கொண்டு இதில் முதலடி பேசப்பட்டதென்க. ஸூர்யன் நிலத்தின் ஸாரமாகிய நீர் முழுவதையும் உட்கொண்டு உமிழ்ந்த கோதுபோன்றது அப்பாலைநிலம் எனப்பட்டது. எம்பெருமான் கட்டளைப்படி எல்லாருதுக்களும் எல்லா விடங்களிலும் நடைபெறுவனவாயினும், அந்நிலத்தில் வெயிற்காலத்தோடு மழைபனிக் காலங்களோடு வாசியற எப்போதும் வெப்பமே இயற்கையாக மிகுந்துள்ளதுபற்றி "வேனிலேயல்லது இருதுவேறின்மையால்" எனப்பட்டது. 'எரிசுடர்க் கடவுளின் உள்ளமும் நயனமும் வேம்' என்றதனால்-நெருப்பின் வெப்பத்தினும் அந்நிலத்தின் வெப்பம் மிகக் கொடிதாயிருந்ததென்பது பெறப்படும். ... *

(இதுவுமது.)

70. படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவேம் முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும் வேம் மழையும்வேம் மின்னினேடு
இடியும்வே மென்னில்வே றியாவை வேவாதவே. 6

படியின் மேல் வெம்மையை — அப்பாலை நிலத்துள்ள வெப்பத்தை
பகரினும் — சொல்லப்புகுந்தாலும்
பகரும் நா முடிய வேம் — சொல்ல நினைத்த நாக்கும் முழுவதும வெந்து போகும்;
முடிய மூடு இருளும் — உலகமுழுவதையும் மறைக்க வல்லதான அந்தகாரமும்
வான் முகடும் வேம் — அண்டகோளத்தினது மேல் முகடும் வெந்து போகும்;
விடியும் ஏல் வெயிலும் வேம் — உதயமானால் ஸூரியனும் வெந்து போவான்;
மழையும் வேம் — மேகங்களும் வெந்துபோகும்;
மின்னினேடு இடியும் வேம் — மின்னல்களும் இடிகளும் வெந்து போகும்;
என்னில் — என்று இங்ஙனே சொல்லும் படியானால்
வேறு யாவை வேவாத — வெந்துபோக மாட்டாதவை வேறு எவையுள? [எவையுமில்லை.]

***—விச்வாமித்திர முனிவர் இராம லக்ஷ்மணர்களை யழைத்துக்கொண்டு செல்லும் வழியிலுள்ள பாலைநிலம் மிகவும் பயங்கரமானது; அதன் இயல்பை யெடுத்துக் கூறுதற்கு நாக்குத் தானும் கூசுகின்றது என்பது இச்செய்யுளின் பரமதாற்பரியம். குளிர்ந்த பொருள் வெப்பமான பொருள் உயரத்திலுள்ள பொருள் தாழத்திலுள்ள பொருள் என்னும் வாசியற எல்லாப்பொருள்களும் அங்கு நிலவெப்பத்தால் வெந்து போம்படியானவை என்றதாயிற்று. இருளும் வேம் என்றது இரவிலும் வெப்பம் மிகு மென்றபடி. .... *

(இதுவுமது.)

71. விஞ்சுவான் மழையின்மே லம்பும்வேலும்படச் செஞ்செவே செருமுகத் தமர்செயுந் திறனிலா
வஞ்சர் தீவினையினல் மானமாமணியிழந்து அஞ்சினர் நெஞ்சுபோ லென்று மாருதரோ. 7

செரு முகத்து — போர்க்களத்திலே
செம் செவே — மிகவும் நேர்மையாக
அம்பும் வேலும் — (எதிரிகள் செலுத்திய) அம்பு வேல் முதலான ஆயுதங்கள்
விஞ்சு வான் மழையின் மேல் பட — மிக்க மழைத்தாரை போலத் தங்கள் மீது பொருந்த (அவற்றைத் தாங்கி)
அமர் செயும் திறன் இலா வஞ்சர் தீவினையினல் — யுத்தஞ் செய்யக் கூடிய ஆற்றலில்லாத வஞ்சகர்களிழைக்குங் கொடுந் தொழிலினல்
மானம மா மணி இழந்து — மானமாகிய சிறந்த ரத்தினத்தை யிழந்து.
அஞ்சினர் நெஞ்சு போல் — தோற்றவர்களான வீரர்களின் மனம்போல
என்றும் ஆருது — (அப்பாலை நிலம்) ஒரு போதும் தாபந் தணியாமல் கொதித்துக் கொண்டேயிருக்கும்.

***—இச் செய்யுளில் கவியின் புத்தி சமத்காரத்தினல் ஒரு விலக்ஷணமான உவமை அப்பாலை நிலத்திற்குக் கூறப்படுகின்றது. யுத்த களத்தில் தமது சக்திக்கு ஏற்ப யுத்தஞ்செய்து பகைவரிடத்தில் வெற்றியையோ தோல்வியையோ பெறுவது வீரர்க்கு இயல்பு; அங்ஙனம் போர்புரிந்து வெற்றிபெருது தோல்வியடைந்து மானத்தை யிழந்தவர்களின் மனம் அவ்வளவாகக் கொதியாது; செவ்வைக்கேடான பூசல் செய்து வஞ்சகராயிருப்பார்க்கு வசப்பட்டு மானத்தை யிழந்தவர்களின் மனமோவென்னில். எப்போதும் கொதிப்பு நீங்காததாயிருக்கும்;

அப்படிப்பட்ட மனத்தை இப்பாலைக்கு உவமை கூறினாராயிற்று. காவியங்களில் வருணனை யென்னும் வியாஜத்தினால் தத்துவங்களை யுணர்த்துதலும் அவசிய மாதலால் இச்செய்யுள் அத்தகைய தத்துவ போதனையைக் கொண்டதென்க. நேர்மை யற்றவர்களோடு சூதாடிச் செல்வமனைத்தையுந் தோற்ற நளபாண்டவாதி களின் மனம் எவ்வளவு கொதிப்புள்ளதா யிருந்ததோ அவ்வளவு கொதிப்புள்ளதா யிருந்தது இப்பாலை நிலம் என்றவாறு. வேதாந்த தேசிகன் பகவத் த்யாந ஸோபாந மென்னும் துதிநூலில் ஸ்ரீ ரங்கநாதனுடைய கூந்தலை வருணிக்குமிடத்து "குப்யச் சோலீவசந குடிலை : குந்தலை :" என்றருளிச் செய்தது இங்கு ஒருபுடை யொப்பு நோக்கத் தக்கது. ... ... *

(பாலைநிலத்தின் வெப்பத்தினால் தாசரதிகள் வருந்துவரேயென முனிவன் சிந்தித்தல்.)

72. எரிந்தெழு கொடுஞ்சுர மினையதெய்தலும், அருந்தவனிவர் பெரிதளவிலாற்றலைப்
பொருந்தினராயினும் பூவின்மெல்லியர், வருந்துவர் சிறிதென மனத்தினோக்கினன். **17**

இனையது எரிந்து எழு கொடும் சுரம் எய்தலும	இங்ஙனேயாய் நெருப்புப் பற்றி யெரிகின்ற கொடிய பாலை நிலத்தை (மூவரும்) அடைந்தவாறே	பூவின் மெல்லியர்	புஷ்பத்திற்காட்டிலும் ஸுகுமாரர்கள் (ஆதலால்)
அரு தவன்	மஹாதபஸ்வியான விச்வாமித்திரர்	சிறிது வருந்துவர்	(நில வெப்பத்தாலும் வழி நடையாலும்) சிறிது வருத்தமடைவர்கள்'
இவர் பெரிது அளவு இல் ஆற்றலை பொருந்தினர் ஆயினும்	'இப்பிள்ளைகள் சிறந்த அப்ரமேயமான சக்தியை யுடையவர்களேயாயினும்	என மனத்தின் நோக்கினன்	என்று உள்ளத்திலெண்ணினன்.

***—இம்முனிவர் தசரத சக்கரவர்த்தியிடத்தில் "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்" என்று கூறியவராதலால் அதை நினைத்து "இவர் பெரிதளவிலாற்றலைப் பொருந்தினர்" என்று உன்னினர்; ஆனாலும் இவர்களது ஸௌகுமார்யத்தை நோக்குங்கால் நிலவெம்மையை நினைத்து அஞ்ச வேண்டியிருத்தலால் "ஆயினும் பூவின் மெல்லியர் வருந்துவர் சிறிது" என்று மெண்ணினர். ... *

(தாசரதிகளுக்குத் தாபமுண்டாகாமைக்காக முனிவன் இரண்டு வித்தைகளை யுபதேசித்தல்.)

73. நோக்கின னவர்முகம் நோக்க நோக்குடைக், கோக்குமரரு மடிதுறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைகளிரண்டு மவ்வழி, ஊக்கின னவையவ ருள்ளத்துள்ளினர். **18**

அவர் முகம் நோக்கினன்	அத் தாசரதிகளின் முகத்தைக் குறிப்பாகப் பார்த்தார்;	நான்முகன் ஆக்கிய விஞ்சைகள் இரண்டும்	பிரமனாலாக்கப்பட்ட (பலை அதிபலை என்னும்) இரண்டு வித்தைகளையும்
நோக்க	பார்த்ததும்,	அவ் வழி	அவ்விடத்தில்
நோக்கு உடை கோ குமரரும்	குறிப்பறியுந் தன்மையை யுடைய அந்த ராஜகுமாரர்களும்	ஊக்கினன்	(அவர்களுக்கு) உபதேசித்தனர்;
		அவர்	அந்த ராமலக்ஷ்மணர்கள்
அடி துறுக	முனிவர் திருவடிகளைச் சார,	அவை உள்ளத்து உள்ளினர்	அவ்விரண்டு மந்திரங்களையும் மனத்தில் சிந்தித்துக் கொண்டார்கள்.

* * *—ஸாக்ஷாத் நாராயண மூர்த்தியான தாசரதி ஸகல மந்த்ரங்களுக்கும் தானிருப்பிடமாய் ப்ரதிபாத்யனுமாகையாலே அவற்றில் இரண்டொரு மந்திரங்களை ஒரு முனிவனிடத்துத் தான் உபதேசங் கொள்வது பொருந்தாதாயினும் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்ற இயற்கைக்குப் பொருந்து மென்க. "இங்கிதஜ்ஞாஸ்து கோஸலா:" என்றதையடியொற்றி "நோக்குடைக் கோக்குமரர்" எனப்பட்டது. ... *

(அப்பாலைவனம் மந்த்ரோபதேசம்பெற்ற தாசரதிகளுக்குக் குளிர்ந்து தோன்றுதல்.)

74. உள்ளிய காலையினூழித்தீயையும், எள்ளுறு கொழுங்கன லெரியும் வெஞ்சுரம்
தெள்ளு தண்புனலிடைச் சேறலொத்தது, வள்ளலு முனிவனை வணங்கிக் கூறுவான். 19

உள்ளிய காலையின்	(தாசரதிகள் அந்த மந்த்ரங்களைச்) சிந்தித்தவுடனே,	தெள்ளு தண் புனல் இடை சேறல் ஒத்தது	தெளிவான தண்ணீரிலே செல்லுதலை யொத்ததாயிருந்தது ;
ஊழி தீயையும் எள்ளுறு கொழு கனல் எரியும் வெம் சுரம்	பிரளயகாலத்துத் தீயையும் இகழ்கின்ற மிக்க தீ எரியப்பெற்ற கொடிய அப்பாலை நிலத்திலே (தாங்கள்) செல்லுதல்	வள்ளலும் முனிவனை வணங்கி கூறுவான்	(அப்பொழுது) உதாரனை ஸ்ரீராமனும் விச்வாமித்ர முனிவனைத் தொழுது ஒன்று சொல்லலுற்றான்.

* * *—ஸ்ரீ ராமலக்ஷ்மணர்கள் உபதேசம் பெற்ற இரண்டு வித்தைகளின் மஹிமையினால் மிகக் குளிர்ந்த நீர்நிலத்தே நடந்து செல்வதுபோல ஆனந்தமாகச் சென்றார்களென்பதாம். அப்போது முனிவனை நோக்கி ஒன்று வினவினன் இராமன் ; அது அடுத்த செய்யுளிற் காணத்தக்கது. ... ...

(இவ்விடம் இவ்வளவு வெப்பமாயிருப்பதற்குக் காரணம் யாதெனல்.)

75. சுழிபடு கங்கையந் தொங்கல் மோலியான், விழிபடவெந்ததோ வேறுதானுண்டோ ?
பழிபடா மன்னவன் படைத்தநாட்டிடை, அழிவதென் காரண மறிஞ கூறென்றான். 20

அறிஞ	ஸர்வஜ்ஞனான முனிவனே ! (இந்நிலமானது)	பழி படா மன்னவன் படைத்த நாடு இடை	வசைச்சொல்பெறாத தசரதனுடைய நாட்டினுள்ளே
சுழி படு கங்கை அம் தொங்கல் மோலியான் விழி பட வெந்ததோ	நீர்ச்சுழிகள் பொருந்திய கங்கையையும அழகிய கொன்றைமாலையையு மணிந்த சடையையுடைய சிவனது நெற்றிக்கண் பார்வைபடுதலால் வெந்து போயிற்றோ ?	அழிவது என் காரணம்	(இங்ஙனே ஒருவனம்) குளிர்ச்சியழிந்திருப்பதற்கு யாது காரணம் ?
வேறு தான் உண்டோ	வேறு ஏதேனும் காரண முளதோ ?	கூறு என்றான்	சொல்லவேணுமென்று வினவினான்.

* * *—இங்ஙனம் இந்நிலம் குளிர்ச்சி யென்பது அடியோடில்லாமல் வெம்மை மிக்கிருப்பதற்குக் காரணம் காமதஹனம் செய்த ருத்ர மூர்த்தியின் விழித்தீப் பட்டது தானோ ? வேறு ஏதேனுமுளதா ? என்று அறிய விரும்பினன் இராமனென்க. இப்படலத்தின் தொடக்கத்தில் இரண்டு மூன்று செய்யுட்களால் சிவன் காமனை யெரித்த கதை முனிவனா லுணர்த்தப்பட்டிருத்தலால் ஏற்கெனவே தான் தெரிந்துகொண்ட அக்காரணத்தைக் கூறி 'இதுவே தானோ ? வேறுமுண்டா ?' என்றனன். ... ... *

(இந்த வனத்தில் மிகக் கொடியளான தாடகை சஞ்சரித்தலும் இங்கு இவ்வளவு வெப்பமென்று சொல்லக்கருதிய முனிவன் தாடகையைப்பற்றிக் கூறுதல்.)

76. என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர், கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் தோற்றத்தள்,
அன்றியு மையிருநூறு மையல் மா, ஒன்றிய வலியின ளுறுதி கேளென. 21

என்றலும்	என்று இராமன் வினவிய வளவிலே	கூற்றின் தோற்றத்தள்	யமன்போல் பயங்கரமான வுருவமுடையவளும்
	(முனிவன்)	அன்றியும்	அல்லாமலும்,
இராமனை நோக்கி	ஸ்ரீராமனைக் குறித்து	ஐ இரு நூறு மையல் மா ஒன்றிய வலியினள்	ஆயிரம் மதயானைகளடைந்துள்ள வலிமையையுடையவளுமாகிய வொருத்தியினது
இன் உயிர் கொன்று உழல் வாழ்க்கையள்	நல்ல பிராணிகளைக் கொலை செய்து உண்டு திரிகின்ற உயிர்வாழ்வை யுடையவளும்	உறுதி கேள் என	வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள் என்று சொல்லத் தொடங்கி.

***—'என' என்னுமிவ்வினையெச்சம் மேலே நாற்பத்து நான்காஞ் செய்யுளில் 'என்றான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடியும். அதுவே இங்கு அடுத்த செய்யுளாக வைக்கப்படுகின்றது. ... ... *

(தாடகையின் செய்தியைக் கூறி முடித்தல்.)

77. முன்னுல களித்து முறைநின்ற வுயிரெல்லாம், தன்னுயிரெனக்கருது தன்மையவன் மைந்த,
என்னினி யுணர்த்துவது இனிச்சிறிது நாளில், மன்னுயிரனைத்தையும் வயிற்றினிடு மென்றான். 44

முன் உலகு அளித்து	பழமையான வுலகங்களை யெல்லாம் ரக்ஷித்து	இனி உணர்த்துவது என்	(அத்தாடகையைப் பற்றி) இன்னமும் கூறவேண்டுவது யாதுளது?
முறை நின்ற உயிர் எல்லாம் தன் உயிர் என கருது	நல்ல நெறியில் நின்ற பிராணிகளை யெல்லாம் தன்னுயிராக எண்ணுகின்ற	இனி சிறிது நாளில்	இன்னமும் சில நாட்களுள்
தன்மையவன் மைந்த	நல்லியற்கையையுடைய தசரத சக்ரவர்த்தியின் குமாரனே!	மன் உயிர் அனைத்தையும் வயிற்றின் இடும் என்றான்	(அத்தாடகை) எல்லா வுயிர்களையும் விழுங்கி விடுவாள் என்று கூறினன்.

***—இராம! தாடகையை நீ வதஞ் செய்யாது விட்டிடின் இந்த வொரு நாடேயன்றி உலக முழுவதுமே நாசமாய்விடுமென்று கூறி முடித்தனன் முனிவன். இங்குத் தந்தையான தசரத மன்னவனது பெருமையைக் கூறினது—அன்னவன் புதல்வனாய்த் தோன்றின வுனக்கு இது அவசியம் செய்யத்தக்கதே யென்று காட்டுதற்கென்க. ... ... *

(தாடகை அங்கு வருவதைக் கூறல்.)

78. சிலம்புகள் சிலம்பிடைச் செறித்த கழலோடும், நிலம்புக மிதித்தனள் நெளித்த குழிவேலைச்
சலம்புக அனல்தறுகண் அந்தகனு மஞ்சிப், பிலம்புக நிலைக்கிரிகள் பின்தொடர வந்தாள். 47

சிலம்புகள்	மலைகளை
சிலம்பிடை	தன் காற் சிலம்புகளிலே
செறித்த	(பருக்கைக் கற்களாகப்) பெற்றுள்ள
கழலோடும்	கால்களோடு கூடியவளாய் (அக்கால்களினால்)
நிலம் புக மிதித்தனள்	தரை அழுந்தும்படி மிதித்துக்கொண்டு
நெளித்த குழி வேலை சலம் புக	(அவ்வாறு நிலம்) நெளித்ததனாலுண்டான குழிகளிலே கடல் நீர் பாயவும்
அனல் தறுகண் அந்தகனும் அஞ்சி பிலம் புக	நெருப்புப்போன்ற பயங்கரமான தன்மையும் அஞ்சாமையுமுடைய யமனும் (தன்னைநோக்கி) அஞ்சிக் குகையிலே ஓடியொளிக்கவும்
நிலை கிரிகள் பின் தொடர	அசலங்களான மலைகளும் (தான் வருகிற வேகத்தால் இடம்விட்டுப் பெயர்ந்து) தன் பின்னே தொடர்ந்து வரவும்
வந்தாள்	அவ்விடத்தே வந்து சேர்ந்தாள்.

***—தாடகை தான் அங்கே வரும்போது தன் பாதத்தைத் தரையிலே ஊன்றிவைக்க, அதன் பாரத்தைத் தாங்கமாட்டாமல் நிலம் குழிபட, அந்தக் குழியில் கடல்நீர் புகுமாறும், யமனும் இவள் தனது கொடுந்தோற்றத்தைக் கண்டு நடுங்கிப் பிலத்திலொளித்துக் கொள்ளுமாறும், தான் வருகிற விசையால் அசலங்களான மலைகளும் இடம் விட்டுப் பெயர்ந்து தன்பின்னே தொடருமாறும் வந்தாளென்று அதிசயோக்தியாகக் கூறியதாமிது. இவளது நடைவேகக் காற்றினால் மலைகள் பிடுங்குண்டன வென்பதே அவை பின் தொடர்ந்து வந்தனவாகச் சொல்வதன் கருத்து. மேலே சுந்தரகாண்டத்துக் கடல்தாவு படலத்தில் "அண்ணல் சென்ற வேகத்தா லெழுந்த குன்று" என்பர். ... ... *

(தாடகையின் ஆரவாரங் கூறுதல்.)

79. கடங்கலுழ் தடங்களிறு கையொடுகை தெற்று, வடங்கொள நுடங்குமிடையாள் மறுகி வானோர்
இடங்களும் நெடுந்திசையு மேழுலகு மெங்கும், அடங்கலு நடுங்க வுருமஞ்ச நனி யார்த்தாள். **49**

கடம் கலுழ் தட களிறு	மதநீர் பெருகப்பெற்ற பெரிய யானைகளை
கையொடு கை தெற்று	துதிக்கையோடு துதிக்கையை முடிந்து
வடம் கொள	ஆரமாகக் கொண்டிருப்பதனால்
நுடங்கும் இடையாள்	துவண்ட இடையையுடையளான அத்தாடகை
வானோர் இடங்களும்	தேவ லோகங்களும்
நெடு திசையும்	நீண்ட திக்குக்களும்
ஏழ் உலகும்	ஸப்த லோகங்களும்
எங்கும் அடங்கலும்	மற்றுமெல்லா விடங்களுமான முழுவதும்
மறுகி நடுங்க	கலங்கி நடுங்கவும்
உரும் அஞ்ச	இடியோசையும் பயப்படவும்
நனி ஆர்த்தாள்	மிகவும் ஆரவாரம் செய்தாள்.

***—ஒரு யானைத் துதிக்கையோடு மற்றொரு யானைத் துதிக்கையைப் பின்னி ஆரமாக வணிந்து கொண்டு எல்லாவிடங்களும் நடுங்கும்படியாகவும் இடியோசையும் அஞ்சும்படியாகவும் கர்ஜனை செய்துகொண்டு வந்தாள் தாடகை. ... *

(இராமன் அவ்வரக்கியைப் பெண்ணென்று பார்த்துக் கொல்லாதிருத்தல்.)

80. அண்ணல் முனிவற்கது கருத்தெனினு மாவி,
உண்ணென வடிக்கணை தொடுக்கில°னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கி யுளளேனும்,
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்.

அண்ணல் முனிவற்கு	விச்வாமித்ர முனிச்ரேஷ்டருக்கு
அது கருத்து எனினும்	அத்தாடகையைக் கொன்றொழிப்பது ஸம்மதமாயினும்
பெருந் தகை	மஹாத்மாவான ஸ்ரீராமன்
ஆவி உண் என வடி கணை தொடுக்கிலன்	'(அம்பே! நீ) தாடகையினுயிரை முடிப்பாய்' என்று சொல்லிக் கூர்மையான பாணத்தைப் பிரயோகிக்கவில்லை;
	(ஏனெனில்)
உயிர்க்கே துண்ணெனும் வினை தொழில்	தங்களுயிர்களுக்கே அச்சந்தருகின்ற பாவச் செய்கைகளை
தொடங்கி உளள் எனும்	(அவள்) செய்யத் தொடங்கியிருக்கின்றவளாயினும்
பெண் என மனத்திடை நினைந்தான்	பெண்ணானவிவளை எப்படி கொல்லுவதென்று நெஞ்சிலெண்ணினன்.

* * *—பேராரவாரஞ் செய்துகொண்டு வந்த தாடகையை இராமன் கொல்ல வேணுமென்று முனிவன் கருதினனாயினும் அம்முனிவனது குறிப்பை யுணர்ந்தும் பெண்கொலைக்குக் கூசி வாளாவிருந்தன னிராமபிரான். ஆவியுண்ணுதல்—கொல்லுதல். ... ... *

(இத்தாடகையைப் பெண்ணென்று பார்க்கலாகாதென்று முனிவன் உணர்த்துதல்.)

81. தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக் கோதென் றுண்டிலள் இந்தனையே குறை
யாதென் றெண்ணுவ திக்கொடியாளையும், மாதென் றெண்ணுவதோ மணிப்பூணினாய். 55

மணி பூணினாய்	ரத்ந பூஷணங்களை யணிந்துள்ள இராமனே!
	(இத்தாடகையானவள்)
தீது என்று உள்ளவை யாவையும் செய்து	தப்புக்காரியமென்று சொல்லக்கூடியவை யெல்லாவற்றையுஞ் செய்து
எமை	தாபதர்களான எங்களை
கோது என்று உண்டிலள்	அசாரப்பொருள்களென்றெண்ணி உண்ணாமல் விட்டிட்டாள்;
இத்தனையே குறை	உண்ணாது விட்டிட்ட இவ்வளவுதான் குறை;
யாது என்று எண்ணுவது	இவளை என்னவென்று கருதுவது?
இ கொடியாளையும்	மிகக்கொடியவளான இவளையும்
மாது என்று எண்ணுவதோ	பெண்ணென்றெண்ணி விட்டிடுவது தகுதியோ?

* * *—முனிவர்களாகிய எங்களுக்கு எவ்வளவு தீங்குகள் இழைக்கலாமோ அவ்வளவு மிழைத்திருக்கின்றாளிவள்; எங்களையும் இவள் பக்ஷித்தே யிருப்பள்; எங்கள் உடல் தவத்தினால் வாடி ரக்த மாம்ஸங்களற்றிருப்பதனால் கோதானவிதனை பக்ஷிக்க ருசியில்லாதவளாய் இகழ்ந்து விட்டிட்டாளே யொழிய வேறு காரணத்தினாலன்று; இப்படிப்பட்ட கொடியாளைப் பெண்ணென்று நினைத்து விட்டிடலாமோ? பொசுக்க வேண்டியதே கருமங்காண் என்றார் முனிவர். ... *

(பெண்கொலை செய்யலா மென்பதற்கு மேற்கோளாகச் சில இதிஹாஸங்கள் காட்டுதல்.)

82. பிருகு வென்னும் பெருந்தவன் தன்மனை, வரு கயற்கட் கியாதி வல்லாசுரர்க்கு
உருகு காதலுறவுறவாதலே, கருதி யாவி கவர்ந்தனன் நேமியான்.

38. வானகந்தனில் மண்ணினில் மன்னுயிர், போனகந்தனக் கென்றெணும் புந்தியது
ஆனவள் குமதிப் பெயராள்தனை, ஊனொழித்தனன் வச்சிரத்தும்பர்கோன். 59, 60

பிருகு என்னும் பெருதவன் தன்	ப்ருகுவென்னும் மஹாமுனிவனுக்கு
மனை வரு	மனைவியாகப் பொருந்திய
கயல் கண் கியாதி	கயல்போன்ற கண்களையுடைய க்யாதியென்பவள்
வல் அசுரர்க்கு	வன்மைகொண்ட அசுரர்களுக்கு
உருகு காதல் உற	மனமுருகும்படியான அன்பு பொருந்த
உறவு ஆதலே கருதி	துணையான தனையெண்ணி
நேமியான்	ஆழியங்கையனான திருமால்
ஆவி கவர்ந்தனன்	அவளுயிரை வாங்கிக் கொன்றான்.
வானகம் தனில்	தேவ லோகத்திலும்
மண்ணினில்	பூலோகத்திலும்
மன் உயிர்	பொருந்தியுள்ள பிராணிகளையெல்லாம்
தனக்கு போனகம் என்று எணும்	தனக்கு உணவென்றெண்ணுகின்ற
புந்தியது ஆனவள்	எண்ணமுடையவளாகிய
குமதி பெயராள் தனை	துர்ப்புத்தியுடையவளென்று பிரசித்தையான வொருத்தியை
உம்பர் கோன்	தேவேந்திரன்
வச்சிரத்து	வஜ்ராயுதத்தினால்
ஊன் ஒழித்தனன்	கொன்றிட்டனன்.

* * *—இரண்டு செய்யுட்களில் இரண்டு இதிஹாஸங்கள் கூறப்பட்டன. முற்காலத்தில் தேவாசுரயுத்தம் நிகழ்ந்தகாலத்து, ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் அசுரரைத் துரத்த, அவர்கள் ஓடி ப்ருகுமஹர்ஷியின் ஆச்ரமத்திற் புகுந்து அம்முனிவனது மனைவியான க்யாதி யென்பவளைச் சரண்புக, அவள் அவர்கட்கு அபய மளித்துத் தன் ஆச்ரமத்தில் மறைத்துக் காத்துவர, அதனை யறிந்த திருமால் அசுரர்களைக் காட்டிக் கொடுக்கும்படி நிர்ப்பந்தித்தும் அவள் இசையாமையாலே முற்பட அவளைத் தலை துணித்துப் பிற்பட அசுரர்களை வதைத்தானென்பது முந்தின செய்யுளிற் குறித்த வரலாறு. இந்தக் கியாதியென்பவள் அசுர குருவான சுக்கிரனது தாய். இங்கே ஒரு சங்கை தோன்றும்; சரணாகத ரக்ஷணஞ் செய்வது மிகச் சிறந்த தருமமாக நூற்களிற் கூறப்பட்டிருக்க, அது செய்த கியாதியென்பவளை தர்மஸ்தாபனம் செய்பவனான விஷ்ணுபகவான் கொலை செய்வது பொருந்துமோ? என்று. இதற்கு நாம் சொல்லக்கூடியதிவ்வளவே; 'சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்' என்றருளிச்செய்த பெரியாழ்வார் உடனே 'ஆமாறறியும் பிரானே!' என்றார். கர்த்தவ்ய அகர்த்தவ்யங்களை நிர்ணயிப்பதில் அவன் திருவுள்ளமே பிரமாணமென்று கைகூப்புவதே நமது கடமையாகும்.

இனிப் பிந்தின செய்யுளிற் கூறப்பட்ட கதையாவது—உலகங்களையெல்லாம் பாழ்படுத்தக் கருதியவளான விரோசனனுடைய மகளாகிய மந்தரை யென்பவளைத் தேவேந்திரன் கொன்றொழித்தானென்பதாம். இது வான்மீகத்திலேயே கூறப்பட்டுள்ளது. இங்குச் செய்யுளில் மந்தரையென்று கூறாது 'குமதிப் பெயராள்' என்று கூறியது பெயர் சுட்டியன்றென்று கொள்ளத்தகும். ... *

(இராமன் தாடகைமீது அம்பு செலுத்துதல்.)

84. சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரங் கரியசெம்மல்
அல்லொக்கு நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக்குன்ற
கல்லொக்கு நெஞ்சில்தங்காது அப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயிற்றன்றே.

கரிய செம்மல்	கரியபிரானுகிய இராமன்
சொல் ஒக்கும் கடிய வேகம் சுடு சரம்	(முனிவனது) சாப வாக்கியத்தை யொத்ததாய் மிக்க விரைவையுடைத்தான ஒரு கொடிய பாணத்தை
அல் ஒக்கும் நிறத்தினுள் மேல்	இருளையொத்த கருநிறமுடைய அத்தாடகையின் மேல்
விடுதலும்	பிரயோகித்தவளவில், (அவ்வம்பானது)
வைரம் குன்ற கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது	வஜ்ரமயமான மலையிலுள்ள கல்லைப்போன்று உறுதியான அவளது மார்பில் தைத்துத் தங்கியிராமல்
அப்புறம் கழன்று	பின்னே யுருவி
கல்லா புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் என	படியாத அவிவேகிகளுக்கு மஹான்கள் உபதேசித்த அர்த்தம்போல
போயிற்று	போய்விட்டது.

* * *—இராமபிரானுல் எய்யப்பட்ட அம்பானது அவள் மார்பில் தங்காமல் ஊடுருவிச் சென்றதென்று விவக்ஷித்து அதற்கொரு சிறந்த உவமை கூறினர்; நல்லறிவாளிகள் கல்லாத மூடர்களுக்கு உபதேசிக்கும் சீரிய பொருள்கள் அவர்களது நெஞ்சில் தங்காமலே போவதை ஒப்பிட்டுரைத்தாராயிற்று. ராமபாணத்திற்கு மஹர்ஷிகளின் சாபச்சொல்லை உவமை கூறினர்; முனிவர்களின் சாபச்சொல் தன் பயனைத் தவருது அளித்தல்போல, ராமபாணமும் தன் காரியத்தைத் தவருது செய்ததென்கை. ... ... *

(தாடகை இறந்து விழுந்தமை கூறல்)

85. பொடியுடைக் கானமெங்குங் குருதிநீர் பொங்கவீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை, தலைகள்தோறும்
முடியுடை யரக்கற்குஅந்நாள் முந்தி யுற்பாதமாகப்
படியிடை யற்றுவீழ்ந்த வெற்றியம்பதாகை யொத்தாள். **73**

பொடி உடை கானம் எங்கும்	புழுதிகளையுடைய அக்காடு முழுவதும்,
குருதி நீர் பொங்க வீழ்ந்த	ரக்தப்ரவாஹம் மிகும்படி கீழே விழுந்த
தடி உடை எயிறு பேழ் வாய் தாடகை	(பல வுயிர்களின்) தசையையுடைய பற்களையும் திறந்த வாயையுங் கொண்ட தாடகை
தலைகள் தோறும் முடி உடை அரக்கற்கு	பத்துத்தலைகளிலும் கிரீடத்தையுடைய இராவணனுக்கு
முந்தி	(விநாசகாலத்திற்கு) முற்பட்டு
உற்பாதம் ஆக	துர்நிமித்தமென்னலாம்படி
அ நாள்	அந்தத் தினத்திலே
படி இடை அற்று வீழ்ந்த	பூமியிலே அறுந்து விழுந்த
அம் வெற்றி பதாகை ஒத்தாள்	அழகிய வெற்றிக்கொடியையொத்திருந்தாள்.

* * *—ராக்ஷஸ வேட்டையாடத் திருவவதரித்த இராமபிரானுல் முதன் முதலாகத் தாடகை யிறந்து விழுந்த தானது ராவணுதி ராக்ஷஸ ஸம்ஹாரம் தொடங்கப்பட்டுவிட்டதென்பதைத் தெரிவிக்குமென்றவாறு. ... ...

o

தாடகைவதைப்படலம் முற்றிற்று.

---

8. வேள்விப்படலம்

வேள்வியாவது யாகம்; விச்வாமித்ரமுனிவரால் ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களைத் துணைகொண்டு செய்யப்படும் யாகத்தின் வரலாற்றை யுணர்த்தும் பாகமிது.

இப்படலத்தின் கதைச் சுருக்கம் வருமாறு—

தாடகாவதத்தினல் தேவர்கள் பெருமகிழ்ச்சிகொண்டு மாமுனிவனிடம் வந்து 'உன்னிடத்திலுள்ள தெய்வப் படைக்கலங்க ளெல்லாவற்றையும் ஸ்ரீ ராமனுக்குத் தந்தருள்க' என்று சொல்லி இராமன் மீது மலர்மாரி பொழிந்து சென்றனர். அப்படியே விச்வாமித்ரமுனிவன் இராமனுக்குப் படைக்கலங்கள் தந்தருள, அவை மிகுந்த குதூஹலத்தோடு இராமபிரானை வந்தடைந்தன. பிறகு மூவரும் ஒரு காத வழி நடந்து சென்ற பிறகு பேரரவமொன்று செவிப்பட, இவ்வொலி யாதென்று இராமன் கேட்க, 'ஸரயூநதியில் கோமதிநதி வந்துசேரும் பேரொலியிது' என்று முனிவன் கூற, அங்குநின்றும் நடந்துசென்று மற்றொரு நதியை யடைந்தார்கள். அதுதான் கௌசிகி நதியென்பது. அதன் வரலாற்றை முனிவன் சொல்லலுற்றான்.

ஆதியில் பிரமபுத்திரனை குசனென்னும் முனிவனுக்கு—குசாம்பன் குசநாபன் ஆதூர்த்தன் வஸு என்று நான்கு புதல்வர்கள் தோன்றியிருந்தனர். இவர்களுள் குசாம்பன் கௌசாம்பியென்னும் நகரத்திலும், குசநாபன் மகோதயமென்னும் நகரத்திலும், வஸு கிரிவ்ரஜமென்னும் நகரத்திலும் அரசு புரிந்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களுள் குசநாபனுக்கு அழகிற்சிறந்த நூறுமகளிர் தோன்றியிருந்து, அவர்கள் பருவம் வாய்த்துத் தோழிமாருடன் பூஞ்சோலையிற் சென்றிருக்க, வாயுதேவன் அவர்களின் அழகு கண்டு காமுற்றுத் தன்னை மணக்குமாறு அவர்களை வேண்ட, அம்மகளிர் நாங்கள் தந்தையின் அனுமதியின்றி உடன்படமாட்டோமென்று மறுக்க, வாயுதேவன் கோபித்து அவர்களது உடலிற்புகுந்து முதுகை முறித்துக் கூனிகளாக்கினன். பிறகு அவர்கள் நடக்கமாட்டாமல் நகர்ந்துகொண்டேபோய்த் தந்தையிடம் செய்தி தெரிவிக்க, அவன் இம்மகளிரைத் தேற்றி நாளடைவில், சூளியென்னும் முனிவனது குமாரனை பிரமதத்தனுக்கு இவர்களை விவாஹஞ் செய்து கொடுத்தனன். அப்பிரமதத்தன் அவர்களைக் கையினல் பரிசித்தபோதே இவர்கள் கூன் நீங்கி முன்போல் கட்டழகிகளாய் விளங்க, அதுகண்டு மகிழ்ந்த குசநாபன் அவர்களையெல்லாம் காம்பிலியா நகரத்திற்கனுப்பி விட்டு, தனக்குப் புத்திரனில்லாக் குறைதீரத் தான் புத்திரகாமேஷ்டி செய்தனன். அப்போது ஓமத்தீயினின்றும் காதி யென்னும் மகன் தோன்றினன். அந்த மகனுக்குக் குசநாபன் முடிசூட்டிச் சுவர்க்கம் புக, அந்தக் காதிக்குக் கௌசிகி யென்பவளும் யானும் தோன்றினேம். தந்தை கௌசிகியை ப்ருகுவின் புதல்வனை ரிசீகனுக்கு மணஞ்செய்விக்க, அவன் சிலநாள் இல்லறவாழ்க்கை வாழ்ந்து பிரமலோகஞ் சேர்ந்தனன். பிறகு கௌசிகியானவள் காதலன் பிரிவைத் பொறுக்ககில்லாது நதியின் வடிவமாய் அவனை விடாமல் பின்தொடர்ந்து செல்ல, அதுகண்ட ரிசீகன் 'நீ பூலோகத்திலேயே பெருகி மனிதர்களின் பாவங்களைப் தொலைத்திடுவாய்' என்று நியமித்துத் திருப்பியனுப்பிவிட்டுத் தான் பிரம லோகம் சென்று புக்கான்—என்று கௌசிகீ நதியின் வரலாற்றைக் கூறி முடித்தனன்.

பிறகு சிறிது தூரம் கடந்தபின் தாசரதிகள் ஒரு சோலையைக்கண்டு இது யாருடையதென்று கேட்க, முனிவன் மஹாபலியின் சரிதையையும் வாமநாவதாரச் செய்தியையும் கூறலுறுகின்றான்;—முன்னொருகால் திருமால் நெடுங்காலம் தவஞ்செய்த தலமிது. அக்காலத்தில், மூவுலகங்களையும் வென்று புகழ்பெற்ற மாவலி தன் வலிமையால் விண்ணையும் மண்ணையும் தன் வசமாக்கிக் கொண்டிருந்து,

ஒரு பெரிய யாகம் செய்யத்தொடங்கி வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்கச் சங்கற்பித்தனன். தேவர்கள் அதனையறிந்து இச்சோலைக்கு வந்து இங்குத் தவம் புரிகின்ற திருமாலை வணங்கித் துதித்துத் தங்கள் குறைகளைச் சொல்லி மாவலி வேள்வி முடிவதற்கு முன் தங்களுக்கு நன்மை செய்யுமாறு வேண்டிக் கொண்டனர். அதற்கிசைந்த திருமால் உடனே காச்யபமுனிவனுக்கும் அதிதிதேவிக்கும் குமாரனாக அவதரித்துச் சிறுகுறளுருவாகி ப்ரஹ்மசர்யாச்ரம லக்ஷணங்கள் பொலிய அற்புதமான வடிவுடன் மாவலிபால் ஏகினன். அவனை மாவலி எதிர் கொண்டு உபசரித்து வடிவழகில் மிகவுமீடுபட்டு உனக்கு வேண்டுவதென்? என்று கேட்க, என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மண்வேண்டுமென்று வாமன மூர்த்தி கூற, அங்ஙனமே தந்தேனென்று மாவலிசொல்ல, அங்குப் புரோஹிதராயிருந்த சுக்கிராசாரியர் ஞானக்கண்ணினால் கடவுளின் மாயையையறிந்து 'திருமாலே தனது மாயத்தினால் தன்னுருவை மறைத்து உன்னை வஞ்சிக்க இங்ஙனம் வாமனனாக வந்திருக்கின்றனன்; இவனுக்கு ஒன்றுங் கொடாதே; கொடுத்தால் உனக்கே கெடுதல் விளையும்' என்று கூறித்தடுக்க, அதற்கு மாவலி "திருமாலே தனது பெருமைகளை யிழந்து தாழ்வுற்று யாசகனாய் என்பால்வந்து ஒரு பொருளை வேண்டுவானானால் அவனுக்கு அதனைக் கொடுத்துப் பெருமை பெறுதலைவிட வேறொரு சிறப்பு எனக்குண்டோ? தானஞ்செய்தற்கு உத்தம பாத்திரம் இவனேயன்றோ; யார் எது கேட்டாலும் கொடுக்கக் கடவேனென்று விரதங்கொண்டிருக்கிற நான் இவனுக்குக் கொடாதிருக்க முடியுமோ? ஈவது விலக்குதல் கொடிய பாவமன்றோ" என்று சொல்லிவிட்டு, வாமனன் வேண்டியபடியே மூவடி நிலம் பெற்றுக்கொள்ளுமாறு தாரைவார்த்துத் தந்துவிட்டான். உடனே வாமனன் பேருருவங்கொண்டு [திரிவிக்கிரமனாகி] அம்மூவடி நிலத்தைத் தன் மூவடியாலளக்கப் புகுந்து ஓரடியால் மண்ணுலகையும் மற்றோரடியால் விண்ணுலகையு மளந்து 'மாவலீ! மூன்றடி தந்தோமென்றாய்; மற்றோரடிக்கு இடங்காட்டாய்' என்ன; அதற்கு அடியேனது தலையேயுள்ளதென்று மாவலி கூற, திருமால் அவன்முடிமீது திருவடியை வைத்து அழுத்தி அவனைப் பாதாளத்திற் செலுத்தினன். இங்ஙனம் மாவலியைச் செருக்கடக்கி மூவுலகையும் இந்திரனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் வியூஹமூர்த்தியில் தான் சேர்ந்தனன். இப்படி ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் காச்யபனும் தவம்புரிந்து சித்திபெற்ற இடமாதலால் யானும் இவ்விடத்தையே ஆச்ரமமாகக் கொண்டிருக்கின்றேன்—என்று கூறி முடித்தனன்.

இப்படி கதை சொல்லிக் கொண்டே சென்று ஆச்ரம மெய்தி யாகத்திற்கு வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டு, ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களைக் காவல் காக்க நியமித்துத் தான் யாகஞ் செய்யத்தொடங்கினன். அப்போது அவ்வாசகுமாரர்கள் கண்ணுங்கருத்துமாய் அந்த ஷட்ராத்ரயாகத்தைக் காப்பதில் தீக்ஷை கொண்டனர். அரக்கரோடு பொருவதில் மிக உத்ஸாஹமுடைய இராமபிரான் ராக்ஷஸர்கள் எப்போது வருவார்களென்று பார்த்துக் கொண்டிருக்கையில், அரக்கர்கள் ஆகாசத்தில் தோன்றிப் பேராரவாரஞ் செய்தார்கள்; கணைமாரி பொழிந்தார்கள்; நீரும் நெருப்பும் ரத்தமுமாகச் சொரிந்தார்கள்; பெரிய மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்தார்கள்; வாய்வந்தபடி வைதார்கள்; பலபல கொடிய மாயைகளைச் செய்தார்கள். அப்போது அவை யாகபூமியில் சிறிதும் விழாதபடி இராமன் தனது அம்புகளைக்கொண்டே சரகூடம் கட்டினன். ஆயினும் அங்குள்ள முனிவர்கள் அரக்கர்களின் கொடுந்தொழில்களுக்கு அஞ்சி நடுங்கி இராகவனைச் சரணமடைந்து அபயம் வேண்டி நிற்க, பெருமான் அவர்கட்கு அபயமளித்து, வில்வளைத்து நாணியைக் காதளவு மிழுத்து அம்பெய்து மாரீசனைக் கடலில் தள்ளிச் சுபாகுவைக் கொன்று எஞ்சிய அரக்கர்களையும் தொலைத்திட, வானவர் மலர் மழைபொழிந்து துந்துபி முழங்கி வணங்கி வாழ்த்தினர். வேள்வியை இனிது முடித்த முனிவன்

இராமனை நோக்கி ‘உலகங்களின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை அவலீலையாக நடத்து மாற்றல் பெற்ற நீ இந்தச் சிறு யாகத்தைக் காத்தது அரும்பெருந் தொழிலாக நினைக்கத் தகுமோ? எனது முற் பிறவிகளின் நல்வினைப் பயனாகவே நீ இங்ஙனம் வந்து அருள் புரிந்தாயென்றே நினைக்கத் தக்கது’ என மொழிந்தனன். இனி எமக்குக் கைங்கரியம் யாதோவென்று இராமன் வினவ, முனிவன் ‘மிதிலாபுரியில் ஜனக சக்ரவர்த்தி நடத்தும் யாகத்தையும் நாம் போய்ப் பார்ப்போம், புறப்படுக’ என்று சொல்ல, மூவருமாய் மிதிலாபுரிக்குப் புறப்படலானார்கள்—என்பதாம்.

(விச்வாமித்திர முனிவன் இராமனுக்குப் படைக்கலமும் தருதல்.)

86. விண்ணவர் போயபின்றை விரிந்தபூ மழையினாலே
தண்ணெனுங் கானநீங்கித் தாங்கருந் தவத்தின்மிக்கோன்
மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன்வெண்ணெ
யண்ணல்தன் சொல்லேயன்ன படைக்கல மருளினானே. 1

விண்ணவர் போய பின்றை — (தாடகாவதத்தினால் மகிழ்ச்சி காட்டிய) தேவர்கள் மீண்டு போன பிறகு
தாங்க அரு தவத்தில் மிக்கோன் — பிறரால் மேற்கொள்ள முடியாத பெருந்தவத்திலே உயர்ந்தவனான விச்வாமித்ர முனிவன்
விரிந்த பூ மழையினாலே தண் எனும் கானம் நீங்கி — தேவர்கள் சொரிந்த புஷ்ப வ்ருஷ்டியினாலே குளிர்ச்சி பெற்ற அப் பாலைவனத்தைக் கடந்து
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து அன — மனிதர்களது ஏழைமை நோயைத் தீர்க்கும் மருந்து போன்றனவும்,
வெண்ணெய் அண்ணல் சடையன் தன் சொல்லே அன்ன — வெண்ணெய்நல்லூரிலுள்ள சடையப்ப முதலியின் வார்த்தையையே யொத்தனவுமான
படைக்கலம் — ஆயுதவிசேஷங்களை
அருளினான் — இராமனுக்குக் கொடுத்தருளினன்.

***—விச்வாமித்திர முனிவன் தாசரதிகளுக்குச் சில அஸ்த்ர விசேஷங்களை உபதேசித்தருளினன். அவை எப்படிப்பட்டவை யென்னில், இரண்டு அடைமொழிகளினால் அவற்றின் பெருமை சொல்லப்படுகிறது. மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து போல்வன வென்றது—இனி அடைவே அரக்கர்களை யழித்து உலகத்தாரது துன்பங்களை யொழிக்கப் போவதுபற்றி. கவிசக்கரவர்த்தி தன்னை யாதரித்த பெரியாரான திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரிடத்து வைத்துள்ள அன்பின் மிகுதியினால் அவரது சொற்கள்போல இவ்வஸ்திரங்களும் அமோகம் என்றதாகக் கொள்க. அப்பெரியாரைக் கம்பர் இவ்விராமாயணத்தில் இடையிடையே புகழ்ந்து பேசிவருவதுண்டு.

திருமங்கை யாழ்வாரது பெரிய திருமொழியில் (1-4-8) * தவம்புரிந்துயர்ந்த மாமுனி கொணர்ந்த கங்கை * என்றவிடத்து ‘தவம்புரிந்துயர்ந்த மாமுனி’ என்னுஞ் சொல்லால் பகீரத மன்னவனைப் போல விச்வாமித்ர முனிவனையும் விவக்ஷிப்பதுண்டாதலால் அச் சொல்லை யடியொற்றி “தாங்கருந் தவத்தின் மிக்கோன்” என்று இங்குக் கூறினரென்னலாம். ... . (*)

(படைக்கலங்கள் இராமனை யடைந்தமை கூறல்.)

87. ஆறியவறிஞன் கூறி யவித்தலு மண்ணல் தன்பால்
ஊறிய வுவகையோடு மும்பர்தம் படைகளெல்லாம்
தேறிய மனத்தரன்செய்த நல்வினைப் பயன்களெல்லாம்
மாறிய பிறப்பில் தேடி வருவபோல் வந்தவன்றே. 2

ஆறிய அறிஞன்	சாந்தியும் சிறந்த ஞானமுமுடையவனான விச்வாமித்திர முனிவன்
கூறி அளித்தலும்	அஸ்த்ரங்களின் மந்த்ரங்களைச் சொல்லிக்கொடுத்த வளவில்
உம்பர் தம் படைகள் எல்லாம்	தெய்விக அஸ்த்ரங்கள் யாவும்
தேறிய மனத்தான் செய்த நல் வினை பயன்கள் எல்லாம்	தெளிந்த மனத்தையுடைய வொருவன் (ஒரு ஜன்மத்தில்) செய்த ஸத்கருமங்களின் பலன்கள் யாவும்
மாறிய பிறப்பில் தேடி வருவ போல்	ஜன்மாந்தரத்திலே அவனைத் தேடிக்கொண்டு அவனிடமே வந்து சேர்வதுபோல
அண்ணல் தன் பால்	ஸ்வாமியான ஸ்ரீராகவனிடத்தில்
ஊறிய உவகையோடும் வந்த	மிகுந்த மகிழ்ச்சியுடனே வந்து சேர்ந்தன.

* * *—முனிவன் தந்த தெய்வப் படைக்கலங்களெல்லாம் மிகுந்த குதூஹலத்தோடு ஸ்ரீராமபிரானிடம் வந்து சேர்ந்தனவாம்; இவை துறவியான முனிவனிடத்துச் செய்தொழிலொன்றுமின்றி வாளாவிருந்ததனால் அப்போது குறையுற்றிருந்தனபோலும்; அரக்கர்களை யழித்தற்கென்றே திருவவதரித்து முதலில் தாடகையை வதைத்து அத்தொழிலைத் தொடங்கிய இராமனிடம் தமக்குள்ள தினவை யொழித்துத் திருப்தியடையலாமென்ற கருத்தினாலும் தகுந்த பாத்திரமாதலாலும் இங்கேவந்து சேர்ந்ததனால் குதூகலம் மிக்கதென்பது பொருத்தம். அவை எதிர்பாராது வந்து சேர்ந்தமைக்கு உவமை கூறுவன பின்னடிகள். மஹாவிவேகியானவன் ஒரு பிறப்பில் நல்வினைகளைச் செய்திருந்தால் அவற்றின் பயன் மறுபிறப்பில் தானே வந்து சேர்வதுபோலவென்க. ... ... (*)

(அஸ்த்ரங்கள் யாவும் இராமனுக்கு அடிமையாதலைக் கூறுவது.)

88. மேவினம் பிரிதலாற்றேம் வீரநீ விதியினெம்மை
ஏவின செய்துநிற்றும் இளையவன் போலவென்று
தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென் றவனும்நேரப்
பூவைபோல் நிறத்தினற்குப் புறத்தொழில் புரிந்தவன்றே. 3

தேவர்தம் படைகள்	முனிவன் தந்த தெய்விகப் படைகளானவை (ஸ்ரீராமபிரானை நோக்கி)
வீர	'மஹாவீரனே!
மேவினம்	நாங்கள் உன்னை வந்தடைந்தோம்
பிரிதல் ஆற்றேம்	(இனி உன்னை விட்டுப்) பிரியமாட்டோம்
நீ விதியின் எம்மை ஏவின	நீ முறைமையாக எங்களை நோக்கி ஏவுந்தொழில்களை
இளையவன் போல செய்து நிற்றும்	இளையபெருமாளைப்போலவே தவறாது செய்து நிற்போம்'
என்று செப்ப	என்று சொல்ல;
அவனும் செவ்விது என்று நேர	இராமனும் நல்லதென்று உடன்பட்டிருக்க, (அது முதலாக அப்படைகள்)
பூவை போல் நிறத்தினற்கு	காயாம்பூ வண்ணங்கொண்ட இராமனுக்கு
புறம் தொழில் புரிந்த	வெளியில் செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தன.

* * *—முனிவனிடமிருந்து வந்து சேர்ந்த அஸ்த்ர தேவதைகள் யாவும் இராமனை வணங்கித் தம்மையடிமை கொள்ளும்படி வேண்ட, இராமனும் அதற்கு இசைந்திருக்க, 'இளைய பெருமாள் அந்தரங்க கைங்கரியம் செய்கையாலே நாம் பஹிரங்க கைங்கரியம் செய்வோம்' என்று கொண்டு புறச்சேவகங்கள் புரிந்தனவென்க. இங்கு வான்மீகத்திற் கூறியுள்ளதாவது—முனிவன் அஸ்த்ரமந்திரங்

களனைத்தையும் இராமனுக்கு உபதேசித்து அஸ்த்ரதேவதைகளை இராமனுக்கு வசப்படுத்தக்கருதி ஜபஞ்செய்ய, அத்தேவதைகள் யாவும் தேஜோமயமான சரீரத்துடன் முனிவனருகே வந்து தக்க ஆச்ரயம் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்து இராமனை நோக்கி 'நாங்கள் உனக்குப் பணி செய்பவர்' என்று சொல்ல, இராமனும் அங்கீகரித்து 'நான் நினைக்கும்போது வந்து உதவுக' என்று பணித்துவிட்டுப் புறப்படுகையில், மீண்டும் முனிவனை நோக்கி இராமன் 'அஸ்த்ரங்களைப் பிரயோகிக்கும் முறையை உபதேசித்ததுபோல உபஸம்ஹாரிக்கும் முறையையும் உபதேசிக்கவேணும்' என்று வேண்ட, உபஸம்ஹாரமந்த்ரங்களையும் முனிவன் உபதேசித்து அந்தத் தேவதைகளையும் ஸ்ரீராமனுக்கு வசப்படுத்தினனென்று. (*)

(வாமனமூர்த்தி தவமியற்றத் தங்கியிருந்த சோலையின் சிறப்பு கூறல்.)

89. தங்களுயகரில் தெய்வந் தவம் பிறிதிலவென்றெண்ணும்
மங்கைமார் சிந்தைபோலத் தூயது மற்றுங்கேளாய்
எங்களுன்மறைக்கும் தேவரறிவிற்கும் பிறர்க்குமெட்டாச்
செங்கண்மாலிருந்து மேனுட் செய்தவஞ் செய்ததன்றே. **16**

	(இச்சோலையானது)	தேவர் அறிவிற்கும்	தேவர்களின் புத்திக்கும்
தங்கள் நாயகரின் தெய்வம் தவம் பிறிது இல என்று எண்ணும்	தங்களுக்குக் கணவரைப் பார்க்கிலும் தெய்வமும் தவமும் வேறெதுவுமில்லை யென்று நினைக்கிற	பிறர்க்கும்	மற்றும்முனிவர் முதலியோர்க்கும்
		எட்டா	கோசரமல்லாத [ஸ்வரூபமறியவொண்ணாத]
மங்கைமார் சிந்தை போல	பதிவிரதைகளான பெண்களின் மனம்போல	எங்கள் செம் கண் மால்	எமது புண்டரீகாக்ஷப் பெருமான்
தூயது	பரிசுத்தியையுடையது ;	மேல் நாள்	முன்பொருகாலத்தில்
மற்றும் கேளாய்	இன்னமும் இதன் தன்மையைக் கேட்பாயாக ;	இருந்து செய் தவம் செய்தது	வாஸஞ்செய்து தவம் செய்யப் பெற்ற தலமாமிது.
நால் மறைக்கும்	நான்கு வேதங்களுக்கும்		

***—இச்சோலையில்தான் முன்பு திருமால் தங்கியிருந்து தவஞ்செய்ததென்று இடத்தின் பெருமை கூறினபடி. இதுவே ஸித்தாச்ரமமென்று வழங்குவது. இத்தலத்தின் தூய்மைக்குப் பதிவிரதைகளின் மனத்தூய்மையை உவமை காட்டினர். "ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா" என்றதொக்குமிது. மங்கைமாரின் மனத்தூய்மையைக் "கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானை யல்லாலறியாக் குலமகள் போல்" என்ற பெருமாள் திருமொழிப் பாசுரத்தினுலுமறிக. இத்தலத்துத் தவம்புரிந்த திருமாலின் தன்மையை "எங்கள் நான் மறைக்கு மெட்டா" என்கிறுன் முனிவன் ; "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற உபநிஷத்தையும், "நான்மறைகள் தேடி யென்றுங் காணமாட்டாச் செல்வன்" என்ற திருமங்கையாழ்வாரருளிச் செயலையும் அடியொற்றிச் சொன்னபடியென்று கொள்க. ... ... (*)

(திருமால் வாமனனமை கூறுதல்.)

90. கால நுணித்துணர் காசிபனென்னும், வாலறிவற் கதிதிக் கொருமகவாய்
நீலநிறத்து நெடுந்தகைவந்து, ஓராலமர்வித்தி னருங்குறளானுன். **21**

நீலம் நிறத்து நெடு தகை	கரிய திருமேனிநிறத்தை யுடைய பகவான்,	அதிதிக்கு	அவரது தருமபத்தினியான அதிதிக்கும்
காலம் நுணித்து உணர்	முக்காலத்து விஷயங்களையும்நுட்பமாக ஆராய்ந்தறி கின்ற	ஒரு மகவு ஆய் வந்து	ஒரு குமாரனாய்த் தோன்றி
காசிபன் என்னும்	காச்யபனென்கிற	ஓர் ஆல் அமர் வித்தின்	பெரிய ஆலமரம் முழுவதும் உள்ளேயடங்கியிருக்கப் பெற்ற (சிறிய) அதன் விதையொன்றுபோல
வால் அறிவற்கு	தத்வஞானியான முனிவனுக்கும் *	அரு குறள் ஆனான்	அருமையான வாமனமூர்த்தி யாயினன்.

* * *—கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் * இந்த்ராநுஜத்வம் அதிதேஸ் தநயத்வயோகாத்* என்பதனைலருளிச்செய்த உபேந்த்ராவதாரம் சொல்லிற்றிங்கு. காசியப முனிவன் தனது மனைவியான அதிதியோடு கூடி அனேக வருஷகாலம் திருமாலைக்குறித்து விரதமொன்று நடத்தி முடித்தனன்; முடிவில் திருமால் தனக்கு வரந்தருவதாகக் கட்கூடாக வந்து நின்றனன்; அவனைத் துதித்து 'அசுரர்களை யடக்கும் பொருட்டு அதிதி தேவியினிடம் எனக்குப் புதல்வனாய்ப் பிறந்து உபேந்திரனாகி அமரர்களினிடரைப் போக்கவேணும்' என்று வரம் வேண்டினன். திருமாலும் அவனது வேண்டுகோளுக்கிரங்கி அங்ஙனமே பிறந்து வாமனனாயினன்—என்னும் வரலாறுணர்க. ... ... *

(வாமனமூர்த்தியின் தோற்றமுரைத்தல்.)

91. முப்புரிநூலினன் முஞ்சியன் விஞ்சை, கற்பதொர் நாவன் அனல்படு கையன்
அற்புத னற்புதரேயறியுந்தன், சிற்பத மொப்பதொர் மெய்க்கொடு சென்றான். . 22

அற்புதன்	ஆச்சரியமான வடிவையுடைய திருமால்	அனல் படு கையன்	அக்னி பொருந்திய திருக்கைத்தலத்தையுடையபிராமண ச்ரேஷ்டனுமாய்
முப்புரி நூலினன்	மூன்றுவடமாகிய பூணுநூலையுடையவனும்	அற்புதரே அறியும்	வியக்கத்தக்க ஞானவான்கள் மட்டுமே அறியத்தக்க
முஞ்சியன்	மௌஞ்சியையணிந்தவனும்	தன் சித் பதம் ஒப்பது	தனது ஞானஸ்வரூபத்தையொத்திருக்கின்ற
விஞ்சை கற்பது ஓர் நாவன்	பிரமவித்தையயாகிய வேதத்தை யோதுகின்ற நாவையுடையவனும்	ஓர் மெய் கொடு	ஒரு சிறியவடிவை யேற்றுக்கொண்டு
		சென்றான்	(மாவலியிடத்துச்) சென்றான்.

* * *—பகவான் மஹாபலியிடத்துச் சென்றபோது கொண்ட கோலத்தை வடமொழியாளர்கள் பலவாறு கூறியிருக்கின்றார்கள்; ஒரு சுலோகம்—
"कौपीनं कटिसूत्रसीम्नि घटयन् मौञ्जीमभिव्यञ्जयन् कृत्तिं कृष्णमृगस्य वक्षसि वहन्नाषाढमंसेऽर्पयन् ।
स्वाध्यायस्वरसंपदा परिषदां प्रीतिं समुत्पादयन् याच्ञायै बलियज्ञवाटनिकटं प्राप्तो वटुः पातु नः—
கௌபீநம் கடிஸூத்ரஸீம்நி கடயந் மௌஞ்ஜீமபிவ்யஞ்ஜயந் க்ருத்திம் க்ருஷ்ண ம்ருகஸ்ய வக்ஷஸி வஹந் ஆஷாடமம்ஸேர்ப்பயந், ஸ்வாத்யாய ஸ்வரஸம்பதா பரிஷதாம் ப்ரீதிம் ஸமுத்பாதயந் யாச்ஞாயை பலிமஜ்ஞவாட நிகடம் ப்ராப்தோவடுః பாது ந:" என்பது. இதனையே பெரும்பாலும் தழுவி இச்சிறு செய்யுள் அமைக்கப்பட்டது. முப்புரிநூலென்று அந்தணர்களணியும் யஜ்ஞோபவீதத்தைச் சொல்லுகிறது. வடமும் மூன்றாய், வடத்திற்புரியும் புரியில் நூலிழையும் மூன்றாயிருத்தல் பற்றி முப்புரிநூலென்கிறது. முஞ்சியன்—குசம் காசம் போன்ற ஒரு வகைப்

புல்லால் ஆக்கப்பட்ட அரை நாணையுடையவனென்க. இது பிரமசாரிகட்கு உரிய கோலங்களி லொன்று. விஞ்சை கற்பதோர் நாவன்—விஞ்சை—வித்யா; ப்ரஹ்மவித்யா என்றபடி. "வெந்திறல் வாணன் வேள்வியிட மெய்தி அங்கோர் குறளாகி மெய்ம்மையுணரச் செங்தொழில் வேதநாவின் முனியாகி" (பெரிய திருமொழி 11—4—5) என்றார் திருமங்கையாழ்வாரும். அனற்படு கையன்—அந்தணர்களின் வலக்கையில் அக்னியுள்ளதாக வேதம் கூறும்; * ब्राह्मणस्य दक्षिणे हस्ते होतव्यम् * என்று அச் சித்ரச்ருதி ஓதினது காண்க. அநவரதமும் ஸமிதாதாநம் முதலிய தீத்தொழில் பயிலுங் கையையுடையவனென்னவுமாம். அற்புதன்—இவ்வாற்றால் ஆச்சரியப் படத்தக்கவன். அற்புதரே யறியும் தன் சிற்பத மொப்பதோர் மெய்க்கொடு சென்றான்—அவனுடைய வடிவுக்கு அவனுடைய ஸ்வரூபத்தையே உவமை கூறினாராயிற்று. அத்புதஜ் ஞானவான்களுக்கே அறியத்தக்கதாய் மற்றெவர்க்கும் அறிதற்கரிதானது அவன்றன்னுடைய ஞானசொரூபம்; அதை யொத்திருந்தது திருவடிவம். வேதாந்த தேசிகன் வரதராஜ பஞ்சாசத்தில் * येनाधिरोहति मतिस्त्वदुपासकानां सा किं त्वमेव तव वेति वितर्कडोलाम्—யேநாதிரோஹதி மதிஸ் த்வதுபாஸகாநாம் ஸா, கிம் த்வமேவ தவ வேதி விதர்க்க டோலாம் * என்றருளிச் செய்தது இங்கே நினைக்கத்தகும். அவ்விடத்து நமது உரையை நோக்குக. * ... *

(வாமனமூர்த்தியை மாவலி எதிர்கொண்டு பெருமைப் படுத்தல்.)

92. அன்றவன் வந்ததறிந் துலகெல்லாம், வென்றவன் முந்தி வியந்தெதிர்கொண்டான்
நின்றனின் அந்தணரில்லை நிறைந்தோய், என்றனினுய்ந்தவர் யாருள ரென்றான். **23**

அவன்	அந்த வாமன மூர்த்தி
அன்று வந்தது	அந்நாள் (தன்னிடம்) எழுந்தருளியதை
உலகு எல்லாம் வென்றவன் அறிந்து	எல்லாவுலகங்களையும் வெற்றிகொண்டவனான மஹாபலி சக்ரவர்த்தி யுணர்ந்து
வியர்ந்து	அத்திருவுருவத்தை நோக்கி ஆச்சரியப்பட்டு
முந்தி	முற்பட்டுச் சென்று
எதிர் கொண்டான்	எதிர்கொண்டழைத்து வந்து

	(அவனை நோக்கி)
நிறைந்தோய்	'ஸகல ஸத்குண பரிபூர்ணனே!
நின் தனின் அந்தணர் இல்லை	உன்னைவிட உயர்ந்த அந்தணர் (உலகத்திலேயே) இல்லை;
	(ஆதலால்)
என் தனின்	(இப்படிப்பட்டவுன்னை எளிதிற் காணப்பெற்ற) என்னைப்போல
உய்ந்தவர்	உஜ்ஜீவிக்கப் பெற்றவர்
யார் உளர் என்றான்	வேறு யாவருளரென்று இன்சொல் சொன்னான்.

* * *—மஹாபலி உலகங்களை யெல்லாம் வென்றவனாதலால் அவன் ஒருவரையும் லக்ஷியம் செய்பவனல்லன்; ஆயினும் வாமன மூர்த்தியின் பிரம தேஜஸ்ஸை நோக்கி வியந்தவனாகி இங்ஙனம் மரியாதை மிக்க வார்த்தைகளை மொழிந்தனன். ... ... *

(வாமனமூர்த்தி மஹாபலியைப் புகழ்தல்.)

93. ஆண்டகை யவ்வகை கூற வறிந்தோன், வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்ட கையாயினி நின்னுழை வந்தோர், மாண்டவரல்லர் மாண்பில ரென்றான். **24**

ஆண் தகை	மஹா பௌருஷ சாலியான அந்த மாவலி	இனி	இப்படிப்பட்ட வள்ளலான நீ உளனான பின்பு,
அவ் வகை கூற	அவ்வாறு சொல்ல	நின்னுழை வந்தோர்	உன்னிடத்து இரக்கவந்தவர்கள் தாமே
அறிந்தோன்	ஸர்வஜ்ஞனான வாமனன் (அந்த மாவலியை நோக்கி)	மாண்டவர்	மாட்சிமைப் பட்டவர்கள் ;
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி	யாசித்தவர்களது அபேக்ஷையினும் அதிகமாகப் பொருள்களை வழங்கி	அல்லவர்	உன்னிடம் யாசிக்க வராதவர்களோவென்றால்
நீண்ட கையாய்	உலகம் பரவிய ஔதார்ய குணத்தையுடையவனே !	மாண்பு இலர்	சிறப்பில்லாதவராவர்
		என்றான்	என்று மொழிந்தான்.

* * *—பகவானை * அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதனென்று சொல்லுவது; மாவலியையோ வென்னில் * அர்த்திதாப்யதிகதாநதீக்ஷிதனென்பது. இவ்வேற்றத்தை யெடுத்துரைத்த வாமனமூர்த்தி 'மாவலீ! உன்னிடம் யாசிக்க வருபவர்களே மிகச் சிறந்தவராவர்; மற்றையோர் மாண்பிலர்.' என்று கூறினன். ... *

(வாமனன் மூவடிமண் வேண்டிப்பெற, சுக்கிரன் தடுத்தல்.)

94. சிந்தையுவந் தெதிரென்செய வென்றான், அந்தணன் மூவடி மண்ணருளுண்டேல்
வெந்திறலாயிது வேண்டுமெனுமுன், தந்தனெனென்றனன் வெள்ளி தடுத்தான். 25

	(அது கேட்டு மாவலி)	மூ அடி மண் இது வேண்டும்	(என்னுடைய பாதத்தால் யானளப்ப) மூவடி மண்ணாகிய இவ்வளவே தர வேண்டும்'
சிந்தை உவந்து	மகிழ்ச்சி கொண்டு	எனு முன்	என்று சொல்லி முடிப்பதற்கு முன்னே
எதிர்	அந்த வாமனமூர்த்தியின் வார்த்தைக்கு விடையாக	தந்தனென் என்றனன்	அங்ஙனமே கொடுத்தேனென்று மாவலி சொன்னான் ;
என் செய என்றான்	நான் என்னசெய்யவேண்டுமென்று கேட்டான் ;	வெள்ளி தடுத்தான்	(அருகேயிருந்த அசுரகுருவாகிய) சுக்கிரன் அதைத் தடைசெய்து கூறினன். [அது மேற் செய்யுளில் விளங்கும்.]
அந்தணன்	(அதற்கு) வாமனமூர்த்தி (அவனை நோக்கி)		
வெம் திறலாய்	'மஹா பராக்ரமசாலியானவனே !		
அருள் உண்டு ஏல்	(என்மீது உனக்கு) அருள் உண்டாகில்		

* * *—திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் "தன்னுருவமாருமறியாமல் தானங்கோர், மன்னுங்குறளுருவின் மாணியாய், மாவலிதன் பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து, போர் வேந்தர் மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி, என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண், மன்னாதருகென்று வாய்திறப்ப, மற்றவனுமென்னால் தரப்பட்ட தென்றலுமே" என்றருளிச் செய்துள்ள கண்ணிகள் இங்கே யனுஸந்திக்கத் தக்கன. ... ... *

(சுக்கிரன் தடுத்துக் கூறிய வார்த்தை இன்னதென்பது.)

95. கண்டி திறத்திது கைதவ மைய, கொண்டல்நிறக் குறளனென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனாள், உண்டவனுமி துணர்ந்துகொளென்றான். 26

ஐய	'தலைவனே! (மஹாபலியே!)
கண்ட திறத்து இது	(நம்மால் எதிரில்) காணப்படுகிற தன்மையையுடைய இவ்வடிவம்
கைதவம்	வஞ்சனையானது;
கொண்டல் நிறம் குறள் என்பது கொள்ளேல்	'கரியனான வொரு வாமனனிவன்' என்று கருதாதே;
அண்டமும்	எல்லா வண்டங்களையும்
முற்றும்	அவ்வண்டங்களுக்குட்பட்ட எல்லாப் பொருள்களையும்
அகண்டமும்	அகிலத்தையும்
மேல் நாள்	முன்னொரு காலத்திலே
உண்டவன் ஆம்	அமுது செய்த திருமால் காண் இவன்;
இது உணர்ந்து கொள் என்றான்	இவ்வுண்மையை யுணர்ந்து கொள்வாயாக' என்று கூறினன்.

* * *—"மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில், தக்கதிதன்றென்று தானம் விலக்கிய சுக்கிரன்" என்ற பெரியாழ்வார் திருமொழியை இங்கு உணர்க. சுக்கிரன் தபோபலத்தினால் ஞானக்கண் பெற்றவனாதலால் கடவுளின் மாயையை யறிந்து 'திருமாலே தனது மாயத்தால் தன்னுருவத்தை மறைத்து உன்னை வஞ்சிக்க இங்ஙனம் வாமனனாக வந்திருக்கின்றான்; இவனுக்குத் தானஞ் செய்யாதே; செய்தால் உடனே உனக்கு அபாயமே யாகும்" என்றனன். சுக்கிரன் மாவலிக்குப் புரோஹிதனென்னும் முறையில் தெரிவித்தது இது. கண்ட திறத்து என்பதற்கு—ஆலோசித்துப் பார்க்குமளவில் என்று உரைத்தலுமாம். பின்னடிகள் "அண்டரண்ட பகிரண்டத்தொருமாநில மெழுமால்வரை முற்றுமுண்டகண்டம்" என்ற திருப்பாணாழ்வார் பாடலைத் தழுவியவை. பிரளயக்கடலில் திருமால் பேதைக் குழவியாய்ச் சிறியதோராலந்தளிரில் உலகங்களையெல்லாம் தனது திருவயிற்றிலே அடக்கிவைத்துக்கொண்டு அறிதுயிலமர்கின்றனனென்பது நூற்கொள்கை. "அம்பரமும் பெரு நிலனும் திசைகளெட்டும் அலைகடலுங் குலவரையு முண்ட கண்டன், கொம்பமரும் வடமரத்தினிலைமேல் பள்ளி கூடினான்" என்றும், "மஞ்சாடுவரை யேழுங் கடல்களேழும் வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம், எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின்மே லோரிளந்தளிரிற் கண்வளர்ந்தவீசன்" என்றும் திருமங்கையாழ்வாருமருளிச் செய்தார். 'நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளி யிமையவர் தலைவனு முதலா, யாவகை யுலகமும் யாவருமகப்பட, நிலநீர்தீகால் சுடரிரு விசும்பும், மலர்சுடர்பிறவும் சிறிதுடன் மயங்க, ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவது மகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயன்" என்பது நம்மாழ்வார் திருவாசிரியப்பா. ... *

(சுக்கிரன் சொல்லுக்கு மாவலி கூறின மறுமொழி.)

96. நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து, தனக்கியலாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரியானது கைத்தலமென்னின், எனக்கிதன் மேல்நலம் யாதுகொ லென்றான். **27**

(சுக்கிரனே!')

என் கை நிமிர்ந்திட	எனது தானஞ் செய்கிற கை உயர்ந்து மேலாக இருக்க,
வந்து தனக்கு இயலா வகை தாழ்வது	அதன் கீழ்வந்து தனது பெருமைக்குத் தகாதபடி தாழ்ந்திருப்பது
தாழ்வு இல் கனம் கரியானது கைத்தலம்	ஒரு குறையுமில்லாத காளமேகத்திருவுருவனான திருமாலின் திருக்கையிடம்
என்னின்	என்றால்
எனக்கு இதன் மேல் நலம் யாது	எனக்கு இதிற்காட்டிலு முயர்ந்த நன்மை என்ன இருக்கிறது!
நினைக்கிலை	இதை நீ நினைக்கவில்லையே!
என்றான்	என்று சொன்னான்.

* * *—ஸர்வோத்தமனுன ஸர்வேச்வரன் தானே தனது பெருமைகளை யெல்லாமிழந்து என்னிடம் இரப்பாளனுய் வந்து ஒரு பொருளை வேண்டுவானுனல் அவனுக்கு அதனைக் கொடுத்துப் பெருமை பெறுவதை விட மிக்க சிறப்பு எனக்கு வேறென்றுளதோ வென்முன். முதலடியில் 'நினக்கிலை' என்றும் பாடம் காண் கிறது; நினக்கு இலை—இவ்வறிவு உனக்கு இல்லையே யென்றபடி. ... *

(இதுவுமது)

97. வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர், வள்ளியராக வழங்குவதல்லால்
எள்ளுவ வென்சில வின்னுயிரேனும், கொள்ளுதல் தீது கொடுப்பது நன்ருல். 29

வெள்ளியை ஆதல்	நீ வெள்ளியென்று சொல்லப் படுவா யாதலால்	இன் உயிர் ஏனும்	தனது இனிய உயிரையே யானுலும்
விளம்பினை	இங்ஙனம் கூறினுய்;	கொள்ளுதல்	யாசித்துப் பெறுவது
மேலோர்	மேன்மக்கள்	தீது	துன்பந்தருவது;
வள்ளியர் ஆக	வரையாது கொடுப்பவராக	கொடுப்பது	தன் இன்னுயிரையேயாயி னும் யாசகர்க்குத் தானஞ் செய்வது
வழங்குவது அல்லால்	(இரப்பாளர் கேட்ட எப் பொருளையும்) கொடுப்பதே யல்லாமல்	நன்று	இன்பந் தருவது.
எள்ளுவ சில என்	மேன்மக்களால் கொடுக்கப் படாதவையென்று விலக் கப்பட்டவையாகிய சில பொருள்கள் எவை? [எவையுமில்லை.]		

* * *—'இப்பொழுது இரப்பாளனுக உன்னிடம் வந்தவன் ஸர்வேச்வரனுதலால் அவன் கேட்டதைக் கொடுத்தல் கூடாது' என்பாயாயின், எதைக்கேட்டாலும் கொடுப்பது உதாரர்களுக்கு உரியகுணமாதலால் அதுவும் இசையத் தகாதது என்கிருன் மாவலி. வெள்ளியை என்பதில் சிலேடையுள்ளது. வெள்ளி யென்னும் பெயரையுடையாய் என்பது மேலெழுந்த பொருள்; அறியாமையை யுடையாய் என்பது ரூக்ஷ்யமான பொருள். வெண்மையாவது அறிவு முதிராமை; புல்லறி வுடைமை. 'வெள்ளியையாதல் விளம்பினை' என்பதில், நீ பொன்னுயின் இங்ஙனஞ் சொல்லமாட்டாய் என்றும் ஒரு கருத்துத் தொனிக்கும். ... ... *

(இதுவுமது)

98. மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர்கள் மாயாது, ஏந்திய கைக்கொடு இரந்தவரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவரேனும், ஈந்தவரல்ல திருந்தவர் யாரே. 30

எந்தாய்	எனது தந்தை போன்ற சுக்கிரனே!	வீந்தவர் என்பவர்	இறந்தவரென்று சொல்லப் படுபவர்கள்
மாய்ந்தவர்	(உலகத்தில்) இறந்தவர்கள்	வீந்தவர் ஏனும்	இறந்தவர்களே யாயினும்
மாய்ந்தவர் அல்லர்கள்	இறந்தவர்களல்லர்; (பின்னை யாவர் இறந்தவரென்ருல்)	ஈந்தவர் அல்லது	தானஞ் செய்தவர்களல்லாமல்
மாயாது ஏந்திய கை கொடு இரந்தவர்	தம் உயிரைவிட மாட்டாமல் கைகளை யேந்தி யாசித்த வர்களே (இறந்தவர்களா வர்;)	இருந்தவர்	(உலகத்தில்) நிலையாயிருந்த வர்கள்
		யாரே	வேறு யாவருளர்? [எவரு மிலர்.]

***—இதனுல் யாசகத்தொழில் செய்வது மரணவேதனையினுங் கொடிதென்பதும், தானஞ்செய்வது என்றுமழியாத புகழுடம்புக்குக் காரணமென்பதும் விளக்கப்பட்டது. இரந்து உயிர்வாழ்வார் உயிரோடிருப்பினும் இறந்தவர்களே; ஈந்து வாழ்ந்தார் உயிர்இறப்பினும் உயிரோடிருப்பவர்களே யென்பது கருத்து. இங்கு இரப்பாளனுன வாமனமூர்த்திக்கு நிந்தை தோன்றினும் அதில் கண்ணேட்டமில்லை; தானஞ்செய்வதைப் புகழ்வதில் மட்டுமே நோக்கு. தான் தானஞ் செய்யாதிருக்க முடியாதென்பதை வற்புறுத்திக் கூறியவாறு. ... ... *

(இதுவுமது)

99. எடுத்தொருவருக் கொருவ ரீவதனின் முன்னே, தடுப்பது நினக்கழகிதோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோ யுனது சுற்றம், உடுப்பதுவு முண்பதுவு மின்றி விடுகின்ருய் 33

தகவு இல் வெள்ளி	நற்குண மற்ற சுக்கிரனே!	ஈவதனின் முன்னே	கொடுப்பதற்கு முன்பே
கொடுப்பது விலக்கு கொடியோய்	தானம் புரிவதைத் தடுக்கின்ற கொடியவனே!	தடுப்பது	கொடுக்கலாகாதென்று இங்ஙனே தடுப்பதானது
ஒருவர்	உதாரர்களுள் ஒருவர்	நினக்கு அழகிதோ	(குருவாகிய) உனக்குத் தகுதியோ?
ஒருவருக்கு	(யாசகர்களுள்) ஒருத்தருக்கு	(அன்றியும் நீ இக்கொடுந் தொழிலின் பயனுல்)	
எடுத்து	அவர் விரும்பியதொரு பொருளைக் கொடுப்பதாக வெடுத்து	உனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றி விடுகின்ருய்	உனது சுற்றத்தவர்கள் உடுக்க உடையும் உண்ண உணவுமில்லாதபடி ஆய் விடுகிறுய்.

***—தனது குருவாகிய சுக்கிரனை இங்ஙனம் இடித்துக் கூறுதல் பொருந்துமோவெனின்; " गुरोरप्यवलिप्तस्य कार्याकार्यमजानतः । उत्पथं प्रतिपन्नस्य सद्यस्त्यागो विधीयते— குரோரபி அவலிப்தஸ்ய கார்யாகார்யமஜாநதः, உத்பதம் ப்ரதிபந்நஸ்ய ஸத்யஸ்த்யாகோ விதீயதே." என்பது சாஸ்த்ரம். குருவாயிருந்தாலும் 'கார்யாகார்ய விவேகமின்றித் தீயவழியிற் செல்வானுயின் அவனை விட்டொழிப்பது நன்று என்றவாறு. ஆகவே இது பொருந்தும். ... ... *

(வாமனமூர்த்தி ஓங்கி வளர்தல்.)

100. கயந்தரு நறும்புனல் கையில்தீண்டலும், பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னேங்கினுன், உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே. 35

கயம் தரு நறு புனல்	(மாவலி தாரைவார்த்துக் கொடுத்த) குளத்திலுள்ள நல்ல நீரானது.	எதிர் பார்த்து வியந்தவர் வெருக்கொள	(எல்லோரும் தனது பேருருவத்தை) எதிரிலேயிருந்து நோக்கி ஆச்சரியப்பட்டவர்களாய் அச்சங்கொள்ளும்படி
கையில் தீண்டலும்	(தனது) கையில் பட்ட வளவிலே	உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்ப	உத்தம புருஷர்களுக்குச் செய்த தானத்தின் பலன் போல
பயந்தவர்களும் இகழ் குறளன்	பெற்றவர்களும் இகழவேண்டும்படி மிகக் குள்ளவடிவமான வாமனமூர்த்தி	விசும்பின் ஓங்கினுன்	ஆகாயத்திலே விம்மவளர்ந்தான்.

***—சுக்கிரன் தடையைப் பொருள்படுத்தாமல் மாவலி தாரைவார்த்துக் கொடுத்ததும் வாமனன் பேருருவங் கொண்டனன். 'பயந்தவர்களு மிகழ் குற

ளன்' என்றது சித்திரக்குள்ளன் என்பதைக் காட்டும். குறளன் ஓங்கி வளர்ந்ததற்கு உவமை—உயர்ந்தவர்க்குதவியவுதவி. செய்தவுதவி சிறிதாயினும் தக்கார் கைப்பட்டவாறே மிகவோங்கி வளருமன்றோ. ... ... *

(திருமால் மாவலி முடிமேற் பாதம் வைத்தது)

101. உலகெலா முள்ளடி யடக்கி யோரடிக்கு, அலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேகநாயகன், சிலைகுலாந்தோளினாய் சிறியன் சாலவே. 37

உலகு எலாம்	மேலுலகமும் கீழுலகமுமாகிய எல்லாவுலகங்களையும்	அன்பன் மெய் அது ஆம்	அன்பனான மாவலியின் சிரசு இடமாயிற்று ;
உள் அடி அடக்கி	(திருமால் தனது) இரண்டடிகளினுள்ளே அடங்கச் செய்து விட்டதனால்	சிலை குலாம் தோளினாய்	வில் விளங்குகின்ற திருத்தோளுடையவனே !
ஓர் அடிக்கு அலகு இலாது	மூன்றுவதாகிய மற்றோரடிக்கு (அளக்க) இடமில்லாமற் போனதுபற்றி	இலை குலாம் துழாய் முடி ஏக நாயகன்	தளங்கள் விளங்குகின்ற திருத்துழாய் மாலையணிந்த திருமுடியையுடைய ஒப்பற்ற தலைவனாகிய திருமால்
அ அடிக்கு	அந்த அடிவைப்புக்கு	சால சிறியன்	மிகவும் சிறியவன்.

* * *—*ஒண்மிதியிற்புன லுருவி யொருகால்நிற்ப ஒருகாலுங் காமருசீரவுணனுள்ளத்தெண்மதியுங் கடந்தண்டமீதுபோகி இருவிசும்பினூடு போயெழுந்து மேலைத்தண்மதியுங் கதிரவனுந் தவிரவோடித் தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு மண்முழுதுமகப்படுத்து நின்ற வெந்தையான திருமால் எல்லா வுலகங்களையும் இரண்டடியாலளந்து விட்டு 'மூன்றடி தருகிறேனென்றாய், மற்றையோரடிக்கு இடங்காட்டாய்' என்ன, அதற்கு 'அடியேனது முடியே உள்ளது' என்று மாவலிகூற, எம்பெருமான் அவனது சிரசிற்பாதத்தை வைத்தழுத்தி அவனைப் பாதாளத்திற் செலுத்தினானென்ற வரலாறு அறிக. ஆனதுபற்றியே பாதாளத்திற்கு "பலிஸத்ம" என்று பெயர்; "அதோபுவநபாதால பலிஸத்மரஸாதலம்" என்றான் அமரஸிம்ஹன். *ஒருகுறளாயிருநில மூவடிமண் வேண்டி உலகனைத்து மீரடியாலொடுக்கி, ஒன்றுந்தருகவென மாவலியைச்சிறையில் வைத்த தாடாளன்* என்றார் திருமங்கைமன்னனும். இத்தனை பெருமையைச்சொல்லி, முடிவில் 'சிறியன் சாலவே' என்றது மிகவழகிய பேச்சு. அவன் அறப்பெரியனாயிருந்தும் சிறியனாகவே காணப்படுகிறானென்றபடி. சிறியையாய்க் காணப்படுகின்ற நீயன்றோ இத்தனையுஞ் செய்தது என்று குறிப்பித்தபடி. .... *

(தாசரதிகள் முனிவன் வேள்வியைக் காத்தது.)

102. எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள், விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள், கண்ணிணை காக்கின்ற இமையிற் காத்தனர். 41

மண்ணினை காக்கின்ற	நிலவுலகத்தை அரசாள்கின்ற	எண்ணுதற்கு ஆக்க அரிது	(பிறரால் செய்ய) நினைப்பதற்கும் செய்வதற்கும் அருமையுடையதான
மன்னன்	தசரதமன்னவனது		
மைந்தர்கள்	குமாரர்களாகிய ராம லக்ஷ்மணர்கள்	வேள்வியை	யாகத்தை
விண்ணவர்க்கு	தேவர்களின் பொருட்டு	கண்ணிணை காக்கின்ற இமையின்	கண்ணைக் காப்பாற்றுகின்ற இமைகள் போல
இரண்டு மூன்று நாள் முனிவன் ஆக்கிய	ஆறு நாட்களில் விச்வாமித்திர முனிவன் இயற்றிய	காத்தனர்	ரக்ஷித்தார்கள்.

* * *—செய்யுளின் தொடக்கத்திலுள்ள 'எண்ணுதற்காக்கரிது' என்றவிது முனிவனியற்றிய வேள்வியிலும் அந்வயிக்கும்; தாசரதிகள் அவ்வேள்விக்குச் செய்த காவலிலும் அந்வயிக்கும். 'இந்த ராஜ குமாரர்கள் செய்யும் ரக்ஷணம் பிறரால் எண்ணுவதற்கும் செய்வதற்கும் அரிது' என்னும்படி யமைந்தது என்கை. எண் நுதற்கு ஆக்கரிது—எட்டுப்புருவங்களையுடைய [அதாவது, நான்கு முகங்களையுடைய] பிரமனுக்கும் செய்யவரிது என்றுரைப்பாருமுளர். முனிவர் ஷட்ராத்ர மென்னும் வேள்வியை இயற்றினராதலால் இரண்டு மூன்று நாள்.' எனப்பட்டது; இரண்டாலே பெருக்கப்பட்ட மூன்று நாள்—ஆறுநாள். தாசரதிகள் வேள்வியைக் காத்ததற்கு இமை கண்ணைக் காத்தலை உவமைகூறின தன் கருத்தாவது—கண்ணில் புழுதி முதலியவை வந்து விழாமல் தடுக்கும் இமை; அதுபோல, அரக்கர்களால் தீங்கு நேராதபடி காத்தனரிவர். அன்றியும், மேலிமை கீழிமை என்னுங் கண்ணிமையிரண்டில் மேலிமை பெரியது, கீழிமை சிறியது; மேலிமை அசைந்து கொண்டிருப்பது, கீழிமை அசையாமலிருப்பது. பெரியவனாகிய இராமன் மேலிமை போல நிலைபெயர்ந்து முனிவனாச்ரமத்தின் நாற்றிசையிலும் அரக்கர்வந்து கெடுதல் செய்யாதபடி சக்கரஞ் சுற்றுவதுபோல் சுற்றித்திரிந்து காவல் செய்தான்; சிறியவனாகிய லக்ஷ்மணன் கீழிமைபோல ஆச்ரமத்தின் வாயிலில் அசையாது நின்று உள்ளே ஒருவரும் புகாதபடி காவல் செய்தான்—என்றிவை போல்வன சில விசேஷப் பொருள்களைப் பரம்பரையாகப் பெரியார் சொல்லிவருவதுண்டு. ... ... *

(இராமன் மாரீசனைக் கடலில் தள்ளி ஸுபாஹுவை வதைத்தது)

103. திருமகள்நாயகன் தெய்வவாளிதான், வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரினொருவனைக் கடலினிட்டதங், கொருவனை யந்தகபுரத்தி னுய்த்ததே. 52

திருமகள் நாயகன்	லக்ஷ்மீபதியான ஸ்ரீராமபிரானுடைய	ஒருவனை	ஒருத்தனாகிய மாரீசனை
தெய்வ வாளி	திவ்யாஸ்த்ரமானது	கடலின் இட்டது	கடலிலே கொண்டு தள்ளிற்று;
வெருவரு தாடகை பயந்த வீரர்கள் இருவரின்	யாவரும் அஞ்சத்தக்க தாடகைபெற்ற இரண்டு வீரர்களுள்	ஒருவனை	மற்றொருவனாகிய சுபாகுவை
		அந்தகன் புரத்தின் உய்த்தது	யமலோகத்திற் கொண்டு தள்ளிற்று.

* * *—ஸ்ரீ ராமபிரானுக்கு விரைவில் நேரப்போகிற லக்ஷ்மியின் அபராவதாரமான ஸீதாபிராட்டியின் விவாஹத்தையும், இப்பொழுது நேர்ந்த ஜயலக்ஷ்மியின் சேர்த்தியையும் நெஞ்சிற்கொண்டு 'திருமகள் நாயகன்' என்றே இராமனைக் குறிப்பிட்டனர். அவதாரப்ரயோஜநம் நிறைவேறுவதற்கு மாரீசன் இன்றியமையாதவனாதலால் அவனைக் கொன்றிடாது கடலில் தள்ளி வைத்தனன்; மற்ற சுபாகு முதலிய அரக்கர்களையெல்லாம் கொன்றொழித்தனனென்க. ... *

(விச்வாமித்ர முனிவன் இராமனிடம் கூறிய நல்வார்த்தை).

104. பாக்கியம் மெனக்குளதென நினைவுறுமீ பான்மை
போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலென் புவனம்
ஆக்கி மற்றவையகிலமு மணிவயிற்றடக்கிக்
காக்குநீ யொருவேள்வி காத்தனையெனுங் கருத்தே. 57

புவனம் ஆக்கி	(ஆதிகாலத்தில்) எல்லாவுலகங்களையும் படைத்து
மற்று	பின்பு [பிரளய காலத்தில்]
அவை அகிலமும்	அவ்வுலகங்களை யெல்லாம்
அணி வயிறு அடக்கி	அழகிய திருவயிற்றிலே யடக்கிவைத்து
காக்கும் நீ	ரக்ஷித்தருளுமியல்வினனான நீ
ஒரு வேள்வி காத்தனை எனும் கருத்து	(எனது, சிறிய) யாகமொன்றைக் காத்தருளினை யென்கிற எண்ணத்தினால்
பாக்கியம் எனக்கு உளது என நினைவுறும் பான்மை போக்கி	(பொருளல்லாத வென்னைநீ ஒரு பொருளாக்கி வந்து உன்னால் வேள்வி காக்கப்படுதற்கு ஹேதுவான வொரு) நல்வினை எனக்கு இருந்ததென்று யான் எண்ணுவனேயன்றி அத்தன்மையை யொழித்து
நிற்கு இது பொருள் என உணர்கிலென்	ஸர்வேச்வரனான வுனக்கு இந்த வேள்வி காத்தல் ஒரு பெரிய காரியமென்று நான் எண்ணமாட்டேன்.

* * *—உலகங்களின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை யெல்லாம் அவலீலையாகச் செய்து போருகின்ற ஸர்வேச்வரனாகிய ஸ்ரீராமனுக்கு இச்சிறு வேள்வியைக் காத்தது ஒரு பெரிய காரிய மன்றென்பதை உள்ளபடி யுணர்ந்த முனிவன் அதனை எடுத்துரைத்து "எனது பூர்வஜன்ம ஸுக்ருத விசேஷத்தினால் நீ இங்ஙனம் வந்து அருள் செய்தாயென்றே கருதுவேன்" என்று விஜ்ஞாபித்தனன். ... *

8. வேள்விப்படலம் முற்றிற்று.

---

9. அகலிகைப்படலம்

கௌதம மஹர்ஷியின் தரும பத்தினியும், ஜனக சக்ரவர்த்தியின் புரோஹிதனான சதானந்த முனிவனது தாயுமான அஹல்யாதேவி தேவேந்திரனால் வஞ்சிக்கப்பட்டுக் கற்பிழந்ததன் காரணமாகக் கௌதம முனிவன் சபிக்க, அதனால் கல்லுருவம் பெற்றிருந்தவள், தாசரதிகள் விச்வாமித்ர முனிவனோடு மிதிலைக்குச் செல்லும்வழியில் ஸ்ரீ ராமனது பாததூளிபட்டுப் பரிசுத்தையாகி இயற்கையுருவம் பெற்ற வரலாற்றைக் கூறும் பகுதி இது.

இப்படலத்தின் கதைச் சுருக்கம் வருமாறு;—விச்வாமித்திர முனிவன் வேள்வியை முடித்து அவப்ரித ஸ்நானம் செய்தபிறகு ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களுடன் புறப்பட்டுப் போகையில் சோண நதியை யடைந்த வளவிலே ஸூரியன் அஸ்தமிக்க, அன்றிரவு மூவரும் ஒரு சோலையில் தங்கியிருந்தார்கள். அந்தச் சோலையைப்பற்றி இராமன் வினவ, அதன் வரலாற்றை முனிவன் விரித்துக் கூறுகின்றான்; ஒரு வித்தியாதரமகள் ஸ்ரீமஹாலக்ஷ்மியிடத்து மலர்மாலை யொன்று பெற்று அதைத் துர்வாஸ முனிவனுக்கு அளித்திட்டாள்; அதனை மகிழ்ந்து பெற்ற முனிவன் தேவலோகத்தைச் சேர, அங்கு தேவேந்திரன் ஐராவத யானையின் மீது பவனி வந்து கொண்டிருக்கக் கண்டு அந்த மாலையை அவனுக்குத் தர, அவன் மாவட்டியால் அதனை வாங்கி யானையின் தலைமீது வைக்க, யானை அதை யெடுத்துத் துகைக்க, அது கண்டு சினங்கொண்ட முனிவன் இந்திரனுக்குச் சாபமிட, இந்திரனது பொருள்கள் யாவும் பாற்கடலிற் புக்கொளித்தன; அப்போது தேவர்கள் ஒன்றுகூடித் திருமாலைச் சரணமடைய, திருமால் அபயமளித்துப் பாற்கடலைக் கடையுமாறு கட்டளையிட, திருமாலின் உதவியால் தேவர்கள் பாற்கடலைக் கடைய, கடலில் நின்று தோன்றிய அமிருதத்தைத் தேவர்களே பெற்றனர். அதனினின்று தோன்றிய ஹாலாஹலத்தையும் பிறைச் சந்திரனையும் சிவபிரானுக்கும், கற்பக விருக்ஷம் முதலியவற்றைத் தேவேந்திரனுக்கும், புஷ்பக விமானம் முதலியவற்றைக் குபேரன் முதலியோர்க்கும் கொடுத்தருளி, ஸ்ரீமஹாலக்ஷ்மியையும்

கௌஸ்துபமணியையும் ஸ்ரீமஹாவிஷ்ணு தானே அணிந்து கொண்டனன். அமிர்தம் நிமித்தமாகத் தேவாசுரர்களுக்குள் நிகழ்ந்த போரில் திருமாலினுதவியால் தேவர்கள் அசுரர்களைக் கொன்று அமிருதத்தையும், இழந்த சுவர்க்கத்தையும் பெற்று இனிதிருக்கையில், திதியானவள் தன் மைந்தர்கள் தேவர்களாலிறந்தது கண்டு பெருந்துயரமடைந்து தன் கணவனைக் கிட்டி 'உமது புத்திரர்களான தேவர்களால் என் புதல்வர் மாண்டனராதலால் தேவேந்திரனைக் கொன்று மூவுலகையும் ஆளவல்ல ஒரு புத்திரனைப் பெற விரும்புகின்றேன், என் கருத்து நிறைவேறும்படி அருள்புரிந்து அதற்கேற்பத் தவஞ் செய்யும்படி அநுமதியும் தருக' என்று வேண்டித் தன் கணவன் கட்டளையால் திதி தவஞ்செய்கையில் அஃதுணர்ந்த இந்திரன் அவளுக்கு அடிமையிலமர்ந்து தக்சமயத்தில் அவளது கருவைச் சிதைத்தனன். அந்த திதி தவஞ் செய்த இடம் இது என்று சொல்லி, பிறகு சரவணத்தைக் காட்டி அதன் பிறகு கங்கையைக் காண நேர்ந்த வளவிலே அதன் வரலாற்றை வெகு விரிவாகக் கூறி முடித்து மிதிலாபுரியைச் சாருகையில், அஹல்யை கல்லாய்க்கிடக்குமொரு மேட்டைக் காண நேர, அக்கல்லின்மீது காகுத்தனது திருவடித்தூள் பட்டதும் அவள் சாபமொழிந்து கல்லுருவம் மாறி நல்லுருவம் பெற்று நிற்க, அவளை முனிவன் இராமனுக்கு இன்னாளென்றறிவித்து அவளுக்கு நேர்ந்த சாபத்தின் வரலாற்றையுங் கூறி, யாவரும் கௌதம முனிவனுடைய ஆச்ரமத்தை யடைந்து அவனால் உபசாரம் பெற்றபின் அஹல்யையை அங்கீகரிக்குமாறு சொல்லி முனிவன் அவளைக் கௌதமரிடம் சேர்ப்பித்து மூவரும் மிதிலாபுரியை அணுகினர் என்பதாம்.

இப்படலத்தினின்று மூன்று செய்யுட்களே கொள்ளப்படுகின்றன. ... *

(அஹல்யை சாபவடிவம் நீங்கி முன்னைய வடிவம் பெறுதல்)

105. கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட்டுருவங்
கொண்டு மெய்யுணர்பவன் கழல்கூடிய தொப்பப்
பண்டைவண்ணமாய் நின்றனள் மாமுனிபணிப்பான். 71

கண்ட கல் மிசை	அங்குப் பார்க்கப்பட்ட ஒரு கல்லின் மீது	வேறுபட்டு உருவம் கொண்டு	தனது அஜ்ஞான நிலைமாறி நிஜவடிவமடைந்து
காகுத்தன் கழல் துகள் கதுவ	ஸ்ரீராமபிரானது திருவடித் தூள் பட்டதனால்,—	கழல் கூடியது ஒப்ப	எம்பெருமான் திருவடியை யடைதலை யொக்க
உண்ட பேதைமை மயக்கு அற	தான் உள்ளத்திற் கொண்டுள்ள அஜ்ஞான மோஹம் நீங்கும்படி	பண்டை வண்ணம் ஆய் நின்றனள்	(அவ்வஹல்யை) முன்னைய ரூபமாய் எழுந்து நின்றாள்;
		மா முனி	(அது கண்ட) விச்வாமித்திர முனிவன்
மெய் உணர்ந்தவன்	தத்துவ ஞானத்தையடைந்த வொருவன்	பணிப்பான்	ஸ்ரீராமனை நோக்கி ஒன்று சொல்வான். (அது அடுத்த கவியிற் காண்க.)

* * *—முதலடியின் முடிவிலுள்ள 'கதுவ' என்பது ஈற்றடியிலுள்ள 'நின்றனள்' என்பதோடு அந்வயிக்கும். அஹல்யை வந்தேறியானவுருவம் நீங்கிப் பண்டையவுருவம் பெற்றதற்கு—இயற்கையில் ஞானவொளி யுருவனான ஜீவாத்மா கருமவசத்தால் இடையில் நேர்ந்த பந்த நிலையினின்று விடுபட்டு எம்பெருமான் திருவடியைச் சேர்வதை உவமை கூறினது மிகப் பொருத்தம். ... *

(சாபம் நீங்கிப் பெண்ணாய் நின்றவளை முனிவன் இராமனுக்கறிவித்தல்.)

105. மாயிரு விசும்பிற்கங்கை மண்மிசை யிழித்தோன்மைந்த
மேயின வுவகையோடு மின்னென வொதுங்கி நின்றாள்
தீவினை நயந்துசெய்த தேவர்கோன் தனக்குச்செங்கண்
ஆயிரமளித்தோன் பன்னி யகலிகையாகு மென்றான். 72

மா . இரு விசும்பின்	மிகப்பெரிய ஆகாசத்திலிருந்து
கங்கை	கங்காநதியை
மண் மிசை இழித்தோன் மைந்த	பூலோகத்திலே இறக்கிக் கொண்டு வந்த பகீரத சக்கரவர்த்தியின் மரபில் தோன்றிய மைந்தனே!
மேயின உவகையோடு	பொருந்தின மகிழ்ச்சியோடு
மின் என ஒதுங்கி நின்றாள்	மின்னற் கொடிபோல (நாணத்தால்) ஒரு புறத்தே யொதுங்கி நிற்குமிவள் (யாவளென்னில்)
தீவினை நயந்து செய்த	(கற்பழித்தலாகிய) கொடுந் தொழிலை விரும்பிச் செய்த
தேவர்கோன் தனக்கு	தேவேந்திரனுக்கு
செம் கண் ஆயிரம் அளித்தோன்	சிவந்த ஆயிரங் கண்களை யுண்டாக்கின கௌதம முனிவனது
பன்னி	பத்தினியாகிய
அகலிகை ஆகும் என்றான்	அஹல்யை யென்பாள்— என்று கூறினன்.

* * *—இப்போது கல்லுருவம் நீங்கிப் பெண்ணுருவம் பெற்று நிற்பவள் கௌதமமஹர்ஷியின் தருமபத்தினியென்று ஸ்ரீராமனுக்கு முனிவன் தெரிவித்தான். "தீவினை நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கணாயிரமளித்தோன்" என்றதிலடங்கிய கதை மேலே விவரித்துக் கூறப்படுகின்றது; அதாவது— இந்திரன் முனிவனில்லாத சமயம் நோக்கி வந்து அகலிகையைச் சேர, அவள் அவனை இந்திரனென்றுணர்ந்தும் உடன்பட்டிருக்க, வெளிச் சென்றிருந்த முனிவன் வந்து சேர, அகலியை நடுங்கி நிற்க, இந்திரன் அஞ்சிப் பூனையாய்ப் புறப்படத் தொடங்க, அவன் ஒரு பெண்குறியில் விழைவுகொண்டு தீச்செயல் புரிந்தமையால் அதனிடத்து வெறுப்புண்டாகும் பொருட்டு அக்குறிகள் ஆயிரந் தோன்றுமாறு சபித்தனன். அதனால் விகாரமான வுருவங்கொண்ட அவ்விந்திரனைப் பார்த்த தேவர்கள் நான்முகனை முன்னிட்டுக் கொண்டு வந்து இந்திர சாபத்தை மீட்கும்படி முனிவனை வேண்ட, அந்த ஆயிரங் குறிகளும் ஆயிரங் கண்களாகும்படி அநுக்ரஹித்தன னென்பதாம்.

,, முதனூலாகிய வான்மீகத்திலுள்ள வரலாறு—இந்திரனை ஆண்குறியிழக்கும்படியும், அஹல்யையை அரூபியாகி உணவில்லாமற் பலநாள் சாம்பலிலே கிடக்கும்படியும் கௌதமன் சபித்திட்டன னென்பதாம். கம்பர் மற்றும்பல இதிஹாஸங்களையுங் கொண்டு இங்ஙனே கூறினா ரென்பர். ... ... *

(விச்வாமித்திரன் இராமனைப் புகழ்தல்)

106. இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்தவுலகுக்கெல்லாம்
உய்வண்ணமன்றி மற்றோர் துயர்வண்ண முறுவதுண்டோ?
மைவண்ணத் தரக்கிபோரின் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குக்கண்டேன் கால்வண்ணமிங்குக்கண்டேன். 82

இ வண்ணம் நிகழ்ந்த வண்ணம்	இந்தவிதம் முற்காலத்தில் நடந்த முறையாம்;
இனி	நீ திருவவதரித்த இப்பால்
இந்த உலகுக்கு எல்லாம் உய் வண்ணம் அன்றி	இவ் வுலகத்துயிர்களுக்கெல்லாம் (துன்பம் நீங்கி) உஜ்ஜீவிக்குந் தன்மையேயல்லது
மற்று ஓர் துயர் வண்ணம் உறுவது உண்டோ	அதனில் வேறுபட்டதொரு துன்பவகையை அடைவதென்றுண்டோ? (இல்லை;)
மழை வண்ணத்து அண்ணலே	மேகவண்ணனை ஸ்ரீராம் பிரானே!
அங்கு	கீழே நாம் வந்தவழியில்
மை வண்ணத்து அரக்கி போரில்	கருநிறத்தளான தாடகையோடு செய்த யுத்தத்தில்
உன் கை வண்ணம் கண்டேன்	உனது பாஹுபலத்தைப் பார்த்தேன்;
இங்கு கால் வண்ணம் கண்டேன்	இவ்விடத்திலோ வென்னில் உனது திருவடியின் மஹிமையைக் காணப்பெற்றேன்.

* * '—சாபம் நேரும்படியான தீவினை மிகுவதும், அதனால் நிலை மாறுவதுமான கொடுமைகள் ராமா! நீ அவதரிப்பதற்கு முன்பு நிகழ்ந்தாலும் நீ அவதரித்த பின்பு அத்தகைய கொடுமைகள் நிகழ்வதற்கு ப்ரஸக்தியேயில்லை; அசேதநமான கல்லும் உனது திருவடித்துகள் பட்ட மாத்திரத்தில் நல்வடிவம் பெற்றதனால்; சேதநர்கள் இக் கரும சரீர மொழிந்து திவ்விய சரீரம் பெறுவர்களென்பது திண்ணம் என்பது முன்னடிகளின் தேர்ந்த கருத்து. எம்பெருமானுடைய திருவவதாரம் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமே யாதலால் அரக்கி போரில் கைவண்ணம் காட்டியதனால் துஷ்ட நிக்ரஹமும், இங்குக் கால்வண்ணங் காட்டியதனால் சிஷ்ட பரிபாலனமும் காட்டப்பட்டதை மகிழ்வுடன் தெரிவித்தன பின்னடிகள். .... *

9. அகலிகைப்படலம் முற்றிற்று.

---

10. மிதிலைக் காட்சிப் படலம்.

ஜனகராஜன் திருமகளாய்ப் பிறந்த ஸீதாதேவி வாழுமிடமான மிதிலாபுரியின் தோற்றத்தை முனிவனும் தாசரதிகளும் கண்ட வரலாற்றை முக்கியமாகக் கூறும் பாகமிது. கவி சக்கரவர்த்தியான கம்பர் தமது கற்பனா சக்தியை மிகக் கொண்டும், விச்வாமித்ர சரித்திரத்தை விரிவாகக் கூறியும் இப்படலத்தை நூற்றைம்பத்தேழு செய்யுட்களால் வளர்த்திருக்கின்றார். இப்படலத்தினின்று முக்கியமாக ஆறு பாடல்களே கொள்ளப்படுகின்றன. ... . *

மூவரும் மிதிலாபுரியிலுள்ள பலவிடங்களைக் கண்டுகொண்டு போகும்போது அரண்மனையிலுள்ள கன்னி மாடத்தைக் கண்டார்கள்; அங்கு அழகிற் சிறந்த ஸீதாதேவியை இராமபிரான் காண, இவனை அவள் காண இங்ஙனே பரஸ்பர தரிசனத்தினால் இருவரும் மிக்க காதல் கொண்டார்கள். பிராட்டி தன் காதல் அதிகரிக்க, தோழிமார் உபசாரங்கள் செய்யவேண்டும்படி மிக்க காமவேதனையுற்றாள். ஜனகராஜனால் எதிர்கொள்ளப்பட்ட மூவரும் அவன் காட்டியமாளிகையில் தங்கியிருக்க, அங்கு கௌதம புத்திரனும் ஜநகபுரோஹிதனுமான சதாநந்த முனிவன் வர, தனது தாயான அஹல்யை சாபம் தீரப்பெற்ற செய்தியை முனிவன் சொல்லக் கேட்டு, அந்த விச்வாமித்ர முனிவன் சரிதையை இராமனுக்கு விரிவாகச் சொல்லக் கருதி (சதாநந்தன்) கூறத் தொடங்கினான்; விச்வாமித்ரன் அரசனா

யிருந்தபோது வேட்டையாடிக் காடு சென்று வஸிஷ்டனாச்ரமஞ்சார, விருந்திட விரும்பிய வஸிஷ்டனாணையால் காமதேனு கௌசிகராஜனுக்கு உணவுகளைச் சுரக்க, அறுசுவை யுணவையும் புஷ்ப சந்தனங்களையும் தனது சேனைகளுக்கும் பெற்ற கோசிகராசன் 'இந்தக் காமதேனுவை எனக்குத் தரவேணும்' என்ன, 'வந்தால் நீயே இட்டுக்கொள்' என்று வஸிஷ்ட பகவான் கூற, காமதேனுவை விச்வாமித்திரன் வலியக் கைப்பற்ற, அது வசிட்டனை யணுகி 'நீ என்னைக் கோசிகனுக்குக் கொடுத்தாயோ?' என்ன, தான் கொடாதிருக்க விச்வாமித்திரனே வலியக் கவர்கின்றமை கூறக் கேட்ட காமதேனு தன்னுடல் மயிரைச் சிலிர்க்க, பல்வகை வீரர்கள் அச் சுரபியினிடந்தோன்றிக் கௌசிகன் படையை யழிக்க, கோசிகன் புதல்வர் நூற்றுவரும் வெகுண்டு வசிட்டனை யடர்க்கப்புக, அவர்கள் அவனது விழித் தீயால் இறந்துபட, அப்போது விசுவாமித்திரன் உக்கிரங் கொண்டுவசிட்டன்மேல் அம்பெய்ய, அவன் தன் பிரமதண்டத்தை ஏவ, விச்வாமித்திரனெய்த படைகளை யெல்லாம் அந்தப் பிரமதண்டம் விழுங்கி விட, கௌசிகன் சிவனையடைந்து ஓர் அஸ்த்ரத்தைப் பெற்றுப் பிரயோகிக்க, வசிட்டன் அதனைக் கபளீகரிக்க, அதுகண்ட விச்வாமித்திரன் 'க்ஷத்ரியபலம் பயனற்றது, ப்ராஹ்மதேஜஸ்ஸே மேம்பட்டது' என அறுதியிட்டு அத்தகைய பிரமதேஜஸைப் பெறக் கருதித் தவஞ்செய்யச் சென்றான்; அவன்புரியுங் கடுந்தவத்தைக் கெடுக்குமாறு இந்திரன் திலோத்தமையை யனுப்ப, கோசிகன் சிற்றின்பத்து மூழ்கியிருந்து பிறகு வெறுத்து அவளைச் சபித்து, மீண்டும் தவம்புரியத் தென்திசை சார, அப்போது த்ரிசங்கு வசிட்டனைக் கிட்டி இச்சரீரத்தோடு நான் சுவர்க்கம் செல்லும்படி அருளவேணுமென வேண்ட, அவன் மறுக்க, த்ரிசங்கு வேறு புரோஹிதனை நாடி யாகம்புரிவேனென்ன, வசிட்டன் அவனைச் சண்டாளனாகுமாறு சபிக்க, உடனே அவன் சண்டாளனாகி ஊர் சேர, யாவரும் சீ சீ யென்ன, பிறகு த்ரிசங்கு காடு சேர்ந்து ஒருகால் கௌசிகனிடம் வந்து சேர்ந்து தன் செய்தியைத் தெரிவித்து அருள்செய்ய வேணுமென்ன, இவ்வுடலோடு சுவர்க்கஞ் சேருமாறு வேட்பிப்பேனென்று கோசிகன் முனிவர்களை வரவழைக்க, வசிட்ட குமாரர்கள் வருதற்கு மறுக்க, அவர்களைச் சபித்துவிட்டு வேள்வி தொடங்கித் தன் தவ மஹிமையினால் த்ரிசங்குவை வானத்து ஏற்ற, தேவர்கள் திரிசங்குவைத் தள்ளிவிட வானத்தினின்று கீழே விழுகின்ற அவனை அந்தராளத்தில் நிற்குமாறு கோசிகன் செய்துவிட்டு, தேவர்கள்மீது சினத்தினால் கௌசிகன் பிரதி சிருஷ்டி செய்யத் தொடங்க, அப்போது தேவர்கள் திரண்டு வந்து கௌசிகனைச் சாந்தப்படுத்திச் சென்றனர். பிறகு கௌசிகன் மேற்றிசையை யடைந்து தவம்புரிகையில், நரமேதத்திற்கு ஆள் தேடிக்கொண்டு சென்ற அம்பரீஷன் ரிசீக முனிவனுடைய நடுக்குமாரனான சுநச்சேபனை வாங்கிக்கொண்டு செல்லுகையில் உச்சிப் போதாக, உச்சிக் கடனைச் செய்யச் சென்ற சுநச்சேபன் தனது மாதுலனான விச்வாமித்ர முனிவனைக் கண்டு வணங்கித் தன் குறையை யறிவிக்க, அவனுக்கு அபயமளித்துத் தன் மக்களில் ஒருவன் அவனுக்குப் பதிலாகச் செல்லுமாறு செய்ய வெண்ணி மறுத்த தன் குமாரர்களைச் சபித்துவிட்டு இரண்டு மந்திரங்களைச் சுநச்சேபனுக்குக் கௌசிகனுபதேசித்து அவனை விடைகொடுத்தனுப்பிவிட்டு வடதிசை நோக்கிச் சென்று அங்கே கடுந்தவம்புரிய எல்லா வுலகும் சலிக்க, விபரீதங்கள் தோன்றப்புக, தேவர்கள் யாவரும் கௌசிகனிடத்து வந்து 'நீ ப்ரஹ்மர்ஷியாவாய்' என்று கூறித் தம் தம்மிடம் சென்று சேர்ந்தார்களென்று கௌசிகன் சரிதையைச் சதானந்தன் கூறி முடித்திட்டு ராமலக்ஷ்மணர்களையும் வாழ்த்திவிட்டுப் போயினன். பிறகு முனிவனும் தாசரதிகளும் துயில்கொண்டு காலையெழுந்து மூவரும் ஜனகசக்ரவர்த்தியின் யாகசாலையைச் சார, அங்கு வீற்றிருந்த ஜனகன் ராம லக்ஷ்மணர்களை யாவரென்று வினவ, முனிவன் கூறத் தொடங்கினன்—என்பது இப்படலத்துக் கதைச் சுருக்கம். ... ... *

(சீதையின் வருணனை)

107. உமையாளொக்கும் மங்கையருச்சிக் கரம்வைக்கும், கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையாநாட்டம் பெற்றிலமென்றார் இருகண்ணால், அமையாதென்றா ரந்தரவானத் தவரெல்லாம். 25

உமையாள் ஒக்கும் மங்கையர்	பார்வதி போன்ற சிறந்த மாதர்களும்		(அவர்களுள் மண்ணுலகமாதர்கள் யாவரும்)
உச்சி கரம் வைக்கும்	தம்தம் தலைகளின்மீது கைகளை வைத்துக் கூப்பி அஞ்ஜலி செய்தற்குரிய	இமையா நாட்டம் பெற்றிலம் என்றார்	(தேவர்களைப் போல) நாம் இமை மூடப்பெறாத கண்களைப் பெற்றிலமே யென்று வருந்தினர்;
கமையாள்	பொறுமை முதலிய நற்குணங்களையுடைய ஸீதாதேவியினது	அந்தரம் வானத்தவர் எல்லாம்	விண்ணுலகத்துத் தேவர்களெல்லாருமோவென்றால்
மேனி கண்டவர்	திருமேனியழகைப் பார்த்தவரெவரும்		
காட்சி கரை காணார்	அவ்வழகின் எல்லையை முழுவதும் காணமுடியாதவர்களானார்;	இரு கண்ணால் அமையாது என்றார்	(இவ்வழகைக்காண) நமது இருகண்களாலாகாதென்று குறையுற்றனர்.

***—பிராட்டியின் வடிவழகை முற்றிலும் ஒருங்கே பார்க்கமுடியவில்லையே யென்கிற குறை மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் சமமாயிருந்ததென்றாராயிற்று. 25

(இராமனும் ஸீதையும் ஒருவரையொருவர்கண்டு மிக்க காதல்கொண்டமை.)

108. எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக், கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வு மொன்றிட, அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள். 35

எண்ண அரு நலத்தினாள்	நெஞ்சினால் நினைக்கவுமாகாத அழகையுடையளான பிராட்டி	உணர்வும் நிலை பெறாது ஒன்றிட	இருவரறிவும் (தத்தமிடங்களில்) நிலைபெறாமல் ஒன்றையொன்று கூடி ஒற்றுமைப்படவும்
இனையள் நின்ற உழி	இத்தன்மையளாய் நின்ற பொழுது		
கண்ணொடு கண் இணை கவ்வி	ஒருவர் கண்ணிணையோடு மற்றொருவர் கண்ணிணை பற்றி	அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்	இராமனும் ஸீதையைப் பார்த்தான்; ஸீதையும் இராமனைப் பார்த்தாள்.
ஒன்றை ஒன்று உண்ணவும்	ஒன்றையொன்று கவர்ந்து அநுபவிக்கவும்		

***—பெருமாள் வில்லை முறிப்பதற்கு முன்பு ராமஸீதைகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டதாக வான்மீகத்திற் கிடையாது. இராமபிரானது திருக்கண் பிராட்டிமீது விழவும், பிராட்டியின் கண் இராமன் மீது விழவும், அப்போது இருவர் மனவுணர்ச்சியும் ஒற்றுமைப்பட்டு ஒரு தன்மைத்தான காதலைக் கொண்டதென்று கூறினவிது கவியின் கற்பனை. 35

(இதுவுமது)

109. நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை, ஆக்கிய மதுகையான் தோளினாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும், தாக்கணங்கனையவள் தனத்தில் தைத்தவே. 36

நோக்கிய நோக்கு எனும்	(அவ்வாறு பிராட்டி) பார்த்த பார்வையாகிற	வீக்கிய கனை கழல் வீரன் செம் கணும்	கட்டப்பட்ட ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய மஹா வீரனை இராமனது சிவந்த திருக்கண்களும்
நுதி கொள் வேல் இணை	கூர்மையான இரண்டு வேற் படைகள்	தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்த	மோஹினியென்னும் பெண் தெய்வத்தை யொத்த பிராட்டியின் கொங்கைகளில் மூழ்கின.
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன	வளர்ந்த வலிமையையுடைய இராமபிரானது புஜங்களிலே அழுந்திவிட்டன ;		

* * *—பிராட்டியின் கண்கள் இராமபிரானது தோளழகில் ஈடுபட்டன வென்றும், இராமனது திருக்கண்கள் பிராட்டியின் கொங்கை யழகில் ஈடுபட்டன வென்றும் சொல்லிற்று. இதனால ஒருவர்க்கொருவர் ஒத்த வேட்கையினரா யிருந்தனர் என்றதாயிற்று. ஸீதாவிவாஹம் நிகழும்போது ஸீதைக்குப் பிராயம் ஆறு என்று வான்மீகத்தினல் தெரிய வருகின்றது; அப்போது 'வீரன் செங் கணும்...தனத்தில் தைத்த' என்கைக்கு ப்ரஸக்தியுண்டோ வென்று சங்கிக்க வேண்டா ; பிராட்டி நிலத்திலிருந்து வெளிப்பட்ட பின்பு கடந்த வருடங்கள் ஆறு ; நிலத்தினுள் இருந்த காலம் இவ்வளவென்று அறுதியிடலாகாதன்றே வெமக்கு. வயதுபற்றிய விசாரம் அவசியமற்றது. கூரத்தாழ்வான் ஸுந்தர பாஹுஸ்தவத்தில்—* अन्योन्यचेष्टित निरीक्षण हार्दभाव प्रेमानुभावमधुरं प्रणय प्रभाव: । आजस्रनव्यतरदिव्यरसानुभूति: स्वां प्रेयसीं रमयिता वनशैलनाथ:—அந்யோந்ய சேஷ்டித நிரீக்ஷண ஹார்த பாவப்ரேமாநுபாவ மதுரப்ரணயப்ரபாவ: ஆஜஸ்ர நவ்யதர திவ்யரஸாநுபூதி: ஸ்வாம் ப்ரேயஸீம் ரமயிதா வநசைலநாத:* என்றருளிச் செய்த கணக்கிலே திவ்ய தம்பதிகளின் பரிமாற்றம் சொல்லுகிறவிது ரஸிகர்களால் ரஸிக்கத்தக்கது. ... *

(இதுவுமது)

110. பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித், தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும், இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர். 37

பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து	(தம்முள் ஒருவரழகையொருவர்) அனுபவித்த கண் பார்வையென்கிற கயிற்றிறுற்கட்டி	வரி சிலை அண்ணலும் வாள் கண் நங்கையும் இருவரும்	கட்டமைந்த வில்லை யேந்திய இராமபிரானும் வாள் போன்ற கண்களையுடைய சீதையுமாகிய இருவரும்
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்	ஒருவரை மற்றொருவருடைய மனம் இழுப்பதனாலே	மாறி புக்கு இதயம் எய்தினர்	மாறிப்புகுந்து ஒருவர் மனத்தை மற்றொரவரடைந்தார்.

* * *—பரஸ்பரம் பார்வையிலேயே பரஸ்பரம் ஹ்ருதயத்தை ஆகர்ஷிப்பவர்களாயிருந்ததனல் திவ்யதம்பதிகளாக ஆகப்போகிற இருவரும் மாலை மாற்றிக் கொள்வதற்கு முன்னமே மனத்தை மாற்றிக் கொண்டார்களாம். வான்மீகத்தில் "मनस्वी तद्गतस्तस्या नित्यं हृदि समर्पित:—மநஸ்வீ தத்கதஸ் தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:". என்று மேலே சொல்லப்படப் போகின்றதைக் கம்பர் இங்கேயே அநுபாஷித்தார் போலும். ... ... *

111. மருங்கிலா நங்கையும் வசையி லையனும், ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப், பிரிந்தவர் கூடினூற் பேசல் வேண்டுமோ ? 38

மருங்கு இலா நங்கையும்	நுட்பமான இடையையுடைய பிராட்டியும்
வசை இல் ஐயனும்	அகிலஹேய ப்ரத்யநீகனான இராமனும்
	(பரஸ்பரம் கொண்ட அன்பினால்)
ஒருங்கிய இரண்டு உடற்கு	ஒற்றுமைப்பட்ட இரண்டு உடம்புகட்கு
உயிர் ஒன்று ஆயினர்	ஒருயிரென்னும்படியானார்கள்;
கரு கடல் பள்ளியில்	பெரிய திருப்பாற்கடலிலே ஆதிசேஷசயனத்திலே
கலவி நீங்கி போய்	ஒருவரோடொருவர் கூடியிருந்த கூட்டம் நீங்கி
பிரிந்தவர் கூடினால்	பிரிந்து போனவர்கள் மீண்டும் கூடப்பெற்றால்
பேசல் வேண்டுமோ	அவர்களது காதலைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ?

* * *—இராமனும் ஸீதையும் ஒருவரையொருவர் கண்டகாட்சியிலேயே இரண்டுடற்கு ஓருயிர் தோற்றினாற்போல மனவொற்றுமை யுற்றார்களென்று முன்னடிகளிற் கூறினர். ஒரு புருஷனும் ஒரு பெண்பிள்ளையும் விவாஹமாவதற்கு முன்னே இங்ஙனம் அநுராகம் மிகப் பெறுவது தகுதியோ? என்று சிலர் சங்கிக்கக் கூடுமெனக் கருதி, அந்த சங்கைக்கு இடமறும்படி பின்னடிகள் அமைக்கப்பட்டன. இவ்விருவரும் அவதரிப்பதற்கு முன்னே திருப்பாற்கடலில் ஆதிசேஷனுகிற படுக்கையிலே ஒன்றுகூடி யிருந்தவர்களல்லவா? அன்னவர்கள் இடையில் சிலகாலம் பிரிவுற்றிருந்து இப்போது கூடப் பெறுகின்றார்களாதலால் இத் திவ்விய தம்பதிகளின் இவ்வநுராகம் பொருத்தமானதேயென்றவாறு. ... ... *

(ஸ்ரீராமலக்ஷ்மணர்களை யாவரென்று ஜனகன் வினவ முனிவன் தெரிவித்தல்)

112\. இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணின் முகத்தழகு பருக நோக்கி
அருந்தவனை யடிவணங்கி யாரிவரை யுரைத்திடுமி னடிகளென்ன
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகாணியவந்தார் வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வரென வவர்தகைமை பேசலுற்றான். 157

	(தனது வேள்வியை முடித்து ஜனக மன்னவன்)
இருந்த குலம் குமரர் தமை	தன்னருகில் வீற்றிருந்த உயர் குலத்துதித்த ராஜ குமாரர்களை
இரு கண் இன் முகத்து அழகு பருக	தனது இரண்டு கண்களும் அவர்களது இனியமுகத்தினழகைப் பூர்ணநுபவம் செய்யுமாறு
நோக்கி	நன்றாகப் பார்த்து (உடனே)
அரு தவனை	மஹாதபஸ்வியான விச்வாமித்திர முனிவனை
அடி வணங்கி	நமஸ்கரித்து
	(அவரை நோக்கி)
அடிகள்	'ஸ்வாமிந்!
யார்	இக்குமாரர்கள் யாவர்?
இவரை உரைத்திடுமின் என்ன	இவர்களைப்பற்றி எனக்குச் சொல்லவேணும்' என்று வேண்ட (முனிவன்)
விருந்தினர்கள்	'உன் பக்கல் புதியராய்வந்த இவர்கள்
பெருந்தகைமை தயரதன் தன் புதல்வர்	மஹாநுபாவனான தசரதசக்ரவர்த்தியின் திருக்குமாரர்கள்,
நின்னுடைய வேள்வி காணிய வந்தார்	உனது யாகத்தைக் காண வந்தார்கள்;
வில்லும் காண்பார்	(உன்னிடத்துள்ள) சிவதனுசையும் பார்க்கவிருப்பமுடையவர்கள்'
என அவர் தகைமை பேசல் உற்றான்	என்றுகூறி அவர்களது பெருமையையும் பேசத் தொடங்கினன்.

* * *—கீழ் வேள்விப்படலத்தின் இறுதிச் செய்யுளில் "மிதிலையர் கோமான் புரியும் வேள்வியுங் காண்டும் நாம் எழுகென்று போனார்" என்றுள்ளதனால் ஜனகமன்னவன் செய்யும் யாகத்தைக் காணவந்தவர்கள் இவர்கள் என்பது தெரிந்தது. அங்ஙனமே வேள்விச் சாலையில் புக்கவாறே ஜனகன் விச்வாமித்ர முனிவனை நோக்கி இக்குமாரர்கள் யாவரென்று கேட்க, இன்னாரென்று தெரிவிக்கத் தொடங்கினான் என்னுமளவோடு இப்படலம் முடிவுபெற்றது. ... *

10. மிதிலைக்காட்சிப் படலம் முற்றிற்று.

---

11. குலமுறை கிளத்து படலம்

* அங்கணெடுமதிள் புடைசூழயோத்தியென்னும் அணிநகரத்து உலகனைத்தும் விளக்குஞ்சோதி வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றின ஸ்ரீ ராமனை இன்னானென்று ஜனகமன்னவனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு ஸூர்யவம்சத்து அரசர்களது மஹிமையைச் சொல்லும் பாகமிது.

மனு, பிருது, இக்ஷ்வாகு, ககுத்ஸ்தன், மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சாகரர், பகீரதன், ரகு, அஜன், தசரதன் என்று பரம்பரைகூறி, தசரதனது புத்திரர்கள் இவர்களென்றுகூறி, தசரதன் மகவின்றி வருந்தியது முதற்கொண்டு புத்திரர்கள் பிறந்து வளர்ந்த வாற்றையுங்கூறி, தன்வேள்விகாக்க ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களை யழைத்துக்கொண்டு வந்ததையும் தாடகாதாடகேயர்களை வென்று வேள்விமுடித்துத் தான் மிதிலைக்கு வந்ததையும், சொல்லி அஸ்த்ரங்கள் ராமலக்ஷ்மணர்களுக்கு ஏவல் செய்யுந் தன்மையைக் கூறுகின்றான் கௌசிகன் ;—

113. ஆய்ந்தேற வுணரைய அயற்கேயு மறிவரிய
காய்ந்தேவில் உலகனைத்துங் கடலோடு மலையோடும்
தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈந்தேனும் மனமுட்க இவற்கேவல் செய்குனவால். 28

ஐய	அரசனே !	தீந்து ஏற	கரிந்துபோம்படி.
அயற்கே உம் அறிவு அரிய	பிரமதேவனுக்கும் அறிய முடியாத இவ்விராமபிரானது மஹிமைகளை	சுடுகிற்கும்	எரிக்கவல்ல
ஆய்ந்து ஏற உணர்	ஆராய்ந்து முழுவதும் அறிவாயாக ;	படைக்கலங்கள்	அஸ்த்ர சஸ்த்ரங்கள்,
காய்ந்து ஏவில்	கோபங்கொண்டு பிரயோகித்தால்	செய் தவத்தால் ஈந்தேனும்	செய்த தவப்பயனால் பெற்றுக் கொடுத்தயானும்
உலகு அனைத்தும்	எல்லாவுலகங்களையும்	மனம் உட்க	மனம் வெள்கும்படி.
கடலோடும் மலையோடும்	கடல்களுடனும் மலைகளுடனும்	இவற்கு ஏவல் செய்குன	இவ்விராமபிரானுக்குக் குற்றேவல்புரிகின்றன.

* * *—இராமனுக்கு அஸ்த்ர சஸ்த்ரங்களை விச்வாமித்திரனாகிய தான் பயில்வித்தபடியையும், இராமனுக்குப் படைக்கலமீயும் பெருமை தனக்கு மிகுந்த தவத்தின்பயனாலொழியக் கிடைத்திராதென்பதையும், தன்னிடத்திற்காட்டிலும் இராமனிடத்தில் படைக்கலங்கள் மிக்க அன்புகொண்டு தொண்டுபூண்டொழுகுகின்றமையையும் தெரிவித்தானாயிற்று. ... ... *

(ஸ்ரீராமபிரான் மஹிமையைக் கூறி முடித்தல்.)

114. கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருங் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்காற் பொடிகண்டாய்
காதலென்ற னுயிர்மேலும் இக்கரியோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு மெனவுரைத்தான். 29

கோதமன் தன் பன்னிக்கு	கௌதம பத்னியான அஹல்யாதேவிக்கு	என் தன்	எனக்கு
முன்னை உரு கொடுத்தது	நிஜவடிவத்தைத் தந்தருளியது	உயிர் மேலும்	என்னுயிரினிடத்துள்ளதைக் காட்டிலும்
இவன்	இவ்விராமபிரானது	இ கரியோன் பால்	கரிய திருமாலான இவ்விராமபிரானிடத்தில்
போது நின்றது என பொலிந்த	செந்தாமரை மலர் பொருந்தி நின்றது போல விளங்குகின்ற	காதல் உண்டு	அன்பு மிகுதியாகவுண்டு;
		இவன் தன் வரலாறும்	இவ்விராமனுடைய திவ்விய சரித்திரமும்
பொலன் கழல் கால் பொடி கண்டாய்	பொன்னாலாகிய வீரக்கழலையணிந்த திருவடியின் தூளியேகாண்;	புயம் வலியும்	புஜபலமும்
		ஈது என உரைத்தான்	இதுவாம் - என்று கூறி முடித்தான்.

* * *—இப்படலத்திற்கூறிய விஷயங்களைச் சுருங்கச் சொல்லி முடித்தது இச்செய்யுள். பத்நீ என்ற வடசொல் பன்னியெனத் திரிந்தது. ... 29

11. குலமுறை கிளத்து படலம் முற்றிற்று.

12 கார்முகப் படலம்

கார்முகமென்னும் வடசொல் வில்லென்னும் பொருளுடைத்து; ஸ்ரீ ராமபிரான் ஜனகசக்ரவர்த்தியினால் ஸீதாவிவாஹ சுல்கமாக வைக்கப்பட்டிருந்த சிவதனுசை நாணேற்றத் தொடங்கி முறித்தமையைக்கூறும் பகுதி இது.

(சதானந்தன் சிவதனுசைப் பற்றிக் கூறுதல்.)

115. அன்றுமுத லின்றளவு மாருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமில்லை யென்றிருந்தே மிவனேற்றின்
அன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான். 24

அன்று முதல் இன்று அளவும்	அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில்	மணம் இல்லை என்று இருந்தேம்	(சீதைக்கு) விவாஹமே நடைபெறுதென்று நிச்சயித்திருந்தோம்;
ஆரும்	எந்த அரசரும்	இவன் ஏற்றின்	இவ்விராமன் சிவதனுசை நாணேற்றினானாகில்
இந்த சிலை அருகு சென்றும் இலர்	இந்த சிவதனுசின் அருகிற் கூடப் போனதில்லை;	நன்று	அது நன்மை தருவதாகும்; (அப்போது)
போய் ஒளித்த தேர் வேந்தர்	இரிந்தோடி யொளித்துக் கொண்ட தேர் வீரரான மன்னவர்	மலர் குழல் சீதை நலம்	மலரணிந்த கூந்தலையுடைய சீதையினழகு
திரிந்தும் இலர்	திரும்பி வந்தாருமில்லர்;	பழுது ஆகாது	வீணாகாது
இனி	இக்காரணம்பற்றி	என்றான்	என்று கூறிமுடித்தான்.

(இராமன் சிவதனுசை இலேசாக எடுத்தல்.)

116. ஆடக மால்வரை யன்னது தன்னைத், தேடரு மாமணி சீதையெனும் பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும், ஏடவிழ் மாலையிதென்ன வெடுத்தான். 33

மால் ஆடகம் வரை அன்னது தன்னை	பெரிய பொன்மலை போன்றதான அச்சிவதனுசை	நீட்டும்	நீட்டுதற்கு உரிய
இது	இந்த வில்லானது	ஏடு அவிழ் மாலை	இதழ்கள் மலர்கின்ற மாலையாகும்'
தேட அரு மா மணி சீதை எனும் பொன் சூடகம் வால் வளை சூட்டிட	தேடிப் பெறுதற்கருமையான சிறந்த ரத்னம் போன்றவளும் சீதையெனப்படுபவளுமான பொன்வளையையும் வெண்ணிறச் சங்குவளையையுமுடையவளுக்குச் சூட்டும் பொருட்டு	என்ன	என்றெண்ணுமாறு
		எடுத்தான்	இலேசாகவெடுத்தான் (இராமன்).

* * * அரசர்கள் பலரும் தொடவும் கூசிப் பின்வாங்கும்படியான அந்தச் சிவதனுசை இராமபிரான் ஸீதாபிராட்டிக்குச் சூட்டுமாறு வைத்திருக்கும் பூமாலையொன்றை யெடுப்பதுபோல அநாயாஸமாக எடுத்தனனென்க. இராமன் இந்த வில்லையெடுத்தது ஸீதா விவாஹத்திற்குக் காரணமாவதால் அதனை ஸீதைக்குச் சூட்ட நீட்டும் மாலையாகக் கூறினது மிகப் பொருத்தம். 33

(இராமன் சிவதனுசை முறித்ததனால் பேரோசை தோன்றுதல்.)

117. தடுத்திமையாம லிருந்தவர் தாளின், மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினி லியாரு மறிந்திலர் கையான், எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார். 34

தடுத்து இமையாமல் இருந்தவர் யாரும்	(பார்ப்பதற்குத்) தடை செய்வதனால் (அங்ஙனம் தடை செய்யாமலிருக்கும் பொருட்டுக்) கண்களைக் கொட்டாமலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சபையோர் யாவரும்	கடுப்பினில் நோக்கார்	செயலின் வேகத்தால் காணமாட்டாதவராகி
		அறிந்திலர்	அறியாதவராயினர் ;
			(ஆயினும்)
தாளில் மடுத்ததும்	(ஸ்ரீராமன் தனது) பாதங்களால் (அவ்வில்லின் முனையை) மிதித்ததையும்	கையான் எடுத்தது கண்டனர்	ஸ்ரீராமன் தனது கையினால் வில்லையெடுத்ததைப் பார்த்தனர் ;
நாண் நுதி வைத்ததும்	(அவ்வில்லை வளைத்து) நாணை மற்றொரு முனையில் வைத்ததையும்	இற்றது கேட்டார்	அவ்வில் முறிந்த பேரொலியைக் கேட்டார்கள்.

* * *—பல்லாயிரக்கணக்கானவர் தூக்கி வரும்படி பெருந் தோற்றத்துடனிருந்த சிவதனுசை இராமபிரான் எடுத்து நாணேற்றுவதை எங்கே காணாமற் போய்விடுவோமோ! என்ற எண்ணத்தினால் கண்ணைக்கொட்டாது பார்த்திருந்த சபையோர் யாவரும் இராமன் வில்லை யெடுத்ததைக் கண்டார்கள்; உடனே அது முறிந்த பேரொலியைக் கேட்டார்கள்; இத்தனையேயல்லது அதனை வளைத்து நாணேற்றியதைக் காணமாட்டாதவராயினர் என்றதாயிற்று. ... ... *

(மிதிலாநகரத்தார் உகந்து கூறியவற்றைத் தெரிவித்தல்)

118. நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரநயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறுங் குரிசிற்குமன்னதேயாம்
தம்பியைக் காண்மினென்பார் தவமுடைத்துலகமென்பார்
இம்பரிந்நகரில்தந்த முனிவனை யிறைஞ்சுமென்பார். 43

நம்பியை காண	இராமபிரானது வடிவழகைக் காண்பதற்கு	தம்பியை காண்மின் என்பார்	(மூத்தவனான இராமனிருக்கட்டும் ;) தம்பியின் வடிவழகைக் காணுங்கோளென்பார் சிலர் ;
நங்கைக்கு	சீதாபிராட்டிக்கு	உலகம் தவம் உடைத்து என்பார்	(இப்படிப்பட்ட பேரழகுள்ளவர்களைக் கொண்டுள்ளதனால்) இவ்வுலகம் பெரும் பாக்கியம் பெற்றதென்று சொல்லுவார் சிலர் ;
ஆயிரம நயனம் வேண்டும் என்பார்	ஆயிரங்கண்கள் வேண்டுமென்று சொல்லுவார் ஒரு வகுப்பினர் ;	இம்பர் இந் நகரில் தந்த	இவ்வுலகில் இந்த மிதிலாபுரியில் இக்குமாரர்களைக் காட்டிக்கொடுத்த
கொம்பினை	வஞ்சிக்கொடி போன்ற சீதையின் வடிவழகை	முனிவனை	விச்வாமித்ர முனிவரை
காணும் தோறும்	பார்க்கிற பார்வை ஒவ்வொன்றுக்கும்	இறைஞ்சும் என்பார்	தொழுங்கள் என்று சொல்லுவார் சிலர்.
குரிசிற்கும்	புருஷச்ரேஷ்டனான இராமபிரானுக்கும்		
அன்னதே ஆம் என்பார்	அப்படியே ஆயிரங்கண்கள் வேண்டுமெனபார் மற்றொரு வகுப்பினர் ;		

* * *—விவாஹ காலங்களிற் பலர் கூடுவர்களாதலால் அவரவர்கள் தம் தம் கருத்துக் கிணங்கப் பலவாறு பேசுதல் இயல்பு. மணமகன் வகுப்பிற் சேர்ந்தவர்கள் மணமகனைப் பாராட்டிக் கூறுவர் ; மணமகள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவளது நலத்தைக் கொண்டாடிக் கூறுவர்கள். ஸாதாரண ஜனங்கள் ஸாதாரண விஷயங்களைக் கூறுவர்கள். இஃது எங்கும் நிகழ்வதாகும். இங்கே திவ்ய தம்பதிகளைக் காணக் குழுமியவர்களில் இங்ஙனே பேச்சுவகைகள் நிகழ்ந்தனவாம். ஸ்ரீராமபிரானது பக்ஷத்திற் சேர்ந்தவர்கள் 'நம்பியைக் காண நங்கைக்கு ஆயிர நயனம் வேண்டும்' என்றார்களாம். இராமனது வடிவழகைப் பிராட்டி இரு கண்களாற் கண்டு தலைக்கட்ட முடியாதாதலால் ஆயிரங் கண்கள் படைக்க வேண்டும் என்றவாறு. இதைக் கேட்ட பிராட்டி வகுப்பினர் 'நமது ஸீதையின் வடிவழகின் திறத்தை யுணராமலன்றோ இவர்கள் இங்ஙனங் கூறினார்கள்!' என்று கொண்டு 'கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கு மன்னதேயாம்' என்றார்கள். இங்குச் சொல்லின் வாசியை யுணரவேண்டும். 'நம்பியைக் காண' என்றது அங்கு; இங்கு, 'காணுந் தோறும்' என்றது. இராமனுடைய ஸகலாவயவ ஸௌந்தரியத்தைக் காண ஸீதைக்கு ஆயிரங் கண் வேண்டும்; ஸீதையின் ஒவ்வோரவயவத்தையுங் காண இராமனுக்கு ஆயிரங் கண் வேண்டும்—என்றவாறு. வேறு சிலர் 'இந்த விவாதம் நமக்கு ஏதுக்கு? இந்த சர்ச்சையில் நாம் தலையிட வேண்டா' என்று கொண்டு, தம்பியைக் காண்மி னென்பாரும் தவமுடைத்து உலகமென்பாரும், முனிவரையிறைஞ்சு மென்பாருமாய் நின்றனராம். மஹா ஸௌந்தர்யசாலிகளான ராஜகுமாரர்களை இவண் அழைத்துக் கொண்டு வந்த விச்வாமித்ர முனிவரிடத்தில் நன்றி பாராட்டி வணங்க வேண்டுமென்பதே முடிவு வார்த்தையாக நின்றது. ... ... *

(பிரிவுத்துயரால் ஸீதாபிராட்டி இரங்குவது கூறுதல்)

119. நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும் தூணுலாவு தோளும் வாளியூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும் காணலாகுமாகினுவி காணலாகுமே கொலாம். 47

(இராமனுடைய தோளழகைக் கண்டு)

நாண் உலாவு மேருவோடு	வெட்கங் கொள்கின்ற மேரு மலை போன்ற வில்லுடனே
நாண் உலாவு பாணியும	அவ்வில்லின் நாணியிற் படிந்த திருக்கையும்
தூண் உலாவு தோளும்	தூணையொத்த தோள்களும்
வாளி ஊடு உலாவு தூணியும	அம்புகள் உட்புறத்திலே தங்கியுள்ள அம்பறாத் தூணியும்
வாள்நிலாவின் நூல் உலாவு மாலை மார்பும்	ஒளி பொருந்திய நிலவைப் போன்ற பூணூல் விளங்குகின்ற வெற்றிமாலை யணிந்த மார்பும்
மீளவும் காணல் ஆகும் ஆகின்	மறுபடியும் காண நேருமானால்
ஆவி காணல் ஆகும்	என்னுயிரைக் காணக்கூடும்.

* * *—ஆண்டாள் "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்" என்று கண்ண பிரானோடு கலவி நேர்ந்தால் தான் தன்னுயிர் தங்கு மென்றாள். இவள் அங்ஙனஞ் சொல்லாது ஸ்ரீ ராம பிரானது திருக்கைகள் முதலானவற்றை மீளவுமொருவிசை கண்டால் தான் தன்னாவி தங்கு மென்கிறாள். மீண்டும் காண நேராதாயின் உயிரை யிழப்பேன் என்று சொல்லக் கருதி, அது அச்லீல வார்த்தையாகு மென்றுவிட்டுக் "காணலாகுமாகில் ஆவி காணலாகும்" என்கிறாள். விற் பிடித்த கையழகையும் தூணையொத்த தோளழகையும், பின்புறத்தில் அம்பறாத் தூணி யமைந்த அழகையும், வெற்றிமாலையும் பூணுநூலும் தொங்குகின்ற திருமார்பினழகையும் மறக்க மாட்டாது தவிக்கின்றாள் சீதை.

நாணுலாவு மேருவோடு—மேருமலை போன்ற வில் என்ன வேண்டுமிடத்து மேருவென்றே சொன்னது முற்றுவமை; "தாவி வையங் கொண்ட தடந் தாமரைகட்கே" என்ற நம்மாழ்வார் பிரயோகம் நினைக்கத் தக்கது. ஒரு சமயம் சிவபிரானுக்குத் தனுசாக இருந்தது மேருமலை; அச்சிவ தனுசைத் தனது ஸ்பர்ச மாத்திரத்தினால் இற்று முறியச்செய்த கையைக் கண்டால் அது நாணும் என்ற கருத்துப்பட 'நாணுலாவு மேருவோடு' என்றது. ... ... *

(இதுவுமது)

120. பெய்கடற் பிறந்தயல் பிறக்கொணு மருந்துபெற்று
ஐயபொற்கலத்தொடங்கை விட்டிருந்தவாதர்போல்
மொய்கிடக்குமண்ணல்தோள் முயங்கிடாது முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்பதென்கொலோ? 54

பெய் கடல் பிறந்து	பலவளங்களையும் தந்த திருப்பாற்கடலிலே தோன்றி
அயல் பிறக்க ஒணு	வேறோரிடத்தில் தோன்ற முடியாத
மருந்து	தேவாமிருதத்தை
பெற்று	காணப் பெற்றுவைத்தும் (அந்த அமிருதத்தை)
ஐய பொன் கலத்தொடு	அழகிய பொற்கலசத்தோடு
அம் கை விட்டிருந்த	அகங்கையில் கொள்ளாது விட்டிருந்த
ஆதர் போல்	மூடர் போல
மொய் கிடக்கும் அண்ணல் தோள்	வலிமை தங்கிய இராமனது திருத்தோளை (காணப் பெற்றும்)
முன்னமே முயங்கிடாது	அப்போதே தழுவிக்கொள்ளாமல்
கை கடக்க விட்டிருந்து	கை சோர்ந்து போகும்படி விட்டிருந்து
கட்டுரைப்பது	இப்போது பல மொழிகளைக் கூறியழுவதனால்
என் கொல்	என்ன பயனாகும்?

***—பரம போக்யமான தேவாமிருதம் கண்ணிலே பட்டால் அதையுடனே பொற் கலத்தோடு கைப்பற்றுவது முறையாயிருக்க, அது செய்யாது கை சோர விட்ட மூடர்போல, கண்ணால் நுகரும் அமுதமாகிய ஸ்ரீராம பிரானைக் காணக் கிடைத்த போதுஉடனே யான் தழுவிக் கொள்ளாமற் கைகழிய விட்டு இப்போது பல சொல்லிப்புலம்புவது பேதைமை யென்று தன்னில் தான் நொந்துரைத்தாள் சீதாபிராட்டி யென்க. ... ... *

கார்முகப்படலம் முற்றிற்று.

கார்முகப்படலத்திற்கு அடுத்தபடியாக, எழுச்சிப்படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய்படலம், புனல்விளையாட்டுப்படலம், உண்டாட்டுப்படலம், எதிர் கோள்படலம், உலாவியற்படலம் என்று சில படலங்கள் கம்பரால் அமைக்கப் பட்டுள்ளன. இவை பெரும்பாலும் வான்மீகி ராமாயணத்தோடு தொடர்பற்றவை யென்று விடப்பட்டன. ஜநகசக்ரவர்த்தியின் தூதுவர் அயோத்திக்கு வந்து தசரத மன்னவனிடம் திருமணவோலை கொடுக்க, அது பெற்ற மன்னவன் மக்களது திருமணத்தின் பொருட்டு மிதிலைமாநகர்நோக்கி எழுந்த செய்தியைக் கூறுவது எழுச்சிப்படலம். அப்போது மன்னவனுடன் சென்ற சேனைகள் சந்திர சைலமென்னும் மலையைக் கண்டதைப்பற்றிக் கூறுவது வரைக்காட்சிப்படலம். மன்னவன் அம்மலையினின்று தன் சேனையோடு புறப்பட்டுச் சோணநதியைச் சேர்ந்து அவ்வாற்றங்கரையிலிருந்த சோலையில் தங்கினுகை, உடன் சென்றவர்கள் அச்சோலையிற் பூப்பறித்தலைக் கூறுவது பூக்கொய்படலம். பூக்கொய்த பெண்களும் ஆண்களும் நீர்நிலைகளில் விளையாட்டு நிகழ்த்தியமையைக் கூறுவது புனல்விளை யாட்டுப்படலம். உடன்சென்ற சேனைகள் கள்ளுண்டு களித்து இன்பமனுபவித் ததைத் தெரிவிப்பது உண்டாட்டுப்படலம். சேனைகளோடு மிதிலைமாநகர்க்கு வந்து சேர்ந்த தசரதசக்ரவர்த்தியைச் சனகராசன் தனது பரிவாரங்களுடனே வந்து எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப் போகின்ற செய்தியைக் கூறுவது எதிர்கோட் படலம். இப்படல மொன்று தவிர மற்றைப்படலங்கள் பெரும்பாலும் கவிஸமயத் திற்கேற்ப அமைக்கப்பட்டவையாதலால் இவற்றை விட்டிட்டு உலாவியற்படலத்தி னின்று சில பாடல்கள் கொள்ளப்படுகின்றன. .... *

---

19. உலாவியற் படலம்

மிதிலைமாநகரத்து வீதியில் இராமபிரான் ஊர்கோலம்
வருகின்ற காலத்து நிகழ்ந்ததைக் கூறும் பகுதியிது.

(இராமனைக்காண மிதிலைப்பெண்கள் வந்து நெருங்குதல்)

121. அரத்தமுண்டனையமேனி யகலிகைகளித்தகாலும்
விரைக்கருங்குழலிக்காக வில்லிறநிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந்தோளுங்காண மறுகினின்வீழுமாதர்
இரைத்துவந்தமிழ்தின்மொய்க்கு மீயினமென்னலானார்.

அரத்தம் உண்டு அனைய மேனி அகலிகை களித்த தாளும்	செந்நிறத்தை யுட்கொண்டாற்போன்ற [செந்நிறமான] வடிவத்தையுடைய அஹல்யை களிப்படைதற்குக் காரணமான (இராமனது) திருவடிகளையும்
விரை கரு குழலிக்கு ஆக வில் இற நிமிர்ந்து வீங்கும் வரை தட தோளும்	வாசனை கொண்ட கரிய கூந்தலையுடைய பிராட்டியைப் பெறுவதற்காகச் சிவதனுசு முறியும்படி உயர்ந்து பூரித்த மலைபோன்ற (அவனது) திருத்தோள்களையும்
காண	கண்டு களிப்பதற்காக
மறுகினின் வீழும் மாதர்	ராஜவீதிகளிலே வந்தடைகிற மகளிர்கள்
இரைத்து வந்து அமிழ்தின் மொய்க்கும் ஈ இனம் என்னல் ஆனார்	ஆரவாரஞ் செய்து கொண்டு அமிருதத்திலே மொய்க்கிற ஈக்களின் கூட்டமென்னும்படியானார்கள்.

* * *—மிதிலைமாநகரின் ராஜவீதிகளில் இராமபிரானது வடிவழகையும் மஹிமையையும் புகழ்ந்து கூறிக்கொண்டு வந்து சேர்ந்த பெண்கள் "வெல்லப் பானையில் ஈ மொய்க்கிறதுபோல" என்னுமுவமைக்கு ஏற்றவர்களாயினரென்றவாறு. ... ... *

(இராமபிரானை மிதிலைப் பெண்டுகள் காணுதல்)

122. வீதிவாய்ச் செல்கின்றான்போல் விழித்திமையாதுநின்ற
மாதரார்கண்களூடே வாவுமான் தேரிற்செல்வான்
யாதினுமுயர்ந்தோர்தன்னை யாவர்க்குங் கண்ணனென்றே
ஓதியபெயர்க்குத்தானே உறுபொருளுணர்த்திவிட்டான். 6

வீதிவாய் செல்கின்றான் போல்	மிதிலைநகர் வீதியிலே போகிறவன்போல
விழித்து இமையாது நின்ற மாதரார் கண்களூடே	இமைக் கொட்டாமலே உற்று நோக்கிக் கொண்டிருந்த அப்பெண்டுகளின் கண்களிடத்திலே
வாவும் மான் தேரில் செல்வான்	தாவிப் பாய்கின்ற குதிரைகளைப் பூட்டிய தேரின்மீது செல்பவனான இராமன்,
யாதினும் உயர்ந்தோர்	எல்லாப் பொருள்களினுஞ் சிறந்த பெரியோர்கள்
தன்னை கண்ணன் என்று ஓதிய பெயர்க்கு	தன்னைப்பற்றிக் கண்ணனென்று கூறியுள்ள திருநாமத்திற்கு
உறுபொருள்	தகுந்த பொருளை
தானே யாவர்க்கும் உணர்த்தி விட்டான்	தானே அனைவர்க்கும் அறிவித்து விட்டான்.

* * *—இராமனைக் கண்ணனென்றும், கண்ணனை இராமனென்றும் நூல்களில் வழங்குவதுண்டு; ஸ்ரீமந்நாராயண மூர்த்தி யொருவரே இராமனாகவும் கண்ணனாகவும் திருவவதரித்தருளினபடியால் இதிற் பொருந்தாமை யொன்றுமில்லை. ஆக இராமனுக்குக் கண்ணனென்கிற பெயரு முண்டென்று கொள்க. கண்ணனென்னுஞ் சொல் க்ருஷ்ண: என்னும் வடசொல்லின் திரிபாதலால் அதற்கு கருநிற முடையவனென்றும், யாவர் மனத்தையும் கவர்ந்து இழுக்கின்றவனென்றும் பொருளுண்டு. கண்ணனென்று தமிழ்மொழியாகவே கொண்டால், யாவரிடத்தும் கண்ணோட்டமாகிய அருளையுடையவனென்றும், யாவர்க்கும் கண்ணைப் போன்று அருமையாயிருப்பவனென்றும், ஞானக் கண்ணை யளிப்பவனென்றும், எல்லாவிடத்தும் உள்ளவனென்றும் பொருள்படும். இப்போது இராமன் யாவர் மனத்தையும் கவர்ந்து இழுக்குந் தன்மையினாலும், எல்லா மகளிருடையவும் கண்வழியிற் செல்லுதலாலும் கண்ணனென்ற பெயரையும் அந்வர்த்தமாக்கிக் கொண்டானென்றதாயிற்று. ... ... (6)

(இராமனைக் கண்ட மாதர்களின் அற்புதமான ஈடுபாடு கூறுதல்.)

123. தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரையொத்தார். 19

- தோள் கண்டார் } இராமனது தோளழகைக் கண்ட மாதர்கள்
- தோளே கண்டார் } (மற்றோரவயவத்தைக் காணவில்லாமல்) தோளழகை மட்டுமே கண்டுகொண்டிருந்தார்கள்;
- தொடு கழல் கமலம் அன்ன தாள கண்டார் } வீரக்கழலை யணிந்த திருவடித் தாமரைகளைக் கண்ட மாதர்கள்
- தாளே கண்டார் } திருவடி யழகொன்றையே கண்டுகொண்டிருந்தார்கள்;
- தட கை கண்டாரும் அஃதே } பெரிய திருக்கைகளி னழகைப் பார்த்தவர்களும் அப்படியே;

(ஆதலால்)

- வாள் கொண்ட கண்ணார் } வாளையொத்த கண்களையுடைய மாதர்களுள
- வடிவினை முடிய கண்டார் யாரே } இராமனது வடிவழகு முழுவதையுங் கண்டவர் யாவருளர்? (ஒருவருமில்லை.)

(அங்ஙனம் இராமனது வடிவை முழுவதும் பாராமல் ஏகதேசமே பார்த்தவர்கள்)

- ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார் } எம்பெருமான் பெரிய விசுவரூபத்தைக் கொண்டு நின்ற வக்காலத்தில் அவ்வுருவத்தின் ஒவ்வொரு பகுதியையே கண்டவர்களை யொத்தார்கள்.

***—ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனி யழகில் ஈடுபட்ட ஸ்ரீபராசர பட்டர் "एकैकस्मिन्परमवयवेऽनन्तसौन्दर्यमग्नं सर्वं द्रक्ष्ये कथमिति मुधा मा मथा मन्दचक्षुः—ஏகைகஸ்மிந் பரமவயவே அநந்த ஸௌந்தர்ய மக்நம் ஸர்வம் த்ரக்ஷ்யே கதமிதி முதா மா மதா மந்த சக்ஷுஃ!'' என்கிற சுலோகத்தினால் தமது திருக்கண்ணை விளித்து 'வாராய் கண்ணே! அரங்கனுடைய ஒவ்வோரவயவமும் எல்லை காணவொண்ணாத அழகுடையதாதலால் ஒவ்வோ ரவயவத்தினழகிலும் ஆழமூழ்கிக் கிடக்க வேண்டிய நாம் எல்லா அவயவங்களையும் எப்படி யநுபவிக்கப் போகிறோமென்று கவலை கொள்ளாதே' என்று கூறி ஸகலாவயவங்களையும் முற்றூட்டாக அநுபவிக்கப் பெறுமுபாயமொன்று தெரிவித்தருளினர்; அவ்வுபாயம் மிதிலாபுரியிலுள்ள மாதர்க்குத் தெரியாதாதலால் இராமனது ஓரவயவத்தைக் கண்டவர்கள் மற்றோரவயவத்தைக் காண மாட்டாது வருந்தின ரெனப்பட்டது. ... ... *

(ஒருத்தி இராமனைத் தன்னுள்ளத்துக் கொண்டதுபற்றிக் கூறுதல்.)

124. தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல், உய்ய மற்றவ ளுள்ளத் தொடுங்கினான்
வைய முற்றும் வயிற்றி னடக்கிய, ஐயனிற் பெரியா ரினியாவரே. 20

- தையல் சிறு இடையாள் } அழகு பொருந்தியவளும் நுட்பமான இடையை யுடையவளுமாகிய
- ஒரு தாழ்குழல் } தாழ்ந்த கூந்தலையுடையாளொருத்தி
- உய்ய } (வருந்தாமல்) பிழைத்திடும்படி
- அவள் உள்ளத்து ஒடுங்கினான் } (இராமன்) அவளது மனத்திலே யடங்கியிருந்தான்;
- வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய } (ஒருகால்) உலகம் முழுவதையும் தனது திருவயிற்றினுள்ளே அடக்கி வைத்த
- ஐயனின் } அப்பெருமானிற் காட்டிலும்
- பெரியார் இனி யாவர் } பெரியவர் இனி வேறு யாவருளர்.

* * *—பிரளய காலத்தில் உலகங்களை யெல்லாம் தனது திருவயிற்றி லடக்கி வைக்கவல்ல பெருமை வாய்ந்த ஸ்ரீ ராம பகவான், ஒருத்தி வருந்தாமற் பிழைக்கட்டுமென்று அவளது உள்ளத்துளடங்கி யிருந்தான் : அதனால் அவள் தரிப்புற்றாளென்கை. உலகங்களை யெல்லாம் தனது திருவயிற்றின் ஏகதேசத்திலே அடக்குவது எவ்வாறு பெருமையோ, அவ்வாறே தான் ஒருத்தியின் உள்ளத்துளடங்கி நிற்பதும் பெருமையே யென்றதாயிற்று. ... ... *

உலாவியற் படலம் முற்றிற்று.

---

20. கோலங்காண் படலம்.

ஸீதா பிராட்டிக்கு அவளுடைய தோழிமார் பலவகை யலங்காரங்களைச் செய்கிற செய்தியைக் கூறும்பாகமிது. இதுவும் கவியின் கற்பனா சக்தியினாலமைக்கப்பட்ட படலமென்க. ... ... *

(தோழிமார் சீதையை அலங்கரித்தமை கூறுதல்.)

125\. அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்கணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய்தென்ன அழகினுக் கழகுசெய்தார்
இமிழ்திரைப் பரவைஞாலம் ஏழைமை யுடைத்து மாதோ 3

(பிராட்டியின் தோழியர்)

அமிழ் இமை துணைகள் கண்ணுக்கு அணி என அமைக்கும் ஆ போல்	கண்கள் மறைதற்குக் காரணமான மேலிமை கீழிமை யென்னு மிரண்டு இமைகளும் கண்களுக்கு அழகென்று (கடவுளால் இயற்கையில்) அமைக்கப்பட்டிருப்பது போல
உமிழ் சுடர் கலன்கள் நங்கை உருவினை மறைப்பது ஓரார்	வீசுகின்ற வொளியை யுடைய நகைகள் பிராட்டியின் அழகிய வடிவத்தை மறைக்குமே யென்பதை ஆராயாதவர்களாய்
அமிழ்தினை சுவை செய்து என்ன	(இயற்கையாய் இன்சுவை மிக்க தேவாமிருதத்துக்கு(ச் சர்க்கரை கற்கண்டு முதலியவற்றைக்கொண்டு புதிதாக) ருசியுண்டாக்கத் தொடங்குமாபோலே
அழகினுக்கு அழகு செய்தார்	அழகே வடிவான பிராட்டிக்கு (ஆபரணாதிகளினால்) அழகுசெய்யத் தொடங்கினார்கள் ;
இமிழ் திரை பரவை ஞாலம்	ஒலிகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகத்துள்ள ஜனங்கள்
ஏழைமை உடைத்து	(இங்ஙனம்) அறியாமையையே யுடையவர்கள். (மாது, ஓ-ஈற்றசைகள்.)

* * *—*ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதநவிதே: ப்ரஸாதநவிசேஷ:, உபமாநஸ்யாபி ஸகே ப்ரத்யுபமாநம் வபுஸ் தஸ்யா: * என்று ஸாமாந்ய ஸ்த்ரீ யொருத்தி பக்கலிலே ஏறிட்டுப் பேசப்பட்ட பேச்சு உண்மையில் ஸீதா பிராட்டிக்கே தகும். அப்படிப்பட்ட இயற்கை யழகு மிக்க பிராட்டிக்கு ஆபரணாலங்காரம் அவ்வடி வழகை மறைப்பதே யல்லாது அபூர்வமானதோரழகை விளைப்பதன்று ; இது தெரிந்தும் அவளுக்கு ஆபரணாலங்காரம் செய்யப் புக்கது பேதைமையின் பணியே யத்தனை யென்றாராயிற்று. இங்ஙனம் பிராட்டிக்கு அலங்காரம் செய்தவர்கள் அறிவீனர்கள் என்று கூற வேண்டுமிடத்து "ஞால மேழைமை யுடைத்து" என்று உலகத்தையே அறிவற்றதாகச் சொன்னது இப்படி ஸம்பவிக்கு மிடங்களிலெல்லாம் சொல்லத்தக்க வார்த்தை இதுவே யென்று காட்டுதற்காம். இயற்கை யழகோடு செயற்கை யழகுங்

கூடினுல் அழகின் மேலழகாகு மென்று இங்ஙனம் செய்தார்கள் போலு மென்று கவிதானே கருதியதைக் காட்ட "அமிழ்தினைச் சுவை செய்தென்ன" என்ருர். *

(ஸீதாபிராட்டி நடந்து செல்லுதலின் வருணனை.)

126. வல்லியை யுயிர்த்த நிலமங்கை யிவள்பாதம், மெல்லிய வுறைக்கு மெனவஞ்சி வெளியெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளெனத்தன், நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

வல்லியை உயிர்த்த நிலம் மங்கை	பூங்கொடி யென்னலாம்படியான ஸீதாபிராட்டியைப் பெற்ற பூமிதேவி
இவள் பாதம் மெல்லிய உறைக்கும் என அஞ்சி	இவளது மிக மெல்லிய திருவடிகளிலே (தரை) உறுத்தி வருத்தக்கூடு மென்று கருதி யஞ்சி
வெளி எங்கும் பல்லவம் மலர் தொகை பரப்பினள் என	இவள் நடந்துசெல்லும் வெளியிடம் முழுவதிலும் மெல்லிய தளிர்களின் தொகுதியையும் பூக்களின் தொகுதியையும் பரப்பி வைத்தாளோ வென்று பேசலாம்படி
தன் நல் அணி மலர் சுடர் தவழ்ந்திட	தனது சிறந்த ஆபரணங்களிலுள்ள ரத்தினங்களின் காந்தி முன்னே பரவிச் செல்ல
நடந்தாள்	(பிராட்டி) காலால் நடந்து சென்ருள்.

***—பிராட்டி நடந்து செல்லும் போது அவளணிந்து கொண்டுள்ள மிகச் சிறந்த பல்வகையாபரணங்களி லிழைக்கப்பட்டுள்ள ரத்னங்களின் காந்தி எங்கும் பரவியுள்ளது; அந்த காந்தி தரையிலும் பரவியுள்ளதனுல் பிராட்டி அதன் மேலே நடந்து செல்லுமாபோலே காணப்பட்டது; அதைக் கொண்டு, பூமிப் பிராட்டியானவள் தன் மகளான சீதை தரையில் நடந்து செல்லும்போது திருவடிகட்கு நோவு உண்டாகாமைக்காக வெளியிட மெங்கும் மெல்லிய தளிர்களின் தொகுதியையும் மலர்களின் தொகுதியையும் பரப்பி வைத்தனளோ! என்று பேசலாம்படியிருந்ததாம். அனேகவிதமான ரத்னங்களினின்று பலவகைக் காந்திகளும் பரவுதலால் பல்லவத் தொகுதியென்றும் மலர்த் தொகுதி யென்றும் உல்லேகிக்கக் குறையில்லை யென்க. ... ... *

(வஸிஷ்ட மஹரிஷியின் மகிழ்ச்சி)

127. எங்கள்செய் தவத்தினி னிராமனென வந்தோன், சங்கினெடு சக்கர முடைத்தனி முதற்பேர்
அங்கணர சாதலின் அவ்வல்லிமலர் புல்லும், மங்கையிவ ளாமென வசிட்டன் மகிழ்வுற்ருன்.

(ஸீதாபிராட்டியைக் கண்டு)

வசிட்டன்	வஸிஷ்ட மஹரிஷி,
எங்கள் செய் தவத்தினின்	யானும் என்போன்ற முனிவர்களும் செய்த தவத்தின் பயனுல்
இராமன் என வந்தோன்	ஸ்ரீ ராமனுகத் திருவவதரித்தவன்
சங்கினெடு சக்கரம் உடை தனி முதல் பேர் அம் கண் அரசு ஆதலின்	சங்கு சக்கரப் படைகளையுடைய முழுமுதற் கடவுளெனும் புண்டரீகாக்ஷனை ஸ்ரீ மஹாவிஷ்ணுவேயாதலால்
அல்லி மலர் புல்லும் அ மங்கை இவள் ஆம் என	அரவிந்த வாஸினியான அந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியே யிவளாவாள் என்று கருதி
மகிழ்வு உற்ருன்	மிக மகிழ்ந்தான்.

***—"தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ, ராகவத்வே அபவத் ஸீதா." என்று ஸ்ரீ விஷ்ணு புராணம் கூறிற்று; ஸ்ரீ மஹாவிஷ்ணு திருவவதாரம் செய்யும்போதெல்லாம் ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஸஹதர்மிணியாகைக்குத் திருவவதாரம் செய்வளென்கிற தத்துவத்தை மஹர்ஷிகள் உணர்ந்தவர்களாதலால் ஸ்ரீ ராமபிரானை ஸ்ரீ மஹாவிஷ்ணுவென்று ஏற்கெனவே கருதியிருந்ததற்கேற்ப, இப்போது ஜனகராஜன் திருமகளை ஸ்ரீ மஹாலக்ஷ்மியாகவே கருதிக் களித்தனன். தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகள் ராக்ஷஸர்களினுலுண்டான பீடையைத் தவிர்க்கும் பொருட்டுத் திருமாலைக் குறித்துச் செய்த தவத்தின் பயனுகவே இவ்வவதாரம் நிகழ்ந்ததென்று கொண்டு 'எங்கள் செய்தவத்தினினிராமனென வந்தோன்' என்ருர் வஸிஷ்ட முனிவர். ... ...

(பலர் சீதையைக் கைகூப்பித் தொழுதலைக் கூறுவது.)

128. நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும், வையநுகர் கொற்றவனும் மாதவரு மல்லார்
கைகள் தலைபுக்கன கருத்துளது மெல்லாம், தெய்வமென வுற்றவுடல் சிந்தைவச மன்றே. 34

நைவளம் நவிற்று மொழி	நைவளமென்னும் பண்ணை யொப்பப் பேசுகின்ற மதுர வாணியான சீதாபிராட்டி	தலை புக்கன	(அவளை வணங்குதற்காக) அவ்ரவர்களின் தலைமீது பரவசமாகவே சேர்ந்து விட்டன; (ஏனெனில்)
நண்ண வரலோடும்	அணுகி வந்தவளவிலே	கருத்து உளதும் எல்லாம்	(யாவரது) மனமும் மற்றுமுள்ள புத்தி முதலியவை யெல்லாமும்
வையம் நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்	நிலவுலகத்தை அரசாண்டநுபவிக்கின்ற தசரத சக்ரவர்த்தியும் வஸிஷ்ட விச்வாமித்ராதிகளான முனிவர்களும் தவிர மற்றையோருடைய	தெய்வம் என உற்ற	(அவளைத்) தெய்வமென்றே கருதின.
கைகள்	கைகளெல்லாம்	உடல் சிந்தை வசம் அன்றே	உடம்பு மனத்தின் வசப்பட்டதன்றே?

***—யாவரும் பிராட்டியைத் தெய்வமென்றே கருதியதனுல் சிரமிசைக் கரங் குவித்து வணங்கினுர்களென்கை, 'வையநுகர் கொற்றவன்' என்னுஞ் சொல்லில் இராமபிரானு மடங்குவன். தசரதன், ராமன், மஹர்ஷிகள் தவிர ஏனையோர் யாவரும் சீதையை அவசமாக வணங்கினரென்றதாயிற்று. *

கோலங் காண் படலம் முற்றிற்று.

---

21. கடிமணப் படலம்.

ஸ்ரீ ராமபிரான் முதலியோருடைய திருக்கலியாணத்தையுணர்த்தும் பாகமிது.

(ஜனகசக்ரவர்த்தி பிராட்டியை இராமனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தல்)

129. கோமகன்முன் சனகன் குளிர் நன்னீர், பூமகளும் பொருளும்மென நீயென்
மாமகள் தன்னெடு மன்னுதி யென்னுத், தாமரை யன்ன தடக்கையி னீந்தான். 87

கோமகன் முன்	சக்ரவர்த்தியின் திருமகனுருக்கெதிரே நின்று	பொருளும் பூமகளும் என	பரம்பொருளாகிய திருமாலும் மலர்மகளான திருமகளும் போல
சனகன்	ஜநகமஹாராஜன்		
நீ	(ஸ்ரீராமா!) நீ,		

என் மா மகள் தன்னொடு	எனது திருமகளான ஸீதையுடனே	குளிர் நல் நீர்	குளிர்ந்த தீர்த்தத்தைத் தாரைவார்த்து
மன்னுதி	நிலைபெற்று வாழ்வாயாக'	தாமரை அன்ன தட கையின்	(இராமபிரானது) செந்தாமரை மலர்போன்ற வலத் திருக்கையிலே
என்னா	என்று சொல்லி	ஈந்தான்	கொடுத்தான்.

* * *—ஸ்ரீ ராமபிரானை ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகவும், ஸீதையை ஸ்ரீ மஹாலக்ஷ்மியாகவும் ஜனக சக்ரவர்த்தி தெரிந்துகொள்ளாதவரல்லர். அங்ஙனம் தெரிந்துகொண்ட அவர் சொல்லவேண்டிய வார்த்தை என்ன? 'தேவரீருடைய தேவியார் இங்குத் தேவரீருக்காக வளர்கின்றாள்; இவளைத் தேவரீர் திருவுள்ளம்பற்றி யருளவேணும்' என்று சொல்லவேண்டும். அங்ஙனம் சொல்லாது, ஸீதையைத் தன்மகளாகவும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஸ்ரீமஹாலக்ஷ்மியும் வேறு வ்யக்திகள் போலவும் காட்டிப் பேசியது பொருந்துமோ? வான்மீகத்திலும் "இயம் ஸீதா மம ஸுதா" [இந்த ஸீதை என்னுடைய மகள்] என்று சொன்னதாகக் காண்கிறது; இவை கூடுமோ வென்று சங்கை தோன்றும். ஸ்ரீ ராமசந்திர பகவானை நோக்கி "பவாந் நாராயணோ தேவ:—நீ நாராயணமூர்த்தி" என்றால் அதற்கு அவன் மகிழ்ச்சி காட்டாமல் *ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம் * என்று சொல்லி, தனக்கு தசரதாத்மஜத்வமே உகப்புக் குறுப்பு என்று காட்டி நின்றான்; அதுபோல ஸீதையும் தனக்கு ஸ்ரீமஹாலக்ஷ்மீத்வத்தைச் சிறப்பாகக் கொள்ளாதே, ஜாநகீ, ஜநகாத்மஜா என்னுமதையே சிறப்பாகக் கொண்டிருப்பதறிந்து ஜநக சக்ரவர்த்தி சொல்லும் வார்த்தையாகையாலே இதில் பொருந்தாமையொன்றுமில்லை யென்க. [பூமகளும் பொருளும் என நீ என் மாமகள் தன்னொடு மன்னுதி] சீதைக்கு லக்ஷ்மியையும், இராமனுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவையும் உவமை கூறியது அவதார நிலைமைக்கு ஒக்கும். ... ... *

(ஸ்ரீராமன் ஸீதையை அக்நிஸாக்ஷிகமாகப் பாணிக்ரஹணஞ் செய்தல்)

130. வெய்ய கனல்தலை வீரனு மந்நாள், மையறு மந்திரமுற்றும் வழங்கா
நெய்யமை யாவுதி யாவையும் நேர்ந்தான், தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான். 90

வீரனும்	மஹாவீரனான ஸ்ரீராமனும்	நெய் அமை ஆவுதியாவையும் நேர்ந்தான்	நெய்யினாலாகிய ஆஹுதிகளெல்லாவற்றையும்முறைப்படி பெய்தவனாய்
அந் நாள்	அப்பொழுது		
மை அறு மந்திரம் முற்றும வழங்கா	(வர்ணஸ்வராதிகளில்) குற்றமற்ற வைதிகமந்த்ரங்கள் முழுவதையும் உச்சரித்து	தையல் தளிர் கை	ஸீதா பிராட்டியினது தளிர் போன்ற திருக்கையை
வெய்ய கனல் தலை	வெவ்விய அக்னியினிடத்திலே	தட கை பிடித்தான்	(தனது) பெரிய திருக்கையினால் பிடித்தான்.

(ஸ்ரீராமன் பெரியோரை வணங்கிப் பிராட்டியோடு தன் மாளிகை புகுதல்)

131. மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார், முற்றிய மாதவர் தாண்முறை சூடிக்
கொற்றவனைக் கழல் கும்பிட்டோடும், பொற்றொடி கைக்கொடு நன்மனை புக்கான். 93

(ஸ்ரீராமபிரான்)		மகிழ்ந்தார் முற்றிய மாதவர்	(தனது விவாஹத்தைக் கண்டு) மகிழ்ச்சி கொண்டவர்களாகிய (வஸிஷ்டாதிகளான) மஹா தபஸ்விகளினுடைய
மற்று உள செய்வன செய்து	இன்னும் செய்யத்தக்க விவாஹச் சடங்குகளை யெல்லாம் செய்து முடித்து		

தாள் முறை சூடி	திருவடிகளை முறைமைப்படி தலைக்கு அணியாகவணிந்து [நமஸ்கரித்து]	பொன் தொடி கை கொடு நல் மனை புக்கான்	பொன் வளையை யணிந்துள்ள ஸீதையின் கையைப் பிடித்துக்கொண்டு அழகிய தனது மாளிகையினுட் சென்றான்.
கொற்றவனை கழல் கும்பிடலோடும்	(தந்தையான) தசரத சக்ரவர்த்தியையும் பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்தவுடனே		

* * *—பாணிக்ரஹணமானபின் மற்றுஞ் செய்யவேண்டிய சடங்குகளையும் செய்து தலைக்கட்டி, நமஸ்கரிக்கத் தக்கவர்களை யெல்லாம் நமஸ்கரித்து, தன்னிடஞ் சென்று செய்யவேண்டிய 'ப்ரவிச்ய ஹோமம்' என்னுஞ் சடங்கைச் செய்வதற்காக 'வரக்ருஹமென்று அமைக்கப்பட்டிருந்த தன் விடுதிக்குச் சென்றானிராமன். ப்ரவிச்யஹோம மென்பது நினைவுக்கு வரும்படியாகவே 'நன்மனை புக்கான்' என்றது. .... *

(அப்போது பலவகை மங்கள த்வனிகள் மிகுதல்)

132. ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம், ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண், டார்த்தன வண்டின மார்த்தன வேலை. 94

	(அப்பொழுது)	பல் கலை ஆர்த்தன	இதிஹாஸ புராண நூல்கள் பலவும் முழங்கின ;
பேரிகள் ஆர்த்தன	மங்கல பேரிகைகள் முழங்கின ;	பல்லாண்டு ஆர்த்தன	மங்களாசாஸன த்வனிகளும் கிளம்பின ;
சங்கம் ஆர்த்தன	சங்குகள் முழங்கின ;	வண்டு இனம் ஆர்த்தன	(பூமாலைகளில் மொய்க்கிற) வண்டுகளின் கூட்டங்களும் ரீங்காரம் செய்தன ;
நால் மறை ஆர்த்தன	நான்கு வேதங்களும் முழங்கின ;	வேலை ஆர்த்தன	சுபசகுனமாகக் கடலோசையுமுண்டாயது.
வானோர் ஆர்த்தனர்	தேவர்கள் ஆனந்த கோலாஹலஞ்செய்தனர் ;		

— கடிமணப்படலம் முற்றிற்று. —

இருபத்திரண்டாவது பரசுராமப்படலம்

விவாஹம் நிறைவேறிய பின்பு தசரத சக்ரவர்த்தி தனது திருக்குமாரர்களுடனும் மற்றும் பரிவாரங்களுடனும் மிதிலையினின்றும் மீண்டு அயோத்தி மாநகரை நோக்கி வருகையில் பரசுராமன் * என்வில் வலிகண்டு போவென்றெதிர்வர, அவனை இராமபிரான் வெற்றிகொண்ட வரலாற்றைக் கூறும் பாகமிது.

இப்படலத்திற் கூறிய கதையின் சுருக்கம் வருமாறு :—விவாஹமானதும் விச்வாமித்ர முனிவன் க்ருத க்ருத்யனாகித் தவஞ்செய்யச் சென்றான். தசரதன் அயோத்திக்கு மீண்டு செல்லுமாறு யாவருடனும் புறப்பட, ஸ்ரீராமன் தேவியோடும் தம்பிமாரோடும் பின்செல்ல, தசரதன் அபசகுனமாவது கண்டு ஓர் நிமித்திகனை வினவ, அவன் இடையூறுவந்து கழியுமென்று சொல்ல, அவ்வளவிலே பரசுராமன் வந்து தோன்ற, மிகுந்த சினத்தோடு வருகின்றவிவன் யாரோ வென்று இராமன் சிந்தித்து நிற்க, பரசுராமன் இராமனெதிர்நின்று உன்தோள் வலியைச் சோதிக்கவந்தேனென்று கூற, அதுகேட்டு அஞ்சி நடுங்கின தசரதன் பரசுராமனைப் பலவாறு துதித்து என்மகனை ஒன்றுஞ் செய்யாது விட்டிடவேணுமென்று வேண்டினவிடத்தும் அதைப்பொருள்படுத்தாது இராமனிடத்துப் பரசுராமன் சினந்து செல்வதைக் கண்டு தசரதன் மூர்ச்சித்தனன். இராமனைக் கிட்டிய

*பரசுராமன் சிவதனுசின் வரலாற்றைக்கூறி 'முன்னமே பழுதுபட்டுக் கிடந்த தொரு சிவதனுசை நீ முறித்திட்ட வலிமையைப் பெரிதாகப் பாராட்டிச் செருக்குற் றிருப்பது சிறவாது ; என்கையிலுள்ள இவ்வில்லை வளைத்திடு, பார்ப்போம்' என்று கூற, ஸ்ரீராமன் 'வில்லைத் தருக' என்று கூறி வாங்கி, அதை உடனே வளைத்து 'க்ஷத்ரிய வம்சத்தைப் பெரும்பான்மையும் வேரறுத்திட்ட வுன்னை வதைத்துப் பழிக்குப்பழி வாங்கவேண்டுவதாயினும் நீ வேதியன்மகனும் தவவொழுக்கமுடை யனுமாதல்பற்றி உன்னை இப்பொழுது உயிரொழியாது விடக்கருதுகின்றேன் ; ஆனால் என் கைவில்லில் வைக்கப்பட்ட இவ்வம்பு கொடுமை விளைக்காமல் தவறுவ தன்றாதலால் இவ்வம்புக்குக் குறிப்பொருளாவது எது? தாமதமின்றிச் சொல்லு' என்றான். பிறகு பரசுராமன் ஸ்ரீராமனைத் துதித்து நிற்க, அவனது தபோபலம் இராமன் வளைத்த வில்லின் அம்புக்கு இலக்காகப் பரசுராமன் விடைபெற்றுச் சென்றான். பிறகு ஸ்ரீராமன் தசரதனைச் சார்ந்து தொழுது துயர்நீங்கச் செய்து, பரசுராமனிடமிருந்து தான் வாங்கிய வைஷ்ணவதனுசை வருணதேவன் கையிற் கொடுத்திட்டுச் சேனை முதலியவற்றோடு அயோத்தி சேர்ந்தனன். தசரதன் பரதனை நோக்கி மாதாமகன் விருப்பத்தின்படி கேகயநாட்டிற்குச் சென்றுவர அநுமதி தந்திட, பரதன் இராமனை வணங்கிக் கேகயநாடு சென்று சேர்ந்தனன் என்பதாம். ... ... **

இப்படலத்திற் சில செய்யுள்களை மட்டுங் கொள்வோம்.

(வருகின்ற பரசுராமனது பிரபாவங் கூறுதல்)

133. அயிர்சுற்றிய கடன்மாநில மடையத் தனிபடருஞ்
செயிர்சுற்றிய படையான் அடல்மறமன்னவர் திலகன்
உயிருற்றதோர் மரமாமென வோராயிர முயர்தோள்
வயிரப்பணை துணியத்தொடு வடிவாய்மழு வுடையான். **12**

அயிர்	மணல்களோடு கூடி
சுற்றிய	நாற்புறத்துஞ் சூழ்ந்துள்ள
கடல்	கடலினிடையேயுள்ள
மா நிலம் அடைய	விசாலமான பூலோகம் முழுவதிலும்
தனி படரும்	ஒப்பற்றுப் படர்கின்ற
செயிர் சுற்றிய படையான்	வலிமை மிகுந்த சேனையையுடையவனும்
அடல் மறம் மன்னவர் திலகன்	பலபராக்ரமங்களையுடைய அரசர்களுக்கெல்லாம் சிறந்த தலைவனுமாகிய கார்த்தவீரியார்ச்சுனன்
உயிர் உற்றது ஓர் மரம் ஆம் என	உயிரோடு கூடிப் பொருந்திய தொரு பெரு மரத்தையொத்து நிற்க,
ஓர் ஆயிரம் உயர் தோள் வயிரம் பணை	(அக்கார்த்த வீரியனது) ஒரு ஆயிரக்கணக்கான உயர்ந்த தோள்களாகிய வைரம் பற்றின கிளைகளெல்லாம்
துணிய	வெட்டுப்படும்படி
தொடு	கையால் ஓங்கியெடுத்து வீசின
வடி வாய் மழு உடையான்	கூரிய நுனியையுடைய பரசுவென்னும் படையையுடையவனும் ;

***—இச்செய்யுள் இவ்வளவோடு முடிந்திலது ; மேலே யொரு செய்யுளில் "மழுவாளவன் வந்தான்" என்பதோடு இயையும். *க்ருதவீர்யனது குமாரனான கார்த்தவீரியார்ச்சுனன் நாராயணாம்சமாய் அத்ரிகுமாரனான தத்தாத்ரேய மகா முனிவனை ஆராதித்து அவனது அருளினால் ஆயிரந்தோள்களுடைமை முதலான பல வரங்களைப்பெற்றுப் பல வேள்விகளையு மியற்றி, தனது வம்சத்தில் தோன்றி யிருந்த மகிஷ்மானென்னு மரசனால் உண்டாக்கப்பட்ட மாஹிஷ்மதி பட்டணத்தைப் பலகாலம் அரசாண்டு வரும்போது ஒருகால் தான் நருமதையாற்றில் ஜலக்கிரீடை செய்துகொண்டு மதுபானத்தால் மதித்திருக்கையில் திக்விஜயஞ் செய்து வருகின்ற*

இராவணன் தன்னை யெதிர்க்கக் கண்டு அவனைத் தனது ஆற்றலால் எளிதிற் கட்டித் தனது நகரத்திற் கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் வைத்து, பின்பு அவனது மூதாதையாகிய புலஸ்த்யமகா முனிவனது வேண்டுகோளால் அவனைச் சிறைவிடுத்து அம்முனிவனருளால் 'ராவணஜித்' என்னும் பெயரைப் பெற்றான். இவன் ஒரு காலத்தில் சேனையுடனே வனத்திற் சென்று வேட்டையாடிவந்து இப் பரசுராமனது தந்தையான ஜமதக்னிமகாமுனிவனது ஆச்ரமத்தையடைந்து முனிவனநுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில் ஹோமதேனு முனிவனுக்குப் பல வளங்களையும் எளிதிற் சுரந்தளித்தலைக் கண்டதனால் அதனிடம் ஆசைகொண்டு அப்பசுவை அம்முனிவனனுமதியின்றி வலிகட்டாயமாகக் கவர்ந்து போக, அதனையறிந்த பரசுராமன் பெருங்கோபங்கொண்டு ஆயுதங்களுடனே சென்று கார்த்தவீரியனுடன் போர்செய்து அவனைப் பதினொரு அக்ஷௌஹிணி சேனையுடனே நிலை குலைத்து அவனது ஆயிரந் தோள்களையும் தலையையும் தனது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி வெற்றி கொண்டானென்கிற வரலாறு இங்கு அறியத்தக்கது. .... *

(இதுவுமது)

134. நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலெழு கடலொத் தலையெறியுங்
குருதிப்புன லதனிற்புக முழுகித் தனிகுடைவான். 13

நிருபர்க்கு ஒரு பழி பற்றிட	அரசர்களுக்கு ஒப்பற்ற பழியொன்று பொருந்துதலால்	களை கட்டு	(இங்ஙனம் பூமியிலுள்ள) களைகளைப் பறித்து
நிலம் மன்னவர் குலமும்	நிலவுலகத்துள்ள க்ஷத்ரியர்களின் கூட்டம் முழுவதும்	எழு கடல் ஒத்து அலை எறியும் குருதி புனல் அதனில்	பொங்கியெழுகின்ற கடலைப் போன்று அலை வீசுகிற அவர்களின் இரத்த வெள்ளத்திலே
கரு அற்றிட	வேரற்றொழியும்படி		
இருபது ஒரு படி கால்	இருபத்தொரு தலைமுறை		
மழுவாள் கொடு	தனது கோடாலிப் படையைக் கொண்டு	புக முழுகி	தன்னுடல் அமிழும்படி மூழ்கி
உயிர் கவரா	(அவ்வரசர்களது) பிராணனைக் கவர்ந்து	தனி குடைவான்	தனியே நீராடுபவனும் ;

* * *—இச் செய்யுளும் மேலே "மழுவாளவன் வந்தான்" என்பதோடு இயையும். பரசுராமன் கார்த்த வீர்யார்ஜுநனைக் கொன்றானென்பது கீழ்ப் பாட்டிற் சொல்லப்பட்டது. அதன்பின் அவனது குமாரர்கள் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று நிச்சயித்துப் பரசுராமனில்லாத சமயம் பார்த்துப் பர்ண சாலையினுட்சென்று அவனது தந்தையாரை [ஜமதக்னியை]த் தலை துணித்துப் போக, பின்பு வந்த பரசுராமன் அதனை யறிந்து பெருஞ்சினங்கொண்டு சென்று அவ்வர்ஜுந குமாரர்களையும் உலகத்திலுள்ள செருக்குக்கொண்ட அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை அழித்தொழித்து ஸகல க்ஷத்ரியவம்சவிநாசகனாயினன். அன்றியும், அவ்வரசர்களது ரத்த வெள்ளத்தால் ஸ்யமந்த பஞ்சகமென்று ஐந்து தடாகங்களை யேற்படுத்தி அவற்றில் தந்தைக்குத் தர்ப்பணஞ் செய்திட்டான். ... ... *

135. சையம்புக நிமிரக்கடல் தழுவும்படி சமைவான்
மையின்னுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
ஐயன்தனை யரிதில்தரு மரசன்னது கண்டான்
வெய்யன் வர நிபமென்னைகொ லெனவெய்துறு மெல்லை. 15

சையம் புக	(மேலோங்கி யுயர்ந்துள்ள) மலைகள் நிலத்தினுள்ளே அடங்கிச் செல்லவும்
கடல் நிமிர	கடல்கள் மேலே பொங்கி யெழவும்
தழுவும்படி சமைவான்	செய்ய வல்லவனாகிய
மையின் உயர் மலை நூறிய மழுவாளவன்	மேகங்களை யுடைத்தாய் உயர்ந்துள்ள (கிரௌஞ்ச) மலையைத் துளைத்திட்ட கோடாலிப் படையை யுடையவனை பரசுராமன்
வந்தான்	வந்து சேர்ந்தான் ;
ஐயன் தனை அரிதின் தரும் அரசன்	ஸ்ரீராம பிரானை அருமை யாகப் பெற்ற தசரதசக்ரவர்த்தி
அது கண்டான்	அதனைப் பார்த்தவனாய்
வெய்யோன் வர நிபம் என்னை கொல் என	மிகக் கொடியவனை இவன் (இங்கு இப்பொழுது) வந்து நிற்கக் காரணம் யாதோவென
வெய்து உறும் எல்லை	கொடிய வருத்தத்தை யடையுங் காலத்து ;

* * * இச் செய்யுள் இங்கே முடிந்திலது ; மேலே அந்வயித்து முடிவுபெறும். பரசுராமனும் ஸுப்ரம்மணியனும் பரமசிவனிடம் வில் முதலிய ஆயுதப் பயிற்சியைச் செய்து முடித்த பின்பு இவர்களுள் உயர்வு தாழ்வு அறியும்பொருட்டுச் சிவபிரான் உமாதேவியின் முன்னிலையிலே இவர்களுக்குக் கிரௌஞ்சமலையைச் சுட்டிக்காட்டி 'இதனைத் துளைத்திடுக' என்று நியமிக்க, முன்னர் முருகமூர்த்தி அம்புகளைத் தொடுத்து அதனைத் துளைக்க மாட்டாமற்போகவே, பரசுராமன் பராக்ரமத்தோடு அம்பெய்து அதனைத் துளையிட்டுக் காட்டினனென்ற வரலாறு இங்கு இரண்டாமடியி லடங்கியது. இத்தகைய பராக்கிரமசாலியான பரசுராமன் தசரத தாசரதிகளுக்கு எதிரில் அருகில் வந்து சேர்ந்தான். கண்ட காட்சியிலே மிகக் கொடியவனாகத் தென்படுகிறவிவன் இங்கு இப்போது எதிரில் வந்திடுதற்குக் காரணம் யாதோவென்று தயரதன் சிந்தித்து வருந்துகின்றான். தான் அருமையாகப் பெற்ற மைந்தனுக்கு ஏதேனும் தீங்கிழைக்க வந்தானோவென்று அதிசங்கித்தானென்று காட்டுதற்கு 'ஐயன்தனை யரிதிற்றருமரசன்' என்றார். ... *

(சினந்துவரும் பரசுராமனை இவன் யாரோவென்று இராமன் சிந்தித்தல்.)

136. பொங்கும்படை யிரியக்கிளர் புருவங்கடை நெரிய
வெங்கண்பொறி சிதறக்கடி துருமேறென விடையாச்
சிங்கம்மென வுயர்தேர்வரு குமரன்னெதிர் சென்றான்
அங்கண்ணர சவனும் மிவனாரோவெனு மளவில். 16*

பொங்கும் படை இரிய	மகிழ்ந்து செல்லுகின்ற தசரத சேனைகள் அஞ்சி யோடும்படி (பரசுராமன)
கிளர் புருவம் கடை நெரிய	விளங்குகின்ற தன் புருவங்கள் நுனியிலே நெறிப்படையவும்
வெம் கண் பொறி சிதற	பயங்கரமான கண்கள் நெருப்புப் பொறிகளைச் சிந்தவும
கடிது	விரைவாக
உரும் ஏறு என	பேரிடி போல
விடையரா	பெருங் கோபங்கொண்டு
சிங்கம் என உயர் தேர் வரு குமரன் எதிர் சென்றான்	சிங்கம்போலக் கம்பீரமாக உயர்ந்த தேரின்மீது வருகின்ற சக்ரவர்த்தி திருமகனுடைய எதிரிலே போனான் ; (அப்பொழுது)
அம் கண் அரசு அவனும்	அழகிய திருக்கண்களை யுடைய ஸ்ரீராமனும்
இவன் ஆரோ எனும் அளவில்	இவன் யாவனோவென்று நினைக்குமளவிலே ;

(பரசுராமன் இராமனை நோக்கிச் சொல்லுதல்)

137. இற்றோடிய சிலையின்திற மறிவன்னினி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரிவான் நசையுடையேன்
செற்றோடிய திரள்தோளுறு தினவுஞ் சிறிதுடையேன்
மற்றோர்பொரு ளிலையிங்கிதென் வரவென்றன னுரவோன். 18

யான் — பரசுராமனெனப் பிரசித்தி பெற்ற நான்
இற்று ஓடிய சிலையின் திறம் அறிவன் — முன்னமே முறிந்துபோன (நீ முறித்த) சிவதனுசின் தன்மையை யறிவேன்;
இனி உன் பொன் தோள் வலி நிலை சோதனை புரிவான் நசை உடையேன் — இப்பொழுது உனது அழகிய தோளின் வலிமையின் தன்மையைச் சோதிக்க விருப்பமுடையேன்;
செற்று ஓடிய திரள் தோள் உறு தினவும் சிறிது உடையேன் — (க்ஷத்திரியர்களைக்) கொன்று மேம்பட்ட திரண்ட தோள்களிற் பொருந்தின தினவையும் சிறிது உடையவனாயிருக்கிறேன்;
இங்கு என் வரவு இது — இங்கு எனது வரவுக்குக் காரணம் இதுவேயாம்;
மற்று ஓர் பொருள் இலை — வேறு ஒரு காரணமும் இல்லை;
என்றனன் உரவோன் — என்று கூறினன் பராக்ரமசாலியான பரசுராமன்.

(தசரதன் பரசுராமனிடம் அபயந்தர வேண்டுதல்)

138. அவனன்னது பகரும்மள வையின்மன்னவ னயர்வான்
புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான். 19

அவன் அன்னது பகரும் அளவையின் — அந்தப் பரசுராமன் கீழ்க் கூறிய அவ்வார்த்தைகள் சொல்லுங்கால்
மன்னவன் — தசரதசக்ரவர்த்தி
அயர்வான் — மனந் தளர்பவனாகி (பரசுராமனை நோக்கி)
வென்று — (க்ஷத்திரியர்கள் யாவரையும்) வெற்றிகொண்டு
புவனம் முழுவதும் — பூலோகம் முழுவதையும்
ஒரு முனிவற்கு அருள் புரிவாய் — காசிபனென்னும் ஒரு முனிவனுக்குக் கருணையோடு தானஞ்செய்திட்டவனே!
சிவனும் அயனும் அரியும் — சிவன் பிரமன் விஷ்ணு என்னும் மும்மூர்த்திகளும்
அலர் — உனக்கு ஒரு பொருளல்லரென்றால்
சிறு மானிடர் பொருளோ — அற்பர்களாகிய மனிதர்கள் உனக்குப் பொருளாவரோ? (ஆகார்)
இவனும் எனது உயிரும் — இவ்விராமனும் என்னுடைய பிராணனும்
இனி உனது அபயம் என்றான் — இப்பொழுது உனது அடைக்கலப் பொருள் என்று துதித்துக் கூறினான்.

* * *—பரசுராமன் ஸர்வ க்ஷத்ரிய ஸம்ஹாரஞ்செய்து பூலோகம் முழுவதையும் தன்னுடையதாக்கினபின்பு, அப்பூமி முழுவதையும் காசியபமுனிவனுக்குத் தானஞ் செய்திட்டானென்பது இதிஹாஸம். இதனை தசாவதாரஸ்தோத்ரத்தில் தேசிகனும் * தத்வா கர்மணி தக்ஷிணாம் க்வசந தாம் * என்பதனால் அருளிச்செய்துளர். அன்று பூமி முழுவதையும் தானஞ்செய்திட்ட நீ இன்று எங்களுக்கு அபய ப்ரதானஞ் செய்யவேண்டுமென்கிறான் சக்ரவர்த்தி. ... ... *

(இதுவும் தசரதன்வேண்டுகோள்.)

139. சலத்தோடியை விலனென்மக னனையானுயிர் தபுமேல்
உலத்தோடெதிர் தோளாயென துறவோடுயி ருகுவேன்
நிலத்தோடுயர் கதிவானுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டனெ னென்றான். 23

உலத்தோடு எதிர் தோளாய் — திரண்ட கல்தூணோடொத்த தோள்களையுடைய பரசுராமனே!
என் மகன் — எனது புத்திரனான இராமசந்திரன்
சலத்தோடு இயைவு இலன் — கள்ளங் கவடு அறியாத ஸாதுவானவன்;
அனையான் உயிர் தபும் ஏல் — அவனது உயிர் உடம்பை விட்டு நீங்குமாயின் (யான்)
எனது உறவோடு — என்னுடைய சுற்றத்தாருடனும்
நிலத்தோடு — எனது நாட்டாருடனும்
உயர் கதி வான் உற — உயர்ந்த பதவியான விண்ணுலகத்தை யடையும்படி
உயிர் உகுவேன் — உயிரொழிவேன்;
நெடியாய் — பெரியோனே!,
உனது அடியேன் — உன்னுடைய அடியவனாகிய யான்
குலத்தோடு அற — இனத்தோடு ஒழிந்து போம்படி
முடியேல் — எம்மை யழித்திடாதே;
இது குறை கொண்டனென் என்றான் — இந்தப் பிரார்த்தனையை உன்னிடம் செய்துகொண்டேனென்று தசரதன் கூறினான்.

(பரசுராமனுடைய இறுமாப்புச் சொல்)

140. ஊனவில் லிறுத்த மொய்ம்பை நோக்குவ தூக்கமன்றால்
மானவ மற்றுங்கேளாய் வழிப்பகை யுடையதும்பால்
ஈனமி லெந்தைசீற்ற நீக்கினனென்ன முன்னோர்
தானவனனைய மன்னன் கொல்லயான் சலித்துமன்னோ. 32

ஊனம் வில் இறுத்த மொய்ம்பை நோக்குவது ஊக்கம் அன்று — முன்னமே பழுதுபட்டுக் கிடந்ததொரு சிவவில்லை நீ முறித்திட்ட வலிமையைப் பெரியதாகக் கருதி மதிப்பது சிறப்பாகாது;
மானவ — மநு குலத்தவனே!
மற்றும் கேளாய் — இன்னமும் யான் சொல்வதைக் கேட்பாயாக;
உம் பால் வழி பகை உடையது — (க்ஷத்திரியர்களாகிய) உங்களிடத்து எனக்குப் பழமையாகப் பகைமை யுள்ளது;
(ஏனெனில்)
முன் — முன்னொருகாலத்திலே
ஓர் தானவன் அனைய மன்னன் — அசுரனை யொத்த கொடுந்தன்மையையுடைய ஓரரசன்
ஈனம் இல் எந்தை சீற்றம் நீக்கினன் என்ன — குற்றமற்ற எனது தந்தை ‘கோபத்தை யொழித்தவன்’ என்று கருதியுங் கூறியும்
கொல்ல — என் தந்தையைக் கொன்றுவிட
யான் சலித்து — நான் கோபங்கொண்டு;

[“வேந்தையெல்லாம் களைகட்டு” என்று மேற்கவியோடு தொடரும்.]

(இதுவுமது)

141. மூவெழு முறைமைபாரின் முடியுடை வேந்தையெல்லாம்
மேவெழு மழுவின்வாயால் வேரறக் களைகட்டன்னுர்
தூவெழு குருதிவெள்ளத் துறையிடை முறையினெந்தைக்
காவன கடன்கள்நேர்ந்தேன் அருஞ்சின மடக்கிப்போந்தேன். 33

மூ எழு முறைமை	இருபத்தொரு தலைமுறை	தூ எழு குருதி வெள்ளம் துறை இடை	தசையினின்று பெருகுகின்ற ரக்தப்ரவாஹத்தினாலான நீர்த்துறையிலே
பாரில் முடி உடை வேந்தை எல்லாம்	நிலவுலகத்திலுள்ள கிரீட தாரிகளான அரசர்களை யெல்லாம்	முறையின்	வேதவிதிப்படி
மேவு எழு மழுவின் வாயரால்	விரும்பியெழுகிற கோடாலிப் படையின் கூர் நுனியால்	எந்தைக்கு ஆவன கடன்கள் நேர்ந்தேன்	எனது தந்தைக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து முடித்தேன் ;
வேர் அற	வேரோடு அற்றுப்போம்படி		(அது முதல்)
களை கட்டு	துஷ்டநிக்ரஹஞ் செய்து	அரு சினம் அடக்கி போந்தேன்	தடுப்பதற்கரிய எனது கோபத்தை அடக்கி வந்திருக்கின்றேன்.
அன்னார்	அவ்வரசர்களது		

(இதுவுமது)

142. உலகெலாம் முனிவற்கீந்தேன் உறுபகை யொடுக்கிப்போந்தேன்
அலகின் மாதவங்கள்செய்து ஒரருவரையிருந்தே னண்டைச்
சிலையைநீ யிறுத்தவோசை செவியுறச் சீறிவந்தேன்
மலைகுவென் வல்லையாயின் வாங்குதி தனுவையென்றான். 34

உலகு எலாம்	(என்னால் ஸ்வாதீனமாக்கிக் கொள்ளப்பட்ட) நிலவுலகம் முழுவதையும்	நீ சிலையை இறுத்த ஓசை	நீ சிவதனுசை முறித்திட்டதனாலுண்டான வொலி
முனிவற்கு ஈந்தேன்	காசியப முனிவனுக்குத் தானஞ் செய்தேன் ;	அண்டை	அவ்விடத்து
		செவி உற	செவிப்பட்டதனால்
உறு பகை ஒடுக்கி போந்தேன்	மிக்க பகைவர்களை யெல்லாம் ஒடுங்கச் செய்து வந்தேன் ;	சீறி வந்தேன்	கோபங்கொண்டு இங்கு வந்தேன் ;
அலகு இல் மா தவங்கள் செய்து	அளவில்லாத பெரிய தவங்களைச் செய்து கொண்டு	வல்லை ஆயின்	நீ வலிமையுடையையாயின்
		மலைகுவென்	உன்னோடு போர் புரிவேன் ;
ஓர் அரு வரை இருந்தேன்	அருமையான மகேந்திர மலையில் தங்கியிருந்தேன் ;	இ தனுவை வாங்குதி என்றான்	இந்த வில்லை வளைத்திடு பார்ப்போமென்றான், பரசுராமன்.

* * *—உறுபகை யொடுக்கிப் போந்தேன்—காமக்ரோத லோபமோஹ மதமாத்ஸர்யமென்னும் உட்பகையாறையும் அடங்கச் செய்து வந்தேனென்றுமாம். ஓர் அருவரையிருந்தேன்—தான் வென்று கைக்கொண்ட பூமி முழுவதையும் காசிபமுனிவனுக்குத் தானஞ் செய்துவிட்ட பிறகு, ஒருகாலத்தில் அம்முனிவன் பரசுராமனைச் செருக்கடக்கும் பொருட்டு 'எனக்குத் தானஞ் செய்திட்ட விடத்திலே நீ வசித்திருக்கலாகாது' என்றுகூற, உடனே பரசுராமன் அகன்று மேற்கடலிற்சென்று வருணனை வேண்டி அவனனுமதியின்மேற் சைய மலையினின்று தனது கோடாலிப் படையை வலிமையோடு வீசியெறிந்து அது சென்று விழுந்த அவ்வளவிடத்தைக் கடல் ஒதுங்கி அப்பாற்சென்று தனகென்று அளிக்கப்பெற்று அங்குத் தங்குபவனானான். அவ்விடம் மகேந்திரமலை யெனப்படும். இவ்வரலாறும் தசாவதார ஸ்தோத்ரத்தில் *க்வசந தாமாஸ்கந்த்ய ஸிந்தும் வஸந்* என்பதனால் தெரிவிக்கப்பட்டது காண்க. .... *

(இராமபிரான் அந்த வில்லை வாங்கி வளைத்தல்)

143. என்றன னென்னநின்ற விராமனும் முறுவலெய்தி
நன்றொளிர் முகத்தனாகி நாரணன் வலியினாண்ட
வென்றிவில் தருகவென்னக் கொடுத்தனன் வீரன்கொண்டான்
துன்றிருஞ் சடையோனஞ்சத் தோளுற வாங்கிச்சொல்லும். 35

என்றனன் என்ன	இவ்வாறு பரசுராமன் சொன்னவுடனே
நின்ற இராமனும்	எதிரேநின்ற ஸ்ரீராமனும்
முறுவல் எய்தி	புன்சிரிப்புக் கொண்டு
நன்று ஒளிர் முகத்தன் ஆகி	நன்கு விளங்குகின்ற திருமுக மண்டலத்தையுடையனாய்
நாரணன் வலியின் ஆண்ட வென்றி வில் தருக என்ன	'திருமால் தனது வலிமையினால் எடுத்துப் பயின்ற கொற்ற வில்லை இதோ தருவாய்' என்று கூற,
கொடுத்தனன்	பரசுராமன் கொடுத்திட்டான்;
வீரன் கொண்டான்	மஹாவீரனான இராமன் அவ்வில்லை வாங்கிக் கொண்டவனாகி
துன்று இரு சடையோன் அஞ்ச	ஜடாமண்டலதாரியான அப்பரசுராமன் அஞ்சும்படி
தோள் உற வாங்கி	(அந்த வில்லைத்) தன் தோள் வலிமை பொருந்த வளைத்து
சொல்லும்	பரசுராமனை நோக்கி (மேல் வருமாறு) சொன்னான்.

* * *—வீரர்க்குக் கோபத்தினாலும் ஒரு முறுவலெழுவதுண்டு; அதனை வீரத்தெழுந்த வெகுளிநகை யென்பர். அது உண்டாயிற்று இராமனுக்கு; அதனால் முறுவலெய்தி என்றது. மனத்திலுள்ள தைரியவொளி முகத்தின் மூலமாக வெளியில் விளங்கிற்றாக "நன்றொளிர் முகத்தனாகி" என்றார். பரசுராமனது செருக்குமொழியை ஒரு பொருளாக மதித்திலனிராமன் என்றவாறு. வென்றிவில் தருக—தன்னைக் கையிலெடுத்துப் பிடிப்பார் யாவராயினும் அவர்க்கு வெற்றியை விளைக்கும் வில்லாதலால் அதனைத் தனது திருக்கரத்திற் கொள்ளத் திருவுள்ளம் பற்றினார் சக்ரவர்த்தி திருமகனார். சிவதனுசைக் காட்டிலும் மேம்பட்ட தனுசு இது. "நாரணன் வலியினாண்ட வென்றிவில் தருக" என்றதனால்—ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்கு உரிய இந்த வில் இதுகாறும் அவனது ஆவேசாவதாரமான உன்னிடத்திருந்தது; இனி அதனை அவனது அம்சாவதாரமான என்னிடம் தந்திடு என்று கூறியவாறு. 'அந்த வில் ஸ்ரீமந்நாராயணனிடமிருக்கையில் சிவனையும் சிவவில்லையும் வென்றது; உன்னிடத்திருக்கையில் பல அரசர்களையும் அவர்களது படைக்கலங்களையும் வென்றிட்டது; அதை என்னிடம் கொடுத்திடுவையானால் அது உடனே உன்னையும் உனது ஆற்றலையும் வென்று விடும்' என்றும் கூறியவாறாம். இங்குப் பரசுராமனை 'துன்றிருஞ் சடையோன்' என்று குறித்ததனால், அவ்வில் முன்பு திருமால் கையிலிருக்கையிலே சடைமுடிக்கடவுளாகிய சிவபெருமான் அதற்கு அஞ்சினதுபோல, இப்பொழுது ஸ்ரீராமன் கையிலிருக்கையில் அச்சிவனது மாணாக்கனாகிய சடைமுடிப் பரசுராமன் அஞ்சினனென்பது தோன்றும். .... *

(ஸ்ரீராமன் இத்தனுசுக்கு இலக்கமாவது யாதென வினவுதல்)

144. பூதலத்தரசையெல்லாம் பொன்றுவித்தனையென்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்தனீ விரதம்பூண்டாய்
ஆதலிற் கொல்லலாகாது, அம்பிது பிழைப்பதன்றால்
யாதிதற்கிலக்கமாவ தியம்புதி விரைவினென்றான். 36

பூதலத்து அரசை எல்லாம்	நிலவுலகத்திலுள்ள க்ஷத்ரிய குலங்களையெல்லாம்	ஆதலின்	இக்காரணங்கள்பற்றி
நீ பொன்றுவித்தனை என்றாலும்	நீ (முன்பு) அழித்தாயாயினும் [அதற்குப் பதிலாக இப்போது உன்னை அழிக்க வேண்டியதாயினும்]	கொல்லல் ஆகாது	உன்னைக் கொல்லுவது கூடாது ; (ஆயினும்)
வேதவித்து ஆய மேலோன் மைந்தன்	வேதவித்தென்னும் மேன்மைபடைத்த ஜமதக்னி மகாமுனிவனது புத்திரன் ;	அம்பு இது பிழைப்பது அன்று	(என் கையில் வைக்கப்பட்ட) இவ்வம்பானது கொடுமை விளைக்காமல் தவறுவதன்று ;
	(அன்றியும்)		ஆதலால்
விரதம் பூண்டாய்	தவவேடம் பூண்டிருக்கின்றாய் ;	இதற்கு இலக்கம் ஆவது யாது	இவ்வம்புக்கு லக்ஷ்யமாகக் கூடியது எது ?
		விரைவின் இயம்புதி என்றான்	தாமதமின்றிச் சொல்லுவாயாக என்றானிராமன்.

* * *—இங்கு வான்மீகங் கொண்டு அறிய வேண்டிய விஷயமாவது—இராமபிரான் வில்லை வளைத்ததும் பரசுராமனை நோக்கி 'உனது தாள்களுக்கு உள்ள நடக்கும் வல்லமையையோ, ஒப்பற்ற தவத்தினாற் சம்பாதித்துள்ள நல்லுலகங்களையோ, இவற்றில் எதை இதற்கு இலக்காக்குவது? உனக்கு விருப்பமானதைச் சொல்' என்ன, பரசுராமன் 'நான் மனோவேகமாய் மஹேந்திர மலைக்குச் செல்ல வேண்டியிருத்தலால் எனது நடக்கும் வல்லமையைப் போக்காமல், என் தவத்தினாற் சம்பாதித்த உலகங்களையே இலக்காக்குக' என்று கேட்டுக் கொள்ள, அங்ஙனமே இராமன் தன்னம்புக்குப் பரசுராமனது தவத்தை இலக்காக்கினனென்பதாக. ... ... *

(பரசுராமன் ஸ்ரீராமனைத் துதிப்பது)

45. நீதியாய் முனிந்திடேல் நீயிங்கியாவர்க்கும்
ஆதியானறிந்தனென் அலங்கல்நேமியாய்
வேதியா விறுவதேயன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில் பற்றப் போதுமோ. 37

நீதியாய்	நியாயம் தவறாத இராமனே !	வேதியா	வேதவேத்யனே !
முனிந்திடேல்	(என்மீது) சீற்றங்கொள்ள வேண்டா ;	வெள் மதி பாதியான் பிடித்த வில்	வெண்மையான சந்திர கலையைத் தரித்துள்ள சிவபெருமான் (முன்பு) கைப்பற்றிய வில்லானது
நீ இங்கு யாவர்க்கும் ஆதி	நீ இவ்வுலகங்களிலெல்லோர்க்கும் முதல்வனாவாய் ;	இறுவதே அன்றி	வேறு வேறாய் முறிபடுவதேயல்லாமல்
யான் அறிந்தனென்	இவ்வுண்மையை யானறிந்து கொண்டேன் ;	பற்ற போதுமோ	(மஹாவீர சூரனான உனது கையில்) பிடித்தற்கும் போதுவதோ ?
அலங்கல் நேமியாய்	திருத்துழாய் மாலையணியும் சக்கரக்கையனே !		

* * *—நீதியாய் என்றதை ஒரு சொல் வடிவமாகக் கொள்ளாமல், நீதி ஆய் என்று பிரித்து, நியாய வழியை ஆராய்ந்தறி என்றுமுரைக்கலாம். 'ஆதியான்' என ஒரு சொல்லாகவுங் கொள்ளலாம். ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சமல்லாத மற்றவரால் இதனைக் கையிற் பிடிப்பது முடியுமோ? என்பது ஈற்றடியின் கருத்து. .... *

(இராமன் வைணவவில்லை வருணதேவன் கையிற் கொடுத்திட்டு அயோத்தி சேர்தல்)

146. பூமழை பொழிந்தனர் புகுந்த தேவருள்
வாமவேல் வருணனை மானவெஞ்சிலை
சேமியென்றுதவித் தன்சேனை யார்த்தெழ
நாமநீரயோத்திமா நகரநண்ணினன். 45

பூ மழை பொழிந்தனர்	மலர்மாரி பொழிந்தவர்களாய்க் கொண்டு	உதவி	அவனிடம் அதைக் கொடுத்துவிட்டு,
புகுந்த தேவருள்	அங்கு வந்து சேர்ந்த அமரர்களுக்குள்	தன் சேனை ஆர்த்து எழ	தனது சைனியங்கள் ஆரவாரித்துப் புறப்பட (எல்லாரோடுங் கூட)
வாமம் வேல் வருணனை	அழகிய வேலாயுதத்தையுடையனை வருணனை நோக்கி,	நாமம் நீர் அயோத்தி	பிரசித்தமான சரயுநதி சூழ்ந்த அயோத்தியென்கிற
மானம் வெம் சிலை சேமி என்று	பெருமை தங்கிய வெவ்விய இந்த வில்லைச் சேமித்திரு என்று சொல்லி	மா நகரம்	மஹாநகரத்தை
		நண்ணினன்	சென்று சேர்ந்தான் (இராமன்).

அப்பொழுது பூமழை பொழிந்தவர்களாய் அங்கு அருகில் வந்து சேர்ந்த தேவர்களுள்ளே அழகிய வேற்படையையுடைய வருணதேவனைப் பார்த்து' இராமன் 'பெருமைதங்கிய இக்கொடிய வில்லை நீ கொண்டு காப்பாற்றி வைப்பாயாக என்று கூறி அவனிடத்தே அதைக் கொடுத்து விட்டு, தனது சேனைகள் ஆரவாரித்து உடன்வரப் புறப்பட்டு அயோத்திமாநகர் சென்று சேர்ந்தனனென்க. இப்போது வருணதேவனிடம் கொடுக்கப்பட்ட இந்த வில் பின்பு கரதூஷணாதி ராக்ஷஸவதத்திற்கு உதவும்பொருட்டு அகஸ்த்யமுனிவன் மூலமாக ஸ்ரீராமனிடம் சேருவது ஆரணிய காண்டத்தில் அறிவிக்கப்படும். ... ... *

பரசுராமப்படலம் முற்றிற்று.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் தொகுத்த

கம்பரின்பக்கவித்திரட்டில் பாலகாண்டம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஸ்ரீராமபிரான் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர் உரையுடன் தொகுத்த

கம்பரின்பக்கவித்திரட்டில்

அயோத்தியாகாண்டம்

1. மந்திரப்படலம்

திருவடிசூட்டு படலமளவாகப் பன்னிரண்டு படலங்கள் கொண்ட இக்காண்டத்தில் முதலது மந்திரப்படலம். தசரதசக்ரவர்த்தி தனது திருக்குமாரனை இராமபிரானுக்கு முடிசூட்டித்தான் ஆமுஷ்மிக சிந்தையில் லயிக்கக்கருதி ஸபாமண்டபத்தையடைந்து மந்திரிமார்களை வரவழைக்க, அவர்கள் யாவரும் வந்து கூடியபின் தனது கருத்தை அவர்களுக்குத் தெரிவித்தனன். அவர்கள் யாவரும் இராமனுக்கு முடிசூட்டுவதை மிகவும் பாராட்டிக் கூறினர். பிறகு சுமந்திரனைக் கொண்டு இராமபிரானை வரவழைத்து அவனிடம் தன் கருத்தைத் தெரிவிக்க, தனக்கு அதில் அபேக்ஷையில்லையாயினும் தந்தையின் கட்டளை மறுக்கலாகாதென்று முடிசூடுவதற்கு இசைந்தனன். அதனால் மிகவுகப்புக்கொண்ட சக்ரவர்த்தி ஓலைபோக்கி ஸகல ராஜாக்களையும் வரவழைத்து இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்வதென்னும் துணிபைத் தெரிவிக்க யாவரும் அதில் பரமஸந்தோஷம் காட்டினர். பிறகு சோதிடர்களைக் கொண்டு நல்ல முஹூர்த்தம் நிர்ணயிக்கச் சென்றனன். இது இங்ஙனமாக, பெண்பிள்ளைகள் நால்வர் கௌஸல்யா தேவியிடம் வந்து இச்சுப ஸமாசாரத்தைத் தெரிவிக்க, அவள் அரசன் துறவியாவானென்பதனால் ஒருபுறம் ஸங்கடமுண்டாகவும் சுபஸமாசாரம் கேட்டதற்கு உவந்து மங்கலச்செய்தி சொன்னவர்க்கு வெகுமதியளித்து அந்தணாளர்கட்கு அனேகவித தானங்களைச்செய்து இக்ஷ்வாகுவம்சத்தவர்கட்குக் குலதெய்வமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் ஸன்னிதிக்குச்சென்று அப்பரமனது திருவடிகளை வணங்கி வலம்வந்து தனது திருக்குமாரனுக்குப் பலவகை நன்மைகளும் மல்க வேணுமென்று பல விரதங்களை யனுட்டித்துக் கொண்டிருந்தாளென்பது இப்படலத்தின் கதைச்சுருக்கம்.

தொண்ணூற்றொன்பது செய்யுள்களைக்கொண்ட இப்படலத்தினின்று முக்கியமாகச் சில பாடல்களைக் கொள்ளுவோம். ... ... *

(தசரதன் தனக்கு நரை தோன்றியதைக் கண்ணடியிற் காணுதல்)

147. தீங்கிழை யிராவணன் செய்த தீமைதான் ஆங்கொரு நரையதா அணுகிற்றாமெனப்
பாங்கில்வந் திடுநரை படிமக்கண்ணடி ஆங்கதிற் கண்டனன் அவனிகாவலன். 3

தீங்கு இழை இராவணன் செய்த தீமை தான்	(உலகத்திற்கெல்லாம்) தீமைகளைப் புரிகின்ற இராவணன் செய்த பாவமானது	பாங்கில் வந்திடு நரை	தன்னிடத்தே வந்து சேர்ந்த நரையை
		படிமம் கண்ணடி அதில்	பிரதிபிம்பங் காட்டும் கண்ணடியிலே
ஆங்கு ஒரு நரை அது ஆ அணுகிற்று ஆம் என	அப்பொழுது ஒரு நரையாக வந்து நெருங்கியது போலுமென்னலாம்படி	அவனி காவலன் கண்டனன்	தசரத சக்ரவர்த்தி கண்டான்.

* * *—அறுபதினாயிரமாண்டு சென்ற சக்ரவர்த்திக்கு இப்போதே நரை தோன்றிற்று; அதைக் கண்ணாடிப்புறத்திலே தான் கண்டனன். லோக கண்டகனான இராவணன் செய்த தீமையே நரையாகத் தோன்றிற்றென்று கூறியதன் கருத்தாவது—நரைதோன்றக் கண்டதனால் இராமனுக்கு முடிசூட்ட வேணுமென்று ஸங்கல்பங்களைச்செய்ய, அதுகண்ட மந்தரை கைகேயியின் மனத்தைக் கலக்கி இராமனது வனவாஸத்திற்கு ஹேதுவாக, அந்த வனவாஸம் ராவணவதத்திற்கு நிமித்தமாயிற்றென்பதாம். அடுத்த மந்தரை சூழ்ச்சிப்படலத்திலும் (39) "இன்னல் செயிராவணனிழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்" என்பர். ... ... • ... . *

(சபாமண்டபத்திற்கழைக்கப்பட்டு வந்து சேர்ந்த மந்திரிமார்களின் தன்மை கூறுதல்)

148. தம்முயிர்க் குறுதியெண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும்வீரர்
செம்மையில் திறம்பல்செல்லாத் தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையுமுணரவல்லா ரொருமையே மொழியுநீரார். 11

தம் உயிர்க்கு உறுதி எண்ணார்	தமது பிராணனுக்கு நன்மையை நினையாதவர்களும்	செம்மையில் திறம்பல் செல்லா தேற்றத்தார்	நன்னெறியினின்று தவறாத நோக்கமுள்ளவர்களும்
தலைமகன வெகுண்ட போதும்	(தம்) தலைவன் கோபித்த காலத்திலும்		
வெம்மையை தாங்கி	அக்கோபத்தினது கொடுமையைத் தாம் ஸஹித்துக் கொண்டு	தெரியும் காலம் மும்மையும் உணர வல்லார்	நூல்களாலறிவிக்கத் தக்க த்ரிகால காரியங்களையும் அறியவல்லவர்களும்
விடாது நின்று	தமது கொள்கையைக் கைவிடாமலிருந்து		
நீதி உரைக்கும் வீரர்	நீதியையே பிடித்துச் சொல்லும் திடமான அத்யவஸாய முடையவர்களும்	ஒருமையே மொழியும் நீரார்	ஒரு பரிசே பேசுமியல்பினரு மான மந்திரிமார்கள் (வந்து சுற்றினர்.)

* * *—உலகத்தில் அரசர்களுக்கு இப்படிப்பட்ட மந்த்ரிகள் அமையவேண்டுமென்பதும் இதனால் காட்டப்பட்டதாகும். அரசனது நலத்தையே கருதித் தம் நலத்தைச் சிறிதும் கருதாதிருப்பர்; தாமுரைத்த நீதிமொழிகளுக்காக அரசன் கோபித்தாலும் அதனால் மாறுபடாமல் அக்கோபக்கனலைப் பொறுத்துக் கொண்டிருந்து நீதியையே பிடித்துக் கூறவல்லவர்; ஸன்மார்க்கத்தினின்று தவறாத தேர்ச்சியுள்ளவர்கள்; த்ரிகாலஜ்ஞர்கள்; அரசனது முகவிகாஸ முகவிகாரங்களுக்குத் தக்கபடி ஸமயாநுகுணமாக எதையோ சொல்லிப் போதுபோக்காமல் எப்போதும் ஒன்றையே திடமாகக் கூறுபவர்; ஆக இத்தகைய நற்குணம்வாய்ந்த மந்திரிமார்கள் வந்து கூடினரென்க. ... ... *

(தசரதன் இராமனுக்கு முடிசூட்ட நினைத்ததை மந்திரிமார்களிடம் தெரிவிக்கத் தொடங்கி அவர்களைப் பாராட்டிக் கூறுதல்)

149. வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர் செய்கையி னொருமுறை திறம்பலின்றியே
வையம்யா னாண்டன னுங்கள் மாட்சியால் ஐயமி லறுபதினாயிரம்மரோ. 16

வெய்யவன் குலம் முதல் வேந்தர்	ஸூர்யவம்சத்தில் முதல் வராயிருந்த அரசர்களாகிய	உங்கள் மாட்சியால்	உங்கள் பெருமையினால்
மேலவர் செய்கையில்	(மநு இக்ஷ்வாகு முதலிய) மேலோர்களது ஒழுக்கத்தில்	யான் வையம் ஆண்ட ஆண்டு	நான் அரசாண்ட வருடங்கள்
ஒரு முறை திறம்பல் இன்றியே	ஏகதேசமும் நழுவுதலில்லாமலே	அறுபதினாயிரம்	அறுபதினாயிரமாகும்;
		ஐயம் இல்	இதில் சந்தேகமில்லை. (அரோ - அசை.)

* * *—இது மந்திரிமார்களிடம் நன்றி பாராட்டிக் கூறியது. யான் உங்கள் துணையைக் கொண்டு அறுபதினாயிரமாண்டு அரசாட்சி செய்தேனென்றவாறு. *

150. நங்குலக் குரவர்கள் நவையி னீங்கினர் தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினர் எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன். **19**

நவையின் நீங்கினர்	குற்றத்தின் பாற்படாதவர்களான [எவ்வகைக் குற்றமுமற்ற]	வெம் குலம் புலன் கெட	வெவ்விய கூட்டமாகிய பஞ்சேந்திரியங்களின் ஆசை கெட
நம் குலம் குரவர்கள்	எங்கள் குலப் பெரியோர்கள் (முதுமைப் பருவத்தில்)	வீடு நண்ணினர்	மோக்ஷமெய்தியவர்கள்
தம் குலம் புதல்வரே	தம்முடைய சிறந்த புத்திரர்களே	எங்கு உலப்பு உறுவர் என்று	எங்கு முடிவு பெறுவார்களென்று
தரணி தாங்க போய்	பூமிபாரத்தை வஹிக்க தாம் காடு சென்று	எண்ணி நோக்குகேன்	எண்ணிப் பார்க்கின்றேன். [சிந்திக்கின்றேன்.]

* * *—ரகுகுலத்தரசர்களைப் பற்றிக் காளிதாஸமகாகவி கூறுமிடத்து "சைசவே அப்யஸ்தவித்யாநாம் யௌவநே விஷயைஷிணாம், வார்த்தகே முநிவ்ருத்தீநாம்" என்றனன். இளமையில் கல்விபயில்தல், யௌவனத்தில் குடும்ப வாழ்க்கையுறுதல், மூப்பில் காடுசென்று தவம் புரிந்து வாழ்தல் ரகு குலத்தரசர்களது இயல்பு என்றவாறு. இவ்வியல்பை நோக்கியே தசரதன் கூறுகின்றதிது. எங்கள் குலத்து முன்னோர் குற்றமற ஆட்சிசெய்து மூப்பெய்திய பின்னர் தமது புதல்வர்பால் அரசாட்சிச் செல்வத்தை யமைத்திட்டுத் தாம் தவஞ்செய்து முக்தி பெற்றவர்கள் எத்தனைவர் என்றெண்ணிப் பார்க்க, அவர்கள் எண்ணிறந்துள்ளார்கள் என்றவாறு. ... ... *

151. இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கும் மறப்பெனு மதனின்மேல் கேடு மற்றுண்டோ?
துறப்பெனுந் தெப்பமே துணைசெயாவிடில் பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ. **23**

இம்மை யாவர்க்கும்	இப்பிறப்பில் எல்லார்க்கும்	துறப்பு எனும் தெப்பமே	துறத்தலாகிற தெப்பமே
இறப்பு எனும் மெய்ம்மையை	மரணமுண்டாகியே தீருமென்கிற தத்துவத்தை	துணை செயாவிடில்	உதவி புரியாவிட்டால்
மறப்பு எனும் அதனின் மேல்	மறப்பதற்கு மேற்பட	பிறப்பு எனும் பெரு கடல்	ஸம்ஸாரமஹாஸாகரத்தினின்று
கேடு மற்று உண்டோ	கெடுதல் வேறொன்றுண்டோ?	பிழைக்கல் ஆகுமோ	தப்புதல் கூடுமோ?

* * *—'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுః த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச'* என்று கீதையிற் கூறியபடி பிறந்த மக்களுக்கு இறப்பென்பது இன்றியமையாததாகும்;

இதனை மறத்தல் கூடாது; மறப்பதிற்காட்டிலும் வேறு கேடில்லை. இதனை மறவாதவர்கள் செய்ய வேண்டுவதென்ன? "புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே பதநம்" என்ன நின்ற ஸம்ஸார அநுவ்ருத்தியை யொழிப்ப தற்கு ஸாதனமான துறவினை மேற்கொள்ள வேணும். அங்ஙனம் துறவை மேற் கொண்டால் ஸம்ஸார ஸாகரத்தைக் கடக்கலாகும் என்றதாயிற்று. மேலே உதாஹரித்த கீதா ச்லோகத்தில் "த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்று மரணமடைந் தவர்கட்கெல்லாம் மறுபடி பிறப்புமுண்டென்றதே; ஆதலால் ஸம்ஸாரம் தொடர்ச்சியறுவது எங்ஙனேயென்று சிந்திக்கவேண்டா; கீதையிற் கூற்று ஆன்மாவைப்பற்றியதன்று, சரீரத்தைப் பற்றியேயென்க. ... ... *

152. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாம் திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும் ஒருமகள் மணமுங்கண் டுவப்ப வுன்னினேன். 31

பெரு மகன்	புருஷோத்தமனான ஸ்ரீராமன்	அரு மகள் நிறை குணத்து	அருமையாகிய பெண்ணிற் குரிய நிறைந்த குணத்தை யுடைய
என் வயின் பிறக்க	என்னிடத்துப் பிறக்க (அவ் விராமனுக்கு)	அவனி மாது எனும் ஒரு மகள் மண மும் கண்டு	பூமிப்பிராட்டியாகிற ஒரு பெண்ணின் மணக்கோ லத்தையுங் கண்டு
சீதை ஆம் திரு மகள் மணவினை	ஸீதையாகிற திருமகளின் மணக்கோலத்தை		
தெரிய கண்ட யான்	கண்ணாரக்கண்ட யான்	உவப்ப உன்னி னேன்	களிக்கக் கருதுகின்றேன்.

* * *—ராஜ்யத்தை அராஜகமாக விட்டுத் துறத்தல் தகுதியன்றாதலால் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைத்துப் பின்னர் முனிவேடங்கொள்ள வேணுமென்றெண்ணி அதனை ஒரு சமத்காரமாகக் கூறுகின்றனன். திருமடந்தை மண்மடந்தையாகிய இருதேவியர்கட்கும் கொழுநனான நாராயணனது அம்சமாகிய ஸ்ரீராமனுக்கு ஸ்ரீதேவியோடு திருமணம் நடந்ததைக் கண்டுகளித்த யான் பூமி தேவியோடும் திருமணம் நடத்திக் கண்டு களிக்க வேணுமென்றனன். இது சொல்தொடையில் தோன்றநின்ற பொருள். ... ...

153. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப் பேதமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன் யாது நுங்கருத்தென இனைய கூறினான். 33

ஆதலால்	இனி நான் துறவறம் பூண் டொழுக வேண்டுவது அவசியமாயிருத்தலால்	மா தவம் தொடங்கிய	பெரிய தவத்தைச் செய்யத் தொடங்குவதற்காக
இராமனுக்கு அரசை நல்கி	ஸ்ரீராமனுக்கு அரசாட்சிச் செல்வத்தையளித்து	வனத்தை நண்ணு வேன்	காடு நோக்கிச் செல்வதா யிருக்கின்றேன்; (இவ் விஷயத்தில்)
பேதமை தாய் வரும் பிறப்பை நீக்குவான்	அவிவேகம் தாவி வருவ தற்கு ஹேதுவான ஸம் ஸாரம் தொடராதபடிக்கு	நும் கருத்து யாது	உங்கள் கருத்து எத்த கைத்து?
		என இனைய கூறினான்	என்றிவற்றைச் சொன்னான்.

* * *—இச்செய்யுள் தெய்விகவாக்காக அமைந்தது. சக்ரவர்த்தி தான் எண்ணிய எண்ணத்தைத் தெரிவித்தவிதில் இனித்தெய்வவசமாக நிகழப்போகிற நிகழ்ச்சியும் விளங்குமாறு சொல்தொடர் அமைந்திருக்கின்றது. இராகவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விட்டு யான் அகவிருள் நீங்குதற்கு ஹேதுவான தவத் தைத் தொடங்கும் பொருட்டு அரணியம் செல்வதாக விருக்கின்றேன்; இதில்

உங்கள் கருத்து யாது? என்று மந்திரிமார்களைச் சக்ரவர்த்தி கேட்பதாகவுள்ளது. ஆழ்ந்து நோக்குமளவில் தற்செயலாய் நடக்கப்போகிற நடத்தையும் இதில் காணலாம்படியுள்ளது. (எங்ஙனேயென்னில் ;) இரா மனுக்கு—தற்காலம் அயோத்தியில் இராத மன்னாகிய பரதனுக்கு; அரசை நல்கி=(நல்கி என்ற வினையெச்சத்தை எச்சத்திரிபாகக் கொண்டால் 'நல்க' என்றதாகும்.) ராஜ்யத்தைக் கொடுக்கும்படி. [பேதமை தாய்வரும்] 'பேதமை' என்பதை 'பேது அமை' என்று பிரிக்க. கூனியின் கலஹவார்த்தைகளினால் பேதபுத்தி அமையப்பெற்ற தாயாகிய கைகேயி குறுக்கே வந்து நிற்பள் என்றபடி. பிறகு என்னாகுமென்னில், பிறப்பைநீக்குவான் மாது அவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன் =நண்ணுவேனென்பது பிறவினையில் வந்த தன்வினையாகக் கொள்ளத்தக்கது. நண்ணுவிப்பேனென்றபடி. பிறப்பை நீக்குபவனான நாராயணனுடைய அம்சமான ராமன் 'பிறப்பை நீக்குவான்' என்னுஞ் சொல்லால் விவக்ஷிதன். அவனுடைய மாது—தேவியான ஸீதாபிராட்டி; அவளுக்கு விச்லேஷமாகிற அவத்யம் உண்டாவதற்கு ஹேதுவான வனத்தை நண்ணுவிப்பேன்—வனம்போகக் கட்டளையிடுவேனென்றபடி. ... *

(வஸிஷ்டபகவான் ஸ்ரீராமபட்டாபிஷேகத்திற்கு இசைந்ததைக் கூறுதல்)

154. நிருப நின்குல மன்னவர் நேமி பண்டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கருமமேயிது கற்றுணர்ந்தோய்க் கினிக்கடவ
தருமமும்மிது தக்கதேநினைத்தனை தகவோய்.

நிருப	சக்ரவர்த்தியே!	கற்று உணர்ந்தோய்க்கு	நூல்களைக்கற்று விவேகியான உனக்கு
பண்டு நின் குலம் மன்னவர்	இதற்கு முன்பு உன் குலத்தில் அரசர்களாகத் தோன்றினவர்களாய்	இது கருமமே	மனோரதித்தவிது தகுதியான காரியமே ;
நேமி உருட்டி	ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்தி	இனி கடவ தருமமும் இதுவே	இந்நிலையில் செய்யத் தக்கதான தருமமும் இதுவே யாகும்.
பெருமை எய்தினர்	பெருமை பெற்றவர்களுக்குள்ளே	தகவோய் தக்கதே நினைத்தனை	உணர்ச்சி மிக்க மன்னவனே! தகுதியான காரியத்தையே செய்ய நினைத்தாய்.
இராமனை பெற்றார் யாவர்	இராமனைப் போன்றவொரு புதல்வரைப் பெற்றவர் யாரேனுமுளரோ?		

* * *—தசரத மன்னவனே! உனக்கு முன்னிருந்த சக்கரவர்த்திகள் ஏறக்குறைய உன்னைப்போல் பெருமை பெற்றவராயினும், ஸ்ரீராமனைப் போல் ஸகலகுண ஸம்பந்நனான ஸத்புத்ரனைப் பெற்றவர் ஒருவருமில்லை யென்று இங்குச் சொன்னது-அனைவரும் ஸ்ரீ ராம குணங்களிலே ஈடுபட்டிருப்பவர்களாதலால் அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதைப்பற்றி மாறான கருத்து எவர்க்கும் நிகழாதென்று தெரிவிப்பதற்காம்.

நேமி—சக்கரம் ; ஆணையைச் சக்கரமென்று கூறுதல் வழக்கு ; ஆஜ்ஞா சக்ர மென்க. 37

(இதுவுமது.)

155. மண்ணினுநல்லள் மலர்மகள்கலைமகள்கலையூர்
பெண்ணினுநல்லள் பெரும்புகழ்ச்சனகியோ, நல்லள்
கண்ணினுநல்லன் கற்றவர் கற்றிலாதவரும்
உண்ணுநீரினு முயிரினு மவனையே யுவப்பார். 43

பெரு புகழ் சனகியோ	பெரும் புகழ் படைத்த சீதையோ வென்றால்
மண்ணினும் நல்லள்	பூமிதேவியைக் காட்டிலும் நல்லவள் ;
மலர் மகளினும் நல்லள்	திருமகளைக் காட்டிலும் நல்லவள் ;
கலை மகளினும் நல்லள்	ஸரஸ்வதியிற் காட்டிலும் நல்லவள் ;
கலை ஊர் பெண்ணினும் நல்லள்	மானை வாஹன மாகவுடைய பார்வதியிற் காட்டிலும் நல்லவள் ;
	(இராமனோ வென்றால் ;)
நல்லள் கண்ணினும் நல்லன்	அப்படிப்பட்ட நல்லவனுடைய கண்களைக் காட்டிலும் நல்லவன் ;
சுற்றவர் கற்றிலாதவரும்	கற்றவர்களும் கல்லாதவர்களும்
உண்ணும நீரினும்.	பருகுகின்ற நீரைப் பார்க்கிலும்
உயிரினும்	உயிரைப் பார்க்கிலும்
அவனையே உவப்பார்	அவ்விராமனையே மேலானவனாக வெண்ணி விரும்புவார்கள்.

* * *—அரசாட்சி புரியுமிடத்து அரசன் நல்லவனாயினும் அரசி நற்குணமில்லாதவளா யிருப்பின் பயனில்லையாகுமாதலால், அரசியான ஸீதா தேவியும் நற்குணம் வாய்ந்தவ ளென்பதைத் தெரிவிப்பது இச் செய்யுள். ஸீதா தேவி பொறுமையிற் சிறந்தவ ளென்பது தோன்ற 'மண்ணினும் நல்லள்' எனப்பட்டது ; அழகிற் சிறந்தவ ளென்பது தோன்ற 'மலர் மகளினும் நல்லள்' எனப்பட்டது. கல்வியிற் சிறந்தவ ளென்பது தோன்றக் 'கலைமகளினும் நல்லள்" என்றது ; கற்பிற் சிறந்தவ ளென்பது தோன்றக் 'கலையூர் பெண்ணினும் நல்லள்' என்றது. இனி, 'நல்லள் கண்ணினும் நல்லன்' என்று தொடங்கி இராமபிரானது நலம் கூறப்படுகின்றது. *தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்* என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடியே பிராட்டியைக் காட்டிலும் பெருமாள் தயாளு வென்பது ப்ரஸித்தமே. யாவரும் இராமனிடத்தே அன்பு கொண்டிருப்பரென்பது விளங்க "உண்ணு நீரினு முயிரினு மவனையே யுவப்பார்" என்றது. பண்டிதர்களோடு பாமரர்களோடு வாசியற யாவரும் இராமனை விட்டுத் தரிக்ககில்லா ரென்பது கருத்து. 42

(வசிட்டமுனிவன் சொன்னதற்கு மன்னவன் மகிழ்தல்.)

156. மற்றவன் சொன்ன வாசகங் கேட்டலும் மகனைப் பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடிக்குமப் பெருவில்
இற்றவன்றினும் எறிமழுவாளவனிழுக்கம் உற்றவன்றினும் பெரியதோருவகையனானான். **44**

அவன் சொன்ன வாசகம் கேட்டலும்	அம் முனிவன் சொன்ன வார்த்தையைக் கேட்டவளவில் (தசரதசக்ரவர்த்தி)
மகனை பெற்ற அன்றினும்	புத்திரனைப் பெற்ற வந்நாளினும்
பிஞ்ஞகன் பிடித்த அப் பெரு வில் இற்ற அன்றினும்	சிவன் கையிற் பிடிப்பதான அந்தப் பெரிய வில் ஒடிந்த அந்நாளிலும்
எறி மழு வாளவன் இழுக்கம் உற்ற அன்றினும்	பரசுராமன் தோல்வியடைந்த அந்நாளினும்
பெரியது ஓர் உவகையன் ஆனான்	மிஞ்சிய ஒப்பற்ற சந்தோஷத்தை யடைந்தவனாயினன்.

* * *—மகனைப் பெற்ற ஆனந்தத்திற் காட்டிலும் மருமகளைப் பெற்ற ஆனந்தம் மேலதாயிருந்தது ; (பரசுராம பங்கத்தில்) மாற்றானை முகம் வணக்கப் பார்த்த ஆனந்தம் அதனினும் மேலதாயிருந்த தென்று சொற்போக்கில் உணரத் தக்கது. 44

(மன்னவனாணையைச் சுமந்திரன் தெரிவிக்க, ஸ்ரீராமன் தேர்மீது ஏறுதல்.)

157. கண்டுகைதொழு தையவிக் கடலுடைக் கிழவோன்
உண்டோர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்டரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல் போலவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான். 53

கண்டு கை தொழுது	கண்டு கைகூப்பி வணங்கி	புண்டரீகம் கண் புரவலன்	தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீ ராம பிரான்
ஐய	ஐயனே!	பொருக்கென எழுந்து	சடிதியாக வெழுந்து
இ கடலுடை கிழவோன்	இவ்வுலகத்திற்கு உரியவனாகிய சக்கரவர்த்தி	ஓர் கொண்டல் போல்	ஒரு காளமேகம் போல
ஓர் காரியம் உண்டு என உரைத்தனன் எனலும்	ஓர் காரிய முளதாதலால் ஸ்ரீ ராமனை யழைத்து வருகவென்று நியமித்தாரென்று சொன்னவுடனே	அவன் கொடி நெடு தேர் மிசைக்கொண்டான்	அச்சுமந்திரனது கொடிகள் கட்டிய நெடிய தேரை மேற்கொண்டான்.

***—இளைய பெருமாளோடும் பிராட்டியோடுங் கூட இராமபிரானிருந்தமை இதன் கீழ்ப்பாட்டிற் சொல்லிற்று; அவ்விருப்பிலே கண்டு கைதொழுத சுமந்திரன் 'ஸ்ரீ ராமபிரானே! ஒரு காரிய நிமித்தமாக சக்ரவர்த்தி உன்னை யழைத்து வருமாறு கட்டளை யிட்டனன்! என்று தெரிவித்த வளவில், 'என்ன செய்தி? எதற்காக?' என்று ஒன்றுங் கேளாமல் உடனே தேர் மீதேறிப் புறப்பட்டனனிராமன். இராமபிரான் இப்போது எழுந்து செல்வதானது ராக்ஷசர்களாகிய கோடையால் வாடியுள்ள தேவர் முனிவர்களாகிய பயிர்க்கு அவ்வெப்பம் தணிவதற்குப் பரம்பரையாகக் காரணமாகப் போவதனால் 'கொண்டல் போல் தேர்மிசைக் கொண்டான்' என்றார். 53

(சக்ரவர்த்தி இராமபிரானைத் தழுவியது.)

158. நலங்கொண்மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்கலன்னதிண் டோளையு மெய்த்திருவிருக்கும்
அலங்கன் மார்பையுந் தனது தோள் மார்புகொண் டளந்தான். 54

நலம் கொள் மைந்தனை	எல்லா நன்மைகளையுங் கொண்ட புத்திரனாகிய ஸ்ரீராமனை	விலங்கல் அன்ன திண் தோளையும்	மலைபோன்ற திடமான தோள்களையும்
தழுவினன் என்பது என்	தழுவிக் கொண்டானென்று சொல்லுவது என் கொல்?	மெய் திரு இருக்கும் அலங்கல் மார்பையும்	மெய்யே திருமகள் உறையும் பூமாலை யணிந்த மார்பையும்
நளி நீர் நிலங்கள்	கடல் சூழ்ந்த நிலவுலகங்களை	தனது தோள் மார்பு கொண்டு	தனது தோள்களையும் மார்பையும் (அளவு கோலாகக்) கொண்டு
தாங்குறும் நிலையினை	சுமப்பதற்குரிய நிலையை	அளந்தான்	அளவிட்டான் (தசரதன்).
நிலையிட நினைத்தான்	அளவிட்டறிய எண்ணினவனாகி (அவ்விராம பிரானுடைய)		

***—தந்தை மைந்தனைக் கண்டவுடனே தழுவிக் கொள்ளுதல் இயல்பாயினும் இப்போது இராமனைத் தயரதன் தழுவியதானது 'இப்பூபாரத்தைத் தாங்குவதற்குரிய தோள்களின் பரப்பும் மார்பின் பரப்பும் உள்ளனவோ' என்று தன் தோள் மார்புகளால் அளந்து பார்ப்பதற்காகவே போலும் என்று சமத்காரம்

பொலியக் கூறினபடி. நல்லறிவு அடக்கம் பொறுமை வல்லமை மனவுறுதி முதலிய நலங்களைக் கொண்டவன் இராமன் என்று விவக்ஷித்து 'நலங்கொள் மைந்தனை' என்றது. தனது திருமார்பைத் திருமகளுக்குப் படை வீடாக்கித் தந்து ஸகலைச்வர்ய ஸம்பந்நனாய் ஸகலலோக நியந்தாவாயிருக்குங் கள்ளமாயப் பிரானுருடைய கனத்த தோள்களையும் மார்பையும், சக்கரவர்த்தி, சுள்ளி கொண்டு கடலாழம் பார்ப்பாரைப் போல அளந்து பார்த்தது பிள்ளையென் றெண்ணிய பேரபிமானமே யென்று கவி வியக்கின்றமை சொற் போக்கிற் காண்க. 62

(பொதுவாக ஸத்புத்திரனைக் கொண்டாடுதல்.)

159. மன்னர் வானவரல்லர் மேல்வானவர்க்கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலியரல்லர்
பின்னு மாதவந் தொடங்கி நோன்பிழைத்தவர் பிறரார்.
சொன்மருமகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார். 70

அரு துயர் துறந்தார் — நீங்குதற்கரிய துன்பத்தினின்று நீங்கினவர்கள்
மன்னர் அல்லர் — இவ்வுலகத்தரசர்களல்லர்;
வானவர் அல்லர் — தேவர்களல்லர்;
மேல் வானவர்க்கு அரசு ஆம் பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர் — மேலும் தேவாதி ராஜனாகிய பொன் வீரக்கழலணிந்த இந்திரனைப் போன்றவருமல்லர்;
பிறர் ஆர் — வேறு யாவரென்னில்;
சொல் மரு மகன் பெற்றவர் — தஞ்சொல்லை மறுக்காத புத்திரனைப் பெற்றவர் யாவரோ அவரே யாவர்.

***—துயருற்றா ரென்று சிலரையும், துயர் துறந்தா ரென்று சிலரையும் சொல்லுகிறோம்; ஸம்ஸாரிகள் யாவரும் துயருற்றா ரெனப்படுவர்; ஸம்ஸாரிகளாயிருக்கச் செய்தேயும் ராஜாதி ராஜர்களாயிருப்பவர்களும் விண்ணவர்களும் விண்ணவர் கோமானும் மஹாதபஸ்விகளான முனிவர்களும் துயர் துறந்தவ ரெனப்படுவர்! ஆனால் இப்போது சக்ரவர்த்தி சொல்லுவது யாதெனில், தஞ்சொல் மறுக்காத மகனைப் பெற்றவர் யாவரோ அவரே துயர் துறந்தவராவர்; மற்று யாரும் எத்தனை மேம்பாடுடையராயினும் துயர் துறந்தா ரல்லர் என்பதாம். இதனால், விதேயனான புத்திரனைப் பெறுதலே ஆனந்தத்திற்கு எல்லை நிலம் என்பது தெரிவிக்கப்பட்டதாம். தன் சொல்லை இராமபிரான் சிறிதும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வதற்காக இது கூறியவாறு. 70

160. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பரமரசன்
வினையினென்வயின் வைத்தனனெனக் கொளல் வேண்டா
புனையுமாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினையவேண்டும் யான் நின்வயிற்பெறுவ தீதென்றான். 71

அனையது ஆதலின் — தந்தையரின் பாரத்தைத் தனயர் நீக்குவதே அரசகுலத்தார்க்கு முறையாதலால்
அரசன் அரு துயர் பெரு பரம் வினையின் என் வயின் வைத்தனன் என கொளல் வேண்டா — 'சக்ரவர்த்தி, மிகத்துன்பமான பெரிய பூபாரத்தைக் கபடத்தினால் என்னிடத்தில் வைத்தான்' என்று நினைத்துக் கொள்ள வேண்டா;
புனையும் மா முடி புனைந்து — தரிக்கக் கடவதான சிறந்த கிரீடத்தைத் தரித்துக் கொண்டு
இந்த நல் அறம் புரக்க — (ராஜ்யபரிபாலனமாகிற) இந்த நல்ல தருமத்தைப் பரிபாலிக்க
நினையல் வேண்டும் — நினைப்பாயாக;
யான் நின் வயின் பெறுவது ஈது என்றான் — நான் உன்னிடத்துப் பெறத்தக்கது இதுவே யென்றான் (தசரதன்).

* **—தஞ்சொல் மறுக்காத மகனைப் பெற்றவர் யாவரோ அவரே துயர் துறந்தவர் என்று கீழ்ச் செய்யுளிற் சொல்லிற்று. உடனே இச் செய்யுளின் தொடக்கத்தில் 'அனையதாதலின்' என்றது—அப்படிப்பட்ட பாக்கியம் பெற்றமை எனக்கே யுளதாதலால் என்றவாறு. அரசாட்சி புரிவதென்பது மிகவும் சிரம ஸாத்யமாதலால் "அருந்துயர்ப் பெரும்பரம்" எனப்பட்டது. பொறுக்க முடியாத துன்பமயமான ராஜ்ய பாரத்தைத் தந்தை ஏதோ தரும வியாஜத்தினால் நம் தலையில் வைத்திட்டானென்று எண்ணாது 'அரசற்கு ஈது இன்றியமையாத் தரும மன்றோ' என்றெண்ணி இதை மேற்கொண்டு மகிழ்ந்திருக்க வேண்டுமென்றான் சக்ரவர்த்தி. 71

(தந்தை கட்டளை யென்னுங் காரணத்தினால் முடி புனைய இராமனிசைந்தது.)

161. தாதையப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன் காதலுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவனேவிய ததுசெயலன்றோ நீதிபெற்கென நினைந்துமப் பணிதலைநின்றான். 72

தாதை அப்பரிசு உரை செய	தந்தையாகிய தசரதன் அவ்வண்ணம் சொல்ல,
தாமரை கண்ணன்	புண்டரீகாக்ஷனான ஸ்ரீராமன்
காதல் உற்றிலன்	ராஜ்யம் கிடைத்துவிட்டதென்று ஆசை கொள்ளாதவனாகியும்
இகழ்ந்திலன்	(அரசாட்சி புரிவது அருந்துயராயிற்றே! என்று) இகழ்ச்சிகொள்ளாதவனாகியும்
இது கடன் என்றும்	பூமி பாரம் தாங்குவதாகிய இது கடமை யென்றும்
கொற்றவன் உணர்ந்து ஏவியது யாது அது செயல் அன்றோ எற்கு நீதி என நினைந்தும்	சக்ரவர்த்தி ஆராய்ந்து கட்டளையிட்டது எதுவோ அதனைச் செய்வதல்லவா எனக்கு நியாயம் என்றெண்ணியும்,
அப் பணி தலை நின்றான்	அக்கட்டளைக்கு உடன்பட்டிருந்தான்.

* **—அரசாட்சி புரியுஞ் செல்வம் நமக்குக் கிடைத்து விட்டது' என்று செருக்குக் கொள்ளவும் ப்ராப்தம்; 'இந்தச் சங்கடம் நமக்கேன்?' என்று அதனை இகழ்ந்து விலகிக் கொள்வதும் ப்ராப்தம். இராமபிரானுடைய மனோ விருத்தி இவ்விரு வகையிலுஞ் சேராது 'பித்ரு வாக்ய பரிபாலனம் நமக்கு உற்றது; அவருடைய கட்டளை எதுவோ அதுவே நமக்குப் பரிபாலனம் செய்யத் தக்கது' என்கிற ஒரு அத்யவஸாயமே கொண்டு உடன்பட்டு நின்றதாகக் கூறிற்று. 72

(ஸ்ரீராம பட்டாபிஷேக முணர்ந்த கௌசலையின் மன நிலை.)

162. சிறக்குஞ் செல்வம் மகற்கெனச் சிந்தையிற் பிறக்கும் பேருவகைக்கடல் பெட்பற
வறக்குமா வடவைக்கன லானதால் துறக்கு மன்னவனென்னுந் துணுக்கமே. 93

இராமனுக்கு மகுடாபிஷேகம் நடக்கப் போகிறதென்று கேள்விப்பட்ட கௌசலைக்கு

மன்னவன் துறக்கும் என்னும் துணுக்கம்	சக்ரவர்த்தி காடு செல்வானே! என்று தோன்றிய அச்சமானது
மகற்கு செல்வம் சிறக்கும் என சிந்தையில் பிறக்கும் பேர் உவகை கடல்	ஸ்ரீராமனுக்கு அரசச்செல்வம் சிறக்குமென்று மனத்தில் தோன்றுகிற பெரிய சந்தோஷமாகிற கடலானது
பெட்பு அற	பெருமையற
வறக்கும் ஆ	வற்றும்படி
வடவை கனல் ஆனது	பாடபாக்னியை யொத்ததாயிற்று.

***—திருக்குமாரனுடைய மகுடாபிஷேகச் செய்தியைக் கேள்வியுற்ற கௌசலைக்கு அபரிமிதமான மனக்களிப்பு உண்டாயிற் றெனினும், சக்ரவர்த்தி புத்திரன் தலையில் ராஜ்ய பாரத்தை வைத்திட்டுத் தான் துறப்பானே! என்கிற சங்கையினலுண்டாகிய அச்சத்தினல் அக்களிப்பு மிகுதிப் படாமல் அடங்கி நின்ற தென்பதாம்.

படபா என்னும் வடசொல் வடவை யெனத் திரிந்தது. இச் சொல்லுக்குப் பெண் குதிரை யென்று பெயர்; கடலில் அதிகப்படும் நீரை உறிஞ்சிப் பருகுமாறு முகத்துக் கனல் பெற்றதோர் பெண் குதிரை கடலினிடையே நிற்பதாக நூற் கொள்கை. 98

(பின் கோசலை நோன்புகள் தொடங்குதல்,)

163. நல்கி நாயக னுண்மலர்ப்பாதத்தைப் புல்லிப்போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாளிகைக் கோயில்வலங்கொளாத் தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினள். **99**

நல்கி	பல்வகைத் தானங்களைச் செய்து	கோயில் வலம் கொளா	கோவிலைப் பிரதக்ஷிணஞ் செய்து (பிறகு)
நாயகன் நாள் மலர் பாதத்தை	குல தெய்வமான ஸ்ரீரங்கநாத விக்ரஹத்தின் அப்போத லர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை	புரை இலா மல்லல் மாளிகை	குற்றமற்ற வளம் பொருந்திய அரண்மனையில்
புல்லி போற்றி வணங்கி	தழுவித் துதித்துச் சேவித்து	நோன்புகள் யாவும் தொடங்கினள்	விரதங்களெல்லாவற்றையும் செய்யத் தொடங்கினள்,

***—கோசலை மங்கலச் செய்தி சொன்னவர்கட்கு வெகுமதி யளித்துச் சுமித்திரையோடு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் கோயிலுக்குப் போனளென்றும், அங்குத் திருமாலின் திருவடிகளை வணங்கிப் பெருமானிடத்து இராமனுக்குத் திருவருள் புரிய வேண்டினளென்றும், தவசியர்க்குக் கோதானங்களும், அந்தணர்க்குப் பல்வகைத் தானங்களும், புரிந்தா ளென்றும் கீழ்ச் செய்யுள்களிற் சொல்லிற்று. அங்ஙனம் தானங்கள் செய்து கோவிலைப் பிரதக்ஷிணஞ் செய்து தன் மாளிகை புக்குப் பல்வகை விரதங்களையும் அனுட்டிக்கத் தொடங்கின ளென்றது இதில். இக்குலத் துதித்த அரசர்க்கெல்லாம் முடி சூட்டுங்கால் அவ்வவர் தாய்மார் செய்து வந்த நோன்பு என்பது தோன்றத் 'தொல்லை நோன்பு' என்ருர். மாளிகைக் கோயில்— அரண்மனையிலுள்ள எம்பிரான் கோயி லென்னவுமாம். ஸாக்ஷாத் நாராயண மூர்த்தியே இராமபிரானகத் திருவவதரித் திருக்குமிடத்து வேறொரு நாராயண மூர்த்தி ஆராதிக்கப்பட்டு வந்தனனே வென்று சங்கிக்க வேண்டா; பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் இதைப்பற்றி விரிவாக அருளிச் செய்கிருர்; அதில் பூர்வ சதகத்தின் முடிவு சுலோகத்தில் "ஸ்ரீரங்கேந்தோ: பதகிஸலயே......ஹேமாம் போஜைர் நிபிட நிகடே ராமஸீதோப நீதைः" என்றும், உத்தர சதகத்தில் "ஸர்க்காப்யாஸ விசாலயா" "மநு குலமஹீபால" "மங்வங்வவாயே" என்று மூன்று சுலோகங்களு மருளிச் செய்தவை நம்முடைய விரிவுரையோடு காணத் தக்கன. 99

— மந்திரப்படலம் முற்றிற்று —

2. மந்தரை சூழ்ச்சிப்படலம்

கைகேயியின் தாதியாகிய மந்தரை யென்பவள் இராமனது மகுடாபிஷேகச் செய்தியை யுணர்ந்து எவ்விதத்திலாவது அதைக் கெடுக்க வேணுமென்று எண்ணங் கொண்டு கைகேயியின் மனத்தை வேறு படுத்திய கதையைக் கூறும்பாகம் இது. சூழ்ச்சியாவது துராலோசனை.

இப் படலத்தின் கதைச் சுருக்கம் வருமாறு :—இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதென்று முடிவு கொண்ட மன்னவன் அதற்குரிய நல்ல நாள் பார்க்கும்படி சோதிடர்களுக்குச் சொல்ல, அவர்களு மாராய்ந்து நாளைக்கே நல்ல நாளென்ன, பிறகு வசிட்ட முனிவனை வரவழைத்து 'மகுடாபிஷேகத்திற்கு ஏற்ற நாள் நாளைக்கேயாதலால் இராமனுக்கு முதனாட் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்வீராக' என்று கூற, வசிட்டனும் இராமனிடஞ் சென்று, தன்னை வணங்கி வழிபட்ட அப்பிரானை நோக்கி 'இராம! மன்னவன் நாளைக்கு உனக்கு முடி சூட்டப் போகிறான்; ஆதலால் சில உறுதிப் பொருள் கூறுகின்றேன்' என்று சிறந்த உபதேச மொழிகள் பல கூறி, பின்பு அப்பிரானோடு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் கோயிலுக்குச் சென்று திருமஞ்சனம் முதலியன செய்து வழிபட்டுப் பிறகு இராமனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளையுஞ் செய்து அப்பால் மன்னவனுக்கு அறிவிக்க, சக்ரவர்த்தி நகரம் முழுவதையும் நன்கு அலங்கரிக்குமாறு பறை சாற்றித் தெரிவிக்கும்படி கட்டளை யிட்டான்; வள்ளுவர் அக் கட்டளையைப் பறை சாற்றித் தெரிவித்தனர். இராமனுக்கு மகுடாபிஷேக மஹோத்ஸவம் நாளைக்கென்று கேட்ட நகரத்து மாந்தர் யாவரும் மிகுந்த குதூஹலத்துடன் நகரத்தை யலங்கரிக்கலாயினர். இளமையில் ஒரு காரண விசேஷத்தினால் இராமன் மீது கறுவு கொண்டிருந்த கூனியானவள் நகரத்தவர்களின் குதூஹலச் செய்கைகளினால் இராமனுக்குப் பட்டாபிஷேகமா மென்றுணர்ந்து மனம் பொறாது வெதும்பி, கைகேயியின் அரண்மனைக்குச் சரேலென்று போய் மெல்லணையில் துயில் கொண்டிருந்தவளை யணுகி யெழுப்பி 'உனக்குப் பெருங்கேடு விளைவதா யிருக்கவும் இங்ஙனம் கிடந்துறங்குவது தகுதியோ?' என்று கூறி இராமனது மகுடாபிஷேகச் செய்தியை யுணர்த்த: கைகேயி மிக்க மகிழ்ச்சி கொண்டு சிறந்ததொரு ரத்ன ஹாரத்தை அந்தக் கூனிக்குப் பரிசளித்தனள். அப்போது அக் கூனி அதனை வீசி யெறிந்துவிட்டுப் பலவகைத் துர்ப் போதனைகளால் கைகேயியின் மனத்தைக் கலக்கினாள். முதலில் மந்தரையின் பேச்சுக்குச் சிறிது முடன்படாதிருந்த கைகேயி பிறகு மனங் கலங்கி அவள் பேச்சுக்கு இசைந்து அவளை நோக்கி 'இப்போது யான் செய்யத் தக்கது யாது'? என்ன; 'முன்னே சம்பராசுர யுத்தத்திலே நீ உதவியதற்காக மன்னவன் உனக்கு இரு வரங்கள் கொடுத்திருப்பதாகச் சொல்லி யிருந்தாயல்லவா? அவற்றில் ஒரு வரத்தினால் இராமனைப் பதினான்கு வருடம் காட்டிற்குச் செல்லவும், மற்றொரு வரத்தினால் பரதனுக்கு முடி சூட்டவும் வேண்டுவாய்' என்று உபாயங் கூறினாள். அதற்குக் கைகேயி கூனியைப் புகழ்ந்து கொண்டாடிச் சன்மானித்து அனுப்பிவிட்டுப் பின் தன்னாபரணங்களை யெல்லாங் களைந் தெறிந்து தலைவிரி கோலத்துடன் பூமியிற் புரண்ட வண்ணம் மூதேவிபோற் கிடந்தனள். என்னுமிது இப்படலத்திற் கூறிய வரலாறு. எண்பத்தெட்டு பாடல்கள் கொண்ட இப்படலத்தினின்று சில பாடல்களே கொள்ளப்படுகின்றன. 6

(இராமபிரானுக்கு வசிட்ட முனிவனது உறுதி மொழி.)

164. கரியமாலினுங் கண்ணுதலானினும். உரியதாமரை மேலுறைவானினும்
விரியும் பூதமோரைந்தினு மெய்யினும், பெரியரந்தணர் பேணுதியுள்ளத்தால், 7

அந்தணர் — வேதியர்களானவர்

கரிய மாலினும் — கரிய மேனியனான திருமாலைக் காட்டிலும்

கண் நுதலானினும் — நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனைக் காட்டிலும்

உரிய தாமரை மேல் உறைவானினும் — கமலாஸனனான பிரமதேவனைக் காட்டிலும்

விரியும் பூதம் ஓர் ஐந்தினும் — விரிகின்ற ஒப்பற்ற பஞ்ச பூதங்களைக் காட்டிலும்

பெரியர் — பெருமையுடையவர்களென்று கொண்டு

உள்ளத்தால் பேணுதி — (அவ்வந்தணர்களை) நன்மனத்தோடு ஆதரிப்பாயாக.

***—நான்காம் வருணத்தில் தோன்றியவரான கம்பர் இக்காலத்தவர்களைப் போல் தாம் அந்தணர்களிடத்துப் பகை கொள்ளாதிருந்தது போல் பிற்பட்டவர்களு மிருத்தல் வேண்டுமெனக் கருதியும், ப்ராஹ்மணத்வேஷமே எல்லா வகையான கேடுகளுக்கும் மூலகாரண மென்று காட்டுவதற்காகவும் வஸிஷ்ட முனிவன் இராமனுக்கு ப்ராஹ்மண பக்தியைப் பெருஞ் செல்வமாக உபதேசித்தருளினதாக இட்டனர். விஷ்ணு சிவன் பிரமன் ஆகிய மூவரும் தாங்கள் அந்தணர்களிடத்திலே பக்தியை ஆசரித்துக் காட்டினவர்களாதலால் அம்மும்மூர்த்திகளினும் அந்தணர்களைப் பெரியாரென்று கொள்வாயாக வென்றார். 'விரியும் பூத மொரைந்து' என்றது இலக்கணையால் பாஞ்சபௌதிகமான பிரபஞ்சத்தை யுணர்த்தும்; இங்கு வடிவத்திற் பெருமை கொள்ளப்பட வேண்டும். பெருமை யென்பது வடிவத்தாலும் குணங்களாலு மாதல் அறிக. இது ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரஹ்ம சப்தார்த்த விவ்ரணத்தில் நம் பாஷ்யகாரராலும் விளக்கப்பட்டதென்க. 7

(மேலும், வசிட்டன் அந்தணர்களினேற்றத்தை வற்புறுத்திக் கூறுதல்)

165. அந்தணாளர் முனியவுமரங்கவர் சிந்தையாலருள் செய்யவுந் தேவரில்
நொந்துளாரையும் நொய்துயர்ந்தாரையும் மைந்தவெண்ண வரம்பு முண்டாங்கொலோ?

மைந்த.	குழந்தாய்!	நொந்து உளாரையும்	வருந்தி யிருப்பவர்களையும்
அந்தணாளர்	பிராமணர்கள்	நொய்து உயர்ந்தாரையும்	விரைவாக உயர்வு பெற்றவரையும்
முனியவும்	கோபிக்கவும்,	என்ண வரம்பும் உண்டோ?	கணக்கிட அளவுமுள்ளதோ?
அவர் சிந்தையால் அருள் செய்யவும்	அவர்கள் மனத்தால் அனுக்ரஹஞ் செய்யவும்		
தேவரில்	தேவர்களுள்		

***—கீழ்ச் செய்யுளில் தேவரைக் காட்டிலும் பெரியர் அந்தணர் என்றதனைக் காரணங் காட்டி நிலை நாட்டியது இச் செய்யுள். தேவர்களில், அந்தணர்களின் சாபத்தினால் இழிந்தோரும், அநுக்ரஹத்தினால் உயர்ந்தோரும் பலர் காணப்படுகின்றனர் என்னுமிதுவே அந்தணர்களின் ஏற்றத்திற்குக் காரணமாகக் காட்டப்பட்டதாயிற்று. 8

166. உமைக்குநாதற்கு மோங்குபுள்ளூர்திக்கும் இமைப்பிலாட்டமோ ரெட்டுடையானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கினராயினும் அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. 15

உமைக்குநாதற்கும்	பார்வதிபதியான சிவபிரானுக்கும்	தோள் வலி	புஜபலத்தை
ஓங்கு புள் ஊர்திக்கும்	உயர்ந்த கருடத்வஜனை திருமாலுக்கும்	தாங்கினர் ஆயினும்	பெற்றிருந்த மன்னவராயினும்
இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும்	இமைத்தலில்லாத ஒப்பற்ற எட்டுக் கண்களையுடைய பிரமனுக்கும்	அமைச்சர் சொல் வழி ஆற்றுதல்	மந்திரிகளின் சொற்படி காரியங்களைச் செய்தல்
சமைத்த	அமைந்ததான	ஆற்றல்	(அவர்க்கு) வலிமையைத் தருவதாகும்.

***—ராஜ்யபாரம் வஹிப்பவர்களுக்கு மந்திரிகளின் சொல்வழி நிற்றல் முக்கியமானது; ஆனால் சக்தியற்ற அரசர்களா யிருந்தால் அவர்கள் மந்திரிகளை யநுசரிக்க வேண்டும்; சிறந்த சக்திமான்களா யிருந்தால் அவர்கட்கு இது கடமையோ? என்ன வேண்டா; த்ரிமூர்த்திகள் போலத் தோள்வலி பெற்றவர்களாயிருப்பினும் அமைச்சர் சொல்வழி நிற்க வேண்டுவது அவசியமே என்றதாயிற்று. உமை—உமா என்னும் வடசொல் பார்வதிக்குப் பெயரானது.

(வசிட்டன் இராமனோடு கோயிலுக்குப் போதல்.)

167. ஏனைநீதி யினியன வையகப் போனகற்கு விளம்பிப் புலன் கொளீஇ
ஆனவனொடு மாயிரமௌலியான் தானநண்ணினன் தத்துவ நண்ணினன். 22

தத்துவம் நண்ணினன்	தத்வதர்சியான வஸிஷ்ட பகவான்
இனியன	இனிமையைத் தருவனவாகிய
ஏனை நீதி	இவை போன்ற பல நீதிகளை
வையகம் போனகற்கு	ஒருகால் உலகமுண்ட வாயனான இராமனுக்கு
விளம்பி புலன் கொளீஇ	சொல்லி அறிவுறுத்தி
ஆனவனொடும்	அவனுடன் கூட
ஆயிரம் மௌலியான்	ஸ்ரீமந்நாராயணனுடைய
தானம் நண்ணினன்	கோயிலை சேர்ந்தான்.

* * *—வசிட்ட முனிவன் இராமபிரானுக்குக் கூறின நீதி மொழிகள் பலபல உயிர்கள் மாட்டு மெய்ம்மையான அன்பு செலுத்த வேண்டுமென்றும், அவ்வன்பே அசுவமேதம் வாஜ பேயம் முதலிய யாகங்களாற் பெறும் பேற்றைத் தந்திடுமென்றும், மனத்தின் கண் உவகையை வெளிப்படுத்தும் இனிய சொற்களைச் சொல்லுதல், வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல், தான் செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்தல் வேண்டுமென்றும் இனைய பல நீதிகளை யுணர்த்தினனாதலால் 'ஏனை நீதி இனியன விளம்பி' என்றார். உலகமுண்ட பெருவாயனது அவதாரமே இராமனென்று காட்ட 'வையகப் போனகற்கு' என்றார். *ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:* என்ற புருஷ ஸூக்தத்தை யடியொற்றி 'ஆயிர மௌலியான்' என்றார். ... 22

(மகுடாபிஷேகத்திற்கு முன்னுட் சடங்கை வசிட்டன் செய்வித்தல்.)

168. நண்ணி நாகணைவள்ளலை நான்மறைப் புண்ணியப் புனலாட்டிப் புலமையோர்
எண்ணுநல்வினை முற்றுவித்தேற்றினன் வெண்ணிறந்த தருப்பை விரித்தரோ. 23

நாகம் அணை வள்ளலை நண்ணி	சேஷ சயனனான அரங்க நாதனைச் சேர்ந்து சேவித்து
	(அப்பெருமான் முன்னிலையில் இராமனை)
நால் மறை புண்ணியம் புனல் ஆட்டி	நான்கு வேதங்களினால் மந்திரிக்கப்பட்ட புண்ய தீர்த்தத்தினால் நீராட்டி
புலமையோர் எண்ணும் நல்வினை	அறிவுடையார் (அரசர்களின் சடங்கென்று) எண்ணி விதித்திருக்கின்ற சடங்குகளை
முற்றுவித்து	நிறைவேற்றி
வெள் நிறத்த தருப்பை விரித்து	வெண்ணிறமுடைய தர்ப்பைகளைப் பரப்பி
ஏற்றினன்	(அவற்றில்) வீற்றிருக்கச் செய்தான் (வசிட்டன்).

* * *—ஸ்ரீமந் நாராயணனுடைய ஸன்னிதிக்குச் சென்றதாகக் கீழ்ச் செய்யுளிற் சொல்லிற்று; அப்பெருமான் ஸ்ரீரங்கநாதனே யென்று காட்டுதற்கு இதில் 'நாகணை வள்ளலை நண்ணி' என்றார். அப்பெருமான் ஸன்னிதானத்தில் இராமபிரானை நீராட்டுவித்து, பட்டங் கட்டுவோர்க்கு முன்னாள் செய்ய வேண்டிய காப்பு நாண் கட்டுதல் முதலிய சடங்குகளையும் அப்பிரானுக்குச் செய்வித்து, அவ்விராமனை உபவாஸ மிருக்கும்படி தர்ப்பாஸனத்தி லிருக்கச் சொல்லினன் வசிட்ட முனிவனென்க. இச் செய்யுளுக்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர்; அதாவது- நாகணைவள்ளலை நண்ணி, வெண்ணிறத்த தருப்பை விரித்து அவற்றில் அவனை நான்மறைப் புண்ணியப் புனலாட்டி, புலமையோ ரெண்ணும் நல்வினையாகிய ஷோட சோபசாரங்களையும் முடியச் செய்து விளக்கேற்றினா னென்பதாக. ... 23

(நகரத்தவரின் பெருங் களிப்புச் செயல்)

169. ஆர்த்தனர் களித்தனராடிப் பாடினர் வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர் தூர்த்தனர் நீணிதி சொல்லினர்க் கெலாம். 27

ஆர்த்தனர் — (நகரத்து மாந்தர்) ஆரவாரித்தனர்;
களித்தனர் — ஆனந்தித்தனர்;
ஆடி பாடினர் — கூத்தும்பாட்டு மாயினர்;
வேர்த்தனர் — உடல் வியர்த்தனர்;
தடித்தனர் — (மகிழ்ச்சியினால்) உடல் பூரித்தனர்;
மெய் மயிர் சிலிர்த்து போர்த்தனர் — உடம்பில் மயிர்க்கூச்சுக் கொண்டு மூடப்பெற்றனர்;
மன்னனை புகழ்ந்து வாழ்த்தினர் — (இராமனுக்கு முடிசூட்ட முயன்ற) சக்ரவர்த்தியைத் துதித்து வாழ்த்தினர்;
சொல்லினர்க்கு எலாம் — (இந்த மங்கலச் செய்தியைச்) சொன்னவர்களுக்கெல்லாம்
நீண் நிதி தூர்த்தனர் — நிரம்பிய திரவியத்தை வாரிக் கொடுத்தனர்.

(நகர் அலங்கரிக்கப்படுவதைக் கூனி காணுதல்.)

170. அந்நக ரணிவுறு மமலைவானவர் பொன்னகரியல்பெனப் பொலிவு மெல்வையில்
இன்னல் செயிராவண னிழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினள். 39

அந்நகர் அணிவுறும் அமலை — அவ்வயோத்திமா நகரை அலங்கரிக்கின்ற பேராரவாரத்தால்
வானவர் பொன் நகர் இயல்பு என — தேவலோகத்தினது தன்மை போல
பொலியும் எல்வையில் — (அந்நகர்) விளங்கும் காலத்தில்,
இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல் — (எவ்வுலகுக்கும்) துன்பத்தைச் செய்கின்ற இராவணன் (முற்பிறப்பிற்) செய்த தீவினை (இப்பிறப்பில் ஓருருவத்தை யெடுத்துவந்தது) போல
துன்ன அரு கொடு மனம் கூனி — (பிறரால்) பெறுதற்கரிய கொடுமையை யுற்ற மனத்தையுடைய மந்தரை
தோன்றினள் — வெளிப்பட்டுப் பார்த்தாள்.

* * *—"ஜ்ஞாதிதாஸீ யதோஜாதா கைகேய்யாஸ் து ஸஹோஷிதா, ப்ராஸாதம் சந்த்ர ஸங்காசம் ஆருரோஹ யத்ருச்சயா." = இன்னாள் இனையாளென்னவொண்ணாதபடி எங்கேயோ தோன்றினவளும், கைகேயியின் பாங்கிமார்க்குத் தாதியும் பெரும்பாலும் கைகேயியுடனிருப்பவளுமான மந்தரை யாத்ருச்சிகமாக அரச மாளிகையின் உபரிகை மீது ஏறி, நகரம் அலங்கரிக்கப்படுவதையும் யாவருங் குதூஹலத்துடனிருப்பதையுங் கண்டு, இராமனது தாய் செல்வத்தை மிகுதியாகக் கொடுப்பதற்கும் ஜனங்கள் குதூஹலமா யிருப்பதற்கும் நகரம் அலங்கரிக்கப்படுவதற்குங் காரணம் இராம பட்டாபிஷேக மென்றறிந்து கொண்டாளென்று வான்மீகத்திலுள்ளது.

'இன்னல் செயிராவணனிழைத்த தீமை போல்' என்று கூனிக்கு உவமை கூறியதன் கருத்தாவது-இப்பொழுது மந்தரை செய்யுஞ் சூழ்ச்சியால் இராமன் நாட்டைவிட்டுக் காட்டை யடைந்து ராவண ஸம்ஹாரம் செய்யப் போகிறானாதலால் அவனுடைய தீமை இவளால் ஸபலமாகின்ற தென்பதாம். 'துன்னருங் கொடுமை' என்றதன் கருத்து ஒப்புயர்வில்லாத கொடுமை யென்பதாம். இராமபிரானது பட்டாபிஷேகத்தைக் கெடுப்பதற்கு எங்கிருந்தோ இந்தக் கூனி வந்தாளே! என்ற வெறுப்பினால், கவி 'கூனி தோன்றினள்' என்கிறார். இராமபிரான் இராவணனைத் தொலைப்பதற்காகக் கைகேயிக்கும் ஸ்ரீராமனிடத்து மனமாறுபாடு உண்டாகுமாறு தேவதைகளே அவளை யனுப்பினார்களென்பவாதலால் அந்தத் தேவரஹஸ்யத்தை மனத்துட் கொண்டு 'கூனி தோன்றினள்' என்கிறார்—என்பாருமுளர். 39

(கூனி கடுங்கோபங்கொண்டு கைகேயி படுத்திருக்குமிடஞ் சேர்தல்.)

171. தொண்டைவாய்க்கேகயன் தோகை கோயின்மேல் மண்டினள் வெகுளியின் மடித்த வாயினள்
பண்டைநா ளிராகவன் பாணிவில்லுமிழ் உண்டையுண்டதனைத் தன்னுள்ளத் துள்ளுவாள். 41

பண்டை நாள்	முற்காலத்தில்	வெகுளியின் மடித்த வாயினள்	கோபத்தினால் மடிக்கப்பட்ட வாயையுடையவளுமாகி
இராகவன பாணி வில் உமிழ் உண்டை	இராமனது கையிலுள்ள வில்லினால் வெளிப்படுத்தப்பட்ட உண்டையானது	தொண்டை வாய் கேகயன் தோகை	கொவ்வைக்கனி போன்ற அதரத்தையுடைய கைகேயியினது
உண்டதனை	மேற்பட்டதனை	கோயில் மேல்	மாளிகையில்
தன் உள்ளத்து உள்ளுவாள்	தன் மனத்தில் நினைத்து	மண்டினள்	நெருங்கினள்.

* * *—இராமன் இளமையில் கையிற் சிறு வில்லும் மண்ணுண்டையுங் கொண்டு குளத்தினருகே விளையாடி வருகையில், இக்கூனி குடங்கொண்டு நீர் மொண்டு மற்றுஞ்சில பெண்களோடு கூடி நடந்து செல்லுகையில் இராமன் விளையாட்டாக எய்த மண்ணுண்டை இவள் மேலே பட, அதனால் இவள் கைநெகிழ்ந்து குடம் விழ யாவரும் சிரித்தார்களாம்; அப்போது இவள் கடுங்கோபமுற்று ராஜகுமாரனாதலால் ஒன்றுஞ் செய்ய இயலாது வாளா சென்று தனக்கு வாய்க்குந் தருணத்தை நோக்கிக் கொண்டிருந்தா ளென்றும் அத்தருணம் இப்போது வாய்த்த தென்றுஞ் சொல்லுவர். இக்கதை வான்மீகத்திலில்லை; வேறு இதிஹாஸ புராணங்களில் இருப்பதாகவும் தெரியவில்லை. திருவாய்மொழியில் (1—5—5) * கூனே சிதைய வுண்டை வின்னிறத்தில் தெறித்தாய் கோவிந்தா * என்றவிடத்து வியாக்கியானத்தில் [ஈட்டில்] இக்கதை எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. கம்பரும் மேலே கிட்கிந்தா காண்டத்திலும் அரசியற்படலத்தில் "சிறிய ரென்றிகழ்ந்து நோவு செய்வன செய்யேல் மற்றிந், நெறியிகந்து யானோர்தீமை யிழைத்தலா லுணர்ச்சிநீண்டு, குறியதாமேனியாய கூனியால் குவவுத்தோளாய், வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்" என்ற செய்யுளில் இராமபிரானுடைய வாக்காகவே வைத்து இக் கதையைக் குறிப்பிட்டுள்ளார். [இச் செய்யுள் இராமன் வாலிவதமான பின்பு ஸுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனுக்குச் சில ஹிதோப தேசங்கள் செய்யுமடைவிலே உள்ளது. எவர் விஷயத்திலும் வலிமை நிலைகளில் எளியவரென்பது பற்றி அலக்ஷியஞ் செய்து வருத்தந் தருஞ் செயல்களைச் செய்யாதே; நான் இந்தச் சன்மார்க்கத்தின் வரம்பைக் கடந்து ஒரு தீங்கு செய்ததனாலே கூனியினிடம் கஷ்டங்களை யடைந்து துன்பக்கடலில் விழுந்தேன் என்பது மேற்குறித்த செய்யுளின் கருத்து.]

தேவர்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறுதற்கு இராகவன் வனம்புக வேண்டுமென்று கருதிப் பட்டாபிஷேகத்தைக் கலைப்பதற்குக் கூனியை யனுப்பினார்களென்றும், அப்பிரான் சிறுபிராயத்திற் செய்த விளையாட்டுத் தொழில் ஒரு வியாஜமாகக் கூறப்பட்ட தென்றும் மேலோர் கருதுவர். 140

(கைகேயியிடம் வந்த கூனி 'பேரிடர் வரவும் வருந்தாது துயிலலாமோ' வென்று கூறுதல்.)

172. அணங்குவாள் விடவரா வனுகுமெல்லையும் குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவா ன்பேரிடர் பிடிக்க நண்ணவும் உணங்குவாயலைநீ உறங்குவாயென்றாள். 144

அணங்குவாள்	துன்பஞ் செய்கின்ற வாளை யொத்த	பிணங்குவான்	வருந்தும்படி
விடம் அரா	விஷத்தையுடைய பாம்பாகிய இராகு	பேர் இடர் பிணிக்க நண்ணவும்	பெருந்துன்பம் கட்ட அணுகவும்
அணுகும் எல்லையும்	சமீபிக்கும் வரையிலும்	நீ உணங்குவாய் அல்லை	(அதற்கு) நீ வருந்துவாயல்லை ;
குணம் கெடாது	தன்மை மாருமல்	உறங்குவாய்	அந்தோ ! தூங்குகின்ருயே !
ஒளி விரி	கிரணங்களை வீசுகின்ற		
குளிர் வெள் திங்கள்போல்	குளிர்ந்து வெளுத்த சந்திரன்போல,	என்ருள்	என்றிடித்துக் கூறினுள் (மந்தரை).

* * *—தன்னைப் பிடிக்க ராஹு அணுகாநிற்கச் செய்தேயும் ஒளி விரிகின்ற சந்திரன்போல, நீ செல்வமெல்லாம் இழக்க வருகின்றவிப்போதும் சிறிதும் கவலை கொள்ளாமல் பெருமகிழ்ச்சியோடு தூங்குகின்ருயே ! என்ருள் மந்தரை.

செய்யுளின் முதலிலுள்ள 'அணங்கு' என்பதைத் தனிப்பதமாகவும் அண்மை விளியாகவுங்கொண்டு 'தெய்வப்பெண்ணே !' என்று கைகேயியை விளிப்பதாகவுங் கொள்ளலாம். "சூருமணங்கும் தெய்வப்பெண்ணே" என்பது நிகண்டு. ... — 144

(கைகேயி, ஸத்புத்திரனுன இராமனிருக்கத் தனக்கு இடருண்டாகாதெனல்.)

173. பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும் உராவருந் துயரைவிட் டுறுதிகாண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேதமேயன இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ வென்ருள். **146**

பராவ அரு புதல்வரை	புகழ்வதற்கு அரிய புத்திரர்களை	விராவ வரு புவிக்கு எலாம்	பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் தோன்றுவதான பூமியிலெல்லாம்
பயக்க	பெறுவதனுல்	வேதமே அன	வேதத்தையே யாத்துத் தோன்றுகின்ற
யாவரும்	எவரும்	இராமனை	இராமபிரானை
உராவ அரு துயரம் விட்டு	வருதற்கரிய [மிக்க] துன்பத்தை நீங்கி	பயந்த எற்கு	பெற்ற வெனக்கு
உறுதி காண்பர்	நன்மையை யடைவர் ;	இடர் உண்டோ	துன்பமுளதாகுமோ ?
ஆல்	ஆதலால்	என்ருள்	என்று கூறினுள் (கைகேயி).

* * *—இதற்குக் கீழ்ச் செய்யுளில் 'முறை திறம்பாதவராய்ப் பெருவீரரான புதல்வர் நால்வர் [ஸ்ரீ ராமலக்ஷ்மண பரத சத்ருகநர்கள்] இருக்கையில் எனக்கு இடருண்டோ ?' என்று கூறிய கைகேயி, இச்செய்யுளில், மற்றவர்களைப்பற்றி நான் நினைக்கவேண்டியது மில்லை ; இராமபிரான் எனக்குப் புதல்வனுக இருக்கையில் எனக்குத் துயரமுண்டாகுமோ ? உண்டாகாது' எனத் தான் இராமனிடத்துப் பேரன்பு வைத்திருத்தல் தோன்றக் கூறினள். உண்மையில், கைகேயி பரதனிடத்திற் காட்டிலும் இராமனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவளே ; அவ்வன்பு மந்தரையின் கலஹ வார்த்தைகளினுல் தான் பிறகு மாறியது. ... 146

(கோசலை வாழ்ச்சி பெற்றனளென்று கைகேயிக்குப் பொருமை தோன்றுமாறு மந்தரை கூறுதல்.)

174. ஆழ்ந்த பேரன்பினுள் அனைய கூறலும் சூழ்ந்த தீவினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலம் திருவும் வீந்தது வாழ்ந்தனள் கோசலை மதியினுலென்ருள். **147**

ஆழ்ந்த பேர் அன்பினுள்	இராமனிடத்து மிகுந்த அன்பினளாகிய கைகேயி	நின் நலம் வீழ்ந்தது	'உனது நன்மை யழிந்தது ;
அனைய கூறலும்	அவ்வார்த்தைகளைச் சொன்னவளவில்	திருவும் வீந்தது	உனது செல்வமும் தொலைந்தது ;
சூழ்ந்த தீ வினை நிகர் கூனி	விளைந்துகொண்ட (அவளது) பாவத்தை யொத்த மந்தரை	கோசலை	கௌஸல்யையானவள்
சொல்லுவாள்	பேசத்தொடங்கி	மதியினுல் வாழ்ந்தனள்	தனது புத்தியினுல் செல்வம் பெற்று வாழ்ந்தாள்'
		என்ருள்	என்று கூறினுள்.

* * *—கைகேயி இராமனிடத்து அன்பு பொங்க அங்ஙனம் கூறியவளவில், மந்தரை, கைகேயிக்குப் பொருமை யுண்டாக்க வேணுமென்ற கருத்தினுல் அவளை நோக்கி 'உன் செல்வாக்கும் செல்வமும் ஒழிய, உன் சக்களத்தியாகிய கோசலை தன்மதியின் வல்லமையால் எல்லா நன்மையும் பெற்று விட்டாளாதலால் இனி வாழ்வாளென்று கைகேயியைத் தாழ்த்திக் கோசலை மேம்படுவதைக் குத்துப் பாடாகவெடுத்துக் கூறினளென்க. 'ஆழ்ந்த பேரன்பினுள்' என்றவிடத்து விகுதி பிரித்துக்கூட்டி 'பேரன்பில் ஆழ்ந்தாள்' என்ருக்கி, மிகுந்த அன்பாகிய கடலில் ஆழ்ந்தவள் என்று உரைக்கவுமாம்.

மதியினுல்—"ஸ்ம்ருதிர் வ்யதீத விஷயா மதிராகாமி கோசரா, புத்திஸ் தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா" என்பர் வடநூலார். மேல் விளையப்போகும் நன்மையைக் கருதி முன்னுடிய தந்திரஞ் செய்தற்குறுப்பான சாதுரியம் மதியெனப்படும் திருவாய்மொழியில் (1—4—3) * மதியினுற் குறள் மாணு யுலகிரந்த கள்வற்கு * என்றவிடத்து ஈட்டில் 'மதியினுல்' என்பதற்கு அருளிய விசேஷார்த்தம் காணத்தக்கது. 147

(கோசலையின் வாழ்ச்சியைக் கைகேயி பாராட்டிக் கூறுதல்.)

175. அன்னசொ லனையவள் கூற வாயிழை மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேல்
பன்னருமபெரும்புகழ்ப் பரதன் பார்தனில் என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்ருள். **148**

அனையவள்	அந்தக் கூனி	மைந்தன் பன்ன அரு பெரு புகழ் பரதன் ஏல்	புத்திரன் புகழ்தற்கரிய மிக்க கீர்த்தியையுடைய பரதனுயிருக்கும்போது,
அன்ன சொல் கூற	அந்த வார்த்தையைச் சொல்ல		
ஆயிழை	ஆபரணங்களணிந்துள்ள கைகேயியானவள்	இதன் மேல் அவட்கு	இதனினும் மேலாக அந்தக் கௌஸல்யா தேவிக்கு
கணவன் மன்னவர் மன்னன் ஏல்	'கணவன் சக்ரவர்த்தியாயிருக்கும்போது	பார்தனில் எய்தும் வாழ்வு	பூ மண்டலத்தில் வரக்கடவதாகிய வாழ்வு யாது?
		என்ருள்	என்று சொன்னுள்.

* * *—கீழ்ச் செய்யுளில் "வாழ்ந்தனள் கோசலை" என்று சொன்ன கூனிக்குக் கைகேயி கூறின மறுமாற்றமிது ; கௌஸல்யைக்குப் புதிதாக வாழ்ச்சி வரவேண்டியது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை ; ஏற்கவே நல்வாழ்வு அமைந்திருக்கின்ற தவளுக்கு ; கணவனே சக்ரவர்த்தி ; மைந்தனே பரதன் என்ருல் இதனினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்வு யாது? என்றனள். 'மைந்தன் இராமன்' என்னுது பரதன் என்று கூறியது சிறிதும் பேத புத்தியின்மையைத் திடப்படுத்த. இச் செய்யுளுக்கு வேறு வகையாகவும் சிலர் கருத்துக் கூறுவர் ;— எனிக்குக் கணவனே சக்ரவர்த்தி ; மைந்தனே பரதன். இப்படி யிருக்க என்னினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்ச்சி யாது? என்பதாக. இப்பொருளில் சுவையின்மை காண்க. 49

(கோசலைக்கு வரும் வாழ்வைக் கூனி கூறுதல்)

176. ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத் தாடகை யெனும் பெயர்த் தையலாள் படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி சூடுவன் நாளை, வாழ்விதெனச் சொல்லினள்.

ஆடவர் நகை உற	வீரர்கள் பரிஹஸிக்கவும்	கோடிய வரி சிலை இராமன்	வளைத்த கட்டமைந்த வில்லையுடைய இராமன்
ஆண்மை மாசு உற	ஆண் தன்மை குற்றமடையவும்	நாளை	நாளையதினம்
தாடகை எனும் பெயர் தையலாள் பட	தாடகை யென்னும் பெயரையுடைய பெண் அழியும்படி	கோ முடி சூடுவான	அரசுக்குரிய கிரீடத்தை யணிந்து கொள்வான்;
		இது வாழ்வு	(கோசலைக்கு வரும்) வாழ்வு இதுவே;
		என சொல்லினள்	என்று கூறினள் (கூனி).

***—கூனி தான் கீழே "வாழ்ந்தனள் கோசலை" என்று கூறியதை இதனால் வியாக்கியானம் செய்தாளாயிற்று. உன் மகனுக்கு ராஜ்ய ப்ராப்தியில்லாமல் அவளுடைய மகனுக்கு நாளை மகுடாபிஷேகமாகப் போகின்றதே, இதனையே நான் கோசலையின் வாழ்வாகக் கூறினேன் என்றதாயிற்று. இராமன் அபகீர்த்திக்கு இடமானவன், இரக்கமின்றித் தவறு செய்பவன் என்கிற நிந்தனை தோன்றக் கூறினள். கோடியசிலை—அநீதியாகிய தொழிலில் முயன்ற சிலை என்றுமாம். 50

(இராமனுக்கு மகுடாபிஷேக மென்கிற மகிழ்ச்சிச் செய்தியைக் கூறினதற்காகக் கைகேயி கூனிக்கு மணிமாலை யளித்தல்)

177. ஆயபே ரன்பெனு மளக்க ரார்ந் தெழத் தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச் சுடர்க்கெலாம் நாயக மனையதோர் மாலை நல்கினள். 52

ஆய பேர் அன்பு எனும் அளக்கர் ஆர்த்து எழ	உண்டாகிய மிகுந்த குதூஹலமாகிற கடல் ஒலித்துக் கொண்டு கிளரவும்	உவகை போய் மிக	மகிழ்ச்சி எல்லை கடந்து அதிகரிக்கவும்
தேய்வு இலா மதி முகம்	பூர்ண சந்திரன் போன்ற முகம்	சுடர்க்கு எலாம் நாயகம் அனையது	முச்சுடர்க்கும் தலைமை பெற்றது போன்றதாகிய
விளங்கி தேசு உற	தெளிந்து ஒளியடையவும்	ஓர் மாலை	ஒரு ரத்தின ஹாரத்தை
		நல்கினள்	(மகிழ்ச்சிச் செய்தி சொன்ன மந்தரைக்குக்) கொடுத்தாள்.

***—இராமனுக்கு மகுடாபிஷேகமாமென்ற மகிழ்ச்சிச் செய்தியைச் செவியுற்றதனால் கைகேயிக்கு ஸந்தோஷம் உள்ளடங்காது முகத்தில் வெளித்தோன்ற, அக்கூனி சொல்லிய கொடுஞ் சொல்லைப் பொருள் படுத்தாது, ஸந்தோஷ ஸமாசாரம் சொன்னதற்காகவே ஒரு சிறந்த ரத்ன ஹாரத்தை அக்கூனிக்குக் கொடுத்தனள். முகத்தினொளி நாடோறும் வளர்ந்து வருதலே யன்றிக் குறைதலில்லையாதலால் தேய்விலாமதியை உவமை யாக்கினர். முச்சுடராவன—சந்திரன் ஸூரியன் அக்கினி யென்பன. இனி, சுடர் என்று துவாதசாதித்தர்களைச் சொல்லி, சுடர்க்கெலாம் நாயகமென்று ஸூரியனைச் சொல்லிற்றாகவுமாம். ... 52

(கூனி பெருவருத்த முடைந்து செய்த செயல்)

178. தெழித்தன ளுரப்பினள் சிறுக்கண் தீயுக விழித்தனள் வைதனள் வெய்துயிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன்மாலையால் குழித்தனள் நிலத்தை அக்கொடிய கூனியே. 53

கொடிய அக் கூனி	கொடுந்தன்மை யளான அந்த மந்தரை
தெழித்தனள்	கூச்சலிட்டாள் ;
உரப்பினள்	அதட்டினாள் ;
சிறு கண் தீ உக	சிறிய கண்களினின்றும் நெருப்புப்பொறி சிந்த
விழித்தனள்	பார்த்தாள் ;
வைதனள்	நிந்தித்தாள் ;
வெய்து உயிர்த்தனள்	வெப்பமாகப் பெருமூச் செறிந்தாள் ;

அழித்தனள்	(தன் கோலத்தைக்) கெடுத்தாள் ;
அழுதனள்	புலம்பினாள் ;
அம் பொன் மாலையால்	(கைகேயி கொடுத்த) அழகிய ஸ்வர்ண ஹாரத்தினால்
நிலத்தை குழித்தனள்	பூமியைக் குழியாக்கினாள்.

* * *—எவ்வகையினாலேனும் கைகேயியைத் தன்வசப்படுத்த நினைத்த கூனி இத்தனை ஆர்ப்பாட்டங்கள் செய்தாளென்க. நிலத்தைக் குழித்தன ளென்றது நிலங்குழிபடப் பொன் மாலையைத் தரையிலெறிந்தா ளென்றபடி. கீழே ரத்ன ஹாரமென்று சொல்லி இங்குப் பொன்மாலை யென்றது முரண்பாடன்று; ரத்ன ஹாரமே யாயினும் பொன்னிற் பதித்துச் செய்யவேண்டுதலால் அதனை யிட்டுப் பொன்மாலை யென்றுஞ் சொல்லக் குறையில்லையே. 53

(கூனியின் கூற்று.)

179. வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயொடு
மாதுயர் படுக, நான் நெடிதுன் மாற்றவள் தாதியர்க் காட்செயத் தரிக்கிலே னென்றாள் **54**

வேதனை கூனி	துயரத்தைச் செய்ய வந்த கூனியானவள்
பின்	பின்பு
வெகுண்டு நோக்கி	(கைகேயியைக்) கோபித்துப் பார்த்து
நீ பேதை	'நீ அறிவு கெட்டவள் ;
பேது இன்றி	(நாம் வேறு, கௌசலை வேறு என்ற) பேதபுத்தி யில்லாமையால்

பிறந்த சேயொடும்	(உன் வயிற்றிற்) பிறந்த மகனாகிய பரதனோடும்
மா துயர் படுக	பெருந்துன்பமடைவாயாக,
நான்	(மானமுள்ள) நானோ வென்றால்
உன் மாற்றவள் தாதியர்கு	உனது சக்களத்தியான கௌசலையின் தாதிகளுக்கு
நெடிது	வெகுகாலம்
ஆள் செய	அடிமை செய்ய
தரிக்கிலேன்	பொறுக்கமாட்டேன்.

* * *—கூனி, கைகேயியைச் சினந்து நோக்கி 'நீ துயர்படச் சம்மதித்தாலும், கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்ய நான் உடன்பட மாட்டேனென்றனள். நீ விவேக மற்றவள்; விவேக முடையை யாயிருந்தால் 'நாம் வேறு, கௌசலை வேறு; அவளுக்கு ஏற்றம் வந்தால் அது நமது வாழ்வுக்குக் குறைவே' என்று உண்மையுணரமாட்டாயா? அவ்வுணர்ச்சியின்மையாலன்றோ நீ மகிழ்கிறாய்; கௌசலையும் அவளைச் சேர்ந்தவர்களும் உன்னைத் தாழ்மைப்படுத்த நீயும் உள் மகனும் துக்க சாகரத்தில் அழுந்திக்கிடக்க வேண்டியது தவிர வேறில்லை; நானோ வென்னில், தன் மகன் அரசு பெற்றதனால் பெருமிதங்கொண்ட கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்து பிழைக்க மனம் பொறேன் என்று கூனி சொன்னது— நீ கோசலையின் தாதியர்க்கு ஆட்செய்து அலமரவேண்டியவள்காண் என்று குறிப்பித்தபடியாம். 54

(இதுவுமது)

180. சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும் நிவந்த வாசனத் தினிதிருப்ப நின்மகன்
அவந்தரல் வெறுநிலத் திருக்கலானபோது உவந்தவா றென்னிதற்குறுதி யாமென்றாள். **55**

சிவந்த வாய் சீதையும்	சிவந்த அதரத்தையுடைய ஸீதையும்
கரிய செம்மலும்	கருநிறமுடைய ஸ்ரீராமனும்

நிவந்த ஆசனத்து	உயர்ந்த சிங்காசனத்தில்
இனிது இருப்ப	இனிமையாக வீற்றிருக்க
நின் மகன்	உனது புதல்வனான பரதன்

அவம் தனல்	வீணாக
வெறு நிலத்து	பாழுந்தரையிலே
இருக்கல் ஆன போது	இருக்க நேர்ந்த இக்காலத்தில்
உவந்த ஆறு என்	நீ சந்தோஷித்த காரணம் யாது?
இதற்கு உறுதி யாது	இதற்கு நீ கொண்ட மனவுறுதி என்ன?
என்றாள்	என்று சொன்னாள் (கூனி).

* * *—கைகேயி! உனக்குச் சக்களத்தியான கௌசலை உள்ளுற உன்பால் மாச்சரியமுடையவளே யாவள்; அவளுடைய மகனான இராமன் தன் மனைவியும் தானுமாகச் சீரிய சிங்காசனத்தேறி வீற்றிருக்க, அவர்கள் பாதத்தின் கீழ் வெறுந் தரையில் உன் மகன் யாதொரு பெருமையுமில்லாமல் கையைக் கட்டிக்கொண்டு நிற்கவேணுமே! இவ்வாறான நிலை நிகழ்வதாயிருக்க, அதை நானெடுத்துக் கூறவும் தெரிந்து கொள்ளாமல் மனத்தில் என்னவுறுதி கொண்டு மகிழ்கின்றாய்? என்று அதட்டிக் கூறினாள் மந்தரை. மூன்றாமடியில் அவந்தனாய் எனவும் பாடமுண்டு; அவந்தன் என்பதை அவத்தன் என்று கொண்டு அவத்யமுள்ளவனா யென்று சிலர் பொருள்கூறுவர். 55

(இதுவுமது)

181. சரதமிப் புவியெலாம் தம்பியோடுமிவ் வரதனே காக்குமேல் வரம்பில்காலமும்
பரதனு மிளவலும் பதியினீங்கிப்போய் விரத மாதவஞ்செய விடுதல் நன்றென்றாள். 57

இ புவி எலாம்	இவ்வுலகங்களை யெல்லாம்
சரதம்	மெய்யாக
இ வரதனே	இவ்விராமனே
தம்பியோடும்	தம்பியாகிய லக்ஷ்மணனோடுங் கூடி
காக்கும் ஏல்	ஆளப்பெறுவனாயின்
வரம்பு இல் காலமும்	எல்லையில்லாத காலதத்வமுள்ளதனையும்
பரதனும் இளவலும்	பரதனும் அவன் தம்பியாகிய சத்துருக்கனனும் (ஆகிய இவர்களிருவரையும்)
பதியின் நீங்கி போய்	நாட்டினின்றும் விலகிச் சென்று
விரதம் மா தவம் செய	விரதங்களோடு கூடியபெரிய தபஸ்ஸைச் செய்வதற்கு
விடுதல் நன்று என்றாள்	காட்டுக்கனுப்புவதே நல்லதாகுமென்றாள்.

* * *—கைகேயி! பரதன் வெறுந்தரையில் கைகட்டிக்கொண்டு இருக்க நேர்ந்தாலும் பாதகமில்லை; அனுகியிருக்கின்ற பரதனால் யாது நேருமோவென்று இராமன் அச்சங்கொண்டு அவனை உயிர்மாய்க்கவுங்கூடும்; அங்ஙனம் நேராதபடி பரதனைத் தம்பியோடு தவஞ்செய்யுமாறு காட்டுக்குப் போகவிடுவது நன்று என்றாள் கூனி-கைகேயிக்கு ரோஷமுண்டாகும் பொருட்டு. ராமலக்ஷ்மணர்கள் ஒரு சேர்த்தியாகவும், பரத சத்ருக்னர்கள் ஒரு சேர்த்தியாகவும் நேசங்கொண்டு வாழ்ந்து வந்ததனால் 'இவ்வரதன் தம்பியோடு' என்றவிடத்து லக்ஷ்மணனையும், 'பரதனுமிளவலும்' என்றவிடத்து சத்ருக்கனனையும் கொள்ள வேண்டியதாயிற்று. 57

(இன்னமும் கூனி கைகேயியை யிடித்துக் கூறுதல்.)

182. அரசரிற் பிறந்துபின் னரசரில்வளர்ந் தரசரிற் புகுந்துபே ரரசியானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில்வீழ்கின்றாய் உரைசெயக் கேட்கிலை யுணர்தியோவென்றாள். 61

அரசர் இல் பிறந்து	ராஜவம்சத்திலே தோன்றி
பின் அரசர் இல் வளர்ந்து	மேலும் அரச மாளிகையிலே வளர்ந்து
அரசர் இல் புகுந்து	ராஜ க்ருஹத்திலும் வாழ்க்கைப்பட்டு
பேர் அரசி ஆன நீ	பெரிய ராணியாயிருக்கின்ற நீ
கரை செயற்கு அரு	கரைகாண வொண்ணாத
துயர் கடலில் வீழ்கின்றாய்	சோக ஸாகரத்திலே விழப் போகிறாயந்தோ!;
உரை செய கேட்கிலை	நான் இதைச் சொல்லவும் கேட்கின்றிலை;
உணர்தியோ	உனக்குஉணர்ச்சியுள்ளதோ? (இல்லையென்று தோன்றுகின்றது.)
என்றாள்	என்று கூறினாள் (கூனி).

(கைகேயி மந்தரையைக் கடிந்து கூறுதல்)

183. வெயின்முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர், உயிர்முதற்பொருள் திறம்பினும் முறைதிறம்பாதோர்
மயின்முறைக் குலத்துரிமையை மனுமுதன்மரபைச், செயிருறப் புலைச்சிந்தையா லென்சொனாய் தீயோய்.**64**

தீயோய்	கொடியவளான மந்தரையே!
வெயில் முறை கதிரவன் முதலிய மேலோர்	கிரணங்களின் வரிசையையுடைய சிறந்த சூரியன் முதலாகிய பெரியோர்
உயிர் முதல் பொருள் திறம்பினும்	உயிர் முதலிய சிறந்த பொருள்கள் தவறினும்
முறை திறம்பாதோர்	நீதிமுறை தவருதவர்கள்;
மயில் முறை குலத்து உரிமையை	(நான் பிறந்த) கேகய குலத்து உரிமையையும்
மனு முதல் மரபை	வைவஸ்வத மனுவினது சிறந்த வம்சத்தையும்
செயிர் உற	குற்ற முற்றதாம்படி
புலை சிந்தையால்	அற்பமான மனத்தினால்
என் சொனாய்	என்ன சொன்னாய் பாவீ!

* * *—நான் பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் நிகழும் நிகழ்ச்சிக்கு மாறுபாடாக மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டங்கட்டுமாறு உன் இழிந்த மனப்போக்கின்படி துராலோசனை கூறுகின்றாயே படுபாவீ! என்று கைகேயி கூனியைக் கடிந்து கூறினள். கேகய நாடானது மயில் நாடென்று தமிழில் வழங்கப்பெறும். கேகீ என்பது மயிலுக்கு வடமொழிப்பெயர். ... 64

(இதுவுமது)

184. எனக்குநல்லையும் மல்லைநீ யென்மகன் பரதன், தனக்கு நல்லையுமல்லையத் தருமமே நோக்கின்
உனக்குநல்லையுமல்லை வந்தூழ்வினை தூண்ட, மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்! **65**

மதி இலா மனத்தோய்	அறிவுகெட்ட மனத்தையுடைய கூனியே
நீ எனக்கு நல்லையும் அல்லை	நீ எனக்கு நன்மையைச் செய்பவளுமன்று;
என் மகன் பரதன் தனக்கும் நல்லையும் அல்லை	என் மகனுக்கும் நன்மையை நாடுபவளல்லை;
அ தருமம் நோக்கின்	அந்த ராஜதருமத்தை நோக்குமிடத்து
உனக்கு நல்லையும் அல்லை	உனக்கும் தீமையை விளைத்துக் கொள்ளப் பார்க்கிறாயத்தனை;
ஊழ் வினை வந்து தூண்ட	உன்னுடைய கொடிய பாவம் வந்து உன்னைத் தூண்டியதனால்
மனக்கு நல்லன சொல்லினை	உன்மனத்துக்கு நன்றாயிருப்பவைகளைச் சொன்னாய்அத்தனை.

(இதுவுமது)

பிறந்திறந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழேல், நிறந்திறம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறந்திறம்பினும் செய்தவந்திறம்பினும் செயிர்தீர், மறந்திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ? **66**

பிறந்து இறந்து போய்	மனிதர் பிறந்தாயினும் இறந்தாயினும்
பெறுவதும்	அடையும் பயனும்
இழப்பதும்	இழந்துபோகும்பயனும்
புகழ் ஏல்	கீர்த்தியே யென்றால்
நிறம் திறம்பினும்	குணம்மாறுபட்டாலும்
நியாயம் திறம்பினும்	நீதி மாறுபட்டாலும்
நெறியின் திறம் திறம்பினும்	நல்வழியின் தன்மை மாறுபட்டாலும்
செய் தவம் திறம்பினும்	செய்கின்ற தவம் மாறுபட்டாலும்
செயிர்தீர் மறம் திறம்பினும்	குற்றமற்ற வீரம் மாறுபட்டாலும்
வரன் முறை திறம்புதல்	தன் குலமரியாதை தவறுதல்
வழக்கோ	நியாய மாகுமோ? (ஆகாது)

(கைகேயி கூனியை முடிவாகச் சினந்து உதறுதல்)

185 போதி யென்னெதிர்நின்று நின்புன்பொறி நாவைச், சேதியாதிது பொறுந்தனன் புறஞ்சில ரறியின்
நீதியல்லவும் நெறிமுறையல்லவும் நினைந்தாயாதி, ஆதலினறிவிலி யடங்குதியென்றாள். 67

கூனி! நீ என்னெதிரிலிருப்பதைத் தவிர்ந்து அப்பாலொழிந்து போ; அற்பப்பேச்சுக்களுக்கிடமாகிய உன்புல்லிய நாக்கை அறுத்தெறியாமல் இக் குற்றத்தை மன்னித்தேன். என்னையன்றி வேறுசிலர் இதனையறிந்தால் நியாய மல்லாதவையும் நல்லொழுக்கமல்லா தவையுமாகியவற்றை நினைந்து சொன்ன குற்றத்துக்கு உள்ளாவாய்; ஆகையால், அறிவுகெட்டவளே! வாயை மூடிக்கிட.

(கூனி அஞ்சாது மீண்டும் துர்ப்போதனை செய்யத் தொடங்குதல்)

186. அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழிகேட்டு, நஞ்சுதீர்க்கினும் தீர்கிலாதது நலிந்தென்னத்
தஞ்சமேயுனக் குறுபொருளுணர்த்துகை தவிரேன், வஞ்சிபோலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும். 68

விஷத்தை நீக்கினும் அது நீங்காது வருத்துவதுபோல, கூனியானவள் கைகேயி அதட்டிச் சொன்ன வார்த்தையைக் கேட்டும் அஞ்சி விலகாதவளாய், 'வஞ்சிக்கொடி போன்றவளே! எனக்குத் தஞ்சமாயிருப்பவளே! நீ சீறினும் உனக்குப் பொருத்தமான நற்காரியங்களை யறிவிக்கை தவிரமாட்டேன்' என்று சொல்லிக் கைகேயியின் காலில்விழுந்து மீண்டும்பல சொல்லலுற்றாள். 68

(கூனியின் போதனையால் கைகேயி மனம் மாறுபடுதல்)

187. தீயமந்தரை யிவ்வுரைசேப்பலுந் தேவி, தூயசிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியினிமைபோர்
மாயையும்மவர் பெற்றுள வரமுமுண்மையினால், ஆயவந்தண ரியற்றிய வருந்தவத்தாலும்.

கொடிய கூனி சொன்னவார்த்தைகளைக் கேட்டவுடனே கைகேயியின் பரிசுத்தமான மனமும் கூனியின் கொடிய ஆலோசனைப்படி மாறுபாடடைந்து விட்டது; (இதற்குச் சில காரணங்களுண்டு;) தேவர்களின் மாயம்; அத் தேவர் பெற்ற சிறந்தவரம் தவறாமை; வேதியர் செய்த அரியபெரிய தவங்கள். இவை காரணமாகவே கைகேயியின் மனம் மாறுபட்டதென்க. 77

(கைகேயி அலங்கோலமாகக் கிடந்ததன் வருணனை)

188. நவ்வி வீழ்ந்தென நாடக மயில் துயின்றென்னக், கவ்வைகூர்தரச் சனகியாங் கடிகமழ்கமலத்து
அவ்வைநீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை, தவ்வையாமெனக் கிடந்தனள் கேகயன்
தனயை. 88

கேகயன் தனயை	கைகேயியானவள்	சனகி ஆம் கடி கமழ் கமலத்து அவ்வை	ஸீதாதேவியாகிற ஸ்ரீமஹாலக்ஷ்மி
கவ்வை கூர் தர	துக்கம் முற்றியதனால்	நீங்கும் என்று	காட்டிற்கு நீங்குவாளென்று
நவ்வி வீழ்ந்தென்ன	மான்பேடை விழுந்தாற்போலவும்	அயோத்தி வந்து அடைந்த அம் மடந்தை தவ்வை என	அயோத்திமாநகரில் வந்து சேர்ந்திருந்த அந்த லக்ஷ்மியின் மூத்தவள் போலவும்
நாடகம் மயில் துயின்று என்ன	குலாவிக் கூத்தாடுகின்ற மயில் (கூத்தொழிந்து) ஒடுங்கிக் கிடந்தாற்போலவும்	கிடந்தனள்	விழுந்து கிடந்தாள்.

* \ * கைகேயி மனத்திரிபு தோன்ற அலங்கோலமாய்க் கிடந்தது - மான் விழுந்ததனையும், மயில் கொஞ்சிக் கூத்தாடுதலொழிந்து ஒடுங்கிக் கிடந்ததனையும், லக்ஷ்மியாகிய ஸீதை நகர்விட்டு நீங்குவது குறித்து மூதேவி குடிபுகுந்ததையும் போலுமென வருணித்தாராயிற்று. 48

மந்தரை சூழ்ச்சிப்படலம் முற்றிற்று.

---

3. கைகேசி சூழ்வினைப்படலம்

மந்தரையினால் மனம் கலக்கப்பட்ட கைகேயி ஸ்ரீராமபட்டாபிஷேகத்திற்கு இடையூறு செய்ய ஆலோசித்த தீய செயலைத் தெரிவிக்கும் பகுதி இது. ஸ்ரீ ராமபட்டாபிஷேகத்தை நிச்சயித்த அன்றிரவில் சக்ரவர்த்தி அச்செய்தியைக் கைகேயிக்கு உணர்த்துமாறு அவளது மாளிகைக்குச் சென்றான். அப்போது கைகேயி அலங்கோல நிலையுடன் கிடப்பதைக்கண்டான். இவட்கு என்ன நேர்ந்ததோவென்று நெஞ்சு சோர்ந்து 'தன் கைகளால் அவளையெடுக்கத்தொடங்கினான். கைகேயி அவனது கையைத்தள்ளி மண்ணில் விழ்ந்து பெருமூச்சு விட்டாள். வார்த்தையடைவில் அவளது கடுநெஞ்சைத் தெரிந்துகொண்ட மன்னவன் எவ்வளவு நல்வார்த்தைகள் சொல்லியும் அவள் கேளாததனால் பெருந் துயரத்தோடு 'வரம் தந்தேன் தந்தேன்; என்மகன் காடு செல்ல நான் வானகம் செல்லுகின்றேன்; நீ உன்மகனோடு வசைக்கடலில் அழுந்துக' என்று கூறி மூர்ச்சித்தான். இவ்வரலாற்றினை இராமபிரான் தெரிந்துகொண்டு கைகேயியிடம் வந்துசேர்ந்து, 'பரதன் உலகத்தையாள நீ பதினான்கு வருடம் தவக்கோலத்துடன் காட்டில் காலங்கழித்து வரவேண்டும்' என்ற கைகேயி கட்டளைக்கு உடன்பட்டு மிக்கமனமகிழ்ச்சியைக் காட்டி 'என்தம்பிபெற்ற செல்வம் நான் பெற்றதேயன்றோ; இதோ கானம் போகின்றேன், விடை பெற்றுக் கொள்கின்றேன்' என்றானென்பது இப்படலத்தின் கதை. .... *

(தசரதன் கைகேயியை வேண்டிக் கூறுவது)

189. கொள்ளான் நின்சேய் இவ்வரசன்னான் கொண்டாலும், நள்ளாதிந்த நாநிலம் ஞாலந்தனிலென்றும்
உள்ளாரெல்லா மோதவுவக்கும் புகழ்கொள்ளாய், எள்ளாநிற்கும் வன்பழிகொண்டென் பயனென்றான். **26**

	(அடி கைகேயீ !,)	என்றும்	எக்காலத்திலும்
நின் சேய்	உன் மகனான பரதன்	ஞாலந் தனில் உள்ளார் எல்லாம்	பூமியிலுள்ளவர்களெல்லாரும்
இவ் அரசு கொள்ளான	இவ்வரசாட்சியை நீ வாங்கிக் கொடுத்தாலும் தான் பெற்றுக்கொள்ள மாட்டானே;	ஓத உவக்கும் புகழ	சொல்ல விரும்புகின்ற கீர்த்தியை
அன்னான் கொண்டாலும்	உனது நிர்ப்பந்தத்தினால் ஒருகால் அவன் பெற்றுக்கொண்டாலும்	கொள்ளாய்	பெறமாட்டாய்;
இந்த நானிலம் நள்ளாது	இப்பூமியிலுள்ளவர் அதனை மெச்சமாட்டார்கள்; (ஆதலால் நீ)	எள்ளாநிற்கும் வன் பழி கொண்டு	உலகத்தார் நிந்திக்கும்படியான கொடிய பழியையடைவதனால்
		பயன் என் என்றான்	யாது பயனுண்டாமென்றான்.

(இதுவுமது)

190. வானோர்கொள்ளார் மண்ணவருய்யார் இனிமற்றென், ஏனோர்செய்கை யாரொடுநீயிவ் வரசாள்வாய்?
யானேசொல்லக் கொள்ளவிசைந்தான் முறைபாலே, தானே நல்கும் உன்மகனுக்குந் தரையென்றான். 27

வானோர் கொள்ளார்	(கைகேயி! உனது கொடிய கருத்தைத்) தேவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள்;
மண்ணவர் உய்யார்	(உன் கருத்து நிறைவேறினால்) நிலவுலகத்தாரும் உயிர் வாழ்ந்திருக்கமாட்டார்கள்;
இனி மற்று ஏனோர் செய்கை என்	இனி, மற்றைப் பாதாளலோகத்தி லுள்ளாரது செய்கையைப் பற்றிச் சொல்லவேண்டியது என்னவிருக்கிறது? (ஒன்றுமில்லை.)
	(இராமன் காட்டுக்கு அனுப்பப்படப் பரதன் அரசு புரிவதைக் குறித்து மூவுலகத்தவரும் உடன்படாதிருக்கும்போது)
நீ யாரோடு இவ் அரசு ஆள்வாய்	நீ எவருடன் இந்த ராஜ்யத்தைக் காக்கப்போகிறாய்?
யான் சொல்லவே கொள்ள இசைந்தான்	நானாகவே யழைத்து 'மகுடாபிஷேகம் செய்து கொள்' என்றதனாலேயே இவ்வரசாட்சியைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தவனான இராமன்
உன் மகனுக்கும் முறையாலே தானே தரை நல்கும்	உனது மகனான பரதனுக்கும் கிரமமாகத் தானே பூமியைக் கொடுப்பான்
என்றான்	என்றுகூறினன் மன்னவன்.

***—பரதன் அரசாள வேணுமென்பது உன் விருப்பமானால் இராமனைக் காட்டிற்குத் துரத்த வேணுமென்பதில்லை; உன் விருப்பத்தையறிந்த மாத்திரத்தில் இராமன் தானே பரதனுக்கு ராஜ்யத்தைத் தந்தருள்வன்; ஆகவே இராமன் வனவாசம் செல்ல வேணுமென்கிற கோரிக்கையை விட்டிடு என்றுணையிற்று. 27

(இதுவுமது)

191. கண்ணேவேண்டு மென்னினு மீயக்கடவேனென், உண்ணேராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே! வண்மைக்கேகயன்மானே! பெறுவாயேல், மண்ணேகொள்நீ மற்றையதொன்றும்
மறவென்றான். 28

பெண்ணே வண்மை கேகயன் மானே!	அடி கைகேயி!,
கண்ணே வேண்டும் என்னினும்	என்னுடைய கண்களையே பிடுங்கிக் கொடுக்குமாறு நீ வேண்டினாலும்
ஈயக் கடவேன்	சிறிதும பின்வாங்காமல் பிடுங்கிக் கொடுப்பேன்;
என் உள் நேர் ஆவி வேண்டினும்	எனது உள்ளே பொருந்திய உயிரையே நீ வேண்டினாலுங்கூட
அது இன்றே உனது அன்றோ	அது நான் கொடுக்கவேண்டாதபடி இப்போதே அது உன்னதினமன்றோ?
பெறுவாய் ஏல்	வரத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புவாயாயின்
மண்ணே கொள் நீ	உன் மகன் அரசாள ராஜ்யத்தை மட்டும் வரமாகப் பெற்றுக்கொள்;
மற்றையது ஒன்றும் மற	இராமனைக் காட்டுக்குப் போகவிடவேணுமென்கிற வரத்தை மறந்திடு;
என்றான்	என்று தயரதன் கூறி முடித்தான்.

***—'மண்ணே கொள்நீ' என்றதற்கு—பிடிவாதமாக நீ கேட்பதன் பயன் உன்தலையில் நீயே மண்ணைப்போட்டுக் கொள்ளுதலேயாகுமென்பது உட்கருத்து. 28

(கைகேயி இரங்காது மன்னவனை யிழித்துக் கூறுதல்)

192. இன்னேயின்னே பன்னியிரந்தானிகல்வேந்தன், தன்னேரில்லாத் தீயவளுள்ளந் தடுமாறாள்
முன்னே தந்தாய் இவ்வரம்நல்காய் முனிவாயேல் என்னேமன்ன யாருளர்வாய்மைக் கினியென்றாள். 30

இகல் வேந்தன் இன்னே பன்னி இரந்தான்	ஜயசீலனான சக்கரவர்த்தி இவ்வாறாக விரிவுறச் சொல்லி வேண்டினான்;
தன் நேர் இல்லா தீயவள்	கொடுமையில் தனக்கு ஒப்பற்றவளான கைகேயி
உள்ளம் தடுமாறாள்	மனம் மாறுபடாதவளாகி
இ வரம் முன்னே தந்தாய்	'இந்த வரங்களை முன்னே வாக்தானம் செய்தாய்;
நல்காய்	(இப்பொழுது செய்கையில்) கொடாமல
முனிவாய் ஏல்	வெறுப்பாயானால்
மன்ன என்னே	சக்கரவர்த்தியே யாது உளது;
இனி வாய்மைக்கு யார் உளர் என்றாள்	இனி ஸத்தியத்திற்கு (உலகில்) எவரிருக்கின்றார். நீ தோனறி ஸத்தியம் முடிந்து விட்டதென்று உலகிறபரவுமென்றாள்.

(தசரதன் கைகேயிக்கு வரத்தைத் தந்தேனெனல்)

193. வீந்தாளேயிவ் வெய்யவளென்ன மிடல்வேந்தன், ஈந்தேனீந்தே னிவ்வரம், என்சேய் வனமாள
மாய்ந்தேன் நான்போய் வானுலகாள்வேன், வசைவெள்ளம் நீந்தாய் நீந்தாய் நின்மகனோடும்
நெடிதென்றான். 44

இ வெய்யவள்	'கொடியவளான இக் கைகேசி
வீந்தாள் ஏ என்ன	(கேட்டவரத்தைக் கொடாவிட்டால்) இறந்தவளே யாவள்' என்றெண்ணி
மிடல் வேந்தன்	வலிமை தங்கிய மன்னவன்
இ வரம் ஈந்தேன் ஈந்தேன்.	'நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன் கொடுத்தேன்;
என் சேய் வனம் ஆள	என்மகனான இராமன் காட்டையாள
நான் மாய்ந்தேபோய்	நான் இறந்துபோய்
வான் உலகு ஆள்வேன்	தேவ லோகத்தை ஆள்வேன்;
நெடிது	நீண்ட காலமளவும்
நின் மகனோடும்	உனது மகனான பரதனோடுங்கூட
வசை வெள்ளம்	பழியாகிய கடலை
நீந்தாய் நீந்தாய்	கடக்கமாட்டாமல் அதனுள் அழுந்துவாயாக'
என்றான்	என்றுசொன்னான்.

(இராமன் வந்துநிற்க, அரசனது கட்டளையாகக் கைகேயி தெரிவித்தல்)

194. ஆழிசூ முலகமெல்லாம் பரதனேயாள நீபோய்த், தாழிருஞ் சடைகள்தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழி வெங்கானநண்ணிப் புண்ணிய புனல்களாடி, யேழிரண்டாண்டின் வாவென் றேவின
னரசனென்றாள். 107

	(இராமா!)
ஆழி சூழ் உலகம் எல்லாம்	கடல் சூழ்ந்த இவ்வுலகத்தை யெல்லாம்
பரதனே ஆள	பரதனே ஆளும்படியாக
நீ போய்	நீ நகர்நீங்கிச் சென்று
தாழ் இரு சடைகள் தாங்கி	தொங்குகின்ற பெரிய ஜடைகளைத் தரித்துக் கொண்டு
தாங்க அரு தவம் மேல் கொண்டு	அருமையான தவவேடத்தை மேற்கொண்டு
பூழி வெம் கானம் நண்ணி	புழுதியையுடைய வெவ்விய காட்டைச் சேர்ந்து
புண்ணிய புனல்கள் ஆடி	புண்ணிய தீர்த்தங்களிற் குடைந்தாடி
ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று	பதினான்கு வருடங்கழித்து பின்பு திரும்பி வருகவென்று
அரசன் ஏவினன் என்றாள்	மன்னவன் கட்டளையிட்டானென்று கூறினள் (கைகேயி).

(இராமன் அதுகேட்டு மகிழ்ந்தமை கூறல்)

195. இப்பொழு தெம்மனோரா லியம்புதற்கெளிதோ யாருஞ், செப்பருங் குணத்திராமன் திருமுகச்செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு வாசகமுணரக்கேட்ட, அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா. 108

யாரும் செப்ப அரு குணத்து இராமன்	யாரும் வருணிக்க முடியாத திருக்குணங்களை யுடைய ஸ்ரீராமபிரானது
திரு முகம் செவ்வி	(நீ காடு செல்ல வேணு மென்று சொன்னபோது உண்டான) திருமுகமண்டலத்தினழகை
நோக்கின்	ஆராயுமிடத்து
இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதோ	அது இப்போது எனபோன்றவர்களால் சொல்லக் கூடியதோ?
	(ஆனாலும் ஒருவார்த்தை சொல்லலாம்; அதாவது)
முன்பு	நீ காட்டுக்குப் போகுக வென்று சொல்லுவதற்கு முன்னே
(திருமுகச் செவ்வி)	இராமனது திருமுகத்தின முகானது
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை ஒப்பது	அப்போதலர்ந்த செந்தாமரை மலரை யொத்திருந்தது;
வாசகம் உணர கேட்ட பின்பு	வனவாச விஷயமான கைகேயி வார்த்தையை அறியக்கேட்டபின்போ வென்றால்
அப்... செந்தாமரையினை வென்றது	அத்தாமரை மலரை வென்றிட்டது;
அம்மா	இதனை என்ன வென்று உரைப்பது!

* * *—தன்னருகில் வந்து சேர்ந்த இராமனை நோக்கிக் கைகேயி 'நீ வனவாஸம் செய்யக்கடவை' என்று கட்டளையிட்ட காலத்து இராமனுக்கு வருத்தமுண்டாகியிருக்கக் கூடுமென்று சிலர் எண்ணக்கூடுமன்றோ; உண்மையில் சிறிதும் வருத்தமுண்டாகாததோடு பரமஸந்தோஷமே உண்டாயிற்றென்பதை வான்மீகிமுனிவர் "வநவாஸோ மஹோதய:" என்று இளையபெருமாளை நோக்கிச்சொன்ன சொல்லால் தெரிவித்தார்; அதிற்காட்டிலும் மிக மேம்பாடாகத் தெரிவிப்பது இச்செய்யுள். வநவாஸ ப்ரஸ்தாவம் வந்த காலத்தில் இராமபிரானுடைய திருமுகமண்டலம் இருந்த விதத்தை அக்காலத்தில் நேரில் கண்டவர்கள் எடுத்துரைக்க வேணுமேயல்லது, எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு அப்பால் இன்று பிறந்துள்ள நானா அதைச் சொல்லுவது! என்று கையொழிந்து ஏடுகளைக்கட்டி உள்ளே வைத்திட்டுச் சயனித்தாராம் கம்பர்; இராமபிரான் கனவிலே தோன்றி முன்பிருந்த முகஸந்நிவேசத்தையும் பின்பிருந்த முகஸந்நிவேசத்தையும் காட்டிக் கொடுக்க, உடனே துயிலெழுந்து செய்யுளைப் பூர்த்தி செய்தாரென்று ஓர் ஐதிஹ்யம் சொல்லப்படுவதுண்டு. "சந்த்ரகாந்தாநநம் ராமம்" (அயோத். 3—28) என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்திற்கு "சந்த்ரவத் காந்தம் ஆநநம் யஸ்ய" என்றொரு விக்ரஹமும், "சந்த்ராத் காந்தம் ஆநநம் யஸ்ய" என்று மற்றொரு விக்ரஹமும் சொல்லுவதுண்டு; சந்திரன் போலழகிய முகமுடையவன்' என்பது முந்தின விக்ரஹவாக்யத்தின் பொருள்; சந்திரனிற் காட்டிலும் மிகவழகிய முகமுடையவன் என்பது பிந்தின விக்ரஹவாக்யத்தின் பொருள். வநவாஸப்ரஸ்தாவமில்லாத காலத்தில் முந்தின பொருள் அவகாசம் பெற்றிருந்தது; வனவாஸக்கட்டளை விளைந்தவுடனே பிந்தின பொருள் அவகாசம் பெற்றது என்று கொள்க. 108

(இராமபிரான் கைகேயிக்குக் கூறிய விடை)

196. மன்னவன் பணியன்ருகில் நும்பணி மறுப்பனோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்றதன்ரே?
என்னிதி னுறுதியப்பால் இப்பணி தலைமேற்கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்கொண்டேன். 110

(அம்மா கைகேயி!)

மன்னவன் பணி அன்று ஆகில்	(சக்ரவர்த்தியின் கட்டளையாக நீர் தெரிவித்த் விது) உண்மையில் சுக்ரவர்த்தியின் கட்டளையன்று; எனினும்
நும் பணி மறுப்பனோ	நான்கட்டளையிடுகிறேனென்று நீர் சொன்னல் அதன்படி நடக்கப் பின்வாங்குவேனே?
என் பின்னவன் பெற்ற செல்வம்	என் தம்பியான பரதனுக்கு ஐச்வரியம் ஏற்பட்டால்
அடியனேன் பெற்றது அன்ரே	(அது) நான்பெற்றதே யாகுமன்ரே? (எங்களுக்குள் வேற்றுமையில்லையே.)
அப்பால் இதனின் உறுதி என்	பின்பு இதனிலும் மேலான நன்மை யாது?
இ பணி தலை மேல் கொண்டேன்	இக்கட்டளையை ஆதரவோடு ஏற்றுக் கொண்டேன்;
மின் ஒளிர் கானம்	மின்னல்போல் வெயில் விளங்குகின்ற காட்டிற்கு
இன்றே போகின்றேன்	இப்போதே புறப்பட்டுச் செல்கின்றேன்;
விடையும் கொண்டேன்	விடையும் பெற்றுக் கொண்டேன்.

* * *—"என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்ரே" என்ற இரண்டாமடிக்கு இருவகையான கருத்துண்டு; பரதனுண்டாலென்ன? நானுண்டாலென்ன? இரண்டும் துல்யமேயென்பது ஒரு கருத்து; பரதனுக்கு நீ அரசாட்சிச் செல்வம் வாங்கிக் கொடுத்தாலும் அவன் அதைக் கைக்கொள்ளாமல் என்னைப்போலவே சடைபுனைந்து தாபதனுயிருக்கப்போகிருனத்தனை காண்—என்பது மற்ரெருரு கருத்து; அடியனேன் பெற்ற செல்வமன்ரே பின்னவன் பெற்ற செல்வம் (ஆம்) என்று அந்வயிப்பது. 110

கைகேசி சூழ்வினைப்படலம் முற்றிற்று.

---

4. நகர் நீங்கு படலம்

(வசிட்டமுனிவன் கைகேயியைக் கடிந்து கூறுதல்)

197. கண்ணோடாதே கணவன் உயிரோடிடர்காணுதே, புண்ணூடோடுங்கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயாப் பேயோ கொடியாய் நீயிம், மண்ணோ டுன்னோடென்னும் வசையோ
வலிதேயென்ருன்.

கண் ஓடாதே	கண்ணோட்ட மின்றிக்கே [நிர்தாக்ஷிண்யமாக]
கணவன் உயிர் ஓடு இடர் காணுது	சக்கரவர்த்தியின் உயிர் உடலை விட்டுச் செல்லுந் துன்பத்தையும் நினையாமல்,
புண் ஊடு ஓடும் கனலோ என்ன	விரணத்தினுட் புகும் நெருப்போ! என்னும்படியாகவும்
விடமோ என்ன புகல்வாய்	விஷமே வடிவெடுத்ததோ! என்னும்படியாகவும் பேசுகின்றவளே!

நீ	மானிடப்பெண்போல் காணப்படுகிற நீ	மண்ணோடு உன்னோடு என் ஆம்	(இனி சக்ரவர்த்திக்கு) இம் மண்ணுலகத்தோடும் உன்னோடும் என்ன உறவுள்ளது?
பெண்ணோ	உண்மையில் மானிடப் பெண்ணோ?	வசையோ வலிதே	உனக்கு வந்த பழிச்சொல்லோ வலிதே;
தீ ஓ	(அன்றி) நெருப்போ!	என்றான்	என்று வசிட்ட முனிவன் கூறினன்.
மாயா பேய் ஓ	(அன்றேல்) விடாப்பிடியுள்ள பிசாசோ?		
கொடியாய்	அடி சண்டீ!		

(கைகேயியைக் குறித்து வசிட்டனைச் சாக்ஷியாகக் கொண்டு மன்னவன் கூறுதல்)

198. இன்னே பலவும் பகர்வான் இரங்காதானை நோக்கிச், சொன்னேனின்றே யிவளென் தாரமல்லள் துறந்தேன்
மன்னேயாவான் வருமப் பரதன்றனையும் மகனென், றுன்னேன் முனிவா! அவனும் ஆகானுரிமைக்
கென்றான். **50**

இன்னே பலவும் பகர்வான்	கீழே சில செய்யுட்களில் தெரிவித்தவாறு பல பேசின தயரதன்	துறந்தேன்	இவளை வெறுத்துத் தள்ளினேன்;
இரங்காதானை நோக்கி	எவ்வளவு இதமுரைத்தும் மனமிரங்காத கைகேயியை யுத்தேசித்து,	மன்னே ஆவான் வரும்	அரசனாக வேணுமென்கிற எண்ணத்தோடு வரப்போகிற
முனிவா	வஸிஷ்ட மஹர்ஷியே!	அ பரதன் தனையும்	அந்தப் பரதனையும்
இன்றே சொன்னேன்	இப்பொழுதே சொல்லி விடுகிறேன்;	மகன என்று உன்னேன்	என் புதல்வனென்று கொள்ளமாட்டேன்;
இவள் என் தாரம் அல்லள்	இப்படுபாவி என்மனைவியல்லள்;	அவன் உரிமைக்கும் ஆகான் என்றான்	அந்தப் பரதன் எனக்கு உத்தரக்கிரியை செய்தற்கும் உரியனாகானென்றான்.

(கானகஞ் செல்கின்ற மகனைக் குறித்துத் தயரதன் புலம்பல்)

199. அள்ளற் பள்ளப்புனல்சூ ழகன்மா நிலமும் அரசும்
கொள்ளக் குறையாநிதியின் குவையும் முதலாமெவையும்
கள்ளக் கைகேசிக்கே யுதவிப்புகழ் கைக்கொண்ட
வள்ளல்தனமென்னுயிரை மாய்க்கும் மாய்க்குமென்றான். **62**

அள்ளல் பள்ளம் புனல் சூழ்	கடலால் சூழப்பட்ட	கள்ளம் கைகேசிக்கே	கபட நெஞ்சுடைய கைகேயிக்கே
அகல் மா நிலமும்	மிக விசாலமான பூமியையும்	உதவி	போக்யமாக விட்டிட்டு
அரசும்	ராஜ்ய பாரத்தையும்	புகழ் கைக்கொண்ட	சாசுவதமான கீர்த்தியைப் பெற்ற
கொள்ள குறையா நிதியின் குவையும்	எவ்வளவெடுத்துச் செலவு செய்தாலும் குறையமாட்டாத நிதித்திரள்களையும்	வள்ளல் தனம்	(இராமா! உனது) ஔதார்ய குணம்
முதல் ஆம் எவையும்	இவை முதலான மற்று மெல்லாவற்றையும்	என் உயிரை மாய்க்கும் மாய்க்கும்	எனது பிராணனை முடிக்கும் முடிக்கும்
		என்றான்	என்று கூறினன் தயரதன்.

(சுமித்திரை லக்ஷ்மணனுக்குச் சில சொல்லி விடை தருதல்)

200. ஆகாததன்று லுனக்கவ்வன மிவ்வயோத்தி, மாகாதலிராம னம்மன்னவன் வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதையென்றே, ஏகாய் இனியிவ்வயின் நிற்றலு மேதமென்றாள். **151**

	(இலக்குமனே !,)	வையம் ஈந்தும் உயிர் போகா தாயர்	பரதனுக்கு நாடென்றும் உனக்குக் காடென்றும சொன்ன பின்புங்கூட உயிரையிழவாமலிருக்கிற தாயாவள் ;
அ வனம் உனக்கு ஆகாதது அன்று	அந்தக்காடு நீ செல்லுவதற்குத் தகாததன்று ; (இராமனுடன் காட்டுக்குச் செல்லுதலே உனக்குத் தகுதி ;)	என்றே	என்று நினைத்துக் கொண்டே
அ வனம் இ அயோத்தி	அந்தக்காடு இவ்வயோத்திமா நகரம் ;	ஏகாய்	இராமனோடு செல்வாயாக.
மா காதல் இராமன்	உன்னிடத்து மிக்க அன்பு கொண்டவனான இராமபிரானே	இனி இவயின் நிற்றலும் ஏதம்	இனி இவ்விடத்தில் நிற்பதும் உனக்கு அவத்யமாகும்
நம் மன்னவன்	தசரதசக்ரவர்த்தியாவன் ;		
நம் பூ குழல் சீதை	பூவையணிந்த கூந்தலையுடைய நமது ஸீதையே	என்றாள்	என்று சுமித்திரை கூறினள்.

* * *—வான்மீகிராமாயணத்தில் “ ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம், அயோத்யாமடவீம் வித்தி கச்ச தாத! யதாஸுகம்” என்று ஸுமித்திரையின் வாக்காகவுள்ள ச்லோகத்தைத் தழுவி இயற்றப்பட்டது இச்செய்யுள். லக்ஷ்மணா! நீ இராமனுடன் காட்டுக்குச் செல்லும்போது அயோத்தியையும் பெற்றோரையும் பிரிந்து செல்ல நேர்கின்றதேயென்று வருந்த வேண்டா ; இராமனுடன் வாழ்தலால் அவ்வனமே அயோத்திபோலும் ; இராமனும் சீதையுமே பெற்றோராவர் என்றிங்ஙனே கருதி மகிழ்ந்து செல்வாயாக ; இனி இங்குத் தாமதித்தலும் தகாது—என்றாள் சுமித்திரை. ‘அவ்வனம் இவ்வயோத்தி’ என்ற தொடரில்—இராமபிரான் விட்டு நீங்குதலால் இவ்வயோத்தி நகர் பாழ்பட்டுத் தண்டகாரணியம் போலாய்விடுமென்பதும், இதுகாறும் பாழ்பட்டிருந்த அவ்வனம் இராமபிரான் சென்று சேர்தலால் பல வளங்களும் நிரம்பிச் செழித்துக் குளிர்ந்து வாழ்வதற்கு இனிய இடமாகுமென்பதும் தோன்றும். மற்றும் பலவகைவிசேஷப் பொருள்களுமிங்குக் காணத்தக்கன. .... (448)

(இதுவுமது)

201. பின்னும்பகர்வாள் மகனேயிவன் பின்செல்தம்பி, யென்னும்படியன்று அடியாரினிலேவல்செய்தி
மன்னும்நகர்க்கே யிவன்வந்திடில் வாவதன்றேல், முன்னம்முடியென்றனள் வார்விழிசோர நின்றாள். **449**

பின்னும் பகர்வாள்	சுமித்திரை மேலும் கூறுபவளாய்	இவன்	இவ்விராமன்
மகனே	‘லக்ஷ்மணனே !	மன்னும் நகர்க்கே வந்திடின் வா	அயோத்திநகர்க்கே மீண்டு வந்தால் கூடவா;
இவன் பின் செல்	இவ்விராமன் பின்னே போ ;	அது அன்று ஏல்	அப்படியல்லாமற் போனால்
தம்பி என்னும் படி அன்று	பார்ப்பவர்கள் தமையன் பின்னே தம்பி போகிறானென்று சொல்லும் படியாகவல்லாமல்	முன்னம் முடி	அவனுக்கு முன்னமே உயிரைத் துறந்துவிடு
அடியாரினில் ஏவல் செய்தி	அடியார்களைப்போல் பணிவிடை செய்துகொண்டு போ ;	என்றனள்	என்று சொன்னவளாகி
		வார்விழி சோர நின்றாள்	நீண்ட கண்களினின்று கண்ணீர் பெருகநின்றாள்.

* * *—‘முன்னம் முடி’ என்றதன் கருத்தாவது—காட்டில் எப்போதாவது இராமனுக்கு ஏதேனும் ஆபத்து வருமென்று தோன்றினால் நீ உன்னைக்காத்துக் கொள்வதில் ஊக்கமின்றிக்கே அவனுடைய ஆபத்தைத் தடுக்குமாறு உன்னுயிரைக் கொடுக்கவேண்டிவந்தாலும் கொடு. என்பதாம். ‘இராமனுக்கு ஆபத்து நேருமாயின்’ என்கிற அஸம்பாவிதமான வார்த்தையைக் கூறுதற்குக் கூசி ‘அதன்றேல்’ என்றாளென்க. .... (449)

(வசிட்டமுனிவன் ஊழ்விதியின் வலிமை என்னே யென்று வியத்தல்)

202, வாழ்வினை நுதலிய மங்களத்துநாள், தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத்தொருவர் சூழினும், ஊழ்வினையொருவரா லொழிக்கற்பாலதோ? 461

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்	முடிபுனைந்து வாழ்வதற்குக் குறித்த சுபதினத்தில்
தாழ் வினை அது வர	தீவினை வந்துசேர
சீரை சாத்தினன்	(இராமன் மகுடாபிஷேக மொழிந்து) மரவுரி தரித்தனன்;
சூழ் வினை	விடாது தொடர்ந்து சூழ்ந்திடுகின்ற தீவினைப் பயனானது
நான் முகத்து ஒருவர் சூழினும்	பிரமதேவனைச் சூழ்ந்திட்டாலும்
ஊழ் வினை ஒருவரால் ஒழிக்கல் பாலதோ	அவ்வூழ்வினை ஒருவரால் நீக்குதற்குரியதோ?

நகர் நீங்குபடலம் முற்றிற்று.

---

5. தைலமாட்டு படலம்

இராமன் காட்டுக்குப் புறப்பட்டுப் போயினன்; சுமந்திரன் தேரிலேற்றிக் கங்கைக்கரை வரையில் கொண்டுபோய் விட்டு வெறுந்தேரோடு திரும்பினன் என்று கேட்டு உயிர்துறந்த சக்ரவர்த்தியினுடம்பை, மாதுலக்ருஹம் சென்றிருந்த பரதசத்ருக்னர்கள் வருமளவும் கெடாமலிருக்குமாறு தைலத்திலிட்டு வைத்திருந்ததைக் கூறும் படலமிது. .... *

(கணவனையிழந்த கோசலை புலம்பல்)

203, தானேதானே தஞ்சமிலாதான் தகைவில்லான், போனான்போனா னெங்களைநீத்திப் பொழுதென்னா
வானீர்சுண்டி மண்ணறவற்றி மறுகுற்ற, மீனேயென்ன மெய்தடுமாறி விழுகின்றாள். 601

தஞ்சம் இலாதான்	தாழ்வில்லாதவனும்
தகை வில்லான்	பெருமை சான்ற வில்லையுடையவனுமாகிய சக்ரவர்த்தி
இப்பொழுது எங்களை நீத்து	இப்போது எங்களை விட்டிட்டு
தானே தானே போனான் போனான்	ஒரு வியாதியுமில்லாமலே தானே இறந்திட்டான்;
என்னா	என்று கூறி
வான் நீர் சுண்டி	வானின்று பெய்யும் மழை நீருமின்றி
மண் அற வற்றி	பூமியிலுள்ள நீரும் அடியோடு வற்றியதனால்
மறுகு உற்ற	நிலைதடுமாறிய
மீனே என்ன	மீன்போல
மெய் தடுமாறி விழுகின்றாள்	உடம்பு தடுமாறி விழுந்தனள் கோசலை.

(இதுவும் கோசலை புலம்பல்)

204. நோயும்மின்றி நோன்கதிர்வாள்வே லிவையின்றி, மாயுந்தன்மை மக்களினாலோ மறமன்னன்
ஏயும்ஞெண்டு மிப்பியுமாகங் கனிவாழை, வேயும்போன்று னென்று மயங்கா விழுகின்றாள். 603

* * *—(உலகில் மரணமடைவதற்கு ஹேதுவான) வியாதியொன்றுமில்லாமலும், வாட்படை வேற்படை படுதலில்லாமலும் மரணத்தையடையக் கூடியநிலை பெற்ற புத்திரரால் நேர்வதோ? இது என்ன அநியாயம்!; சக்ரவர்த்தி தான்கொண்ட கருவினால்தானே அழியும் விஷயத்தில் நண்டையும் முத்துச் சிப்பியையும் வாழையையும் மூங்கிலையுமொத்தான் அந்தோ! 66

(இதுவும் கோசலை புலம்பல்)

205. வடித்தாழ்கூந்தல் கேகயன்மாதே மதியாலே, பிடித்தாய்வையம் பெற்றனை பேரவர மின்னே
முடித்தாயன்றே மந்திரமென்றுள், முகில்வாய்மின் துடித்தாலென்ன மன்னவன்மார்பில் துவர்கின்றுள்.

கோசலை சக்ரவர்த்தியின் மார்பில் விழுந்து புரண்டு புலம்பும்போது 'அடி கைகேயீ! நீ நல்ல தந்திரஞ்செய்து, மாறுகூற முடியாதவரமென்ற ஒன்றைப் பற்றி ராஜ்யத்தைக் கைப்பற்றி எடுத்த காரியத்தை நன்கு முடித்தாயென்றுள்.

தைலமாட்டு படலம் முற்றிற்று.

---

6. கங்கைப்படலம் (அல்லது) குகப்படலம்

காட்டுக்கெழுந்தருளின இராமபிரான் சிருங்கிபேரபுரத்திலிருந்த வேடர் தலைவனை குகனைத் தோழனுகக்கொண்டு அவனுதவியினுல் கங்கையைக் கடந்தது, அப்பால் சென்றது முதலான கதைகள் இப்படலத்திற் கூறப்பட்டுள்ளன. *

(ராமலக்ஷ்மணஸீதைகள் மூவரும் செல்வதைச் சொல்லுதல்)

206. வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்,
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனன்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ,
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழகுடையான். 625

இவன் வடிவு ஐயோ	'இவனது திருமேனியின் நிறம் ஹா ஹா!	வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய	ஸூர்யனுடைய வொளியாகிய வெய்யில் தன் திருமேனியினின்று வெளிப்பரவுகின்ற காந்தியினுள்ளே மறைந்திட
மையோ	அஞ்சனமோ?		
மரகதமோ	மரகதப்பச்சையோ?		
மறி கடலோ	அலையெறிகின்ற கடலோ!		
மழை முகிலோ	மழை பெய்ய நின்ற மேகமோ!	பொய்யோ எனும் இடையாளொடும்	இல்லையோ வென்னும்படி நுட்பமான இடையைக் கொண்டவளான ஸீதா பிராட்டியோடும்
என்பது	என்று பலவாறு உல்லேகம் செய்யத்தக்க		
ஓர் அழியா அழகு உடையான்	ஒப்பற்ற மாருத அழகு படைத்த இராமன்	இளையானொடும்	இலக்குமணனோடுங் கூட
		போனன்	நடந்துசெல்வானுயினன்.

(இராமன் சீதையுடனே தான்செல்லுங்காட்டில் காணும் அதிசயம்)

207. மாகந்தமு மகரந்தமு மளகந்தரு மதியின், பாகந்தரு நுதலாளொடு பவளந்தருமிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னேடென மிளிர்பூண், நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா. 628

மா கந்தமும் மகரந்தமும் அளகம்தரு	மிக்கஸுகந்தத்தையும் மகரந்தத்தையுங் கொண்ட கூந்தலால் பெறப்பட்ட	மிளிர் பூண் மேகம் மின்னேடு தனி வருகின்றது என	விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த மழைமுகில் மின்னலோடு சேர்ந்து தனித்து வருகின்றது போலவும்
மதியின் பாகம் தரு	சந்திரனது துண்டத்தையொத்த		
நுதலாளொடு	நெற்றியையுடையளான ஸீதையோடு	நாகம் பிடியோடு தனி வருகின்றது என	ஆண்யானை தன் பேடையோடு தனித்து வருகின்றது போலவும்
பவளம் தரும இதழான்	பவழத்தையொத்த அதரத்தையுடையனான இராமன	நடவா	கால்களினுல்நடந்துசென்று

208. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவையமுதின், கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசைநறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளி விழிபோல், களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை
கண்டான். **629**

தொளைகட்டிய கிளை முட்டிய சுருதி சுவை அமுதின்	தொளைபொருந்திய வேய்ங் குழலிலிருந்து வாய்க் காற்று தாக்கியெழுப்பிய இசையாகிய அமுதம் போலவும்	மதுரித்து எழு கிளவி கிளி	இனிமையைப்பெற்று உண்டாகின்ற பேச்சையுடைய கிளிபோன்றவளான சீதா பிராட்டியினுடைய
கிளை கட்டிய கருவி கிளர் இசையின்	நரம்புகட்டப்பெற்ற கருவியாகிய வீணையினின்று எழுகிற இசைபோலவும்	விழி போல்	கண்களைப்போன்றுள்ள
பசை நறவின்	பசுந்தேன் போலவும்	களை கட்டவர் தளை விட்டு எறி குவளை தொகை கண்டாள்	களைபிடுங்குபவர் வயலினின்று விட்டெறிகின்ற குவளைமலரின் தொகுதியைக் கண்டாள்.
விளை கட்டியின்	கரும்புரஸத்தினின்று விளைகின்ற பாகுக்கட்டிபோலவும்		

* * *—இராமபிரான் சீதாபிராட்டியின் கண்களைப்போல் காட்சி தருகின்ற குவளை மலர்த்தொகையைக் கண்டானென்பதைத் தெரிவிப்பது இச்செய்யுளுக்கு முக்கியம். சொற்செறிவு வியக்கத்தக்கது. *129*

(பிராட்டி அஞ்சாமல் எதையும் அதிசயமாகவே கண்டாளென்பது கூறல்)

209. அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்தியமதமா, மருப்பேந்திய வனமாமுலை மழையேந்தியகுழலாள்
கருப்பேந்திர முதலாயின கண்டாளிடர்காணுள், பொருப்பேந்திய தோளானெடு விளையாடினள் போனாள்.

அரும்பு ஏந்திய கலசம் துணை	அரும்பைத் தன்னிடத்துக் கொண்டுள்ள இரண்டு பொற்கலசங்களோ! (அல்லது)	மழை ஏந்திய குழலாள்	மேகத்தையொத்த கூந்தலையுடையளான சீதாபிராட்டி
அமுது ஏந்திய மதம் மா மருப்பு	இனிமையைக் கொண்டுள்ளவையும் மதயானையினிடத்துத் தோன்றியுள்ளவையுமான இரண்டு தந்தங்களோ!	பொருப்பு ஏந்திய தோளானொடு	மலையையொத்த திருத்தோள்களையுடைய இராமபிரானோடுகூட(ப் போனதனால்)
எனல் ஆம்	என்று சொல்லுதற்குத் தக்கதாக	கருப்பேந்திரம் முதலாயின கண்டாள் இடர் காணாள்	யாளி முதலான பயங்கர ஜந்துக்களைக் கண்டுங்கூட அச்சம் குடிபுகாதவளாய்
ஏந்திய முலை	தாங்கிய தனங்களைக் கொண்டுள்ள	விளையாடினள் போனாள்	அவலீலையாகவே நடந்து சென்றாள்.

* * *—இப்பாட்டின் மூன்றுமடி அறிஞர்களால் மிகவுமாராயத் தக்கது. கருப்பேந்திரம் என்றதை 'கரும்பு ஏந்திரம்' என்று பிரித்து, கரும்பாலை முதலியவற்றைக் கண்டவண்ணம் சென்றாளென்று பெரியார் உரையிட்டுள்ளார்கள். இங்குக் குறிக்கொள்ள வேண்டிய விசேஷமுண்டு. வான்மீகி ராமாயணத்தில் "கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வராங்கநா, நாஹாரயதி ஸம்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா" என்றுள்ள சுலோகத்தை யடியொற்றியே கம்பர் இச்செய்யுளை இயற்றியுள்ளார். பிராட்டி காட்டிலே செல்லும்போது யானை சிங்கம் புலி முதலிய கொடிய விலங்குகளைக் கண்டவிடத்தும் சிறிதும் அஞ்சவில்லை; புதிய வஸ்துக்களைக் கண்டதனாலுண்டாகும் வியப்பே அவளுக்குத் தோன்றியது; இராமபிரானுடைய திருத்தோள்களை அண்டை கொண்ட மிடுக்குத்தான் இதற்குக் காரணம்—என்பது மேற்குறித்த சுலோகத்தின் கருத்து. இக்கருத்துப்படவே கம்பர் இச்செய்யுளை இயற்றியுள்ளார்.

"பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா" என்றதற்குச் சேர "பொருப்பேந்திய தோளானொடு போனுள்" என்ருர். "நாஹாரயதி ஸம்த்ராஸம்" என்றதற்கு "இடர் காணுள்" என்ருர். இடர்காணுள் என்பதற்கு—பயப்பட்டிலள் என்பதே கருத்து. கருப்பேந்திரம் என்பதற்குக் கரும்பாலையென்று பொருள் கூறுவதில் சுவையில்லையே: கரும்பாலையைக் கண்டால் அஞ்சுதற்கு ப்ரஸக்தியில்லையாயிருக்க, அதுகண்டு இடர்காணுளென்பதில் பொருத்தமில்லையே. வடமொழி நிகண்டு ஒன்றில் "சுர்ப்பேந்த்ரஸ் ஸிம்ஹபக்ஷக:" என்றுள்ளது; சிங்கத்தைக் கொன்று தின்னவல்ல யாளியே இங்குக் கருப்பேந்திரமெனப்பட்டது. வான்மீகி முனிவர் காட்டில் காணப்பட்ட பயங்கர ஜந்துக்களில் சிங்கத்தோடு நிறுத்தினர்; கம்பர் அதற்கு மேலும் ஒருபடி சென்ருர் என்ற சிறப்புமுணரத்தக்கது. 630

(குஹப்பெருமானை நோக்கி இராமபிரான் கூறியமொழி)

210. அரியதா முவப்ப வுள்ளத் தன்பினு லமைந்தகாதல்
தெரிதரக் கொணர்ந்தவென்ருல் அமிர்தினுஞ் சீர்த்தவன்றெ
பரிவினில் தழீஇயவென்னில் பவித்திர மெம்மனோர்க்கும்
உரியன வினிதின்நாமும் உண்டனெ மன்ருேவென்ருன்.

	(குகன் தான் கொணர்ந்த காணிக்கைப் பொருள்களைத் தெரிவித்தான் கீழ்;) (நீ கொணர்ந்த இந்தக் காணிக்கைப்பொருள்கள்)
உள்ளத்து அன்பினுல் அமைந்த காதல்	மனத்தினுள்ளே யிருக்கின்ற அன்பு முதிர்தலால் தோன்றும் பக்தியானது
தெரிதர	யாவர்க்கும் புலப்படுமாறு
உவப்ப கொணர்ந்த	மனமுவப்பக் கொண்டுவந்தனவாகும்;
என்ருல்	என்று சொல்லுமளவில்,
அரியதாம்	கிடைத்தற்கு அருமையான
அமிர்தினும் சீர்த்த அன்றே	அமுதத்திற காட்டிலும் சிறந்தனவுமாகு மன்ரே?

	(கொண்டுவந்த பொருள்கள் எப்படிப்பட்டனவாக இருந்தாலும்)
பரிவினில் தழீஇய என்னில்	அன்போடு பொருந்தியவையாயின்
பவித்திரம்	அவை பரிசுத்தமான பொருள்களே; (அவை)
எம் அனோர்க்கும்	எம்போன்றவர்களுக்கும்
உரியன	அங்கீகரிக்கத்தக்கவை; (ஆதலால்)
இனிதின் நாமும் உண்டனெம் அன்ருே என்ருன்	இனிமையாக நாம் உண்டதற்குச் சமானமேயாகுமன்ருே வென்ருன்.

(நீ இன்று சுற்றத்தாரோடும் உன்னிருப்பிடஞ்சேர்ந்து விடியற்காலை நாவாயோடு, வருகவென்று இராமனுற் கூறப்பட்ட குகன் இராமனது தவக்கோலத்தைக் கண்டு வருந்தி நானுன்னைப்பிரியாது அடிமைசெய்வேனெனல்)

211. கார்குலாம் நிறத்தான் கூறக் காதல னுணர்ந்துவான்இப்
பார்குலாஞ் செல்வ! நின்னை யிங்ஙனம்பார்த்தகண்ணை
ஈர்கிலாக் கள்வனேன்யான் இன்னலினிருக்கைநோக்கித்
தீர்கிலேனனைய! செய்குவெ னடிமையென்ருன். 669

கார் குலாம் நிறத்தான்	மேகவண்ணனை இராமன்
கூற	(இன்று உன்னிருப்பிடம் போய் நாளை ஓடத்தோடும் வருகவென்று) சொன்ன வளவிலே

காதலன் உணர்த்துவான்	அன்பனை குகன் பின்வருமாறு தன் கருத்தைத் தெரிவிப்பானுயினன்;
இபார் குலாம் செல்வ	இந்நிலவுலகம் முழுவதும் கொண்டாட நின்ற செல்வனே!

நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை	உன்னை இப்படி தவக்கோலத்தோடு கண்ட என் கண்களை	தீர்கிலேன்	உன்னைவிட்டுப் பிரிந்து செல்லத்துணிகின்றிலேன் ;
ஈர்கிலா	பிடுங்கி யெறியமாட்டாத	ஐய	பிரானே !
கள்வனேன் யான்	கபடபக்தியுடைய யான்	ஆனா அடிமை செய்குவென் என்றான்	என்னாலான தொண்டுகளை உனக்குச் செய்துகொண்டு இங்கேயே யிருப்பேனென்றான்.
இன்னலின் இருக்கை நோக்கி	உனக்கு நேர்ந்துள்ள துன்பநிலையை நோக்கி		

* * *—குகனிடத்துப் பேரன்புகொண்ட இராமன் அவனை நோக்கி 'இப்போது நீ இருப்பிடஞ் செல்லுக' வென்றது உண்மையான கருத்துடன் அல்ல; இவனுடைய பிரிவாற்றாமையைத் தெரிந்து கொள்வோமென்றெண்ணியே. 669

(இராமன் குகனுக்கு அங்ஙனமே அனுமதியளித்தல்)

212. கோதைவிற் குரிசிலன்னான் கூறிய கொள்கைகேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகநோக்கித் தீராக்
காதலனாகுமென்று கருணையின் மலர்ந்தகண்ணன்
யாதினுமினிய நண்ப ! இருத்தியீண்டெம்மோடென்றான். 670

கோதை வில் குரிசில்	வெற்றிமாலைசூடியகோதண்டபாணியான இராமன்	கருணையின் மலர்ந்த கண்ணன்	கருணையினால் மலர்ந்த திருக்கண்களை யுடையவனாய
அன்னான் கூறிய கொள்கை கேட்டான்	அந்தக் குகன் கூறிய அவனது கருத்தைக் கேட்டு (பிறகு)	யாதினும் இனிய நண்ப	எல்லாப் பொருளினும் மேம்பட்டதான நட்பையுடையவனே !
சீதையை நோக்கி தம்பி திருமுகம் நோக்கி	சீதையின் முகத்தைப் பார்த்தும் லக்ஷ்மணனது முகத்தைப் பார்த்தும்		(இன்றைத்தினம்)
தீரா காதலன் ஆகும் என்று	இவன் நம்மிடத்து அசஞ்சலமான பக்தியுடையவனென்று சொல்லி	ஈண்டு எம்மொடு இருத்தி என்றான்	இவ்விடத்தில் எம்முடனே இருவென்றான்.

(லக்ஷ்மணன் நித்திரையை நீத்தமை கூறுதல்)

213. வெயில்விரி கனகக்குன்றத் தெழில்கெட விலகுசோதிக்
கயில்வரி வயிரப்பைம்பூண் கடுதிறல் மடங்கலன்னான்
துயிலெனு மணங்குவந்து தோன்றலு மவளைநாமே
எயிலுடை யயோத்திமூதா ரெய்துநா ளெய்துமென்றான். 676

வெயில் விரி கனகம் குன்றத்து	சூரியனொளி பரவுதற்குக் காரணமான மேருமலையினது	துயில் எனும் அணங்கு மாது வந்து தோன்றலும்	நித்திரையென்னும் மாது வந்து தோன்றியவளவிலே
எழில் கெட	அழகு கெடும்படி	அவளை	அந்த மாதை நோக்கி
விலகு சோதி	விட்டுவிட்டுப் பிரகாசிக்கின்ற ஒளியையுடைய	எயில் உடை அயோத்தி மூது ஊர் நாம் எய்தும நாள்	மதிலையுடைய அயோத்யா நகரியை நாம் மீண்டுவந்து சேர்கின்ற காலத்தில்
கயில் வரி வயிரம் பைம் பூண்	அழகிய ஸ்வர்ணாபரணங்களைப் பூணுதற்கு உரியனான		
கடு திறல்	மிக்கவலிமைகொண்ட		
மடங்கல் அன்னான்	சிங்கத்தையொத்த லக்ஷ்மணன்,	எய்தும் என்றான்	நீர் நம்மிடம் வந்து சேர்கவென்று கட்டளையிட்டான்.

214. மறக்கண்வா ளிளையவீர னாணையை மறுத்தல்செல்லா, உறக்கமா மாதுமண்ணலுபயபங்கயங்கள் போற்றித்
துறக்கமா மென்னலாய தூய்மதி லயோத்தியெய்தி, இறுக்குநா ளெந்தைபாத மெய்துவ னென்று
போனாள். **676**

மறம் கண் வாள் இளைய வீரன்	வீரத்தைத் தன்னிடத்தே கொண்ட வாட்படையையுடைய லக்ஷ்மணனது	துறக்கம் ஆம் எனல் ஆய தூய் மதில் அயோத்தி எய்தி	'ஸ்வர்க்கம்போலுமென்று சொல்லத்தக்க அழகிய மதிள் சூழ்ந்த அயோத்தி நகரை யடைந்து
ஆணையை மறுத்தல் செல்லா	கட்டளையை மறுக்கமாட்டாத	இறுக்கும் நாள்	தங்குகின்ற நாளில்
உறக்கம் ஆம் மாதும்	நித்திரையாகிய தெய்வப் பெண்ணும்	எந்தை பாதம் எய்துவன் என்று போனாள்	உனது திருவடிகளை வந்து கிட்டுவேன்' என்று சொல்லிப் போனாள்.
அண்ணல் உபயம் பங்கயங்கள் போற்றி	லக்ஷ்மண ஸ்வாமியினது உபய பாதாரவிந்தங்களை வணங்கி வாழ்த்தி		

* * *—மானிடர்க்கு உரிய நித்திரை லக்ஷமணனுக்கும் வந்து தோன்றத் தொடங்க, இலக்குமணன் அந்த நித்ராதேவதையை நோக்கி 'வனவாஸம் முடியுந்தனையும் அத்தாணிச்சேவகத்திலீடுபட்டிருக்குமென்பால் வந்து சேராதே' என்று கட்டளையிட, அவளும் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு 'அங்ஙனமே யாகுக' என்று விண்ணப்பஞ்செய்து அகன்றாள்—என்னுமிந்த வர்ணனையினால் இளையோன் நித்திரையும் சோம்பலுமின்றிப் பெருமாளுக்குத் தொண்டு செய்யக் சங்கற்பித்துக் கொண்டானென்றதாயிற்று 676

(இளையோன் கையும் வில்லுமாய்க் காத்திருத்தல்)

215. மற்றவ ளிறைஞ்சியேக மாமலர்த்தவிசு நீங்காப், பொற்றொடியோடு மையன் துயில்தரும் புன்மைநோக்கி
இற்றதோர் நெஞ்சனாகி இருகண் நீரருவிசோர, உற்ற ஓவியமதென்ன ஒருசிலை யதனினின்றான். **677**

மற்றவள் இறைஞ்சி ஏக	(கீழ்க் கூறியவாறு) அந்த நித்திரா தேவி வணங்கிச் சென்றபின	இற்றது ஓர் நெஞ்சன் ஆகி	மிகவருந்திய மனத்தையுடையனாய்
மா மலர் தவிசு நீங்கா பொன் தொடியோடும்	தாமரைமலராகிய ஆசனத்தை விட்டு நீங்காத லக்ஷ்மியின் தோற்றமாகிய ஸீதாதேவியோடு	இரு கண் நீர் அருவி சோர	தனது இரண்டு கண்களினின்றும் அருவிபோல நீர் பெருக,
ஐயன்	இராமபிரான்	உற்ற ஓவியம் அது என்ன	துன்ப நிலையோடு தோன்றுகின்ற சித்திரம் போல அசையாது
துயில் தரும் புன்மை நோக்கி	திருக்கண்வளர்கின்ற சிறுமையைக்கண்டு	ஒரு சிலை அதனின்	தனது ஒப்பற்ற சிலையோடும்
		நின்றான்	இராமனைப் பாது காத்து நின்றான்.

(குகனும் தன் பரிவாரங்களுடன் இராமனை இரவுமுழுதும் காத்திருத்தல்)

216. தும்பியின் குழாத்திற்சுற்றுஞ் சுற்றத்தன் தொடுத்தவில்லன்
வெம்பிவெந் தழியாநின்ற நெஞ்சினன் விழித்தகண்ணன்
தம்பிநின்றானை நோக்கித் தலைமகன் தன்மைநோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீ ரருவிசோர் குன்றின்நின்றான். **678**

அம்பியின் தலைவன்	ஓடங்களை வைத்திருக்கும் தலைவனாகிய குகன்
தும்பியின் குழாத்தில் சுற்றும் சுற்றத்தன்	யானைத் தொகுதிபோல் சுற்றிக்கொண்டுள்ள இனத்தாரை யுடையவனாய்க் கொண்டு,
தொடுத்த வில்லன்	நாணேறிட்ட வில்லையுடையவனும்
விழித்த கண்ணன்	இமைகொட்டாத கண்களை யுடையவனும்
வெம்பி வெந்து அழியா நின்ற நெஞ்சினன்	வருந்திக் கொதித்து நிலைகுலைந்த மனத்தையுடையவனும்
விழித்த கண்ணன்	கண்ணை மூடாதவனுமாகிய
தம்பிநின்றானை நோக்கி	நிற்கின்ற தம்பியைப் பார்த்து [தம்பி நிற்பதையும் பார்த்து]
தலைமகன் தன்மை நோக்கி	ராஜ குமாரனாகிய இராமன் தரையிற்படுத்திருப்பதையும் பார்த்து
கண் நீர்	கண்ணீர்ப் பெருக்குடனே
அருவி சோர் குன்றின் நின்றான்	நீரருவி பெருகாநின்ற தொரு மலையை யொத்து நின்றான்.

* * *—"இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிசங்கைபண்ண, இருவரையும் அதிசங்கைபண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே: ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்று இது" என்கிற ஸ்ரீவசனபூஷண சூர்ணைகளும், அவ்விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளும் இங்கு நோக்கத்தக்கன.

(கங்கை கடந்து அக்கரையேறியபின்பு இராமன் குகனோடு தோழமை பாராட்டுதல்)

217. அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான், என்னுயி ரனையாய்நீ இளவலுமிளையான்இந்
நன்னுதலவள் நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம், உன்னுடையது நானுன் தொழிலுரிமையினுள்ளேன்.

அன்னவன் உரை கேளா	அந்தக்குகன் (தன்னையும் கூடவே வைத்துக்கொள்ளுமாறு வேண்டிச் சொன்ன.) சொல்லை இராமன் கேட்டு
அமலனும் உரை நேர்வான்	இராமபிரானும் அதற்கு மறுமொழி கூறுபவனாய்
(குகனை நோக்கி)	
நீ என் உயிர் அனையாய்	நீ என்னுயிரை யொத்தவன்;
இளவல் உன் இளையான்	என் தம்பி உனக்குத் தம்பியாவன்.
இ நல் நுதலவள்	அழகிய நெற்றியை யுடையளான இந்தச் சீதை
நின் கேள்	உனக்குத் தோழியாவாள்.
நளிர் கடல் நிலம் எல்லாம் உன் உடையது	குளிர்ந்த கடல் சூழ்ந்த பூமி முழுவதும் உன்னுடைய சொத்தாகும்;
நான் உன் தொழில் உரிமையின் உளேன்	நான் உனது ஏவல் தொழிலில் கட்டுப்படும் உரிமையிலடங்கியுள்ளேன்.

(குகன்நிற்க, இராமன் முதலியோர் வனத்திற் செல்லுதல்)

218. பணிமொழி கடவாதான் பருவர லிகவாதான், பிணியுடை யவனென்னும் பிரிவினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடும் ஐயனு மிளையோனும், திணிமர நிறைகானில் சேணுறு நெறிசென்றார். **701**

குகன் இராமபிரானிட்ட கட்டளையைக் கடக்கமாட்டாதவனும், இராமபிரானைப் பிரிவதனால் மனத்துன்பம் நீங்கப்பெறாதவனுமாகி, தன்னைக்கண்டவர்கள் 'இவன் ஏதோ பெருத்த நோயைக் கொண்டுள்ளான்' என்று கருதுமாறு தோன்றுகின்ற பிரிவுத்துயரத்தைக் கொண்டவனாய் இராமபிரானிடத்து விடைபெற்றுக் கொண்டான். இராமனும் இளையபெருமாளோடும் சீதாபிராட்டியோடும் கிளைகளடர்ந்த மரங்களை நெருக்கமாகக் கொண்டுள்ள காட்டிலே வெகுதூரமாகச் செல்லுகின்ற காட்டுவழியே சென்றார். 701

கங்கைப்படலம் முற்றிற்று.

7. கம்பரின்பக்கவித்திரட்டு-வனம்புகு படலம்

குகப் பெருமாளின் உதவியினுல் கங்கையாற்றைக் கடந்தேறிய இராமபிரான் பிராட்டியாரோடும் இளையவனேடும் வனத்திற்புகுந்த செய்தியைக் கூறும் பகுதி. பரத்வாஜ முனிவரைச் சந்தித்தலும் இப்படலத்திற் கூறப்படுகின்றது.

(இனிய காட்டுவழியில் இராமன்முதலியோர் செல்லுதல்.)

219. *வெயிலிள நிலவேபோல் விரிகதிரிடை வீசப்*
பயின்மர நிழலீனப் பனிபுரை துளிவானப்
புயல்தர விளமென்கால் பூவள வியதெய்த
மயிலின நடமாடும் வழியினியன போனுர்.

வெயில் விரி கதிர் இள நிலவே போல் இடை வீச	ஸூரியன் தனது பரவிய கிரணங்களை இள நிலாவைப் போன்று [வெப்பமின்றி] இடையிடையே வீசிக்கொண்டிருக்கவும்	வானம் புயல் பனி புரை துளி தர	வானத்திலே தோன்றிய மேகம் பனித்துளியைப் போன்ற சிறு திவலைகளை வீசவும்
		இளமென் கால் பூ வளவியது எய்த	மெல்லிதாக வீசுகின்ற இளந் தென்றலானது வளப்பமுள்ள பூவின் மணத்தைக் கொய்து கொண்டு வீசவும்
பயில் மரம் நிழல் ஈன	(ஆங்கு) நெருங்கியுள்ள மரங்கள் நிழலைத் தரவும்	மயில் இனம் நடம் ஆடும்	மயிற் கூட்டங்கள் கூத்தாடப் பெற்ற
		இனியன வழி போனுர்	இனிமையான காட்டு வழிகளிலே சென்ருர்கள்.

(இராமபிரான் பிராட்டிக்கு வனத்தின் வளங்களைக் காட்டுதல்.)

220. *அருந்தியனையாளே அமுதினு மினியாளே*
செருந்தியின் மலர்தாங்குஞ் செறியிதழி னசோகம்
பொருந்தின களிவண்டிற் பொலிவன பொன்னூதும்
இருந்தையி னெழுதீயொத் தெழுவதொ ரியலகாணுய்.

அருந்ததி அனையாளே	அருந்ததியை யொத்தவளே!	பொருந்தின களி வண்டு பொலிவன	தம்மிடத்துப் பொருந்திய களி வண்டுகளோடு விளங்குவன
அமுதினும் இனியாளே	அமிருதத்தைக் காட்டிலும் இனிப்பானவளே!		
செருந்தியின் மலர் தாங்கும்	சுரபுன்னைப் பூக்களைத் தாங்குகின்ற	பொன் ஊதும் இருந்தையின் எழு தீ ஒத்து எழுவது ஓர் இயல் காணுய்	பொன்னை மூடிவைத்து ஊதுகின்ற கரியிலே மேலெழுந்து எரிகின்ற நெருப்பைப் போன்று எழுந்து தோன்றுமியல்பைக் காணுய்.
செறி இதழின் அசோகம்	நெருங்கிய இதழையுடைய அசோக மலர்கள்		

அசோக மலரின் இடையிலே செருந்தி மலர் தங்கியிருக்க, வண்டுகள் அவற்றின்மீது மொய்க்குங் காட்சி—நெருப்பிலே பொன்னை வைத்துக் கரியால்மூடி ஊதுகுழல் கொண்டு ஊதுகையில் அக்கரியின் இடைவழியாக அக்னிஜ்வாலை வெளிவருவது போலுமென்று உத்ப்ரேக்ஷாலங்கார வகையில் வருணனை. .... *

(இதுவுமது.)

221. *வாள்புரை விழியாயுன் மலர்புரை யடிமானத்*
தாள்புரை தளிர்வைகுந் தகுகளிமி றிவைகாணுய்
கோள்புரை யிருள்வாசக் குழல்புரை மழைகாணுய்
தோள்புரை யிளவேயின் றொகுதிக ளிவைகாணுய்.

வாள் புரை விழியாய்	வாட்படையை யொத்த கண்களை யுடைய சீதையே!,	கோள் புரை இருள்	(பண்டங்களைத் தெரிய வொட்டாமற்) கொள்ளுந்தன்மையையுடைய மிக்க இருளைக் கொண்ட
மலர் புரை உன் அடி மான	தாமரை மலர்போன்ற உனதுபாதங்களையொப்ப	வாசம் குழல் புரை மழை காணுய்	வாசனையுள்ள கூந்தலை யொத்த மேகங்களைப் பாராய்;
தாள் புரை தளிர் வைகும் தகை	தாளோடு கூடிய சிறந்த தளிர்களிலே தங்குகின்ற தன்மையை யுடைய	தோள் புரை இள வேயின் தொகுதிகள் இவை காணுய்	தோளையொத்த இவ்விள மூங்கில் தொகுதிகளைப் பாராய்.
ஞிமிறு இவை காணுய்	இந்த தேனீக்களைக் காண்பாயாக;		

(பரத்வாஜ மஹர்ஷியின் வருணனை.)

222. குடையின னிமிர்கோலன் குண்டிகையினன் மூரிச்
சடையின னுரிமானின் சருமனன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவினன் நெறிபேணும்
நடையினன் மறைநாலு நடை நவில் தருநாவான்.

223. செந்தழல் புரிசெல்வன் திசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரென நல்கும்
அந்தண னுலகேழும் அமையெனி னமரேசன்
உந்தியி னுதவாமே யுதவிடு தொழில்வல்லான்.

குடையினன்	குடையை வைத்துக் கொண்டிருப்பவனும்	மறை நாலும் நடம் நவில்தரு நாவான்	நான்குவேதங்களும் நர்த்தனஞ்செய்கின்ற நாவை யுடையவனும்;
நிமிர்கோலன்	ஓங்கியதண்டத்தை ஏந்தி நிற்பவனும்	செம் தழல் புரி செல்வன்	செந்தழலோம்பும் சீமானும் [நித்யாக்னி ஹோத்ரி.]
குண்டிகையினன்	கமண்டலுவைக் கொண்டிருப்பவனும்	திசைமுகமுனிசெவ்வே தந்தன உயிர் எல்லாம்	பிரமதேவன் படைத்த பிராணிகளை யெல்லாம்
மூரி சடையினன்	நெருங்கிய ஜடாமண்டலத்தையுடையவனும்	தன் உயிர் என நல்கும் அந்தணன்	தன்னுயிரைப் போலக் கருதிப் பாதுகாக்கின்ற காருணிகனும்
உரி மானின் சருமன்	உரிக்கப்பட்ட மான் தோலைப் போர்த்திருப்பவனும்	உலகு ஏழும் அமை எனின் அமரேசன் உந்தியின் உதவாமே உதவிடு தொழில் வல்லான்	ஏழுலகங்களையும் படையென்றாலும் திருமால் தன் நாபீகமலத்தினின்று அண்டங்களை யுண்டாக்காதிருக்கையிலும் தான் ஸ்ருஷ்டி செய்ய வல்ல ஆற்றலுடையவனுமாகிய;
நல் மரம் நாரின் உடையினன்	அழகிய நார்மடியை யுடுத்துள்ளவனும்		
மயிர் நாலும் உருவினன்	மயிர் தொங்குகின்ற திருமேனியையுடையவனும்		
நெறி பேணும் நடையினன்	ஸன்மார்க்கத்தைத் தழுவி நடப்பவனும்		

["பரத்துவனெனுநாமப்பரமுனி—எதிர்கொளவந்தான்." என முன்கவியோடு முடியும்.]

8. சித்திரகூடப் படலம்

ஸ்ரீராம லக்ஷ்மண ஸீதைகள் வனத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் சித்திரகூடகிரியைக் கண்ட இராமபிரான் அம்மலையின் பல்வகை வளங்களையும் சீதாபிராட்டிக்குக் காட்டிக்கொண்டே அம்மலைச் சாரலிற் போக, அங்கிருந்த முனிவர் எதிர்கொண்டு அவர்களைத் தமது ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் உபசரிக்க, பிறகு லக்ஷ்மணன் பாங்கானதோரிடத்தில் பர்ணசாலையமைக்க, அச்சாலையைக்கண்டு உகப்பு உண்டாயிருக்கச் செய்தேயும் 'தம்பிக்குச் சிரமம் கொடுக்கும்படியாயிற்றே' என்று இராமன் வருந்த, இளையோன் இராமன் வருந்தியது கண்டு நொந்து கூற, இராமன் அவனைச் சமாதானப்படுத்தி அந்தப் பர்ணசாலையிற் குடி புகுந்து அந்த மலையில் தானே உறைந்தமை கூறும் படலமிது.

(மலைத்தாழ்வரையில் மலைப் பாம்புகள் படிந்திருப்பதை இராமன் பிராட்டிக்குக் காட்டுதல்.)

224. *இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும்*
கடிய மாசுணம் கற்றறிந்தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர்தாம் மிதித்தேறப்
படிகளாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்.

இடி கொள்வேழத்தை எடுத்து	பிளிறும் யானையைப் பிடித்துக்கொண்டு	சடை கொள் சென்னியர் தாம்	ஜடா மண்டலதாரிகளான தாபஸர்கள்
எயிற்றொடும்	அவற்றின் தந்தங்களோடும்	தாழ்வு இலர் மிதித்து ஏற	தாமதமின்றி வேகமாக மிதித்தேற
உடன் விழுங்கும்	—ஒரு சேர விழுங்கவல்ல	படிகள் ஆம் என	—படிகள் போல
கடிய மாசுணம்	கொடிய மலைப் பாம்புகளானவை	தாழ்வரை	—மலையடிவாரங்களிலே
கற்று அறிந்தவர் என அடங்கி	கற்றறிந்த பெரியோர் போல அடக்கத்தைமேற் கொண்டு	கிடப்பன பாராய்	கிடப்பவற்றைக் காண்பாயாக.

யானையைத் தந்தங்களோடும் விழுங்குங் கொடுமையையுடைய மலைப்பாம்புகட்கு இம்முனிவரை விழுங்குவது ஒரு பெரிய பணியன்றெனினும், அவை தல மகிமையினால் அக்கொடுமை தீர்ந்து, அம் முனிவர்கள் அடியிட்டு ஏறுதற்குப் படிபோல உதவுகின்றமை காட்டப்பட்டதாயிற்று. இவற்றின் அடக்கத்திற்குக் "கற்றறிந்தவரென வடங்கி" என உவமை கூறியது குறிக்கொள்ளத் தக்கது. "கற்றவரென வடங்கி" என்னாது 'கற்றறிந்தவரென வடங்கி' என்றது ஆழ்ந்துரைத்ததாம். கல்விக்குப்பயன்விநயமே யென்றறிந்தவ ரென்கை. .... *

(ராம லக்ஷ்மண ஸீதைகள் மாலைப் பொழுதில் குலதெய்வத்தைத் தியானித்தல்.)

225. *மொய்யுறு நறுமலர் முகிழ்த்த வாஞ்சில*
மையறு நறுமலர் மலர்ந்த வாஞ்சில
ஐயனொ டிளவலுக் கமிழ்தனாளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் போன்றவே.

மொய் உறு நறு மலர் சில முகிழ்த்த ஆம்	இதழ்கள் நெருங்கி நறுமணம் மிக்க சுவையான மலர்களிற் சில மூடிக்கொண்டன;	ஐயனொடு இளவலுக்கு அமிழ்து அனாளுக்கும்	இராமபிரானுக்கும் இளையபெருமாளுக்கும் அமுதம் போன்றவளான சீதாபிராட்டிக்கும்
மை அறு நறு மலர் சில மலர்ந்த ஆம்	குற்றமற்ற நறுமலர்களிற் சில மலர்ந்தன; (அப்போது)	கைகளும் கண்களும் கமலம் போன்றன	கைகளும் கண்களும் தாமரை மலரையொத்துக் குவிந்து கிடந்தன.

மாலைப் பொழுதிற் சில மலர்கள் குவிவனவும் சில மலர்கள் அலர்வனவுமாக, அப்போது ராம லக்ஷ்மண ஸீதைகள் கைகளைக் குவித்துக் கண்களை மூடிய வண்ணம் தமது குலதெய்வத்தைச் சிந்தனை செய்தனரென்றவாறு. மாலைப் பொழுதில் தாமரை மூடிக்கொள்ளும் மலராதலால் அதனை இங்கு உவமையாக எடுத்தது மிகப் பொருத்தம்.

(இளையோனமைத்த பர்ணசாலையில் இராமன் உவந்திருத்தல்.)

226. *மாய் நீங்கிய சிந்தனை மாமறை*
தூய பாற்கடல் வைகுந்தஞ் சொல்லலாம்
ஆய சாலை யரும்பெற லன்பினன்
நேய நெஞ்சினின் விரும்பி நிரம்பினன்.

மாயம் நீங்கியசிந்தனை	அவித்யையின்றித் தத்துவ ஞானத்தைக் கொண்ட ஞானிகளின் மனமும்	ஆய சாலை	இளையபெருமாளமைத்த அந்தப் பர்ணசாலையில்
மா மறை	—பெருமை பெற்றவேதமும்	அரும் பெறல் அன்பினன்	அருமையான அன்பி னாற் பெறுதற்கு உரியவ னான அவ்விராமபிரான்
தூய பால் கடல்	பரிசுத்தமான திருப்பாற் கடலும்	நேயம் நெஞ்சின் விரும்பி நிரம்பினன்	நேசம் மிக்க திருவுள் ளத்தால்மகிழ்ந்து திருப்தி யடைந்திருந்தான்
வைகுந்தம் சொல்லல் ஆம்	ஸ்ரீவைகுண்டமும் என்று சொல்லுதற்குரிய		

(இளையோன் பர்ணசாலை சமைக்கும்படி நேர்ந்தது குறித்து இராமன் வருந்துதல்.)

227. *அடருஞ் செல்வ மளித்தவ னாணையால்*
படரு நல்லறம் பாலித் திரவியின்
சுடரு மெய்ப்புகழ் சூடினெ னென்பதென் ?
இடருனக் கிழைத்தேன் நெடு நாளென்றான்.

அடரும் செல்வம் அளித்தவன்	நெருங்கிய ராஜ்யஸம் பத்தை எனக்குக்	இரவியின் சுடரும் மெய் புகழ்சூடினென் என்பது என்	சூரியன்போல் விளங்கு கின்ற உண்மையான புகழை நான் பூண்டே னென்று சொல்லுவது ஒரு பொருளோ?
ஆணையால்	கொடுக்கவிருந்த தசரத னது கட்டளையினால்		
படரும் நல் அறம் பாலித்து	காட்டிற்குச் செல்வ தாகிய சிறந்த தருமத் தைச் செய்வதாக மேற் கொண்டு	நெடு நாள் உனக்கு இடர் இழைத்தேன் என்றான்	(லக்ஷ்மணா!) பல நாள் உனக்குக் கஷ்டத்தை யுண்டாக்கினேனே! என்று வருந்திக் கூறினன்.

நான் காட்டிற்குச் சென்று பித்ருவாக்ய பரிபாலனமாகிய தருமத்தை நடத்துவது பெரிய ஸுக்ருத மென்பது கிடக்கட்டும்; இந்த வனவாஸம் உனக்கு நீண்ட காலம் கஷ்டந் தருவதாக முடிந்ததே யென்று மனம் நொந்து கூறியவாறு. .... *

சித்திரகூடப் படலம் முற்றிற்று.

---

9. பள்ளியடைப் படலம் :—தசரத சக்ரவர்த்திக்குச் சரமஸம்ஸ்காரம் நிகழ்த்தும் செய்தியைத் தெரிவிக்கும் படலமென்பது கருத்து. இராமன் சித்திரகூடம் சேர்ந்திருக்கின்றனன். அயோத்திச் செய்தி யாதெனின்; வசிட்ட முனிவனாலனுப்பப்பட்ட தூதர்கள் கேகய நாட்டை யடைந்து ஓலையைக் கொடுத்துப் பரத சத்துருக்கனர்களை ஏழா நாளிற் கோசலநாடு கொண்டு சேர்த்தனர். நாட்டின் விபரீதமான நிலைமையைக் கண்டதனால் ஒன்றுந் தோன்றாமல் திடுக்கிட்டுப் பரதன் அரண்மனைபுக்கு எல்லாச் செய்திகளையும் நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டு பலவாறு கதறியழுது தானே தேறி 'எனக்கு ஸகல வித பந்துவும் இராமனேயாதலால் அவன்கழலை வணங்கினாலன்றி என் துயரம் தீராது' என்று நெடுநேரம் புலம்பி, தனக்கு ராஜ்யம் வேணுமென்று தன் தாய் செய்த தீமைக்காக அவளைப் பலபடி பழித்துத் தன்னையும் வெறுத்துக்கொண்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் சிந்தைக் கடலிலாழ்ந்திருக்க, அப்போது வசிட்ட முனிவன் வந்து பரதனை நோக்கி 'இறந்தவர்க்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்யவேண்டும்' என்ன, கோசலை அனுமதி தர, பிறகு பரதன் வசிட்ட முனிவனை வணங்கி அவனோடும் போய்த் தந்தையினுடலைக் கண்டு புலம்ப, பின்னை வைதிகர்கள் மன்னவனுடலை விமானத் தேற்றி யானையின் மீது வைத்துச் சங்கு பேரி முதலியன ஒலிக்கச் சரயுவுக்குக்கொண்டு போய்ச் சேர்த்து 'வீரனே! ஈமக் கடனைச் செய்வாயாக' என்ன; அப்போது ஈமக் கடன் செய்யுமாறு வந்த பரதனை வசிட்ட முனிவன் 'அன்னை தீமையால் உன்னை மன்னவன் துறந்தான்; நீ கருமஞ் செய்ய உரியனல்லை' என்று தடுக்க, பரதன் தன் நிலைமைக்கு மிகவும் வருந்தி நிற்க, பின்பு முனிவன் சத்துருக்கனனைக் கொண்டு ஈமக்

கட்டளைச் செய்வித்தான். அப்பால் பரதன் மனைக்குத் திரும்பிப் பத்து நாளும் ஆசௌச மிருந்து எல்லாக் கிரியைகளும் முடிந்த பிறகு, நாடு அராஜகமாய்க் கிடக்கலாகாதென்று துணிந்த மந்திரக் கிழவரும் அந்நாட்டினரும் வசிட்ட முனிவனும் பரதனைக் கூடினார்க ளென்பது இங்குக் கதை. ....

(நடந்த செய்தியைக் கைகேயி பரதனுக்குக் கூறுதல்.)

228. ***வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்***
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்கு
ஆக்கினே னவனது பொறுக்கலாமையால்
நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்தென்றாள்.

வாக்கினால்	—(மன்னவன்)தன் வாயினால்	பார் உனக்கு ஆக்கினேன்	ராஜ்யத்தை உன்னுடையதாக ஆக்கினேன்;
வரம் தர	நான் கேட்ட இரண்டு வரங்களைக் கொடுக்க	நேமி வேந்து அவன்	—தசரத மன்னவன்
கொண்டு	அவற்றைப் பெற்றுக் கொண்டு (அதனால்)	அது பொறுக்கலாமையால்	இராமனுடைய வனவாஸத் துயரத்தைத் தாங்கமாட்டாமல்
மைந்தனை வனத்திடை போக்கினேன்	இராமனை வனத்திற்குப் போகும்படி செய்தேன்;	தன் உயிர் நீக்கினான்	—இறக்கப்பெற்றான்;
போக்கி	—அப்படியனுப்பிவிட்டு	என்றாள்	—என்றனள் கைகேயி.

(பரதனது சினத்தின் செய்கை.)

229. ***துடித்தன கபோலங்கள் சுற்றுந் தீச்சுடர்***
பொடித்தன மயிர்த்தொளை புகையும் போர்த்தது
மடித்தது வாய் நெடு மழைக்கை மண்பக
அடித்தன வொன்றொடொன்று அசனியஞ்சவே.

கபோலங்கள் துடித்தன	கன்னங்கள் துடித்துக் கொண்டிருந்தன;	மழை நெடு கை	மேகம் போன்ற உதாரமான நீண்ட கைகள்
மயிர் தொளை சுற்றும் தீ சுடர் பொடித்தன	மயிர்க் குழிகள் நாற்புறமும் அனற் கொழுந்துகளை அரும்பின;	அசனி அஞ்ச	இடியும் அஞ்சும்படி. (பேரொலி பிறக்க)
புகையும் போர்த்தது	புகையும் நாற்புறமும் பரவியது;	மண் பக ஒன்றொடு ஒன்று அடித்தன	பூமி பிளக்கும்படி ஒன்றையொன்று அடித்துக் கொண்டது.
வாய் மடித்தது	உதடு மடித்துக் கொண்டது;		

இவையெல்லாம் மிக்க சினத்தின் அடையாளங்களாகத் தோன்றியவை.

(பரதன் கைகேசியையும் தன்னையும் பழித்துக் கூறுதல்.)

230. ***நோயீரல்லீர் நுங்கணவன்றன் னுயிருண்டீர்***
பேயீரே நீரின்னமிருக்கப் பெறுவீரே
மாயீர் மாயாவன்பழிதந்தீர் முலைதந்தீர்
தாயீரே நீரின்னுமெனக்கென் தருவீரே.

நும் கணவன் தன் உயிர் உண்டீர்	உமது பர்த்தாவின் பிராணனை முடித்திட்டீர்: (என்றாலும்)	முலை தந்தீர்	இளமையில் முலை கொடுத்து வளர்த்தீர்;
நோயீர் அல்லீர்	— நோய்போல்வீரல்லீர்;	மாயா வன் பழி தந்தீர்	(இப்போது) சாசுவதமான கொடிய பழியையும் தந்தீர்;
நீர் பேயீரே	நீர் பேய்த்தன்மையுடையவரே; (இப்படிப் பட்டநீர்)	தாயீரே நீர்	உண்மையில் எனக்குத் தாயாரல்லீர் நீர்;
இன்னும் இருக்க பெறுவீரே	இன்னும் உயிரோடிருக்கத் தகுமோ?	இன்னும் என் தருவீரே	இன்னமும் எனக்கு என்னென்ன ஆபத்துக்களை விளைவிக்கப் போகின்றீரோ?
மாயீர்	உடனே இறந்து படுவது நலம்;		

உலகத்தில் அவரவர்கள் நோயினால் சாவதுண்டு; நோயென்பது சிறிதுகாலம் பிடித்து உயிரைப் போக்கும்; அங்ஙனமின்றித் திடீரென்று அறைந்து உயிரைக்கொள்வது பேயே யாதலால் " நுங்கணவன்றன் னுயிருண்டீர் நோயீரல்லீர் பேயீரே நீர்" எனப்பட்டது.

(இதுவுமது.)

231. வில்லார் தோளான் மேவினன் வெங்கானகமென்ன
நல்லான் ஐயன் துஞ்சினன் நஞ்சேயனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழியாலே குறைவற்றே
னல்லேனோயான் அன்புடையார்போ லழுகின்றேன்.

வில் ஆர் தோளான் வெம் கானகம் மேவினன் என்ன	வில் வீரனான இராமன் காடு சென்றானென்று சொல்லக்கேட்டும்	மாயேன் யான்	இத்தீமைக் கெல்லாங் காரணமாகிய என்னை மாய்த்துக் கொள்ளாமலிருப்பவனாயுமுள்ள நான்
நல்லான் ஐயன் துஞ்சினன்	சிறந்த சக்ரவர்த்தி அத்துயரைத்தாங்கமாட்டாது உயிர் நீங்கினன்; (இராமனைக் காடேறப் போக்கியவள் என் தாயாகிய கைகேயி யென்பதை யறிந்தும்)	அன்பு உடையார் போல் அழுகின்றேன்	அன்புடையாரைப் போலப் பாவித்துக் கண்ணீர் வடிக்கின்றேன்,
நஞ்சே அனையாளை	விஷம்போற் கொடியவளான அவளை	வன் பழியாலே குறைவு அற்றேன் அல்லேனோ	'இவன் இராமனிடத்து அன்பு இல்லாதிருக்கையில் அன்புடையார்போல நடிக்கும் வேஷக்காரன்; இவனே இராமனைக் காட்டிற்கு அனுப்பிய பாவி,' என்று உலகத்தார் தூற்றும் கொடிய பழி நிரம்பியிருக்கப் பெற்றவனல்லேனோ நான்?
கொல்லேன்	—கொல்லாதவனாயும்		

(இதுவுமது.)

232. பாரோர் கொள்ளார் யானுயிர்பேணிப் பழிபூணேன்
தீராதொன்றானும் பழியூரில் திருநில்லாள்
ஆரோடெண்ணிற்று ஆருரைதந்தார் அறமெல்லாம்
வேரோடுங்கேடாகமுடித்தென் விளைவித்தாய்,

பாரோர் கொள்ளார்	யான் அரசாள்வதை உலகத்தவர் யாரும் யுக்தமென்று கொள்ளமாட்டார்;	ஒன்றானும் பழி தீராது	(நான் அரசை மேற்கொண்டால்) ஒருவகையாலும் பழி நீங்காது,
யான் உயிர் பேணி பழி பூணேன்	யான் அரசச் செல்வத்தோடு வாழும் உயிர் வாழ்க்கையை விரும்பித் தமையனைக்காட்டிற்குத் துரத்தி விட்டுத் தம்பி அரசுபுரிகின்றானென்று உலகோர் கூறும் பழிமொழிக்கு இடங்கொடுப்பேனல்லேன்.	ஊரில் திரு நில்லாள்	முறை திறம்பியஇவ்வூரில் இனி இலக்குமியும் வாழாள்;
		எண்ணிற்று ஆரோடு	நீ யாரோடு கலந்து ஆலோசனை செய்தது?
		உரை தந்தார் ஆர்	உனக்கு ஆலோசனை சொல்லியவர் யாவர்?
		அறம் எல்லாம் வேரோடும் கேடு ஆக முடித்து என் விளைவித்தாய்	தருமமெல்லாம்அடியோடு கெடும்படியான தொழிலைச் செய்திட்டு என்ன பயன் கண்டாய்?

(இதுவுமது.)

233. சிறந்தார் சொல்லும் நல்லுரை சொன்னேன் செய்யெல்லாம்
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தாயாகில் தூயையுமாதி யுலகத்தே
பிறந்தாயாதி யீதலதில்லைப் பிறிதென்றான்.

சிறந்தார் சொல்லும் நல்உரைசொன்னேன்	அறிவிற் சிறந்தவர்கள் சொல்லக் கூடிய சிறந்த வார்த்தைகளைச் சொன்னேன்;	தூயையும் ஆதி	பாவம் நீங்கிப் பரிசுத்தையுமாவாய்;
மாயா உயிர் தன்னை துறந்தாய் ஆகில்	இன்னும் முடியாதிருக்கின்ற உன் பிராணனை முடித்துக் கொண்டாயாகில்	உலகத்தே பிறந்தாய் ஆதி	உலகத்திற் பிறந்ததனால் பெறலாகும் பயனைப் பெற்றவளுமாவாய்;
செயல் எல்லாம் மறந்தாய் செய்தாய் ஆகுதி	நீ செய்த கொடிய செய்கைகளையெல்லாம் மனஸ்கரித்தல்லாமல் நினைவின்றியே செய்தவளாவாய்;	ஈது அலது பிறிது இல்லை	நீ பழி நீங்கி நன்மையடைதற்குரிய வழி இது தவிர வேறொன்றில்லை
		என்றான்	என்று கூறி முடித்தான் பரதன்.

(கௌசலைக்குத் தெளிவு பிறக்குமாறு பரதன் சபதஞ் செய்தல்.)

234. **பொய்க்கரிகூறினேன் போருக்கஞ்சினேன்**
கைக்கொளுமடைக்கலங் கரந்து வவ்வினேன்
எய்த்திடத் திடர்செய்தோ னென்றின்னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்க யான்.

(இராமன் காடு புக்கதற்கு யான் உடந்தையா யிருந்திருப்பேனாயின்)

பொய் கரி கூறினேன்	நீதி மன்றத்தில் பொய்ச் சாக்ஷி சொன்னவனும்	எய்த்த இடத்து இடர் செய்தோன்	ஒருவர் தமக்குக்கஷ்டம் நேர்ந்து வருந்துகையில் பின்னும் அவர்க்குத் துன்பத்தை விளைத்தவனும்
போருக்கு அஞ்சினேன் கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினேன்	யுத்தஞ் செய்ய அஞ்சி நின்றவன்கையிற் கொண்டுள்ள அடைக்கலப் பொருளை மறைந்து நின்று பறித்துக் கொண்டு சென்றவனும்	என்ற இன்னோர்புகும் கொடு மெய் நரகிடை விரைவின்யான் வீழ்க	ஆகிய இத்தன்மையோரடைகின்ற கொடிய நரகத்தில்இன்றேயான்வீழ்க

(இதுவுமது)

235. **அந்தண ருறையுளை யனலியூட்டினேன்**
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்துளோன்
நிந்தனை தேவரை நிகழ்த்தினேன் புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே,

அந்தணர் உறையுளை அனலி ஊட்டினேன்	பிராமணர் தம்இல்லத்தில் தீப்பற்றவைத்தவனும்	தேவரை நிந்தனை நிகழ்த்தினேன்	தேவதைகளை (காரணமின்றி)ப் பழித்தவனும்
மைந்தரை கொன்றுளோன்	சிசு ஹத்தி செய்தவனும்	புகும் வெம் துயர் நரகத்து யானும் வீழ்க	அடையக்கூடிய கொடிய நரகத்தில் யானும் வீழ்வேனாக.
வழக்கில் பொய்த்து உளோன்	தான் நீதிபதியாயிருந்து வழக்கில் தவறாக நியாயத்தைத் தீர்த்தவனும்		

(பரதன் சொல்லியது கேட்டுத் தெளிந்த கோசலை அவனைப் புல்லுதல்.)

236. **தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத், தீய கானகத் திருவி னீங்கி முன்**
போயினான் வரக்கண்ட போய்மலா ளாயவன்பினு லழுதுபுல்லினாள்,

தூய வாசகம் சொன்ன தோன்றலை	தன் மனத்தூய்மையை வெளியிட்டுக் கூறின பரதனை	கண்டபொம்மலாள்	மகிழ்ச்சியை யுடையளான கோசலை
திருவின் நீங்கி தீய கானகம் முன் போயினன் வர	அரச சம்பத்தையிழந்து கொடிய காட்டிற்குமுன்பு சென்ற ஸ்ரீராமன் திரும்பி வரப் பார்த்தாற் போன்ற	அழுது	—கண்ணீர் விட்டு
		ஆய அன்பினல்	அப்பரதனிடத்துத் தோன்றிய அன்பினாலே
		புல்லினள்	அவனைத்தழுவிக் கொண்டாள்,

(பிரேத சரீரத்தோடு சரயுவையடைதல்.)

237. **மாவும் யானையும் வயங்குதேர்களும், கோவுநான் மறைக்குழுவு முன்செலத்**
தேவிமாரொடுங் கொண்டு தெண்டிரை, தாவுவார்புனற் சரயு வெய்தினர்.

மாவும் யானையும் வயங்கு தேர்களும்	குதிரைகளும் யானையும் விளங்குகின்ற தேர்களும்	தேவிமாரொடும்	அந்த மன்னவனது மனைவிமாருடன்
கோவும்	—அரசர்களும்		
நால் மறை குழுவும்	நால்வேதம்வல்ல அந்தணர் கூட்டமும்	தெண் திரை தாவு வார் புனல் சரயு	தெளிவான அலைகள் தாவி விழப்பெற்ற மிக்க நீரையுடைய ஸரயூ நதியை
முன் செல	—முன்னே போக		
கொண்டு	சக்ரவர்த்தியின் பிரேத சரீரத்தை யெடுத்துக் கொண்டு	எய்தினர்	—அடைந்தார்கள்,

(ஈமக்கடன் செய்யவந்த பரதனைத் தந்தையின் கட்டளையைத் தெரிவித்து வசிட்டன் தடுத்தல்.)

238. **என்னும் வேலையி லெழுந்த வீரனை, அன்னை தீமையா லரசன் நின்னையும்**
துன்னு துன்பத்தால் துறந்து போயினன், முன்னரேயென முனிவன் கூறினன்,

என்னும் வேலையில்	ஈமக்கடன் செய்ய வேண்டிய ப்ரஸ்தாவம் விளைந்த போது	அரசன் அன்னை தீமையால் துன்னு துன்பத்தால் முன்னரே நின்னையும் துறந்து போயினர்	‘(பரதனே!) தசரத சக்ரவர்த்தி உன் தாயின் தீய குணத்தால் மனத் துண்டான துன்பத்தால் முன்னமே உன்னுறவையும் ஒழித்திட்டு இறந்தான்’
எழுந்த வீரனை	ஈமச் சடங்கு புரிய எழுந்துவந்த பரதனை நோக்கி		
முனிவன்	—வசிட்ட முனிவரானவர்	என்று கூறினன்	—என்று சொன்னர்.

சக்ரவர்த்தி கைகேயியையும் பரதனையும் வசிட்டனைச் சாக்ஷியாக்க் கொண்டு உறவு துறந்தமையை “இன்னே பலவும் பகர்வா னிரங்காதானை நோக்கிச், சொன்னேனின்றே யிவளென் தாரமல்லள் துறந்தேன்; மன்னே யாவான் வருமப் பரதன்தனையும் மகனென், றுன்னேன் முனிவா அவனும் ஆகா னுரிமைக் கென்றான்” என நகர் நீங்குபடலத்துச் செய்யுளினலறிக.

(சக்ரவர்த்தியின் கிரியையாவும் முடிந்தபின் வசிட்டன் ராஜ்யத்தை நடப்பிக்குமாறு ஆலோசிக்கப் பரதனை வந்து சேர்தல்.)

239. **முற்று முற்றுவித் துதவி மும்மைநூல்**
சுற்றம் யாவரும் தொடரத் தோன்றினன்
வெற்றி மாதவன் வினைமுடித்தவன்
கொற்றவேல் நெடுங் குமரற் கூடினன்,

முற்றும் உதவி முற்றுவித்து	சடங்குகளை யெல்லாம் உடனிருந்து முடிப்பித்து	சுற்றம் யாவரும் தொடர	இனத்தவரான அந்தணர் யாவரும் தொடர்ந்து வர
வினை முடித்தவன்	வினையினின்று நீங்கினவனாகிய	தோன்றினன்	தன்னிருக்கையினின்று வெளிப்பட்டவனாய்
வெற்றி மாதவன்	வெற்றி பெற்ற பெருந்தவத்தையுடையவனாகிய வசிட்ட முனிவன்	கொற்றம் வேல் நெடு குமரன் கூடினன்	வெற்றி பெற்ற வேற்படையைக் கொண்ட பரதனிடம் வந்து சேர்ந்தான்.
மும்மை நூல்	முப்புரி நூலாயமைந்த யஜ்ஞோபவீத மணிந்த		

(நாடு அராஜகமாயிருப்பது கூடாதெனல்)

240. மன்னரின்றியே வையம் வைகல்தான்
தொன்மையன்றெனத் துணியுநெஞ்சினர்
அன்ன மாநிலத்தறிஞர் தம்மொடும்
முன்னை மந்திரக்கிழவர் முந்தினர்.

முன்னை மந்திரம் கிழவர்	தொன்று தொட்ட ஆலோசனைக்குரிய மந்திரிமார்	துணியும் நெஞ்சினர்	மன்னவனை நியமிக்க வேணுமென்று உறுதி கொண்ட மனத்தராய்
வையம் மன்னர் இன்றியே வைகல் தொன்மை அன்று என	'இந்த ராஜ்யம் அராஜகமாயிருப்பது முறைமையன்று' என்ற காரணத்தினால்	அன்ன மா நிலத்து அறிஞர் தம்மொடும்	அந்தப் பெரிய ராஜ்யத்திலுள்ள ஞானிகளான பெரியோர்களுடனே
		முந்தினர்	—முற்பட்டு வந்தனர்.

பள்ளியடைப் படலம் முற்றிற்று.

10. ஆறு செல்படலம்

பரதன் சித்திரகூடத்துக்குப் பயணப்பட்டுச் சென்ற கதையைச் சொல்லும் பகுதியென்றவாறு. ஆறு—வழி. வழி சென்ற கதை கூறும் படலமென்க. வசிட்டன் சுமந்திரன் முதலானவர்கள் பரதனை எவ்வளவு வேண்டியும் அவன் "அரசமர்ந்தானடி சூடு மரசையல்லால் அரசாக வெண்ணேன் மற்றரசு தானே" என்று திடமான தன் மனவுறுதியை வெளியிட்டு 'இராமபிரானை அழைத்துவந்து முடி சூட்ட முயல்வேன்; அன்னவன் இணங்காவிடின் அவனுடன் கானகத்து வசிப்பேன், மாறுகூறின் உயிர் துறப்பேன்' என்று கூற, அதுகேட்ட சபையோர் பரதனது அத்யவஸாயத்திற்கு வியந்து நிற்க, உடனே சேனைகளைச் சன்னுகப்படுத்தி யாவரும் இராமனை யழைத்துவர மனக்கிளர்ச்சிகொண்டு புறப்பட்டனர். பரதன் தன்னரையில் சீரைசாத்தி முனிவர் கோலத்துடனே தம்பியுமுடன்வர, தாயரும் தவத்தவரும் மந்திரிமாரும் அளவில் சுற்றமும் அந்தணரும் தொடர்ந்துவரத் தேரின்மீது சென்று, பிறகு நடந்து சென்றனனென்பது இப்படலத்துக் கதைச் சுருக்கம். ... ...

(இப்படலத்தினின்று செய்யுள் ஒன்றும் கொள்ளப்படவில்லை.)

11. குகப் படலம்

• பயணப்பட்ட பரதாழ்வான் குகப்பெருமாளைச் சேர்ந்ததைத் தெரிவிக்கும் படலமிது. பரதன் கோசலநாட்டைக் கடந்து கங்கைக்கரையை அடைந்தானாக, சேனைகள் கங்கை நீரைக் கலக்கலாயின. அப்போது குகன் சேனையோடு பரதன் வருவது கண்டு 'இவன் நம்மி

ராமனைக் காட்டுக்குத் துரத்தியதோடு நில்லாமல் அங்கும் துரத்தவருகிறான் போலும்' எனக் கருதிச் சினம் பொங்கி யுத்தசன்னத்தனாகித் தென்கரை வந்து அட்டகாசம் செய்து நின்றனன். அப்போது சுமந்திரன் குகன் வந்து நின்றதைப் பரதனுக்குத் தெரிவிக்க, பரதன் நானே, அவனைக் காணச் செல்வேன். என்று செல்ல வரும் பரதனது நிலையைக் கண்ட குகன் திடுக்கிட்டுப் பரதனையணுகி வணங்க, பரதன் குகனைத் தழுவ, குகன் பரதனை வந்த காரணம் வினவ, அவன் உள்ளது உள்ளபடியே சொல்ல, அது கேட்ட குகன் பரதன் தன்மையைக் கொண்டாடிப் பாராட்டியது முதலிய செய்திகளைக் கூறுமிப்படலம்.

(பரதனிடம் அதிசங்கை கொண்ட குகனுடைய பேச்சுக்கள்.)

5

241. *அஞ்சனவண்ண னென்னுயிர் நாயக னாளாமே*
வஞ்சனையா லரசெய்திய மைந்தரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகனென்றெனை யோதாரோ.

என் ஆர் உயிர் நாயகன்	எனது அருமைப் பிராணநாதனாகிய	செம் சரம் என்பன	(எனது) சிவந்த அம்பெனப் படுபவை
அஞ்சனவண்ணன் ஆளாமே	கரிய கோலக்காகுத்தன் அரசாட்சி செய்ய முடியாதபடி	செல்லா ஓ	இப்பரதன் மேல் செல்ல மாட்டாவோ?
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே	வஞ்சனை வழியினால் ராஜ்யத்தை யடைந்த பிரபுவும் இங்கு வந்துவிட்டாரோ?	இவர் உஞ்சு போய் விடின்	இவர் எனது அம்புக்குத் தப்பிப் பிழைத்துப் போய்விட்டால்
தீ உமிழ்கின்றன	நெருப்பைக் கக்க வல்லவையான	நாய் குகன் என்று எனை ஓதாரோ	நீசனிவனென்று உலகத்தார் என்னை இகழாரோ?

உலகில் நாய்கள் நன்றியறிவிற் சிறந்தவையென்று புகழ் பெற்றிருக்கவும், சில நாய்கள் எதிரிகளிடும் தின்பண்டங்களைத் தின்றுகொண்டு வாளாவிருத்தலுமுண்டு; அதைக் கருதி "நாய்க் குகனென்று எனையோதாரோ?" என்றதாகக் கொள்ளுதல் சிறக்கும்.

242. *ஆழநெடுந்திரை யாறுகடந்திவர் போவாரோ?*
வேழநெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமையென்றுஅவர் சொல்லியசொல்லொரு சொல்லன்றோ?
ஏழமைவேட னிறந்திலனென்றெனை யேசாரோ?

இவர்	—இப்பரதன்	தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ	அவ்விராமன் என்னைத் தோழனாகக் கொண்டு சொல்லிய வார்த்தை எப்படிப்பட்டது! (அந் நட்புக்கு ஏற்ப நான் நடவாவிட்டால்)
ஆழம் நெடு திரை ஆறு கடந்து போவாரோ	ஆழத்தையும் நீட்சியையும் அலைகளையுமுடைய கங்கையாற்றை(என்னுதவியில்லாமல்) தாண்டிப் போக வல்லவரோ?		
வேழம் நெடு படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ	நான் யானைச் சேனைகளைக் கண்டு அஞ்சி நடுங்கி விலங்கிப் போகும் வில் வீரனோ?	ஏழமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ	எளியனான இவ்வேடன் (இங்ஙனம் மானங்கெட்டு வாழ்வதை விட) இறந்திருக்கலாகாதா வென்று என்னை உலகத்தார் பழிக்க மாட்டாரா?

(சுமந்திரன் பரதனுக்குக் குகனைத் தெரிவிப்பது)

243. கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கிரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

(கருத்துரை) கங்கா நதியின் இரண்டு கரைகளையும் தனக்குச் சொந்தமாக வுடைய வனும், அளவுகடந்த படகுகளை யுடையவனும், உங்கள் குலத்தலைவனான இராமபிரானுக்கு உயிர்த்தோழனும், மஹாபுஜசாலியும், மதகரியை யொத்தவனும், வில்லேந்திய சேனா சமுத்திரத்தை யுடையவனும், புரிமளம் வீசுகின்ற குளிர்ந்த மாலையை யணிந்துள்ளவனுமான இவன் குகனென்னும் வேடர் தலைவன்.

(பரதனது நிலையைக் கண்ட குகன் திடுக்கிடுதல்.)

244. வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

(கருத்துரை) மரவுரியை ஆடையாக அணிந்து கொண்டிருப்பவனும், புழுதிபடிந்த உடம்புடையவனும், அழகிய கலைகளில்லாத சந்திரன்போல ஒளியிழந்த முகத்தையுடைய வனும், காண்கின்ற கல்லும் குழைந்துருகும்படி மிகுகிற துன்பத்தையுடையவனுமான பரதனைக் குகன்கண்டு, தன் கையினின்று வில் நழுவிக் கீழே விழும்படி கலங்கிச் செயலற்று நின்றிட்டான்.

(குகன் பரதசத்துருக்கனரின் நிலையைக் கருதுதல்.)

245. நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயல்நின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடம் தலைக்கொண்டான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பாரோ பிழைப்பென்றான்.

(கருத்துரை) புருஷச்ரேஷ்டனான இப்பரதனும் எனது தலைவனாகிய இராமபிரானை யொத்திருக்கின்றான்; அருகில் நின்ற சத்துருக்கனனும் ராமாநுஜனான லக்ஷ்மணனை யொத்திருக்கின்றான். இவன் படுகிற துன்பத்திற்கோ ஓரெல்லையில்லை; இராமன் சென்ற தென் திசையை நோக்கி வணங்குகின்றான்; இராமன் தம்பியர் ஒருகாலும் பிழைசெய்யார்-என்றான்.

(குகன் பரதனைப் புகழ்வது.)

246. தாயுரைகொண்டு தாதை யுதவிய தரணிதன்னைத்
தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்தில்தேக்கிப்
போயினை யென்றபோழ்து புகழினோய் தன்மைகண்டால்
ஆயிரமிராமர் நின்கே ழாவரோ தெரியினம்மா.

(கருத்துரை) மஹாகீர்த்தியை யுடைய பரதனே! உனது தாயாகிய கைகேயியின் வார்த்தையைக் கேட்டு உனது தந்தை உனக்குக் கொடுத்த ராஜ்யத்தை மஹாபாபமென்று விட்டுத் தொலைத்து, கவலையை முகத்தில் நிறைத்துக்கொண்டு இங்கு வந்துள்ளாய் என்பதை நோக்குமிடத்து, ஆலோசித்துச் சொல்லுவதானால் ஆயிரம் ஸ்ரீராமர் உளரானாலும் உன்னொருத்தனுக்கு ஒப்பாவரோ?

குகப்படலம் முற்றிற்று

12. திருவடி சூட்டுபடலம்

பரதாழ்வான் சக்ரவர்த்தி திருமகனுரை வனத்தினின்று மீட்டுக்கொணர்ந்து மகுடாபிஷேகம் செய்வித்து மகிழக் கருதிச் சித்திரகூட மலையைச் சார்ந்து பெருமாளைப் பலவாறு வேண்டவும் அவர் பித்ருவாக்கிய பரிபாலனத்தின் அவசியத்தைக்கூறி மறுத்திட, பிறகு பரதாழ்வான் பெருமாளுடைய பாதுகையை இறந்து பெற்று முடிக்கு அணியாகச் சூட்டிக் கொண்டு சென்றதைக் கூறும் படலமிது நூற்று நாற்பத்தொரு செய்யுள்கள் கொண்ட இப்படலத்தினின்று சில செய்யுட்கள் கொள்ளப்படுகின்றன.

(லக்ஷ்மணன் பரதசேனையைக் கண்டு அதிசங்கித்துச் சீற்றங்கொண்டு அதனைப் பெருமாளிடம் கூறுதல்.)

247. பரதனிப் படைகொடு பார்கொண்டாள் மறம்,
கருதியுட் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந்தானிது,
சரதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான்.

248. குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ,
மிதித்தனன் ராமனை விரைவி னெய்தினான்
மதித்திலன் பரதனின் மேல்வந்தான் மதிற்,
பதிப்பெருஞ் சேனையின் பரப்பினனென்றான்,

பரதன்	—பரதனானவன்	என தழங்கு சீற்றத்தான்	என்றெண்ணி மிக்ககோபமுடையவனாகி
பார் கொண்டு ஆள் மறம் கருதி	பூமியை யெல்லாம் தன்னதாக்கிக் கொண்டு தானே யரசாள வேண்டுமென்ற கொடுந் தொழிலை யெண்ணி	குவடு நீறு எழ மிதித்தனன்	அம்மலையின் கொடுமுடி பொடிபடும்படி கொடிய விசையோடு மிதித்து
உள் கிடந்தது ஓர் கறுவு காதலால்	தன் மனத்திலடங்கிக் கிடந்ததொரு கறுவோடு கூடிய பேராசையினால்	பாரிடை குதித்தனன்	கீழே குதித்து
இ படை கொடு	இந்தச் சேனையைக் கூட்டிக் கொண்டு	இராமனை விரைவின் எய்தினான்	பெருமாளிடம் விரைந்து சென்றவனாகி (அவரை நோக்கி)
விரதம் உற்று இருந்தவன் மேல் வந்தான்,	தந்தை சொற்பேணுதலாகிய விரதத்தைமேற் கொண்டிராநின்ற நம்பிராமனை எதிர்க்க வந்தான்;	பரதன் மதித்திலன்	'பரதன் உம்முடைய பெருமையைச் சிறிதும் ஸஹிக்க மாட்டாதவனாய்
இது சரதம்	—இது ஸத்தியமானது;	மதில் பதி பெரு சேனையின் பரப்பினன்	மதிள் சூழ்ந்த அயோத்தி நகரத்துள்ள பெரிய சேனையின் தொகுதியுடனே
மற்று இலது	—வேறொன்றுமில்லை;	நின் மேல் வந்தான் என்றான்	உம்மீது படையெடுக்க வந்துகொண்டிருக்கிறானென்றனன்.

(லக்ஷ்மணன் விரவாதமாகக் கூறுவது.)

249. இருமையு மிழந்தவப் பரத னேந்துதோள்,
பருமையு மன்னவன் படைத்த சேனையின்,
பெருமையு மின்றொரு பின்புவந்தவென்
னொருமையுங் கண்டினி யுவத்தி யுள்ளநீ.

இருமையும் இழந்த அ பரதன்	இஹலோக பரலோக சுகங்களை யிழந்தவனை அப் பரதனுடைய	அன்னவன் படைத்த சேனையின் பெருமையும்	அவன் திரட்டிக் கொணர்ந்த சேனையின் பெருமையையும்
ஏந்து தோள் பருமையும்	உயர்ந்த தோள்கள் பருத்திருக்குந் தன்மையையும்	பின் பின்பு வந்த ஒருவன் ஒருமையும்	உன் பின்னே பிறந்த தனியனான எனது ஒப்பின்மையையும்
		இனி கண்டு நீ உள்ளம் உவத்தி	இப்பொழுது நீ பார்த்து மகிழ்வாய்.

பரதனது தோள்களின் பூரிப்பும் அவனது சேனையின் பெருந்தொகையும் பழுதாம்படி யாரொருவனே கணப்பொழுதில் செய்திடுவேனென்று இளையோன் தன்னில் தான் கூறினனாயிற்று........

(இதுவுமது.)

250. ஆழிவெங் கடகரி துரக ராசிகள்,
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
ஆழிவெங் குருதியா லலைந்து வேலைகள்,
ஏழு மொன்றாகி நின்றிரைப்பக் காண்டியால்.

சூழி வெம் கட கரி துரகம் ராசிகள்	முகபடாத்தை யணிந்த வெவ்விய மத யானைகளும் குதிரைக் கூட்டங்களும்	ஆழி வெம் குருதியால் அலைந்து	(அவற்றி னுடலினின்று பெருகிய) கடல் போன்ற வெம்மையான ரக்த ப்ரவாஹத்தினால் கலக்கப்பெற்று
பாழி வன் புயத்து இகல் வயவர் பட்டு அற	பெருமை தங்கிய வலிய தோள்களையுடைய போர்வீரர்களும் இறந்தொழிய	வேலைகள் ஏழும் ஒன்று ஆகி நின்று இரைப்ப காண்டி	ஏழு கடல்களும் ஒன்று கூடிக் கோஷிக்கும்படியைக் காண்பாய்,

பரதனது சதுரங்க சேனைகளை நான் வெட்டி வீழ்ப்பேன்; அதனால் இரத்தக் கடல் தோன்றி ஏழு கடலையும் ஒன்றாக்கிப் பேராரவாரஞ் சய்வதை இவன் காணப்போகின்றான் என்றானாயிற்று. இதனால் தனது கோபாவேசத்தின் மிகுதி காட்டப்பட்டது.

(சீற்றங்கொண்ட லக்ஷ்மணனுக்கு இராமன் சமாதானங் கூறுதல்.)

251. சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ?
பூணியன் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய தீயிது பின்னுங் காண்டியால்.

பூண் இயல் மொய்ம்பினாய்	அணிகலமாகப் பொருந்திய வலிமையையுடைய இளையோனே!	அன்னது நினைக்கல் ஆகுமோ	நீ குறித்த அவ்விதமாக நினைத்தல் தகுதியோ?
சேண் உயர் தருமத்தின் தேவை	மிகச் சிறந்த தர்ம தேவதையானவனும்	ஈண்டு போந்தது எனை காணிய	பரதன் இங்கு வந்தது என்னைக் காணும் பொருட்டாமத்தனை;
செம்மையின் ஆணியை	ஆர்ஜவ குணத்தை நிலை நிறுத்தும் அச்சாணி போன்றவனுமாகிய பரதனைப்பற்றி	இது நீ பின்னும் காண்டி	இதனை நீ அடுத்தபடியாகக் கட் கூடாகக் காண்பாய்,

தருமமே வடிவெடுத்தவ னென்னலாம் படியான பரதாழ்வான் தருமத்திற்கு மாறாக நம்மீது படையெடுத்து வரமாட்டான்; ஆர்த்தியினால் நம்மைக் காணக் கருதியே இங்கு வருகின்றானென்பதை நீயே தெரிந்துகொள்ளப் போகிறாயென்றவாறு.

(இராமபிரான் பரதாழ்வானது வடிவத்தை முடிய நோக்குதல்.)

252. தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவல மீதென
எழுதிய படிவமொத்து எய்துவான் தனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான்.

தொழுது உயர் கையினன்	அஞ்சலித்து உயர வெடுத்த கைகளை யுடையவனும்	அவலம் ஈது என எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை	துன்பத்தின் வடிவம் இது தானென்று எழுதிக் காட்டின உருவம் போன்று வருபவனுமான பரதனை
துவண்ட மேனியன்	தளர்ந்த வுடலையுடையவனும்		
அழுது அழி கண்ணினன்	அழுதலால் அழகழிந்த கண்களை யுடையவனும்	முழுது உணர் சிந்தையான் முடிய நோக்கினான்	ஸர்வஜ்ஞனான இராமன் முழுவதும் நன்றாகப் பார்த்தான்.

(பரதனை நோக்கி இராமன் தந்தையின் சேமம் வினவுதல்.)

253. புல்லினன் நின்றவன் புனைந்த வேடத்தைப்,
பன்முறை நோக்கினான் பலவு முன்னினான்
அல்லலி னழுங்கினை ஐய வாளுடை
மல்லுயர் தோளினான் வலியனோ வென்றான்.

புல்லினன் நின்று	(இராமன் பரதனைத்) தழுவி	ஐய அல்லலின் அழுங்கினை	அப்பா! துன்பக் கடலில் மூழ்கியிருக்கின்றாயே!
அவன் புனைந்த வேடத்தை பல் முறை நோக்கினான்	அப்பரதன் தரித்திருந்த தவவேடத்தைப் பலமுறை உற்று நோக்கி	ஆள் உடை மல் உயர் தோளினான்	உலகத்தை யாள்பவரும் பலிஷ்டமான தோள்களை யுடையவருமான நம் சக்ரவர்த்தி
பலவும் உன்னினான்	பலபடியாகக் கருதினவனாய்	வலியனோ என்றான்	திடகாத்திரராக விருக்கின்றாரோ வென்று வினவினன்.

(சக்ரவர்த்தி துஞ்சினதைப் பரதன் கூறுதல்.)

254. அரியவனுரைசெயப் பரதனையநிற்,
பிரிவெனும் பிணியினா லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் காலனால் தனக்,
குரியமெய்ந் நிறுவிப்போ யும்பரானென்றான்.

அரியவன்	உணர்வதற்கு அரியவனான இராமபிரான்.	என்னை பெற்ற அ கரியவள் வரம் எனும் காலனால்	என்னைப் பெற்ற அக்கைகேசியின் வரமென்கிற யமனாலும்
உரை செய	—இவ்வாறு சொல்ல,		
பரதன்	(அதற்கு விடை கூறப் புகுந்த) பரதன்	தனக்கு உரிய மெய் நிறுவி போய் உம்பரான் என்றான்	தனக்குரிய புகழுடம்பை இவ்வுலகில் நிலை நிறுத்திச் சென்று சுவர்க்கலோகத்தை யடையலானான் என்றான்.
ஐய நின் பிரிவு எனும் பிணியினால்	பிரானே! உன்னைப்பிரிந்ததாகிற நோயினாலும்		

(தந்தையின் மரணங்கேட்டு இராமன் தரையில் விழுதல்)

255. விண்ணிடை யடைந்தனனென்ற வெய்யசொல்
புண்ணிடை யயிலெனச் செவிபுகாமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவாய்
மண்ணிடை விழுந்தனன் வானினும்பரான்.

(கருத்துரை) தந்தை பரலோகஞ் சேர்ந்தானென்று பரதன் சொன்ன கொடிய வார்த்தை புண்ணில் வேல் நுழைந்தாற்போல மிக்க வருத்தம் விளைத்துச் செவிப்பட்ட வுடனே விண்ணுலகத்தினும் மேலுள்ள பரமபதத்திற்கு உரியவனான ராமன், கண்ணும்மன மும் சுழல்கிற காற்றுடிபோலச் சுழலப்பெற்றுத் தரையில் விழுந்தனன்.

(இராமன் புலம்புதல்)

256. நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்தரேறே இறந்தனையே
அந்தோவினி வாய்மைக் காருளரோ மெய்யுற்றார்?

(கருத்துரை) அவியாததொரு விளக்கை யொத்த தலைவனே! பூமியிலுள்ளார்க்குத் தந்தை போல்பவனே! அருளுக்கு இருப்பிடமே! என் தந்தையே! பகையரசர்களாகிய யானைகளுக்குச் சிங்கமே! நீ இறந்து போயினையே!; இனி ஸத்யத்துக்கு உண்மையாக உறவாகுபவர் உன்னைப்போல் வேறுயாவருளர்! ஐயோ! ... .

(இதுவுமது)

257. தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்னமிருந்தேனுன் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வருயிரடைந்த வொள்வேலோய்!

(கருத்துரை) உடற்கொழுப்பை யடைந்த பகைவர்களது உயிரைக் கவர்ந்த ஒளி மிக்க வேற்படை யையுடையவனே! தேன்மிக்க சோலைகள் சூழ்ந்த கோசலநாட்டை நீங்கி நான் வனம்புக்கேனென்றறிந்த மாத்திரத்தில் அரசனே! நீ யென்னைப் பிரிந்த துயரத்தைப் பொறுக்கமாட்டாமல் பரலோகஞ் சென்றாய். நீ அங்ஙனஞ் சென்றதை யறிந்த உடனே நான் இறந்துபடவேண்டி யிருக்கவும் இறவாமல் பிழைத்திருக்கின்றேனந்தோ!

(இரங்குமிராமனைத் தம்பிமார் தாங்க வசிட்டன் தேற்றுதல்)

258. என்றெடுத்துப் பற்பலவும் பன்னியிடருழக்குங்
குன்றெடுத்த தோளுங் குவவுத் தோட்கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவருஞ்
சென்றெடுத்துத் தாங்கினார் மாதவனிட்டன் தேற்றினான்.

(கருத்துரை) கீழே தெரிவித்தவாறு குரலெடுத்து மிகப் பலவார்த்தைகளை விடாது கூறித் துன்பத்தில் மூழ்குகிற மால்வரைத்தோளனாய் வலிய சிங்கம் போன்றவனான ராமனை மஹாவீரர்களான தம்பிமார் மூவரும், அப்போது அங்கு வந்து சேர்ந்த அரசர்களும் அருகிற் போய் எடுத்து அணைத்தார்கள். மஹானான வஸிஷ்ட முனிவன் தேறுதல் கூறுமவனாயினன்.

(இராமன் சக்ரவர்த்திக்குத் தர்ப்பணஞ் செய்தல்)

259. புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்
தக்க நன்மறையவன் சடங்கு காட்டத் தான்
முக்கையி னீர்விதி முறையினீந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறு முணர்வு நல்குவான்.

(கருத்துரை) ஸகல ஜீவராசிகளிடத்தும் ஒரு தன்மையாக நின்று அவற்றிற்கு அறிவை யருளுந் திருமாலாகிய இராமன் நீரிலிறங்கி நீராடி வந்து, ஓதத்தக்க சிறந்த வேதங்களை யுணர்ந்த புரோஹிதனான வஸிஷ்ட பகவான் செய்யவேண்டுஞ் சடங்கையறிவிக்க, தான் கைகளால் மூன்றுவிசை எடுத்து விடப்படுகிற தர்ப்பண நீரை சாஸ்த்ரோக்தமான முறைப்படி இறந்த தன் தந்தையை யுத்தேசித்து விட்டனன்.

(பரதனது விரதவேடத்தைக் குறித்து இராமன் வினாவுதல்)

260. *வரதன் துஞ்சிலன் வையமாணையாற்*
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரதவேடநீ யென் கொல்வேண்டுவான்
பரத கூறெனப் பரிந்து கூறினான்.

(கருத்து) பரதனே! தான் சொன்னபடி வரம்தந்த சக்ரவர்த்தியோ முடிந்தனன்; பின்பு நிலவுலகம் அவனது கட்டளையால் உண்மையாக உன்னதேயாம், அங்ஙனமிருக்க நீ முடிசூடாமல் தவவேடத்தை விரும்பிப் பூண்டது யாது காரணத்தாலோ? சொல்வாயென்று அன்புடன் வினவினான். ... ...

(இராமனுக்குப் பரதன் மறுமொழி கூறுதல்)

261. *நோவதாகவிவ் வுலகை நோய்செய்த*
பாவகாரியிற் பிறந்த பாவியேன்
சாவதோர்கிலேன் தவஞ்செய் வேனலேன்
யாவனாகி யிப்பழிநின் றேறுவேன்.

(கருத்து.) இந்நிலவுலகம் முழுதும் வருத்தமே யாம்படி வருத்தத்தை விளைவித்த பாவியிடத்திற் பிறந்த பாவியேன் யான் இறக்கத் துணிந்திலேன். தவம் புரிதற்கும் ஏற்றவனல்லேன், இனி எத்தன்மையனாய் இப்பழிப்பினின்று நீங்கி ஈடேறுவேன். ....

(இராமனே அரசு புரியுமாறு பரதன் வேண்டுதல்)

262. *உந்தைதீமையு முலகுறாதநோய்*
தந்ததீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தையாவதுந் தெரியக் கூறினான்

(கருத்து.) எந்தாய்! உனது தந்தையான தசரதன் செய்த தீமையும், உலகுக்கு நேரத் தகாத துன்பத்தைச் செய்த பாவியான கைகேயி செய்த தீமையும் நீங்கும்படி நீ அயோத்திக்குத் திரும்பி வந்து அரசாட்சி செய்வாயாக என்று தன் மனக்கருத்து முழுவதையும் இராமனுக்கு விளங்கச் சொன்னான் பரதன். ....

(இராமன் பரதனை நோக்கிக் கூறுதல்)

263. *தாய்வரங்கொளத் தந்தையேவலால்*
மேயநங்குலத் தருமமேவினேன்
நீவரங்கொளத் தவிர்தல் நீர்மையோ
ஆய்வரும்புலத் தறிவுமேவினாய்.

(கருத்து.) "ஆய்வரும் புலத்தறிவு மேவினாய்!" என்ற ஈற்றடி பரதனை நோக்கிய விளி. ஆய்வு அரும் புலத்து அறிவு மேவினாய்!— ஆராய்ந்து அறிதற்கரிய அறநூல் நீதிநூல் முதலியவற்றின் உணர்வையடைந்த பரதனே! என்றவாறு. உனது தாயான கைகேயி வரம் பெற்றுக்கொள்ள அதற்குக் கட்டுப்பட்ட சக்ரவர்த்தியின் கட்டளையினால் நமது குலத்துக்கேற்ற வொழுக்கத்தை ஏற்றுக் கொண்டேன்; உன்னுடைய வேண்டுதலுக்காக அவ்வற நெறியை நான் தவிர்தல் தருமமாகுமோ? ஆகாது........ ... ...

(அரசு என்னதாகில் நான் உனக்குத் தந்தேன்; ஆள்க என்று பரதன் வேண்டுதல்)

264. *முன்னர்வந்துதித் துலகமூன்றினும்*
நின்னையொப்பிலா நீபிறந்த பார்
என்னதாகில் யானின்று தந்தனென்
மன்னபோந்துநீ மகுடஞ் சூடென

265. *மலங்கி வையகம் வருந்தி வைகநீ*
உலங்கொள் தோளெனக் குறுவ செய்தியோ?
கலங்குறுவனங் காத்தி போந்தெனாப்
பொலங்குலாவுதாள் பூண்டு வேண்டினான்.

(கருத்து.) எனக்கு முன்னே வந்து பிறந்து மூவுலகங்களிலும் உன்னையொப்பவரில்லாத நீ பிறந்த பூமியானது நீ சொன்னபடி என்னுடையதானால் நான் அதனை இப்பொழுது உனக்குத் தந்தேன். அரசனே! நீ மீண்டு வந்து முடிதரிப்பாயாக. என்று சொல்லி, நாயனே! நிலவுலக முழுவதும் கலங்கி வருந்திற்க மஹாவீரனை உனது மனத்திற்கு இசைபவற்றைச் செய்வாயோ? செய்தல் தகுதியன்று. ஆதலால் உலகம் கலங்காதபடி மீண்டுவந்து பாது காப்பாய் என்றுஞ் சொல்லி இராமபிரானது அழகிய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு பிரார்த்தித்தான் பரதன்.

266. எந்தையேவலால் டேழொடேழுை, வந்தகாலநான் வனத்துள்வைகநீ
தந்தபாரகந் தன்னை மெய்ம்மையால் அந்தநாளெலா மாளென்னுணையால்.

(கருத்து.) எமது தந்தை நியமித்தபடி பதினான்கு வருஷகாலம், நான் காட்டில் வசிக்க, நீ தந்தையளித்தராஜ்யத்தை அத்தந்தையின் உண்மை தவறாதபடி எனது சட்டளையால் அந்தப் பதினான்கு வருஷகாலம் அரசாள்வாய்.

(பரதன் இராமனிடம் திருவடி நிலையை வேண்டிப் பெறுதல்)

267. விப்பினன் பரதனும் வேறு செய்வதோன் றின்மையி னரிதெனை வெண்ணியேங்குவான்
செப்பையின் திருவடித் தலந்தந்நீசென, எம்மையுந் தருவன விரண்டு நல்கினன்.

(கருத்து) பிறகு பரதனும் வேறு செய்யக்கடவ தொன்றுமில்லாமையால், இராமனைப் பிரிந்துசென்று அரசாளுதல் அரியதாமென்று நினைத்துக் கலங்கித் திகைத்தவனாய், பிரானே! உனது பாதுகையை அன்போடு கொடுத்தருள்வாயென்று இராமனைப் பிரார்த்திக்க அப்பெருமான், எல்லா வுலகவின்பங்களையுங் கொடுத்தருள்வன வான தனது இரண்டு திருவடி நிலைகளையும் தந்தருளினான்.

(திருவடி நிலையைச் சூடியவண்ணம் பரதன் தொழுது மீளுதல்)

268. அடித்தல மிரண்டையு மழுதகண்ணினன்
முடித்தல மிவையென முறையிற் சூடினன்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினன்
பொடித்தல மிலங்குறு பொலங்கொள் மேனியான்.

(கருத்து) கண்ணீர் பெருக நிற்பவனும் நிலத்தின் புழுதிபடிந்து விளங்குகிற அழகிய திருமேனியையுடையனுமாகிய பரதன் அந்தப் பாதுகை யிரண்டையும் 'நமக்குக் கிரீடங்கள் இவையே' என்று கொண்டு முறைப்படி சிரமேற் கொண்டவனாய்த் தரையில் விழுந்து வணங்கி மீண்டு சென்றனன் ....

(பரதன் அயோத்தி சேராது நந்திக் கிராமத்திலிருந்தல்)

269. நந்தியம் பதியிடை நாதன்பாதுகை, செந்தனிக் கோன்முறைசெலுத்தச் சிந்தையான்
இந்தியங்களையவித் திருந்தன்மேயினன், அந்தியும்பகலு நீர்அருத கண்ணினன்.

(கருத்து) நந்திக்கிராம மென்னுமிடத்திலே இராமபிரானது திருவடிநிலை முறைப்படி செங்கோல் செலுத்தப் பரதன் இரவும் பகலும் அழுதுகொண்டே மனத்தினால் ஐம்பொறிகளையு மடக்கி அங்கே தங்கியிருந்தனன். ... ...

திருவடி சூட்டுபடலம் முற்றிற்று.

கம்பரின்பக்கவித்திரட்டில் அயோத்தியாகாண்டம் முற்றுப்பெற்றது.

மற்ற நான்கு காண்டங்கள் தனிப் புத்தகமாக வெளிவரும்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் தொகுத்த

கம்பரின்பக் கவித்திரட்டில்

முதற்பகுதி முற்றிற்று.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

ந்ருஸிம்ஹப்ரியா ப்ரத்யாக்யானம்.

ஸ்ரீகாஞ்சீ. ப்ர, அண்ணங்கராசாரியரெழுதியது.

---

1. ஊர் பேரில்லாமலும் தேதியில்லாமலும் (துர்நிரீக்ஷாசிக்ஷா—1) என்கிற ஓர் நிந்தைக் கந்தை இன்று (10—6—61) நம்முடைய பார்வைக்கு வந்தது. இதை யெழுதியவர் யார்? இதிலுள்ள விஷயங்கள் யாவை? இத்யாதிகளைப் பற்றி அடுத்தபடியாகப் பேசுவோம். இதிலுள்ள மிக முக்கியமான விஷயத்திற்கு நாம் முன்னம் விடை தருவோம்.

"தான் கெட்டது மன்னியில் சந்திரபுஷ்கரிணியையும் கெடுத்தானும்" என்ற பழமொழி இவருக்காக ஏற்பட்டது தான். வதந்தியில் செவிப்பட்ட வானமாமலைச் செய்தியென்று ஒரு தலைப்பிட்டு அதில் இது கண்ட கனவையும் தான் அப்போது பிதற்றுவதாகவும் எழுதியிருக்கிறது. வானமாமலை மடத்தாரும் ஸ்ரீ அஹோபில மடத்தாரும் கலா வைஷம்யம் பாராட்டி வீண் சண்டைகளுக்கு செல்வதே எப்போதும் கிடையாது. இதன் வியாபாரம் வம்பு பேசுவதும் தூஷணம் செய்வதுமே யாதலால் மாயாஜாலங்களைச் செய்கிறது. ஸ்ரீவானமாமலைக்கு ஸ்ரீ அஹோபில மடம் ஜீயர் எழுந்தருளிய போது இது எழுதியிருப்பது போல் ஏதாவது நடந்ததாக ஸத்யமாக இதனால் சொல்ல முடியுமா? செவிப்பட்ட என்கிறதே; யார் மூலம் என்பதை நிரூபிக்க முடியுமா? வேறு எந்த விதமான விசாரமும் வேண்டாம்; இது எழுதியிருக்கும் செய்தியை ப்ராமாணிகமாக நிரூபித்து விட்டால் போதும்."

என்று ப்ரக்ருத நிந்தைக் கந்தையில் (பக்கம் 2ல்) எழுதப்பட்டிருக்கிறது. "வேறு எந்த விசாரமும் வேண்டாம், இதை நிரூபித்து விட்டால் போதும்" என்றெழுதி யிருப்பதால் அதையே ஸப்ரமாணமாக நிரூபிக்கிறோம். தேவப்பெருமாள் திருத்தேரன்று வெளிவந்த ஸ்ரீராமாநுஜன் 149ல் **ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணம்** என்னும் வியாஸத்தில் நாமெழுதி வெளியிட்டிருப்பதை இங்கெடுத்துக் காட்டுகிறோம்.

"வானமாமலையிலுள்ள வித்வான்கள் நால்வர் அப்போதே நமக்கு ஸ்ரீமுகங்கள் அருளியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரும் இது ஸ்வகபோல கல்பிதமென்று எழுதவில்லை. நாம் எழுதியிருந்த வகையில் ப்ரஸங்கம் நடந்ததுண்டு என்றும், இங்கே யிருக்கின்ற வித்வான்களில் யாராவது இதற்கு மறுப்புச் சொல்லுவதானால் சொல்லலாம் என்று அந்த ஜீயர் சொன்னதாகத் தெரியவில்லை யென்றும், லௌகிக விரோதமாக அவர் ப்ரஸங்கித்ததுண்டு; உடனே நாங்கள் சிலர் ஏகாந்தத்திற் சென்று 'இப்படி யெல்லாம் அஸதஸ்யமாகப் பேசுவது தகுதியன்று' என்றுணர்த்தினோம் என்றும் தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் நமக்கு எழுதியிருக்கிறார்கள். அந்த ஸ்ரீமுகங்கள் அவசியமானபோது அச்சாகி வெளிரும்"

என்று நாம் எழுதி ப்ரசுரம் செய்தே யிருக்கிறோம். வானமாமலை வித்வான்கள் விடுத்த அந்த ஸ்ரீமுகங்கள் அவசியமானபோது அச்சாகி வெளிவருமென்று நாம் தெரிவித்திருந்தபடியே இப்போது அவசியம் ஏற்பட்டதனால் இதோ அச்சாகி வெளிவருகிறது.

2. தமிழில் வந்த ஸ்ரீமுகங்கள் நிற்க; மிகச் சிறந்த வித்வான் எழுதின ஸம்ஸ்க்ருத ஸ்ரீமுகத்தை இதன் கீழ் வெளியிடுகிறோம். வானமாமலையில் ஸ்ரீராமாநுஜ ஸம்ஸ்க்ருத வித்யாசாலா என்றொரு ஸம்ஸ்க்ருத வித்யாலயம் நெடுநாளாக வுள்ளது. அதில் தலைமைப் பண்டிதராயும், மடத்திலும் ஆஸ்தான வித்வானாயும் விளங்குபவர் ஸ்ரீமதுபய வே. A. கோபாலய்யங்கார் ஸ்வாமி யென்பவர். இந்த ஸ்வாமி நமக்கு நெடுநாளாக ஸஹ்ருத் ப்ராண இவாபர:. நம்முடைய ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளையும் தமிழ்ப்பத்ரிகைகளையும்

மற்றும் அனேக க்ரந்தங்களையும் காலே காலே கடாக்ஷித்தருளி ஆர்வம் பொங்கி அனேக ஸ்ரீமுகங்கள் அநுக்ரஹித்து வருபவர். இந்த ஸ்வாமியின் ஸ்ரீமுகம் ஒன்று போருமென்று அதுமட்டுமே வெளியிடலாகிறது :—

வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உவே. A. கோபாலய்யங்கார் ஸ்வாமியின் ஸ்ரீமுகம்.

श्रीमते रामानुजाय नमः । वानमामलै.

स्वस्ति । 27—4—61

श्री. उ. वे. प्र. अ. स्वामिनां सन्निधौ दासदासस्यानन्तप्रणति-पूर्वका विज्ञप्तिः । ह्योऽतीत श्रीरामानुजपत्रिका लोकोपकारकान् बहून् विषयान् समुपानयन्ती प्रतिपादयन्ती तत्रत्येषु सहृ-दयानामानन्दं जनयतीत्याश्चर्यम् । अस्या नाम्नि 147 गणना-ङ्किता सा स्वीकृत्य सबहुमानमवालोकि । श्रीमतां सहजया सौहार्द-स्वीकृताः केचन वर्णितास्तत्र निरवद्ये ; अस्य सन्दर्भे । परं तत्र "வதந்தியில் செவிப்பட்ட வானமாமலைச் செய்தி" इति शीर्षिकेण प्रति-पादितो विषयः प्रस्तावितः । ...... श्रीमद्भगवद्विषयस्वामिनो नमोऽस्तु...जि-नय(?)... । तत्र उपन्यासे विधानमपि कालोचित विषयान् प्रस्तावयन्नेव प्रस्तावयन्नेव । यतः कथं अयं सार्वभौमिणामपि केषां चित्तं प्रसादयितुं इति सन्देहो निरस्तः । तावता तादृश विषयप्रस्ताव-क्षण एव तस्यैव सहायाजस्राभिः प्रत्यवस्थाय प्रसारावसानं कलहोत्पादनं कथं स्यादिति न उक्षिणा नाजस्रकं सरणिः । ... ... स्वामिनः प्रतिवक्तारस्तत्रैव कालं प्रतिपक्षं प्रतिपद्यन्ते । अस्माभिः पश्यामि विज्ञापितास्ते 'विषयेष्वेतेषु सम्प्रदायपरि-शेषु सम्प्रदायपरिशिष्टेषु ... ... । तत्र वस्तुतः ... ... ' इति । ... ...

இந்த வடமொழிக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதைத் தான் ஸ்ரீராமாநுஜன் 149ல் எழுதினோம்; அதையே இதிலும் அநுவதித்தோம். வானமாமலையில் இந்த ஜீயர் செய்த ப்ரஸங்கத்தில் "विधानमपि कालोचित विषयान् प्रस्ताव-यन्नेव." [லோகாபிராமமான விஷயங்களோடு நில்லாமல் சில அஸந்தர்ப்ப விஷயங்களையும் ப்ரஸ்தாவிக்கவே ப்ரஸ்தாவித்தார்] என்றெழுதி விட்டு உடனே எழுதியிருப்பதைப் பாரீர்.

"तावता तादृशविषयप्रस्तावक्षण एव तस्यैव सहायाजस्राभिः प्रत्यवस्थाय प्रसारावसानं कलहोत्पादनं कथं स्यादिति न उक्षिणा नाजस्रकं सरणिः"

என்றெழுதியுள்ளார் வானமாமலை வித்வான். இதன் பொருளை நாம் விவரிக்க வேண்டிய

தில்லை. "அஸதஸ்யமான விஷயத்தை அவர் சொன்னதற்காக அந்த க்ஷணத்திலேயே அந்த ஸபையிலேயே நாங்கள் எதிரிட்டு பூசல் விளைவிக்க வேண்டியது அவசியமென்று சிலர் நினைக்கக் கூடுமாகிலும் தாக்ஷிண்ய பரவசர்களான நாங்கள் அந்த வழிக்குச் செல்லவில்லை என்பது தவிர வேறொன்றும் பொருளன்று. வேறு பொருளுண்டாகில் சொல்லிக் காண லாம். "ஷ ஆராவஸாநம் க்ஷுஷாஹா..." என்று அப்ரஸக்தமாக வொரு வித் வான் எழுதுவரா? அங்கேயே புடைத்திருக்க வேண்டுமென்றும் ஆனாலும் தாக்ஷிண்யத் தாலே அது செய்திலோமென்றும் வெகு சாதுர்யமாகத் தெரிவித்தாராகிறார். இந்த வாக் யத்தின் பொருள் எப்படியாவதிருக்கட்டும். ஜீயர் ஸபையில் அஸதஸ்யமாகப் பேசினரென்ப தும், * நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத் * என்கிற கணக்கிலே ஶிக்ஷித்தோமென்றும் ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கிறார். * विललाप सभामध्ये जगर्हे च पुरोहितम् * என்கிற ஸ்ரீராமா யண ச்லோகத்தை வியாக்கியானித்தருளா நின்ற நம்பிள்ளை "[ஸபாமத்யே புரோஹிதம் ஜகர்ஹே] * நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத் * என்கிற நிலையும் பார்த்திலன்" என்று ஓரிடத்திலும், "... என்ற நிலையைக் குலைத்தான். புரோஹிதத்வமாகிற ஹேது கழிகை யினாலே" என்று மற்றோரிடத்திலும் அருளியுள்ளார் ஸ்ரீபரதாழ்வானைப் போலே தங்க ளால் நடந்துகொள்ள முடியவில்லை யென்கிற நிர்வேதத்தை அந்த ஸ்ரீமுகம் நன்கு காட்டி யுள்ளதென்பதை மிதமதிகளும் அறிவர்கள்.

3. "வேறு எந்த விசாரமும் வேண்டாம்: வானமாமலைச் செய்தியை ப்ராமாணிக மாக நிரூபித்து விட்டால் போதும்" என்று இவர் எழுதியபடி நிரூபித்தாயிற்று. இனி இவர் செய்யவேண்டிய தென்ன? "வெட்கங்கெட்ட பிழைப்புதானே என்றுடையது" என்று பெருந் தெருவே பறைசாற்றி யுலாவ வேண்டுமத்தனை.

4. முக்கியமான விஷயத்தை மூதலித்தாயிற்று. இனி இந்த நிந்தைக் கந்தையை ஆதியோடந்தமாக ஆராய்வோம். இந்தக் கந்தையை யெழுதியவர் ஒரு துறவி யென்பதைத் தாமே ஸ்பஷ்டமாக் காட்டிக் கொள்ளுகிறார். முன்னுச்ரமப் பெயரையும் இவ்வாச்ரமப் பெயரையும் வெட்ட வெளிச்சமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும், கையெ ழுத்திடாமலும் தேதி யில்லாமலும் அச்சுக்கூடத்தின் பெயரை மறைத்தும் பாமரக்ருத்ய மாக வெளியிடுவது எதற்காக? ஆசைதீர வையவேணு மென்பதற்காகத் தானே. தாராள மாக எவ்வளவும் வையட்டும். நாம் பல பல விஷயங்களை யெடுத்து, ஸ்ரீமதேராமாநுஜாய நமஹா பேர்வழிகளின் ஞானச் சாயங்களை அலசியலசி யிருக்கிறோம். அவற்றில் ஒன்றி ரண்டுக்காவது ஶாஸ்த்ரீயமான ஸமாதான மெழுதிவிட்டு இவர்கள் நம்மை எவ்வளவு தூஷித்தாலும் பொருந்தும். ந்ருஸிம்ஹப்ரியா பண்டிதர்களின் அஜ்ஞான அந்யதாஜ்ஞானங் களை நாம் அபரிமிதமாக எடுத்துக்காட்டி * பேர்க்கவும் பேராவே * என்னும்படி விளக்கி யிருக்கிறோம். அவை பேர்க்கவும் பேராதவையே யென்பதை ஸ்ரீமத் கோமல் ஸ்வாமி முதலானோர் [அஹோபிலமடத்தைச் சேர்ந்தவர்களே] சிலாசாஸனமிட்டு நாட்டியிருக்கிறார் கள். இந்த ஸ்வாமி 22—5—61ல் அநுக்ரஹித்த ஸ்ரீமுகத்திலுள்ள வாசகத்தை (ஸ்ரீரா. 149. ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணத்தில் பக்கம் 4ல்) வெளியிட்டிருக்கிறோம். மீண்டு இங்கும் வெளியிடுகிறோம்.

> "அம்ருதலஹரி அம்ருதலஹரியே யாதலால் அந்த அபர்யாப்தாம்ருதத்தை எவ்வளவு பருகியும் த்ருப்தியே பிறக்கவில்லை. குழாங்களுமநுபவித்தது ... ... விஷயங்களை அலசி யலசி அபூர்வ விஷயங்களை ஸாதிப்பது (மமநம மமநாகாரம ஸாமரஸாமஹ பா-வஜ:) என்ற முறைப்படி தேவரீருக்கே அஸாதாரணம்,"

என்கிற வாசகங்கள் நிஷ்பக்ஷபாத வித்வத் வரிஷ்டரான கோமல் ஸ்வாமியின் திருக்கையி லிருந்து அவதரித்தவை.

5. இந்த நிந்தைக் கந்தை யெழுதுவதைப் பாருங்கள்—

"தமக்கு ஸர்ட்டிபிகேட் கொடுத்தவர்களது லிஸ்டில் வீண் ஆக்ரஹிகளான சில தென்கலையார்களையும் பரமபதித்துள்ள சில மஹான்களையும் சேர்த்து தற்பெருமையைத் தம்பட்டமடித்துக் கொள்ளுகிறது"— என்று.

பாமரர்களையும் வஞ்சிக்கமாட்டாத வார்த்தையன்றோ விது. திருவயிந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர், திருச்சி, ஏ. வி. கோபாலாசாரியர், ராயம்பேட்டை R. V. கிருஷ்ணமாசாரியர் ஆகிய இம்மூவரும் நம்மோடு போராடி,"க்ஷாமண பத்ரிகையோடு விச்ராந்தர்களான செய்தியை அவர்கள் ஜீவித்திருந்த காலத்தில் பிரசுரப்படுத்தினோமே யல்லது அவர்கள் பரமபதித்த பிறகு அவர்களுடைய ஸர்ட்டிபிகேட்டை நாம் ப்ரஸ்தாவிக்கவேண்டிய அவசியமே யில்லை. ஸ்ரீமத் கபிஸ்தலம் ஸ்வாமி. லக்ஷ்மீபுரம் ஸ்வாமி போல்வார் பரமபதித்தவர்களே யானாலும் அவர்கள் நம்மோடு போராட வந்தவர்களல்லர்; நம்முடைய நூல்கள் ப்ராமாணிகமான வழியிலேயே செல்லுமவை என்பதை நிலைநாட்டி யருளின மஹான்கள் அவர்கள். அவர்கள் தென்கலையார்களுமல்லர், ஆக்ரஹிகளுமல்லர். பாபபீருக்களும் ப்ராமாணிகர்களுமானவர்கள். அப்படிப்பட்ட மஹான்களில் ஒருவருடைய ஸர்டிபிகேட்டையாவது எதிர்த்தலையில் ஒருவராவது பெற்றிருப்பதுண்டோ? நமக்கு முதன்முதலாக ஸர்ட்டிபிகேட் அளித்தவர் ஸ்ரீ. உ. வே. ஸர். எஸ். வரதாசார்ய ஸ்வாமியும், V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியும். இவர்களில் வி. வி. ஸ்வாமி பரமபதித்து விட்டாலும் S. V. ஸ்வாமி உலகத்தின் பெரும் பாக்கியத்தினால் பாங்காக எழுந்தருளி யிருக்கிறபடி. இந்த ஸ்வாமி ஆக்ரஹியுமல்லர், தென்கலையுமல்லர்.

6. ஸ்ரீமத் பரமஹம்ஸ. தென்பரையாண்டவன் ஸ்வாமி யொருவருடைய ஸர்ட்டிபிகேட் போதுமே. அந்த ஸ்வாமியினுடைய அத்புத பங்க்திகளை எடுத்தெடுத்து வாசிக்குமிவர்கள் "வாய்ந்த மதுகைடவரும் வயிறுருகி மாண்டார்" என்ற திருமழிசைப்பிரான் ஸ்ரீஸூக்திக் கட்டளை யிலே வயிறுருகி மாளவேண்டியது தவிர வேறுண்டோ? தென்பரையாண்டவன் ஸ்வாமிக்கு இடையிடையே அத்யாஹிதம் நேருவதாக இருந்தும் நம்முடைய பாக்யவசமாகவே திருமேனி பாங்காயெழுந்தருளி யிருக்கிறபடி. அந்த ஸ்வாமி ஸன்னிதியிற் சென்று இவர்கள் ஒன்று கேட்கவேணும்—

"அண்ணங்கராசாரியருடைய க்ரந்தங்களின் பெருமையைப் பற்றி ஸ்வாமி எல்லை கடந்து எழுதியிருக்கிறதே! அவர் தமக்கு ஸர்ட்டிபிகேட் தரவேணுமென்று ஸ்வாமி ஸன்னிதியில் அபேக்ஷித்ததுண்டா? அல்லது ஸ்வாமியாகவே திருவுள்ளம் பொங்கி யெழுதியருளினதா?" என்று.

அந்த ஸ்வாமி ஸன்னிதியில் இப்படி சிலர் பண்டே கேட்டதுமுண்டு; அதற்கு அந்த ஸ்வாமி ஸாதித்ததையும் உடனிருந்தவர்கள் நமக்கு எழுதியுள்ளார்கள்; (அதாவது)

"நான் எல்லை கடந்து என்ன எழுதிவிட்டேன்? அண்ணங்கராசாரியருடைய திவ்யஸூக்திகளின் பெருமைகளைப் பற்றி ஒருவன் ஆத்ம வஞ்சனை யில்லாமல் எழுதுவதானால் சதகமும் எழுதினாலும் போதாதன்றோ. சில அஸூயா பிண்டங்கள் தூஷிப்பதனால் நமக்கென்ன? குண க்ராஹிகளான நாம் யுக்ததரமாகவே யெழுதினோம்" என்று.

இதற்கு அந்த ஆஸ்தானத்திலிருந்து நேராக ஸ்ரீமுகமில்லாமையாலே இது கல்பித வார்த்தையென்றாலும் குறையில்லை. அந்த ஸ்வாமியின் ஸாக்ஷாத் ஸ்ரீஸூக்திகள்—

"[illegible]
[illegible]

ஶாஸ்த்ரார்த்தாநு ஶாஸநாவஸரேஷு நவநவஶ்ஞாநஜநகாநு விவிதவிஶ்ருவிஷயவஶாநு ஶாஸ்ஶம் ஶாஸ்ஶம் நிரவதிகக்ரந்தஶ்ரேணிஷு । ஸர்வஜ்ஞயாஶோதாஸ்வேஷணாய மஹி நித்யநிரவத்ய ஸௌலப்யாநுகூலம். ஜநஹாரோர்த்ய யஸ்யாநவஸ்ரூஹிமாஷி ஸஞ்சயாக்ஷ" இத்யாதிகள்.

இந்த ஸம்ஸ்க்ருத வாக்யங்களினால் தெரிவிக்கப் படுவது என்ன? நம்முடைய க்ரந்தங்களெல்லாம் ஶாஸ்த்ர ப்ரமாண உபபத்திகள் மலிந்தவை யென்றும், எத்தனை தடவை வாசித்தாலும் ஆராவமுதமாய் விளங்குகின்றன வென்றும், ஸகல ரஸிக பண்டிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன வென்றும், இப்படியே ஸர்வஜ்ஞ'ஜீவம் அனேக க்ரந்தங்கள் அவதரித்துக் கொண்டிருக்க வேணுமென்றும், அதற்குரிய தேஹபாடவமும் தனதாந்ய ஸம்ருத்தியும் குறையற்றிருக்க வேணுமென்றும் ஸ்வாத்மானந்தமும் மங்களாசாஸனமும் தெரிவிக்கப் படுகிறது. பிராமாணிகர்கள் இப்படி ஆஶாஸியா நிற்க, இந்த நிந்தைக் கந்தை "**இப்படியும் ஒரு ப்ரக்ருதி சிரகாலம் ஜீவித்து வருகின்றதே!**" என்று வயிறெரிந்து எழுதுகின்றது. மஹான்களின் மங்களாஶாஸந வாக்குக்கள் பலிக்குமே யொழிய **வயஜீவிகளின்** வசை மொழிகள் ஒருகாலும் பலிக்கமாட்டா.

7. அஹோபிலமடாஸ்தானத்தை ந்யாய்யமான மார்க்கத்தில் அலங்கரித்திருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீவண் சடகோப யதீந்த்ரருடைய நியமனத்தினால் இஞ்சிமேட்டழகிய சிங்கர் அநுக்ரஹித்த அபிநந்தன மங்களாசாஸன ஸ்ரீமுகம் பலவாண்டுகட்கு முன்பு நமது வேதாந்த தேசிக க்ரந்தமாலையில் அச்சாகி உலகமெல்லாம் பரவியுள்ளது (அதாவது)—

"வண்டிதவர்யாணம் ஸ்ரீகாஞ்சீ—வாஸ்திவாஸிஹயங்கர—அண்ணங்கராசார்ய—மஹோதயேஷு ஸ்ரீஹாஸ்திகிரிநாதாஶ்ரயா: வேதாந்தார்த்தம் ஸம்ஶோதிதா: ஸாரஸாரஸாரா-ஸோபாநயதீநாயிஷத ।......ஆஶாஸ்மஹே ச வயம் விபஶ்சிதபஶ்சிம நாமண்ணங்கராசார்ய—வயஸ்யா வண்டி ஸர்வவர்த்ததயோ மோஹிஷ்ட—ஹ்ருதய: ஶ்ரீநாராயணாசார்யமஹோதயா யதிவரதேவவலம்பந—ஶாஸ்திதயோ: கடாக்ஷலக்ஷ்மீவஸநாயேந ஜதி, ஆஸ்திகாக்ரேஸரா: பௌஷிகீவதயா வேதாந்தாசார்யமண்ணங்கராசார்யாணதி ச ॥" என்று.

உலகம் போற்ற நின்ற மஹான்கள் இப்படி அபிநந்தநமும் ஆஶாஸநமும் செய்யா நிற்க, சில அநாமதேயப் பேர்வழிகளும் அஸூயா பிண்டங்களும் பொறாமைக்குப் போக்குவீடாக எத்தனை யெழுதினாலும் உண்மையாக வுள்ள கீர்த்திகள் பெருகுமே யொழிய வேறொன்றும் நிகழாது. இஞ்சிமேட்டழகிய சிங்கர் ஒரு அவதார புருஷர். அந்த ஸ்வாமி நம்மை பண்டித ப்ரகாண்ட ஶப்தத்தாலும் விபஶ்சிதபஶ்சிம ஶப்தத்தாலும் வ்யபதேஶித்து "அண்ணங்கராசாரியருடைய வெளியீடுகளுக்கு ஆஸ்திகாக்ரேஸரர்கள் போஷகர்களாக வேணுமென்றும், இவை மேன்மேலும் வளர்ந்து செல்லவேணு மென்றும் அக்ருத்ரிமமாக ஆஶாஸித்தருளின தன் பலனாக நம்முடைய ஜகதுபகாரக க்ருத்ய விஶேஷங்கள் குறையொன்று மின்றிக்கே அபிவிருத்தி பெற்று வருகின்றன. * पूर्वं प्रधूमितो ... हृदयेऽग्निरिवोत्थितः * என்ற கணக்கிலே இந்தப் பண்டாரத்தின் ஹ்ருதயத்திலே தீப்பற்றி யெரிந்தால் யாருக்கு என்ன நஷ்டம்!

நமக்கு அஹோபில மடத்தில் நெடுநாளாக த்வேஷமென்று இவர்கள் பறைசாற்றுவதனாலும் ஒரு நஷ்டமுமில்லை. நம்முடைய அறுபத்து நான்காவது ஆண்டுநிறைவுக்கு நீடூழி ஞாபக சின்னமாக நாம் வெளியிட்ட (64 லக்கங் கொண்ட) நூல்களில் "**அறுபத்துநான்கு**

நல்வார்த்தைகள்" என்பது 23 பக்கங் கொண்டதொரு நூல். இதில் பக்கம் 7ல் 25-ஆம் வார்த்தை இது—

"**பண்டைக்காலத்தில் வைதிக வித்யைகளுக்கு மகாராஜாக்களின் ஆதரவு அதிகமாயிருந்தது; அதனாலேயே முன்பு அந்த வித்யை தழைத்தோங்கி வந்தது; இக்காலத்தில் இதை ஆதரிப்பாரில்லை. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி (மைஸூர்) ஸ்ரீபரகால ஸ்வாமி ஸ்ரீமத் அஹோபில மடாதிபதிகளான அழகியசிங்கர் ஸ்வாமி போல்வார் வைதிக வித்யையின் பெருமையை யுணர்ந்தவர்களாகையால் ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேபங்கள் செய்யும் வித்யார்த்திகளுக்கு போஜனமளித்தும் விசேஷ ஸம்பாவனை யளித்தும் ஆதரித்து...**" என்பது.

அப்போது இந்த பண்டாரத்தின் சில்விஷமங்கள் அதிகமாயிருந்துங் கூட நாம் நம்முடைய இயற்கையான குணபக்ஷபாதத்தாலே கௌரவமளிக்க வேண்டுமிடங்களுக்கு அதை யளித்தே தீருவோம். வடகலை ஸம்பிரதாயத்திலுள்ள புராதனர்களும் நவீனர்களுமான பல வித்வான்களுடையவும் மடாதிபதிகளுடையவும் திருவுருவப் படங்களை சேகரித்து ப்ளாக்கெடுத்து வைதிக லௌகிக மஹநீய மண்டலி யென்னும் பெயரால் பெரிய புத்தகமாக வெளியிட்டிருப்பது நாமே யொழிய வேறு யாருமில்லை. அப்புத்தகம் இரண்டாயிரம் பிரதி அச்சிடப்பட்டு உலகமெல்லாம் பரவியுள்ளது. அதை அதிமாநுஷ க்ருத்யமென்றே பலரும் கொண்டாடி வருகிறார்கள். இந்தப் பண்டாரம் அதில் தன்னுடைய ப்ரதிக்ருதி வரவில்லையே யென்கிற வயிற்றெரிச்சலினால் ஏதேதோ செய்து வருகிறது, எது செய்தாலும் நம்முடைய யசஸ்ஸுக்கு விஜயத்வஜமே யாகுமது. ஸ்வாமி தேசிகன் "நிமீலயது லோசநே ந ஹி திரஸ்க்ருதோ பாஸ்கர:" என்கிறார். அந்த ஸ்ரீஸூக்தி இந்தப் பண்டாரத்திற்கே தகும்.

8. இப்போது மடம் வெளியிட்டிருக்கிற நிந்தைக் கந்தை பெரியவுருவத்தில் இரண்டு பக்கம் கொண்டிருக்கிறது. இதில் குறைந்த பக்ஷம் நம்முடைய பத்து பூர்வ பக்ஷங்களுக்காவது ஸமாதான மெழுத முன் வரலாம். அந்த பாவத்திலேயே போகவில்லை யிது. "அஞ்ஜலி யொழியத் தஞ்ச மொன்றில்லை" என்றொரு வசனமுண்டு. அது நம்முடைய க்ரந்தங்கள் விஷயத்தில் தான் ஏற்குமென்பதை இந்த மடம் ஆதியிலிருந்தே தெரிந்துகொண்டிருக்கிறது. அதனால் ஸமாதான முரைக்கும் பணியில் தலையிடாதிருப்பது க்ஷேமமே. சாஸ்த்ரீய விஷயங்களை விட்டு வீண் வம்பு விஷயங்களை யெழுதினாலும் அதிலாவது ஆர்ஜவமுண்டோ வென்னில், அக்கேடுமில்லை. இது எழுதியுள்ள வம்பு விஷயங்களை வரிசையாக வெடுத்து நிரஸிக்கிறோமிங்கு.

"**சென்னையிலுள்ள செட்டியார்களுடைய சாரிடிகளிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு இம்மாதிரி ஸம்ப்ரதாய ப்ரவசனம்**"

இத்யாதிகள் எழுதுகிறது. இதற்குத் தத்துவமுணர்த்துகிறோம். சென்னையில் பல சாரிடிகளுண்டு; அவற்றில் ஸ்ரீராமாநுஜன் போன்ற மாதப் பத்ரிகைகளுக்குப் பணம் கொடுப்பதான சாகை கிடையாது. கோயம்புத்தூரில் வாழ்ந்த தர்மவிலாஸத் தலைவரான [ஸுப்ரஸித்த மஹாதனிகரான] வெங்கடரமணையங்கார் லோகோபகாரகங்களான நம்முடைய வெளியீடுகளுக்கு மிகவுகந்து, இத் திருப்பணி நீடூழி நடந்து வரவேணு மென்று ஆசாஸித்துப் பதினாயிரம் ரூபாய் பரிசளித்தது ஜகத்ப்ரஸித்தம். அவர் வடகலையே. ஆனாலென்ன? அவர் குண பக்ஷபாதி. இப்போது மடத்திற்கும் அபிமானியான உவே. மங்கலம் ராமாநுஜாசாரியர் ஸ்வாமிகளும் நம்முடைய வெளியீடுகளுக்கு யதாசக்தி பொருளுதவி புரிந்து வருபவர். மடத்தின் மிரட்டலுக்கு அஞ்சி இந்த மஹான் பொய் சொல்லார். "இதற்காக நான் கொடுக்கவில்லை; வேறொன்றுக்காகக் கொடுக்கிறேன்" என்று சொல்லிவிடும் என்று அவருக்கெழுதி புத்தி பேதம் செய்யப் பார்க்குமிது பரம ப்ராமாணிகரான அவரிடத்தில்

ஏந்தப் பப்பும் வேகாது. இங்கு முக்கியமான வார்த்தை. நமக்குப் பணம் எங்கிருந்து யாரிடமிருந்து கிடைத்தாலென்ன? பத்து மடாதிபதிகள் சேர்ந்தும் செய்யமுடியாத காரியங்களை நாம் அவலீலையாகச் செய்து வருகிறோமென்று கீர்த்திமூர்த்தியான இளங்காடு ஜீயர் [ரங்கூன ஸ்வாமி] பொறித்து வைத்திருக்கிறார். ஸபைகளிலும் முழங்கியிருக்கிறார்.

9. மறைந்து போன அவர் நிற்க. நம் கண் முன்னே உலாவிக் கொண்டிருக்கிற D. R ஐயங்கார் "ஸ்ரீவைஷ்ணவத்திற்காக அண்ணாஸ்வாமி செய்திருக்கும் செய்துகொண்டிருக்கும் பணி கணக்கிட முடியாது" என்றெழுதிவிட்டு, உடனே 'என்ன எழுதியிருக்கிறார் தெரியுமோ? "நம் தேசமெங்கும் ஆயிரக்கணக்கிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் அண்ணாஸ்வாமிக்கு மேன்மேலும் வணங்கிக் கொண்டும் நன்றி செலுத்திக் கொண்டுமிருக்கின்றனர்' என்றன்றோ எழுதியிருக்கிறார்.* வணங்குகின்ற ஆயிரக் கணக்கான ஸ்ரீவைஷ்ணவர்கள் நன்றி செலுத்தும் வகை யாது கொல்! தேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்திலே * ஹிக்ஷேதி ஶிஷ்யஜநலக்ஷணலக்ஷிணேதி ஶாடீதி ஶாஶ்வததலோவ்யயிகன்யேதி। ஶ்ரோத்ரவஸ-ஶ்ருஹணாகுஹ்விதி ஸ்வவாணா: ஸம்ந்யாஸிநோஉபி உயதே லஹதீம் யநாயாய்॥ * என்கிற ச்லோகத்தை இவர்களுக்காக இட்டருளி, நமக்காக [என்னொருவனுக்காகவே] * யஸ்யாம் யஸ்யாம் ஶிஶி விஹரதே ஜேவி! த்ருஷ்டிஸ்த்வதீயா தஸ்யாம் தஸ்யாமஹமஹ-மிகாம் தந்வதே ஸம்பதோகா: * என்கிற ஸ்லோக ரத்நத்தை இட்டருளினார். நிற்க. அஸமஞ்ஜஸமாக வெழுதி அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிற ந்ருஸிம்ஹப்ரியா பரிவாரங்கள் வீண் வசை மொழிகளை விட்டுத் தொலைத்து ஶாஸ்த்ரீயமான வழியில் பதில் எழுதினால் பதினாயிரம் ரூபாய் பரிசளிப்போமென்று பிரசுரம் செய்திருக்கிறோமே! அந்தப் பரிசைப் பெற முன்வருவார் ஒருவருமில்லையே. "அண்ணங்கராசாரியருடைய நூல்களைக் கண்ணெடுத்துப் பாராதீர்கள்; நமது ப்ரியாவையே பாருங்கள்" என்று மடம் எழுதுவதனால் என்னாகும்?

10. திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் தம் திருவுள்ளத்தைத் தூதுவிடும்போது "போராதொழியாதே போந்திடு நீ யென்றேற்குக், காரார் கடல்வண்ணன் பின் போன நெஞ்சமும், வாராதே யென்னை மறந்தது தான்" என்றருளிச் செய்தார். நெஞ்சே! நீ அங்கேயே நின்றுவிடாமல் உடனே வந்துசேர் என்று தாம் சொல்லியிருந்தும் நெஞ்சு அங்கேயே நின்று விட்டதாக மூலமுள்ளது. இங்கே பெரியவாச்சான் பிள்ளை வியாக்யான ஸ்ரீஸூக்திகள் காண்மின் :—

> ["போராதொழியாதே போந்திடு நீ யென்றேற்கு.] ஐயோ! நான்தானே கிடீர் என்னெஞ்சுதன்னை அங்கே தங்கப் பண்ணினேன். அதாவதென்னென்னில், பெருங்குடி புதுக்குடி மகனைப் பழைய பையலைப்போலே வரம்பிலும் வாய்க்காலிலும் சூடு போகடாதேகொள் என்னும்; அதுவேயடியாக அவ்விடங்களாகாதே களவுக்கு ஸ்தானமன்று செய்யா, நிற்கும். 'போராதொழியாதே போந்திடு நீ' என்றேன் நான்; அவ்விஷயத்தைக் கண்டால் போராதொழியவாகாதேயடுப்பதென்று அது அங்கே கால்தாழ்ந்து நின்றது." என்று.

இப் பங்க்திகளின் இன்சுவைப் பொருளையறிய இது பிறக்கவில்லை. ஆனாலும், நிஷேதிப்பது விதியிலே பர்யவஸிக்கு மென்று தெரிந்து கொள்ளுமிது. இதே போல, ஸ்ரீராமாநுஜனைப் பார்க்க வேண்டாம், பார்க்கவேண்டாமென்று இது நிஷேதிக்க நிஷேதிக்க "எல்லீருங் கண்டு அநுபவித்துக் களியுங்கள்" என்கிற விதிதான் தேறி நிற்கும். நம்முடைய ஸ்ரீராமாநுஜன் ஒருவர்க்குக் கிடைத்தால் அது குறைந்தபக்ஷம் ஐம்பது பேர்களின் கண்களுக்கு இலக்காகியே நிற்கின்றது அர்ருதஹரியுமப்படியே.

11. இனி அடுத்த விஷயத்திற் செல்வோம்.

"மஹா ரஸிகராயும் ப்ராமாணிகாக்ரேஸரருமான D. R. ஸ்வாமியை வம்புக்கிழுத்து எழுதுகிறது. தனக்கு இஷ்டமானபோது D. R. போன்ற சுபாஸம்ஸிகள் என்கிறது."

என்றெழுதியுள்ளது மடம். D. R. ஐயங்காரை மஹாரஸிகரென்றும் ப்ராமாணிகாக்ரேஸரரென்றும் போற்ற உரிமையுடையோம் நாமேயன்றி இவர்களல்லர். மஹாரஸிகத்வமோ ப்ராமாணிகாக்ரேஸரத்வமோ அவர்க்குத்தான் தகும், அவரொருவர்க்கே ஏற்கும் என்பதை நாமே சபதமிட்டுரைப்போம். அவர் எழுதியவற்றில்,

"இவ்வளவு ஶக்தி வாய்ந்த மஹாபுருஷரான அண்ணாஸ்வாமியின் விஷயத்தில் அசூயையும் பொறாமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர்பார்க்கலாம். ஆனால் எவ்வித வாதப்போரிலும் ஸ்வாமி பின் வாங்கவே மாட்டார். இவருடைய வாதமே கடைசியாக ஓங்கி நிற்கும்"

என்கிற வாசகங்கள் செப்பேடும் சிலாசாஸனமுமாக வன்றோ விளங்குகின்றன. D. R. இப்படியெழுதினது மஹாரஸிகத்வத்தினலா? ப்ராமாணிகாக்ரேஸரத்வத்தினலா? இரண்டினுமா? என்பதை மடமே நிர்ணயிக்கட்டுமே. அவரை நாம் வம்புக்கிழுப்பதாகச் சொல்வது மஹாஜாட்யம். நீதிமன்றங்களில் வக்கீல்கள் லா புத்தகங்களையும் லா ரிபோர்ட்டுகளையும் உதாஹரித்தால் வம்புக்கிழுப்பதாகப் பேதையனும் பேசான். "அசூயையையும் பொறாமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர்பார்க்கலாம்" என்ற அவருடைய ஸ்ரீஸூக்தி அந்த க்ஷணத்திலிருந்து நாள் தப்பாமல் நாழிகை தவருமல் அப்படியே பலித்து வருகிறதென்ருல் அவரை மஹர்ஷியாக வன்றோ மதிக்கவேணும். தென்கலையில் பிறந்தவொரு மஹானும் இப்படியெழுத முன்வரவில்லையே. வால்மீகி பகவான் ஒவ்வொரு மஹார்த்தத்தை வெளியிட ஒவ்வொருவர் மேல் ஆவேசித்தாராம். "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்பதை வெளியிட மாரீசன் பாலும், "தருணௌ ரூபஸம்பந்நௌ" இத்யாதியை வெளியிட சூர்ப்பணகை பக்கலிலும், "ப்ரக்க்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்பதை வெளியிட ராவணன் மேலும் ஆவேசித்தது போல, "அண்ணாஸ்வாமி விஷயத்தில் அசூயையையும் பொறாமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர் பார்க்கலாம்" என்னு மமுத மொழியை வெளியிட்டருளப் பேரருளாளனும் பேராசிரியர்களும் D. R. ஸ்வாமி பேரில் ஆவேசித்தபடியை என் சொல்லுவோம். உண்மையைத் தாமுணர்ந்தவளவோடன்றிக்கே உலகமறிய வெளியிட்டும் வைத்த இம்மஹாநுபவர்க்குக் கோவில் கட்டியன்றோ பூசனைபுரிய வேணும். சில தேவதைகள் தம்மையுபாஸித்தவர்களுக்குத் தலைகால் தெரியாமல் வரங்களைக் கொடுத்து விட்டுப் பிறகு அநுதபிப்பதுண்டு; அப்படியுமில்லை யிங்கு. இவரை உபாஸித்தாருமில்லை; அநுதபிப்பவருமல்லரிவர். "தனக்கு இஷ்டமான போது D. R. போன்ற சுபாஸம்ஸிகள் என்கிறது" என்று மடமெழுதி யிருப்பது மருள். 'இஷ்டமான போது, அநிஷ்டமான போது' என்று பிரிக்கப் போதிரண்டில்லையே, அநிஷ்டமான போது இன்னது எழுதி யிருக்கிறோமென்று காட்டட்டுமே. அநிஷ்டம் தலைகாட்டாதபடியன்றோ அந்த மஹான் நடந்து கொள்ளுகிறார். உலகில் இஷ்டாநிஷ்டதைகள் வ்யவஸ்திதங்களுமன்று. ஸ்வாபாவிகங்களுமன்று; ஔபாதிகங்களே யிவை. ஆதிஶங்கராசாரியருடைய பலவுக்திகளை யெடுத்துப் புகழ்கிறோம். 'இஷ்டமான போது புகழ்வதோ?' என்று க்ஷேபிப்பாருளரோ?

12. இனி அடுத்த விஷயத்திற் செல்வோம்;

"இவரது சுவடிகளை இவர் ஊரிலில்லாத போது செல்வமணி ஜோதி வேஸ்டு பேபர் கடையில் போட்டு வருகிறுனும்"

என்று இது வொரு பெரிய விஷயமாக எழுதப்படுகிறது. இதற்கும் தெரிவிக்கிறோம். ஒவ்வொருநாளும் எத்தனை திசையிலிருந்து எத்தனை பேபர்கள் எத்தனை பத்ரிகைகள் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன வென்பதை இவர் தூரமே நம்மிடம் யாசகத்திற்கு வந்துகொண்

டிருந்த காலங்களில் கட்கூடாக்க்கண்டிருப்பரே. ['யாசகத்திற்கு' என்றதை அடுத்தபடியாக விவரிப்போம்.] தினப்படியாக அப்படி வந்து குவியும் பேபர்களை தினப்படியாகவே வேஸ்டு பேபர் கடைகளில் போட்டுத்தான் வருகிறோம். இவர் ஊர் தோறும் தெருவுதோறும் தம் மகனுக்கு வீடுகள் வாங்கிக் கொடுத்துவைக்க, வாடகைப் பணங்களைக் கொண்டு வேசிகளை யும் விதவைகளையும் போஷிக்கும் செயல் போல் ஒன்றும் நடந்திருக்கவில்லை. மிகவும் அவ சியமற்ற வம்பு விஷயங்களை மடம் எழுதுகிறதேயென்று ந நிஷ்டீவேத் என்கிற சாஸ்த்ரத் தையும் கடந்து நிஷ்டீவனம் செய்யாதாருளரோ?

13. இவர் மடத்தில் பாசகராயிருந்தபோது வீதிகளில் யாசகராயிருப்பர். அப்போது நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியை உலகமறியவேணுமென்று உணர்த்துகிறோம். ஆலயப் பிரவே சக் கிளர்ச்சி ஏற்பட்ட போது தான் அதற்காகப் பாடுபடுவதாகச் சொல்லி நம்மை அதற்குத் துணைபுரிய வேண்டிற்று. இசைந்திருந்தோம். அந்தரவியாஜத்தினால் அடிக்கடி நெருங்கத் தொடங்கி, தனக்கு நேர்ந்துள்ள கடன் கட்டுகளையெல்லாம் முறையிட்டுக் கொண்டு "ஓம-1பறு உஜு வஜஈகீ* என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திப்படி ஈ காட்டும். ஸமயங்களில் பெற்றுப் போகும் அதிலிருந்து ஒரு பேராசை தோன்றிக் கடன் கேட்கத் தொடங்கிற்று. நாம் கடன் வாங்குவது கொடுப்பதான விரண்டையும் சபத பூர்வமாக விட்டிருப்பது தெரிந் தும் தொந்தரவு செய்துகொண்டிருந்தது. நாடோறும் வருவது, தொழுவது, தொழுதெழு வது, அபிவாதனம் செய்வது... இத்யாதி வேஷங்களை அளவுகடந்து போட ஆரம்பித்து விட்டது. 'இனும் பெறுவதோடு நில்லும், கடன் கேட்பதை விட்டிடும்' என்று வெட்டெ னச் சொல்லியாயிற்று. அப்போது (அழகு செய்யூர்) அழிசூர். சீமாச்சார் என்கிற வைதிகர் நம்மிடத்தில் கார்யதர்சியா யிருந்தார். அவரே கொடுக்கவொட்டாமல் செய்து விட்டா ரென்று கொண்டு அவரை துர்ப்பாஷையாகப் பேசிற்றிது. அவர் லேசாக விடுபவரல்ல ராதலால் முதுகிலும் தவடையிலும் ஒரு படி அப்பம் ஸமர்ப்பித்து ஜாக்ரதை! என்று சொல்ல, வ ந 𝆺𝅥ர ௰ கூ ெ த்ருதி ந ஜ்ஞாயதேயாயிற்று. இத்தகைய வைபவ விசேஷங் கள் செல்வமணி ஜோதியால் வெளிவரும்.

14. இனி அடுத்த விஷயத்திற் செல்வோம்.

> "யாராவது வபையாக எழுதி பதில் கேட்டால் ரங்கநாயகியம்மாள் போன்றவர்களிடம் சென்று மிரட்டி அதட்டி இதுமாதிரி விஷயங்களை நீ ஏன் அச்சிட்டாய்? இது மிகவும் அப சாரமாயிற்றே, என்றெல்லாம் மிரட்டியும் லெட்டர் எழுதி வாங்கிப் பிரசுரிப்பதும் ... ..."

இத்யாதிகளை யெழுதுகிறது மடம். வெட்கம் சிக்கமுள்ளவர்கள் எழுதுவதா இது. "வபை யாக எழுதி பதில் கேட்டால்" என்றெழுதுகிறதே, என்ன அர்த்தமிதற்கு. இது கொண்ட அர்த்தத்தை யறிவோம்; இருக்கட்டும். அப்படியெழுதி நம்மை பதில் கேட்ட பண்டிதர் யார்? என்ன விஷயம் கேட்டார்? எதற்கு நாம் பதில் சொல்லவில்லை? உலகமறிய நாம் சபதம் செய்கிறோம் கேண்மின். இவர்களுடைய அகவிருள் திரளை நாம் ஸஹஸ்ரமுகமாக வெளியிட்டிருக்கிறோம். வெளியிட்டு வருகிறோம். அவற்றுள் ஏதேனும் ஒரு விஷயத்தை யாவது எடுத்து.

> "இதற்கு நாம் கூறும் பதில் இது; இதற்கு மேல் நீர் என்ன பதில் கூறுகிறீர்? (அல்லது) இன்ன விஷயத்தை நான் எழுதினேன்; இதற்கு நீர் ஒரு பதிலும் எழுத வில்லை"

என்று வெளியிடட்டும். அப்போதன்றோ வபையாக எழுதி பதில் கேட்ட பெருமை உல குக்கு விளங்கும். சின்னி வீராதாதம் வாக்யார்த்தம் மறவாதபடி காக்கும் மடம் தவிர வேறு யார் இப்படி யெழுத முடியும். ரங்கநாயகியம்மாள் ப்ரஸ்தாவம் இங்கு எதற்காகவோ?

ஆர் அந்த ரங்கநாயகியம்மாள்? என்பதை உலகம் தெரிந்து கொள்ளாமலிராது. 15-2-60ல் திருவள்ளூரிலிருந்து மாலோல பிரஸ் மானேஜர் P. K. ராமபத்ராசாரி யென்பவர் ஞானச் சுடர் விளக்கு என்னும் அஜ்ஞானாந்தகாரச் சுவடியை அச்சிட விநோதன் அச்சகத்திற்கு அனுப்புவதும், யயாஜாத தாதமொன்றின் பெயரை வைப்பதும், 30—11—59 தேதியிலேயே புத்தகம் வெளி வந்துவிட்டதாகக் காட்டுவதும்... இத்தகைய கீழ்த்தரமான சூதுகள் செய்து, இவ்வளவாலும் ஒரு லாபமும் பெறமுடியாமல் எழுதின விஷயங்களெல்லாம் பங்கப் பட்டொழிந்ததும் முக்கூர் வயிற்றில் எவ்வளவு வேலை செய்கிறது பாருங்கள். மிரட்டலோ உருட்டலோ இது கற்றதே யொழிய நாமொன்றும் கற்றிலோம்.

15. இனி அடுத்த விஷயத்திற் செல்வோம்; மடம் எழுதுகிறது,

"ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை 20 வருட காலமாக மாதம் தவறாமல் நடக்கிறது; அரிய பெரிய பல விஷயங்களைத் தாங்குகிறது: அவரவர்கள் சந்தா செலுத்த போட்டிமேல் போட்டியாக வந்து விழுகிறார்கள்" இத்யாதி;

இதற்குக் கேண்மின்; நாம் நடத்தி வரும் பத்ரிகைகளையும் அவற்றின் பரிசுகளையும் நாற்றிசையு மறியும். இருபத்திரண்டு வருஷங்களுக்கு மேலாக அம்ருதலஹரீ பத்ரிகையை மாதம் தவறாமல் நடத்தி வருகிறோம். ஸ்ரீ ராமானுஜனை 13 வருஷகாலமாக மாதந்தவறாமல் நடத்தி வருகிறோம். எடுத்துக் கொண்ட விஷயம் பெரிதாயிருந்தால அதை (தொடரும்) என்று விட்டு ரஸபங்கமாக்காமைக்காக இரண்டு ஸஞ்சிகைகளைச் சேர்த்து வெளியிடுதல் காதாசித்கம் தெலுங்கு பாஷையிலும் 'ஸ்ரீராமானுஜ பத்ரிக' என்னும் பெயரால் மாதாந்த பத்ரிகை வெளியிட்டு வருகிறோம் இருபத்தைந்து வருஷகாலமாக. ஸ்வாசார்ய நியமனத்தினால் ஸம்ஸ்க்ருத பாஷையில் பலவாண்டுகள் மஞ்ஜுபாஷிணீ பத்ரிகை வெளியிட்டு வந்தோம். அதன் பிறகு **வைதிக மநோஹரா** மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. ஹிந்தீ பத்ரிகையும் இதில் சேர்ந்துள்ளது. ஆக இவற்றிலெல்லாம் வெளிவரும் வியாஸங்கள் முழுவதும் நம்முடைய ஸொந்தமானவை. இவற்றில் இதுவரை வெளி வந்துள்ள வியாஸங்கள் ஐயாயிரத்திற்கு மேல் தேறும். ஒவ்வொரு வியாஸத்தையும் அந்தந்த பாஷையில் ரஸிகர்களும் வித்வான்களுமானவர்கள் உச்சிமேல் வைத்து மெச்சுகின்றார்கள். இப்படி பத்ரிகா மூலம் வெளிவரும் வியாஸங்கள் ஏகதேசம். மேற்குறித்த நான்கு பாஷைகளிலும் எத்தனை ஸ்வதந்த்ர க்ரந்தங்கள்! எத்தனை வியாக்கியான நூல்கள்!! எத்தனை **खण्डनराशि**கள் தெரியுமோ? எண்ணிப் பார்க்கட்டுமே. ஆடு நனைகிறதே யென்று ஓநாய் அழுத கதையும், குழந்தை பால் புரைக்கேறி இறந்துபோன கதையும் தவிர வேறொன்று எழுதவறியாத முக்கூர் வயிறெரிந்து சாகவேண்டியது தவிர வேறென்ன வுள்ளது! ஒருமாதங்கூட தவறாமல் ப்ரியாவை வெளியிட்டு வருவதாகப் பெருமை யடித்துக் கொள்ளுகிறது. வாயில் ஓரக்ஷரமும் நுழையப் பெறாத வித்யார்த்திகளுக்கு ஒருநாள்கூட லேட்டும் ஆப்ஸண்டுமில்லாமல் ஆஜரானதாக வைத்துப் பள்ளிகளில் பரிசளிப்பதுண்டு. அத்தகைய பரிசை ப்ரியா தாராளமாகப் பெறலாமே. இந்த ப்ரஸங்கத்தில் ப்ரியாவின் உண்மையான பெருமையையும் நாம் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்; அதையும் கேண்மின்.

ந்ருஸிம்ஹப்ரியாவின் உண்மையான பெருமைகள்.

16. ந்ருஸிம்ஹப்ரியாவுக்கு மஹர்ஷி வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸம்பாதகராக இருந்த வரையில் மிக்க மஹிமைதானிருந்தது. அந்த ஸ்வாமியைப் போன்ற விசால ஹ்ருதயமும் ப்ராமாணிகரும் * ந பூதோ ந பவிஷ்யதி. அந்த ஸ்வாமி ஸயூத்ய ஸங்கேதங்களுக்கும் கட்டுப் படாமல் நம்முடைய நூல்களில் காட்டின ஆகராதிப்ராயங்களை நெடுங்காலம் வேதாந்த தீபிகையில் உலகம் கண்டது இருக்கட்டும். ந்ருஸிம்ஹப்ரியாவிலேயே காட்டினவற்றில் ஒன்றே காட்டுவோமிங்கு.

17. பரப்ரஹ்மத்தின் வ்யாப்தி விஷயமாக இருபது வருடங்களுக்கு முன் ஒரு சர்ச்சை ஏற்பட்டது. ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி பூர்ணத்வ விசார மென்றொரு சிறு நூலெழுதி வெளியிட்டு, உடனே ஸுஹ்ருதஸ்ஸுஹ்ருதா என்னும் நமது நூலைக் கடாக்ஷித்துத் தெளிந்து விச்ராந்தரானார். பிறகு D. T. தாதாசாரியர் ஸர்வசக்தி யென்றொரு சிறு சுவடி யெழுதினார். அதற்கு மறுப்பாக அத்புத சக்தி யென்னும் நூலை அடுத்த வாரத்திலேயே நாமெழுதி வெளியிட்டோம். இவ்விரண்டும் ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபரிடம் சென்றன. அந்த மஹர்ஷி ஸ்வாமி மிகவும் பிராமாணிகராய் ஆராய்ந்து டி. டி. தாசாசார்யருடைய புத்தகத்தை ஒரு பதார்த்தமாகவும் நினையாமல் தள்ளிவிட்டு நமது அத்புத சக்தி நூலையே கொண்டாடி யிருக்கிறார் ஸர்வஜித்ஹு மாசிமீ ப்ரியாவில்—

அந்த வியாஸம் வருமாறு:—

"**அத்புதசக்தி:—** இதனை இயற்றியவர் ப்ரதிவாதிபயங்கரம் வித்வான் ஸ்ரீ. உ.வ. அண்ணங்கராசார்ய ஸ்வாமி. விஷயம்:—எம்பெருமான் எங்கும் நிறைந்துள்ள பரம்ஜோதிஸ் என்று வேதங்கள்' கூறுகின்றன. அதாவது மஹத்தான பதார்த்தங்களின் வெளியிலும் அணுவான பதார்த்தங்களினுள்ளும் அவன் நிறைந்துளன் என்று சொல்லப்பட்டதாயிற்று. இது எப்படி ஸாத்யம்? அணுவான பதார்த்தங்களுக்கு உட்புறம் என்று வகுத்துக் காட்டக் கூடிய இடம் இல்லையே. அங்கு அந்தர் வியாப்தி எப்படி? அம்மாதிரியே மஹத்தான பதார்த்தங்களில் பஹிர்வ்யாப்தி என்று சொல்வது ஸாத்யமில்லை யன்றோ? ஆகையால் வேதாந்திகளின் கொள்கையை ஒப்புக்கொள்ள இயலாது. இவ்வாறு ஆக்ஷேபமொன்று உண்டு. நிற்க: பகவானுடைய ஸ்வரூபம் முழுவதும் ஒரு பதார்த்தத்தில் வ்யாபித்திருக்கிறதென்று சொல்லிவிட்டால் மற்றும் உலகிலுள்ள வஸ்துக்களிலும் இது இருக்கிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? இது மற்றுமொரு ஆக்ஷேபம். இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு 'எம்பெருமானுக்கு அத்புதமான சக்தி உண்டாகையால் இவை பரஸ்பர விருத்தமாக இருந்தாலும், அவன் விஷயத்தில் அது இயலும்' என்று ஸமாதானத்தை சாஸ்த்ரங்களே கூறுகின்றன. இந்த அத்புதமான சக்தி என்பதன் பொருள் என்னவென்னும் விஷயத்தில் வைஷ்ணவர்களுள் விவாதமுண்டு. அப்படி விவாதிக்கும் இரு கக்ஷிக்காரர்களுள் எவர்களுடைய கக்ஷி இருகக்ஷிக்காரர்களுக்கும் பொதுவாக இருக்கின்ற ஆசார்யர்களுக்கு அபிமதம் என்பதை இந்நூல் விசாரிக்கின்றது. இதை மிக்க ரஸத்துடன் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி விசாரித்திருக்கிறார். ரஸிகர்கள் இதைப் படித்து ஆநந்தப்படக் கூடும். இதன் விலை அணா எட்டு. இதனை 'ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி, சின்ன காஞ்சீபுரம்' என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.
—ஸ்ரீ. ந்ரு. ப்ரியா. ஸம்பாதகர்,"

என்று வெளிவந்துள்ளது.

18. இந்த மதிப்புரையில் "இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு எம்பெருமானுக்கு அத்புதமான சக்தியுண்டாகையால் இவை பரஸ்பர விருத்தமாக இருந்தாலும் அவன் விஷயத்தில் அது இயலுமென்று ஸமாதானத்தை சாஸ்த்ரங்களே கூறுகின்றன" என்றுள்ள வாக்கியமானது மிகவும் ஸாரமானது. நம்முடைய அபிப்ராயமே தமது திருவுள்ளமாகவும் இங்குப் பிறருடைய வாதங்கள் வம்பேயாகவும் ஸ்பஷ்டமாக வெளியிடப் பட்டதன்றோ. இவற்றால் நமது வாதக்ரந்தங்களெல்லாம் மத்யஸ்தர்கள் மெச்சும்படியான வகையிலே அமைந்திருக்கின்றன வென்பது அறியலாகும். இந்த மதிப்புரையும் இதுபோன்ற பல மதிப்புரைகளும் நாம் விரும்பி வெளிவந்தவையல்ல. ப்ராமாணிகப் பொருளை மறுத்தும் மறைத்தும் அப்ராமாணிகப் பொருள்களைச் சிலர் பரவவிடுகிறார்களே யென்கிற நிர்வேதம் தாங்கமுடியாமல் அவரவர் தாமாகவே கனிந்த நெஞ்சினராய் வெளியிடுகிறார்களென்பது சொல்தொடையில் தானே எளிதிற் புலனாகும். இத்தகைய மதிப்புரைகள் பண்டிதர்களுக்கு மிக நன்றாய்த்

தெரிந்திருப்பவை. ஒருவரும் மறக்க முடியாது. ஆனாலும் அவற்றையறியாமலிருக்கின்றவர்களுக்கும் அவற்றை விசதப்படுத்தவேண்டியே இப்போது மடம் அஸங்கதமான நிந்தைகளில் இறங்கியிருக்கிறது. இது கிடக்க.

19. நமது பத்ரிகைகளை ஓயாது வாசிக்கின்ற நாற்றிசையிலுள்ளாரும் தம்தம் ஸந்தோஷ பரீவாஹமாக எழுதியனுப்பிக் கொண்டிருக்கும் மதிப்புரைகளை யெல்லாம் வெளியிடுவதானால் அதுவே ஒரு பெரிய பாரதமாகும். எண்ணிறந்தவை வெளியிட்டு மிருக்கிறோம். சென்ற விதழில் கும்பகோணம் வித்வத் ஸார்வபௌமரான ஸ்ரீ பூவராஹாசாருடைய அரிய பெரிய மதிப்புரையை வெளியிட்டோம். அப்படிப்பட்ட மஹா மேதாவிகளின் அருகிலும் செல்லமுடியாததன்றோ ப்ரியா. இப்போதும் இரண்டு மதிப்புரைகளை வெளியிட்டு முடிக்கிறோம்: அவற்றைக் காணீர்;—

4—6—61.-ல் ஸ்ரீ. உ. வே. ராகவையங்கார் ஸ்வாமி

அம்ருதலஹரி ஸ்ரீராமாநுசன் காலே காலே கிடைத்து ஸேவித்து மகிழ்ச்சி யடைகிறேன். சில பாராக்களைத் திருப்பித் திருப்பி ஸேவித்து சிரிப்பு அடக்கமுடியாமல் இருக்கிறது. நவீனர்கள் ந்ருஸிம்ஹப்ரியாவில் பேர் ஊர் இல்லாமல் வம்பு வசைமொழிகள் எழுதுவது நூதனம் அன்றே. அந்த காரணத்தாலேயே சில வருஷங்களுக்கு முன் இதைப் பார்ப்பதில்லை யென்று தேவரீர் விட்டுத் தொலைத்த பத்ரிகையை பகவான் தன் ஸங்கல்பத்துக்கு அநுகுணமாக தேவரீரிடம் யார் மூலமாவது காட்டிக் கொடுக்கிறான், விஷப் பூச்சிகளை அப்போதைக்கப்போது நசுக்குவது லோகோபகாரமாகும் என்று பகவத் ஸங்கல்பம் போலும். இவர்களுடைய அப்ராமாணிகமான கந்தல்களை நிரஸநம் செய்வதற்கு தேவரீரைத் தவிர யாரால் முடியும்?

இவர்களை வளைத்து வளைத்துக் கேள்விகள் கேட்டால் அதுகளுக்கு வாய்திறக்க வழியுண்டோ? திக்கு நோக்கி அஞ்ஜலி செய்து வாளாவிருப்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது. ஆனால் சில வருஷங்களுக்குப் பிறகு ஏதாவது ஒரு மூலையிலிருந்து ஒரு அநாமதேயன் மறுபடியும் இதையே எழுதுவன். இவர்களுக்கு ஒரு வ்யவஸ்தையுமில்லாமல் போயிற்று. இதுவும் லோகோபகாரார்த்தமான பகவத் ஸங்கல்பமென்று அத்யந்த பாரதந்திரியத்தோடு நடந்து கொள்ள ப்ராப்தம். — S. RAGHAVAIENGAR.

இந்த ராகவையங்கார் ஸ்வாமியே 6—6—61ல் மறுபடியும் ஒரு ஸ்ரீமுகம் ஸாதித்திருக்கிறார். (அது வருமாறு—)

" ஸ்ரீராமாநுஜன் 149ல் பழைய ந்ருஸிம்ஹப்ரியா வியாஸமொன்றைக் கண்டிப்பதான * இயேஷபதப்ரயோஜந விமர்சம் * என்னும் வியாஸத்தில் [illegible] என்கிற தேவரீருடைய ஸம்ஸ்க்ருத வியாஸம் வைதிகமநோஹரா 65ல் வெளிவந்துள்ளதாக எழுதப் பட்டிருக்கின்றது. 65 என்றதை 64 என்று திருத்தவேணும், இதுவொரு பெரிய விஷயமல்லவாயினும் சிலர் 65 மநோஹராவைப் பார்த்துவிட்டு அதில் அந்த வியாஸம் காணமற் போக, இதை யொரு பெரிய விஷயமாகக் கொண்டு அட்டஹாஸம் செய்யக்கூடும். நிற்க. அஹோபிலமட வித்வான்களின் லேகனங்களைப் பற்றி எட்டு வருடங்களுக்கு முன்னமே அடியேன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அது ஸ்ரீராமாநுஜன் 46ல் வெளி வந்துள்ளது. அப்போது வாளாவிருந்துவிட்டு தற்போது அப்ராமாணிக— அஸங்கத ப்ரலாபங்களையே புதியது போல் கிளப்புகிறார்கள் : இது மிகவும் சோசநீயம்."

மேலே குறிப்பிட்ட ஸ்ரீமுகத்தில் ஸ்ரீ ராகவையங்கார் ஸ்வாமி அஹோபிலமட வித்வான்களைப் பற்றி ஏற்கெனவே ஒரு கடிதமெழுதி யிருந்ததாகவும், அது ஸ்ரீராமாநுஜன்

46ல் வெளிவந்துள்ளதாகவும் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கின்றதன்றோ. அந்தக் கடிதமும் இங்கு அநுவதிக்கப்படுகிறது.

"ஸ்ரீமத் ஸ்வாமி ஸன்னிதியில் அடியேன் செய்யும் விண்ணப்பம். தேவரீரிடமிருந்து வரும் ஸகல ஸஞ்சிகைகளையும் ஸகல புஸ்தகங்களையும் வெகு குதூஹலத்தோடு எதிர்பார்த்திருப்பதும் பலரோடு கூடி வாசித்துக் களிப்பதுமாயிருந்து வருகிறேன். ஸமீபகாலத்தில் கிடைத்த வைதிக மநோஹராவிலுள்ள விஷயங்கள் ஒவ்வொன்றும் திவ்யாம்ருத மென்ன வேணும். ... சில மாதங்களாக அஹோபிலமட வித்வான்களின் லேகனங்களும் அவற்றுக்கு ஸ்வாமியின் கண்டனங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மட வித்வான்களின் லேகனங்கள் ஸ்ரீராமன் * *மஹாநஜா நாஸி* * என்று விடை கொடுத்தனுப்புவதற்கு முந்தி விட்டருளின பாணங்கள் போல் ஸ்வாமியின் அத்புத வியாஸங்களினுல் சிதறவடிக்கப் பட்டொழிகின்றன. அவர்கள் மனஸ்பூர்த்தியாகத் தங்களுடைய பங்கத்தை யுணராதிருக்க மாட்டார்கள். ருஜு ஸ்பாவமுள்ளவர்களாக இருந்தால் " சத்ரோ: ப்ரக்க்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்று ராவணன் கதறினபடி தங்கள் ஆப்தர்களிடமாவது ஸ்வாமியின் அத்புத லேகனங்களைப் பற்றிப் பரவசர்களாய்க் கொண்டாடி யிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் வீண் ஆக்ரஹத்தினுல் **ந நமேயம்** என்ற ரீதியில் கிடந்து அவர்கள் இன்னமும் பல அஸங்கதங்களையே எழுதிக் கொண்டிருக்கிறுர்கள்; அவையும் ஸ்வாமியின் வியாஸங்களினுல் உடனுக்குடனே அறுப்புண்டு வருகின்றன. லோகராவணன் பெருமாளா லறுபட்ட தலைகளைக் கண்டு மருண்டது போல இவர்களும் அறுப்புண்ட தங்கள் லேகனங்களைப் பார்த்து மருண்டே யிருப்பர்கள்."...

முக்கியமான வொரு குறிப்பு:— *இந்த ராகவையங்கார் ஸ்வாமியைப் பற்றி இங்குச் சிறிது அவசியம் தெரிவிக்க வேண்டியதாகிறது. இந்த ஸ்வாமி உயர்ந்த உத்யோக பதவியில் அமர்ந்திருந்து மாதந்தோறும் 500 ரூ. ஸர்க்கார் பென்ஷன் பெறுகிற மஹநீயர். எண்பது திருநக்ஷத்ரத்திற்கு ஸமீபத்திலுள்ளவர். உபய வேதாந்த ரஹஸ்ய க்ரந்தங்களை யெல்லாம் வரியடைவே கற்றவர். இந்த பிராயத்திலும் அபாரமான ஞாபக சக்தியுள்ளவர். தென்கலை ஸம்பிரதாயஸ்தர்களில் இந்த ஸ்வாமி யொருவருடைய மதிப்புரையைத் தான் நாம் பெருமதிப்புடன் வெளியிடுவது. வடகலையார்களில் அதமபக்ஷம் இருபத்தைந்து மஹான்களும் தென்கலையார்களில் இந்த ஸ்வாமி யொருவருமே நமக்கு ஸர்ட்டிபிகேட்டளித்தவர்கள். ஆக்ரஹிகளான தென்கலையார்களின் ஸர்ட்டிபிகேட்டையே நாம் வெளியிட்டுக் கொள்வதாக பிரகிருத நிந்தைக் கந்தை யெழுதியிருப்பது ஸர்வாத்மநா அஸங்கதம்,*

B. R. PURUSHOTTAMA NAIDU,
Readar in Tamil, University of Madras, Madras—5.

32, ராஜகோபால நாயகன் St.,
Chintadripet, Madras—2.
5—6—61.

(இவர் சென்னை யூனிவர்ஸிடியில் மதிக்கப்பெற்ற தமிழ்ப் பேராசிரியர்)

ஸ்ரீமத் ஸ்வாமிகட்கு, தண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஸ்வாமிகள் அருள்கூர்ந்து அனுப்பிய 'இராமாநுசன்' கிடைத்தது. ஒருமுறை முற்றும் வாசித்தேன். நண்ணு அசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்தத் தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றென வாக்கியங்கள் செல்கின்றன. தொண்டர்க்கு அமுதாகச் சொல்மாலைகள் அமைந்திருக்கின்றன. படிக்குந்தோறும் பேரானந்தம் பெருகுகின்றது. ஸ்வாமிகள் இன்னம் இங்கே வீற்றிருந்து லீலாவிபூதியை அலங்கரிக்க வேண்டும் என்பது அடியேன் அவா. ஸர்வேச்வரன் தலைக்கட்டுவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம், தாஸன்
B. R. புருஷோத்தமன்.

ந்ருஸிம்ஹப்ரியா விஸர்ஜனம்.

எட்டு வருஷங்களுக்குமுன்பு ப்ரியாவில் பல பல அவத்யங்களைக் காட்டி இவை அபரிஹார்யங்களே யென்றும் இசைவித்து, இனி நாம் இப்பத்ரிகையைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லையென்று விட்டொழித்தோம். இடையில் ஒருவருஷ காலமாக தெய்வம் செய்வித்த கூத்து ஆர்க்குமறிவரிதே. 61 ஜூன் மாதத்து ப்ரியா இன்று கிடைத்தது. இதில் முதல் வியாஸம் வைதிக ஸம்பிரதாயம் என்பது. இதை எழுதியவர் மதுரை அட்வகேட். ஸ்ரீ உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் என்பவர். இவர் நல்ல நிபுணரே. நமக்கும் பரமாப்தரே. ஆரம்பத்திலேயே எழுதுகிறாரிவர்—"ஆத்மாவின் உஜ்ஜீவனத்திற்கு ஹேதுகரமாக இவ்வுலகவாழ்க்கை எப்படி அமையவேண்டும்?" என்று. ஹேதுகரமாக என்பதற்கு என்ன அர்த்தம். இது தமிழ்ச்சொல்லன்று. வடசொல். ஹேதும் கரோதீதி ஹேதுகரம் என்னவேணும். இதற்கு ஏதேனும் பொருளுண்டோ? 'உஜ்ஜீவநகரமாக' என்றோ 'உஜ்ஜீவநஹேதுவாக' என்றோ இருக்கலாம். ஸ்ரீராமாயணத்தில் "மமாபி தத் பூதிகரம்" என்று வருவதால் நாம் ஹேதுகரம் என்போம் என்று எழுதிவிட்டார் இப்பெரியார். ஒருவர் ஒரு பெரியவரிடத்தில் வ்யாஜாதிகமாக ஏதோ அபசாரப்பட்டார்; உடனே அநுதபித்து "ஐயோ அபசாரத்திற்கு ஹேதுவாச்சுதே" என்றாராம். அப்பா! அபசாரத்திற்கு ஹேதுவே இப்பாடுபடுத்தினால் இனி அபசாரம் உண்டானால் அது எப்பாடு படுத்துமோ? என்றாராம் பெரியவர். 'அபசார மாச்சுதே' என்னவேண்டியிருக்க அபசார ஹேதுவாச்சுதே! என்றது பிசகு என்று பெரியவர் திருத்திக் கொடுக்கிறாரென்பதை அபசாரப்பட்டவ்யக்தி அறிந்துகொள்ள முடியவில்லை. "ஸாமஸ்கந்தவதாச்சநமஹாலம்பிரஸீதஸீவ ஸீவ ஸீவ" என்று போனாராம். ஆர்யபாஷா பரிசயமில்லாதவர் ஏதோ எழுதி விட்டாலும் அதைத் திருத்தி யமைக்க அறியாதவர்கள் நடத்தும் பத்திரிகை நமது கண்ணில் படவேண்டாம், படவேண்டாம், படவேண்டாம். இனி ஒருகாலும் படாது. இவர்கள் அடித்தது ஆடம்பரமாக எதையும் எழுதிப் பத்ரபூரணம் செய்க. "உங்களோடெங்களிடையில்லையே. *

விவாதசாந்தியைப் பற்றின ஸந்தோஷ அறிக்கை

நமது பரமஸுஹ்ருந்மணியும் சிறந்த வித்வானுமான ஸ்ரீ உ. வே. உப்பிலியப்பன் ஸன்னிதி. நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்யரால் பரிசோதித்து ஸமீபகாலத்தில் வெளியிடப்பட்ட ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் [இரண்டு பாகமாகவுள்ளது] வரப்பெற்றோம். இப்பதிப்பின் நேர்மைகளைப் பற்றின ஸந்தோஷத்தை விரிவாக எழுதவேண்டும். பிறகு எழுதுவோம். பரம ஸந்தோஷமென்று மட்டும் இப்போது தெரிவிக்கிறோம். இந்த ஸ்வாமி 1944-ம் வருஷத்தில் வெளியிட்ட தேசிகப்பிரபந்த வுரையில் D. R. அட்வகேட் தேசிக சரித்திரமெழுதுகிற வியாஜமாகப் பூருவாசாரியர்களை தூஷித்திருந்தது காரணமாகவே விவாத நூல்கள் வளரத் தொடங்கினவென்பதை நாம் பலகால் தெரிவித்திருக்கிறோம். உண்மையில் இந்த அதர்க்கணச் செயல்தான் விவாத வளர்ச்சிக்குக் காரணம். இதை நன்கு தெரிந்துகொண்ட நவநீதம் ஸ்வாமி இப்போதைய ரஹஸ்யத்ரயஸாரப்பதிப்பில் "ஸ்ரீதேசிக சரித்திரம் பல்வேறு பதிப்புகளில் வெளிவந்துள்ளது. அவற்றில், நிகழ்ச்சிமுறை, நடந்த இடம், காலம் முதலியவற்றில் சிறிது வேறுபாடு காணப்படுவது உண்மையே" என்று முகப்பில் வெளியிட்டு, பாதுகாஸஹஸ்ரம் அவதரித்ததைப்பற்றி யெழுதுகையில் நவீனர்களின் கற்பனைக்கதைகளை அறவேயொழித்து நாம் பலகால் தெரிவித்திருந்த உண்மையைத்தழுவி உள்ளவாறெழுதியுள்ளார். ஸங்கேத பீதியினால் சில விஷயங்களை மட்டும் பழையபடி யெழுதியிருந்தாலும் பெரும்பாலும் பிராமாணிக வழியில் சார்ந்து நம்மை உகப்பித்திருப்பதால் இத்தகைய பத்ததி க்ரமேண வளருமென்ற நம்பிக்கையினால் விவாத சாந்தி உசிதமென்று கொண்டோம்.

శ్రీమదుభయవే. తిరుకణ్ణపురమ్ పట్టప్పా
స్వాములవారను తిరువేంకటాచార్యస్వాములవారు.
(వైకుంఠవాస్తవ్యులు)

ஸ்ரீமதுபயவே. திருக்கண்ணபுரம்
பட்டப்பாஸ்வாமியென்று ப்ரஸித்த
ரான திருவேங்கடாசார்யஸ்வாமி
(வைகுண்டவாஸி)

श्रीमदुभयवे. अम्मासत्रम्. शेषाचार्य स्वामिनः ।
कुम्भघोणम्. (वैकुण्ठवासिनः)

ஸ்ரீமதுபயவே. அம்மாஸத்ரம்
சேஷாசார்யஸ்வாமி. திருக்குடந்தை
(வைகுண்டவாஸி)



श्रीमदुभयवे. तिरुनांगूरु. प्रतिवादि भयङ्करम्.
पेरिय कृष्णमाचार्य स्वामिनः ।
(तुर्याश्रम स्वीकारेण दिवंगताः)

ஸ்ரீமதுபயவே. திருநாங்கூர் பிரதிவாதி
பயங்கரம் பெரிய க்ருஷ்ணமாசார்ய
ஸ்வாமி. (உத்தமாச்ரமம் ஸ்வீகரித்
திருந்து திருநாடலங்கரித்தவர்)

श्रीमदित्यादि. तिरुनांगूरु. प्रतिवादि भयङ्करम्
चिन्नकृष्णमाचार्य स्वामिनः । (वैकुण्ठवासिनः)

ஸ்ரீமதுபயவே. திருநாங்கூர் பிரதிவாதி
பயங்கரம் சின்னக்ருஷ்ணமாசார்ய
ஸ்வாமி (வைகுண்டவாஸி)।

श्रीमदुभयवे. नाच्चियार्कोविल. नडादूरु.
कृष्णमाचार्य स्वामिनः । (वैकुण्ठवासिनः)

ஸ்ரீமதுபயவே. நாச்சியார்கோவில்
நடாதூர் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி
(வைகுண்டவாஸி)

श्रीमदुभयवे. मण्डयम्. ति. अ. आव्वार्
स्वामिनः । (वैकुण्ठवासिनः)

ஶ்ரீமதுபயவே. மண்டயம் தி. அ.
ஆழ்வார்ஸ்வாமி (வைகுண்டவாஸி)

श्रीमदुभयवे. उप्पिलियप्पन् सन्निधि. नवनीतम्.
कृष्णमाचार्य स्वामिनः । (वैकुण्ठवासिनः)

ஸ்ரீமதுபயவே. உப்பிலியப்பன்
ஸன்னிதி நவநீதம் க்ருஷ்ணமாசார்ய
ஸ்வாமி (வைகுண்டவாஸி)

श्रीमदुभयवे. तिरुवहीन्द्रपुरम्. कच्चिकिडाम्बि.
भाष्यकाराचार्य स्वामिनः। (वैकुण्ठवासिनः)

ஸ்ரீமதுபயவே. திருவஹீந்திரபுரம்
கச்சிக்கிடாம்பி பாஷ்யகாராசார்ய
ஸ்வாமி (வைகுண்டவாஸி)